310/93

தமிழ்நாடு சட்டப் பேரவை
நடவடிக்கைகள்

செய்கை வெளியீடு

தொகுதி - 22
எண் - 2
வியாழக்கிழமை

V:11,31 N72
N72·22·2
1621x

வெளியீடு 1-12-1992 Issued 1-12-1992

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 2, 1992-தொகுதி 22 எண். 2
Thursday, the 2nd April 1992 - Volume 22 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்

2—4—1992

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 325 364

2. சிறப்புக் குறிப்பு—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் சில கோயில்களில் நடைபெற்றுள்ள இலையுடைப்பு மற்றும் திருட்டுச் சம்பவங்கள் குறித்து. 364–370

(ஆ) டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாளையொட்டி 14–4–1992 ஆம் நாளன்று விடுமுறை அறிவிக்கப்பட வேண்டியது குறித்து. 370–371

3. கவன ஈர்ப்பு—

(அ) மதுக்கரை சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகையினால் ஏற்படும் பாதிப்பு குறித்து. 371–375

(ஆ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் டி.என்.எச். 130 — விசைத்தறி தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்பெறாதது குறித்து. 375–377

4. அறிக்கை அளித்தல்—

பொதுக் கணக்குக் குழு .. 377

5. சட்டமுன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரிச் சட்டமுன்வடிவு, 1992. 377–378

(ஆ) கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன் வடிவு, 1992. 378

6. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி) 379–481

கா 1
V2m,31 N92
N92.22-2



பக்கங்கள்

மானியக் கோரிக்கை எண் 17—கல்வி—
தொடர்ச்சி.

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் 390, 449–480
திரு. எஸ். டேனியல்ராஜ் .. 380–384
திருமதி கவிநிலவு தர்மராஜ் .. 384–389
திரு. ஜி. பழனிசாமி .. 390–395
டாக்டர் அ. செல்லக்குமார் .. 396–401
திருமதி ரெ. சியாமளா .. 402–404
டாக்டர் தே. குமாரதாஸ் .. 405–412
திருமதி கற்பகம் இளங்கோ .. 412–415
திரு. எஸ். திருநாவுக்கரசு .. 416–427
திரு. அ. தேவராஜ் .. 428–431
டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை .. 431–433
திரு. சா. பன்னீர்செல்வம் .. 433–436
திரு. எஸ். ஆண்டித்தேவர் .. 437–440
*திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் .. 441–448

7. அறிவிப்பு—

டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி அவர் பிறந்த நாளான 14–4–1992 ஆம் நாள் விடுமுறை தினமாக அறிவிக்கப் பெறுதலும், அன்றைய தினப் பேரவை அலுவல் பிறிதொரு நாள் எடுத்துக் கொள்ளப் பெறுதலும். 396

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். .. 481–481

800 009
163178

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 20, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு—2023**

**1992 ஏப்ரல் 2, வியாழக்கிழமை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை''.

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்றப் பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.

### 1. வினாக்கள்—விடைகள் :

### உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 435, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

435—
சேலத்தில் அனைத்து நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்தில் செயல்படுத்த நடவடிக்கை.

*8094 திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலத்தில் அனைத்து நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்தில் செயல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1992 ஏப்ரல் 2

(அ) மற்றும் (ஆ) : சேலத்தில் ஒருங்கிணைந்த நீதி மன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கு தோராய மதிப்பீடு ரூபாய் 3 கோடியே 25 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தக் கட்டிடங்களின் திருந்திய வரைபடத்திற்கு உயர்நீதி மன்றம் ஒப்புதல் அளித்துவிட்டது. எனவே அதனையொட்டி அரசினுடைய தலைமைப் பொறியாளர், பொதுப் பணித்துறை (கட்டிடங்கள்) அதனை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்.

திரு.கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் அனைத்து நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்தில் செயல்பட ரூபாய் 3 கோடியே 25 இலட்சம் செலவில் கட்ட இருக்கும் நிதி மன்றக் கட்டிடங்களுக்கான கட்டுமானப் பணி எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திலேயிருந்து 'டிசைன்' பெறுவதற்கு தாமதமாகிறது. அவர்கள் 'அப்ரூவல்' அளித்து விட்டார்கள். எனவே ஒரு திருத்திய மதிப்பீட்டை நம்முடைய பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மென்ட் இன்றைக்கு செய்து கொண்டிருக்கிறது. துரிதப்படுத்தி விரைவில் அந்தப் பணி தொடங்கப்படும்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சேலத்தில் புதிய கட்டிடம் கட்டப்பட்ட பிறகு அந்தக் கட்டிடத்தில் எந்தெந்த நீதிமன்றங்கள் செயல்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நேரத்தில் அந்த முடிவுகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒருங்கிணைந்த நீதிமன்றங்களின் வளாகத்திற்கு முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் அங்கே அடிக்கல் நாட்டிவிட்டு வந்தார்கள். அதற்குப் பின்னாலே இன்னும் அந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டிடம் கட்டப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னேன், ''டிசைன்'' உயர் நீதி மன்றத்திலேயிருந்து பரிசீலனை செய்து



1992 ஏப்ரல் 2]

ஒப்புதல் அளிக்க சற்று கால தாமதம் ஆயிற்று. அவர்களும் இப்போது கிளியர் செய்துவிட்டார்கள். எனவே இனி தாமதம் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 436, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

436—

சங்கராபுரத்தை தனி வட்டமாக்குதல்.

* 3380 திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கள்ளக்குறிச்சி வட்டத்தை இரண்டாகப் பிரித்து சங்கராபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனி வட்டத்தை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆய்வில் உள்ளது.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி வட்டாட்சியர் அலுவலகம் எப்போது துவங்கப்படும் என்பதையும் அதற்குரிய கட்டிடங்கள் எப்போது ஆய்வு செய்யப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தென்னார்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்ற செயற் குறிப்பு இன்றைக்கு ஆய்வில் உள்ளது. ஆய்வில் உள்ளது மட்டுமல்ல, இந்த நிதியாண்டில் உள்ளது. இந்த நிதியாண்டில் நடைபெறும்போது அது நடைபெறும். இந்த வட்டமும் இரண்டாகப் பிரிக்கப்படும்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வட்டாட்சியர் அலுவலகத்தை சங்கராபுரத்தில் துவக்குவது என்றால், கோட்டைமேடு என்ற பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில் தனியாக அதிக பரப்பளவு உள்ள இடங்கள் உள்ளன. மேற்படி இடத்தையே வட்டாட்சியர் அலுவலகத்திற்காக தேர்ந்தெடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற வருவாய் அதிகாரிகளும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அதை ஆராய்ந்து எங்கே தலைமையிடம் வைக்க வேண்டும், எங்கே கட்டிடம் கட்ட வேண்டும் என்பதைப்பற்றி அவர்கள் சிபாரிசு செய்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 437, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

437—

பிரமலைக் கள்ளர் இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு இனாமாக உழவு மாடுகள் வழங்கல்.

* 3869 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பிரமலைக் கள்ளர் இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு இனாமாக உழவு மாடுகள் வழங்கவும், பாசனக் கிணறுகள் வெட்ட தொகை வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. பிரமலைக் கள்ளர் இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு இலவசமாக உழவு மாடுகள் வழங்கும் திட்டம் நடைமுறையில் இல்லை.

2. பாசனக் கிணறுகள் வெட்ட பிரமலைக் கள்ளர் உள்ளிட்ட அனைத்து சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த சிறிய விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டுக்கென ஆண்டு வருமானம் ரூ. 6,400-க்கு மிகைப்படாமலும், இரண்டு ஏக்கர் மற்றும் அதற்குட்பட்ட விவசாய நிலம் உள்ளவர்களுக்கு மட்டும் அதிகபட்சமாக ரூ. 2,500-ம் மானியமாக வழங்கப்படுகிறது.

முற்பகல் 9-35

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல ஆண்டுக் காலமாக இந்த சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மக்களுக்கு—நாம் அரிசனங்களுக்கு எப்படி வாங்கிக் கொடுத்தோமோ, அதே போன்று



இனாமாக மாடுகள் வாங்கிக் கொடுக்கப்பட்டன; இனாமாக கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்பட்டன; அதே போன்று வீடுகள் கூட இனாமாகக் கட்டிக் கொடுக்கப்பட்டன. ஆனால் இப்போது அந்த மக்களுக்கு அவைகளை எல்லாம் நிறுத்தி இருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்றால், பொன்னம்மாள் அவர்களுடைய ஆட்களுக்கு மட்டும் செய்கிறார்கள், எங்களுக்கு இல்லை என்ற ஒரு நிலைமை உருவாகி இருக்கின்றது. எனவே மீண்டும் அவைகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு ஏற்கெனவே எப்படி அரசு செய்ததோ—அதைக் கொடுத்துவிட்டு நிறுத்தக் டாது ; ஆகையினால், எப்படி ஏற்கெனவே என்ன திட்டம் இருந்ததோ—அதே திட்டத்தையும், இனாமாக வழங்கக் கூடிய திட்டங்களையும் அவர்களுக்கு நிறைவேற்றி தயவுசெய்து மறு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உழவு மாடுகள் வாங்கி வழங்குகின்ற திட்டம் முன்னாலே இருந்ததாக இங்கே குறிப்பிலே இல்லை. இந்த பாசனக் கிணறுகளுக்காக மாத்திரம்தான் 2,500 ரூபாய் மானியம் வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அது தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உழவு மாடுகள் வழங்கும் திட்டம் நடைமுறையில் இருந்தது என்று குறிப்பிடுகிறார்கள். அது, விவரத்திலே இல்லை. அப்படி இருந்தால் அது எப்போது நிறுத்தப்பட்டது, ஏன் நிறுத்தப்பட்டது என்பது நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். மேலும், இந்த பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு கடன் வழங்குகிற திட்டத்திற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்ற ஆண்டு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி மத்திய அரசிடமிருந்து இதே அளவுக்கு உதவியையும் பெற்று மிக அதிகமான விவசாயிகளுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினருக்கு இந்த பாசனக் கிணறுகள், குழாய்க் கிணறுகள் வெட்டுவது போன்றவற்றிற்காக 20 ஆயிரம் ரூபாய் அளவிலே உயர்ந்த அளவாக வைத்து அதிலே மூன்றில் ஒரு பகுதியை வழங்க—தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு வழங்குவதைப் போன்ற-ஒரு திட்டத்தை மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், அறிவித்து இருந்தார்கள். ஆனால், மத்திய அரசாங்கம் பிற்படுத்தப்பட்ட அல்லது சீர்மரபினர் என்ற முறையிலே ஒதுக்க முடியாது என்று தெரிவித்ததையொட்டி, சென்ற ஆண்டு நிறைவேற்றப்படவில்லை. ஆனால் இந்த ஆண்டு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. இதை எப்படி சீர்மரபினருக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு எந்த அடிப்படையில் உதவிகளைச் செய்வது என்பதைப் பற்றி துறை பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது. முடிவு எடுத்ததற்குப் பிறகு இந்தத் திட்டம் இந்த ஆண்டிலே நிறைவேற்றப்படும்.

[1992 ஏப்ரல் 2

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உழவு மாடுகள் கொடுத்தது மாத்திரமல்லாது வீடுகளையும் கட்டிக் கொடுத்து இருக்கின் றோம். அந்த நிலையை இப்போது இல்லாமல் செய்து இருக் கின்ற காரணத்தினாலே, அவர்கள் 'நமக்கு இல்லை என்று செய்துவிட்டார்களே'—இந்த பொன்னம்மாள் தானே இந்தத் தொகுதியில் இருந்துகொண்டு இருக்கிறார்கள் ; அவர்களுக்கு ஓட்டுப் போட்டுக் கொண்டே இருந்தோமே என்று சொல்லி' அந்த அரிசனங்களுக்கு மட்டும் தானே அவர்கள் செய்கிறார்கள். அவர்கள் அந்த சாதியில் பிறந்ததாலே என்ற ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, ஏற்கெனவே இந்தத் திட்டங் கள் எல்லாம் அரசால் அனுமதிக்கப்பட்டு, வழங்கப்பட்டு இருக்குமேயானால் அதை தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறையினரை அழைத்து, பழைய ரிக்கார்டுகளைப் பார்த்து மீண்டும் அவைகளைப் புதுப்பிப்பதற் கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரமலைக் கள்ளர் சமு தாயம் நிலக்கோட்டைத் தொகுதியில் மட்டும் அல்ல ; எல்லாத் தொகுதிகளிலும் இருக்கிறார்கள். அதனால் உங்கள்மீது மட்டும் குறை வராது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, ஏகமனதாகக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டுகிற திட்டத்தைப் பற்றி நான் பலமுறை இந்த மன்றத்திலே கேள்விகளுக்குப் பதில் அளித்து இருக்கிறேன். அது நீண்ட காலத்திற்கு முன்னாலேயே நிறுத்தப்பட்டு இருக்கிறது. இப்போது குறிப்பாக நரிக்குறவர் களுக்கு மட்டும்தான் அது அமல்படுத்தப்பட்டு வருகிறது. சீர் மரபினருக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கெல்லாம், இப்படிப்பட்ட வீடு வழங்குகிற திட்டத்துக்கு உதவி செய்ய வேண்டும் என்பதைப் பற்றி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிகத் தீவிரமாக ஆராய்ந்து அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். இதை மத்திய அரசி னிடத்திலே கேட்டு இருக்கிறோம். மத்திய அரசு, அரிசனங் களுக்குத் தான் ஒதுக்க முடியுமே தவிர, பிற்படுத்தப்பட்டவர் களுக்கு இல்லை என்கின்ற காரணத்தினாலே, இதுவரை அவர் கள் இதிலே கவனம் செலுத்தவில்லை. இந்த ஆண்டுதான் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், மிகுவும் பிற்படுத்தப்பட்டவர் களுக்கும் இப்படிப்பட்ட திட்டங்களை விரிவுபடுத்துவதைப் பற்றி மத்திய அரசும் இப்போது பரிசீலித்துக் கொண்டு இருக் கிறது. ஆகவே, வீடு கட்டுகிற திட்டம் பற்றி பரிசீலிக்க



1992 ஏப்ரல் 2]

முடியும். 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொகை செலவு செய் தால்தான் ஒரு வீடு கட்ட முடியும் என்பதனாலேதான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் நீண்ட காலத்திற்கு முன்பே நிறுத்தப்பட்டு இருக்கிறது. அதைப்போல இந்த உழவு மாடுகள் வழங்குகிற திட்டமும், நான் முன்னாலே குறிப்பிட்டதைப் போல, இப்போது குறிப்பிலே இல்லை, அது எப்போது வழங்கி னார்கள், எப்போது நிறுத்தினார்கள் என்பதும் தெரியவில்லை. இவைகள் அனைத்தையும் அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித் தேவர்.

முற்பகல் 9-40

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்மரபினர் என்கிற 'டினோட்டிபைட் கம்யூனிட்டிஸ்' என்கிற பிரமலைக் கள்ளர் இனத்திற்கு ஆங்கி லேயர் காலத்திலிருந்து தனியாக கள்ளர் சீரமைப்பு துறை அமைத்து, மாடு வழங்கும் திட்டம், கிணறு வெட்ட அதற்குரிய பணம் உதவி செய்தல், வீடு கட்டிக் கொடுத்தல் ஆகிய அனைத் தையும் செய்து கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு காங்கிரஸ் ஆட்சியிலும் அந்தத் திட்டம் இருந்தது. இப்போது கிணறு வெட்டுவதற்கு மட்டும் 2,500 ரூபாய் மானியமாகக் கொடுப்ப தாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிணறு வெட்டுவதற்கு 2,500 ரூபாய் கொடுத்தால் போதுமா என்பதை அரசு பரிசீலிக்குமா ? வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் இனாமாக நாங்கள் எல்லாம் அந்த வீடு கட்டும் திட்டத்தில் வாங்கியிருக்கிறோம். அதற்கு பிறகு கூட 6,000 ரூபாய் மானிய மாகக் கொடுத்து, பாக்கித் தொகையை அவர்களே போட்டு கட்டிக்கொள்ள வேண்டுமென்று இருந்தது. அது நிறுத்தப் பட்டதற்கு காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான முனனாலே விளக்கமாகக் கூறியிருக் கிறேன். வீடு கட்டுகிற திட்டத்தைப் பொறுத்தவரையில் நீண்ட காலத்திற்கு முன்பே 3,000 ரூபாய் அளவிலே வீடு கட்டிக்கொண்டு இருந்தார்கள். அதற்கு பிறகு 13,000 அல்லது 14,000 ரூபாய் வேண்டுமென்று தேவைப்பட்ட நேரத்தில் இந்த நிதி நெருக்கடி களையொட்டி அது நடைமுறைப்படுத்தப்படாமல் நிறுத்தப் பட்டிருக்கிறது. இப்படி உழவு மாடுகள் கொடுப்பதைப்பற்றிய குறிப்பு இல்லை. அதை விசாரிக்கிறேன் என்று தெரிவித்து இருக் கிறேன். மேலும் இந்த கிணறுகள் வெட்டுவதற்குநீண்ட காலமாக ஒதுக்கப்பட்டு வந்தது, இப்போது 2,500 ரூபாய் போதுமா என்கிறார்கள். அதைத்தான் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சென்ற ஆண்டு பரிசீலித்து 20,000

ரூபாய் உச்சக்கட்டமாக வழங்கலாம்; அதிலே மூன்றில் ஒரு பங்கு மானியமாக வழங்கலாம் என்று தான் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மத்திய அரசினிடத்தில் இரண்டு கோடி ரூபாயை எதிர்பார்த்தார்கள். ஆனால், மத்திய அரசு இந்தத் திட்டம் ஏழையெளிய சிறிய விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையின் மூலம் இப்படிப்பட்ட கிணறு வெட்டுகிற திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால், இதை ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு என்று, சீர்மரபினருக்கு என்று தனியாகப் பகுத்து பார்க்க முடியாது என்று குறிப்பிட்டு விட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள் தெரிவித்ததைப் போல, முன்னாலே இப்படிப்பட்ட பிரிவினருக்கெல்லாம் தனித்தனியாக வழங்கப்பட்டு வந்தது. இப்போது சிறிய விவசாயிகள் என்ற பட்டியலில் எல்லோரும் வருகிறார்கள். அவர்களுக்கு வேளாண்மைத் துறையின் மூலம் இந்தக் கடன்கள், மானியங்கள் வழங்கப்படுகின்றன. அதற்கு மத்திய அரசு உதவி செய்கிறது. ஆகவே தான் தனியாக மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு, சீர்மரபினருக்கு என்று திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் தெரிவித்ததையொட்டி சென்ற ஆண்டு இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கியும் அதைச் செயல்படுத்த முடியவில்லை. இந்த ஆண்டு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை எப்படிச் செயல்படுத்துவது என்பதைத் துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 438 திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

438—

## கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்கு அருகில் மருத்துவமனை கட்டுதல்,

*1383 திரு. சிங்கை கோவிந்தராசு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை மருத்துவக் கல்லூரிக்கு அருகில் (பி. ஆர். புரம்) புதிதாக கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) மற்றும் (ஆ): கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை மருத்துவக்கல்லூரிக்கு அருகில் (பி. ஆர். புரம்) புதிதாக கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் இல்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை அரசு மருத்துவமனை டவுன் ஹால் அருகில் இருக்கிறது. அரசு மருத்துவக் கல்லூரி அங்கேயிருந்து ஒன்பது கிலோமீட்டர் தொலைவில் உள்ள பி.ஆர். புரம் அருகில் உள்ளது. இதற்கும் அதற்கும் இடைவெளி அதிகமாக இருக்கிற காரணத்தால் மாணவர்கள் தங்கள் பயிற்சியைப் பெறுவதில் இடையூறுகள் இருக்கின்றன. அந்த மருத்துவமனையின் அருகில் கோவை மத்திய ரெயில் நிலையம் இருக்கிற காரணத்தால் அடிக்கடி புகைவண்டிகள் வந்து போய்க் கொண்டிருப்பதால் நோயாளிகளுக்கு அந்த சத்தம் இடையூறாக இருக்கிறது. மாணவர்கள் அங்கே தினந்தோறும் சென்று பயில்கிற நிலையும் இருக்கிறது. இப்போது மருத்துவக் கல்லூரி இருக்கிற இடத்தில்.... ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. சிங்கை கோவிந்தராசு : தலைவர் அவர்களே, அங்கே 120 ஏக்கர் வாங்கி பயனற்றதாக அதில் 80 ஏக்கர் இருப்பதாக தகவல்கள் கிடைத்து இருக்கின்றன. அந்த இடமும் அரசுக்கு பயன்படாமல் தரிசாக கிடக்கிறது. இந்த இரண்டும் ஒரே இடத்தில் இருந்தால் நகரத்தில் இருக்கக்கூடிய நெருக்கடியைக் குறைக்கவும் வாய்ப்பாக இருக்கும் என்பதைக் கருதி, அரசு மருத்துவமனையையும், கல்லூரியையும் ஒரே இடத்தில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நகரத்தினுடைய மத்தியப் பகுதியில் இருக்கிறது. ஆனால் கல்லூரி வெளியில் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் கொண்டு வந்தால் சிறப்பாக இருக்கும் என்று துறை கூட அப்படிக் கருதுகிறது. நாங்களும் அதை நேரடியாகப் பார்த்ததால் அப்படித் தான்யோசிக்கிறோம். ஆனால் அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 1,052 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இருக்கிறது. கட்டிடங்கள் நிறைய இருக்கின்றன. எனவே, அங்கே புதிதாகக் கட்டினால், மொத்தமாக எல்லா மருத்துவமனைகளும் அங்கே வருகிற அளவிற்குக் கட்ட வேண்டும். பிரித்து வைத்தாலே பிரச்சினை வந்து விடுகிறது. பல இடங்களிலே பிரித்துப் பிரித்து இருக்கின்ற காரணத்தாலே, நிர்வாகச் சிரமங்கள் இருக்கின்ற காரணத்தாலே, அதை ஒரே

யடியாக அத்தனையையும் அந்த இடத்திற்கு மாற்றிக் கொண்டு வருவது என்பது சாத்தியம் இல்லாத ஒன்றாக இருக் கிறது. இருந்தாலும், கல்லூரியையும், மருத்துவமனையையும் ஒன்றாகச் சேர்ப்பதற்கு உரிய ஆலோசனையை இந்தத் துறை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் போதிட படுக்கை வசதிகள் இருந்தாலும், மற்ற துறைகளில் அங்கே சிகிச்சை பெறுவதற்கு போதிய ஆதாரமான வசதிகள் இல்லாத காரணத்தால், சில குறிப்பிட்ட துறைகளையாவது, தனியாகப் பிரித்து, மருத்துவமனை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாத் துறைகளுக்கும் தேவையான அளவிற்கு அங்கே படுக்கைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, போதிய அளவிற்கு படுக்கைகள் இல்லை என்று சொன் னால், அதை விரிவுபடுத்துவதற்கு வேண்டுமானால் நடவடிக்கை எடுக்கலாம். சில துறைகளைப் பிரித்துக் கொண்டு வந்து கல்லூரிக்கு அருகிலே வைக்கவேண்டும் என்ற உணர்வை அவர்கள் தெரிவிக்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படி வருகிற போதுதான் நிர்வாகச் சிக்கலே ஏற்படுகிறது. கன்ட்ரோல் இல்லாமல் போய்விடுகிறது. எனவே, அத்துனையையும் ஒரே நேரத்தில் அங்கே மாற்றுவதற்கான நடவடிக்கையை மேற் கொள்வதுதான் சிறப்பாக இருக்குமே ஒழிய, தனித் தனி யாகச் செய்வதற்கான வாய்ப்பு இருந்தால், அது சிரமமாக இருக்கும். நிதிப் பிரச்சினையும் இதிலே இருக்கிறது. முழுவதையும் கொண்டு வருகிறபோது, நிதிப் பிரச்சினை ஏற் படுகிறது. எனவே, உரிய நேரத்திலே சரியாக அரசு முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே, மருத்துவக் கல்லூரி, மருத்துவ மனையை ஒட்டி இருப்பதைப் போல, அங்கேயும் இருந்தால், அங்கே பயில்கிற மாணவர்களுக்கும், பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிற டாக்டர்களுக்கும் மிகச் சௌகரியமாக இருக் கும். நிதிநிலை சரியில்லை என்று சொன்னார்கள். ஏற்கனவே



இருக்கிற மருத்துவமனையை, மாநகராட்சிக்கு ஒப்படைத்து, அதன்மூலம் காம்ப்ளக்ஸ் கட்டக்கூடிய சூழ்நிலை வருமானால் பல கோடி ரூபாய் வருமானம் வருகிற வாய்ப்பிருக்கிறது. அந்த நிதியைக் கொண்டு கட்டி, அங்கே மருத்துவமனையை மாற்றுவதில் எந்தவிதமான சிக்கல்களும் ஏற்படாது. ஆகவே தீவிரமாக அரசு பரிசீலித்து மாற்றுவதற்குண்டான நடவடிக் கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூருருக்கு நானும், மாண்புமிகு உறுப் பினர் பழனிசாமி அவர்களும் செலகிறபோது, இதைப்பற்றி நாங்கள் ஆலோசித்துக் கொண்டுதான் போனோம். அப் போது, இருக்கிற ஒரே சிக்கல் அந்த இடத்தை கமர்சியலாக பயன்படுத்தினால், நிறைய அதிலே வருமானம் வரும், அதை வைத்து நல்ல கட்டிடங்களை மிகச் கிறப்பாக அனேகமாக வேறு எங்கேயும் இல்லாத அளவிற்கு மருத்துவமனையை நம்மால் கட்டிவிட முடியும். ஆனால், இந்த இடைக்காலத்திலே எங்கே மருத்துவமனையை வைப்பது, அதுதான் பிரச்சனை. இடைக்காலத்திலே அந்தப் பணத்தை, நிதிநிலைமையை சரி செய்து கொள்வதற்கான நிலைமை நமக்குப் போதிய அளவிற்கு இல்லை. எனவே, இதையெலலாம் உரிய வகை யிலே ஆலோசித்து சரியான நடவடிக்கை எடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அருகாமையில் அரசு கலைக்கல்லூரி இருக்கிறது. இந்த அரசு கலைக் கல்லூரியினுடைய இடத்தை, கோவை மருத்துவக் கல் லூரிக்கு மாற்றிவிட்டு, அரசு கலைக் கல்லூரியிலே கோவை மருத் துவக் கல்லூரியை மாற்றினால், அரசுக்கு செலவும் இருக்காது, நாம் நினைக்கக் கூடிய நல்ல திட்டமும் நிறைவேறும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை நிறைவேற்றுவதற்கு முன்வருவார என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கனவே ஆலோசிக்கப்பட்டு கைவிடப்பட்ட ஒரு காரியம். காரணம், அங்கே மாணவர்களுக் குள்ளே கொஞ்சம் பிரச்சினை ஏற்பட்டது. மருத்துவக் கல் லூரி மாணவர்கள் கூட அங்கே ஏறத்தாழ 100, 120 ஏக்கர் நிலப்பரப்பு இருக்கிற காரணத்தாலே, கட்டிடமும் கொஞ்சம் நல்ல கட்டிடமாக இருக்கிற காரணத்தாலே, அங்கேயே இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். எனவே, இப்போது அதைப் பற்றி ஒரு முடிவு சொல்வது என்பது இயலாத காரியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 439, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

439—

பாம்புகளைப் பிடித்து மனித உயிர்களைப் பாதுகாக்க நடவடிக்கை.

*1532 திரு. ஜி. பழனிசாமி :

மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டத்தில் பாம்பு பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளதைத் தளர்த்தி பாம்புகளைப் பிடித்து மனித உயிர்களைப் பாதுகாக்க அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாம்புகளைப் பிடிப்பதற்காக தடை ஏதும் தஞ்சை மாவட்டத்துக்கென தனியாக இல்லை. அழிந்து வரும் விலங்கினங்களைப் பாதுகாக்கவும், அவற்றைப் பிடித்தல், அவைகளை வணிகம் செய்தல் ஆகியவற்றை முறைப்படுத்த, 1972-ல் மத்திய அரசு நிறைவேற்றிய வன உயிரின பாதுகாப்புச் சட்டம் மாநில முழுமைக்கும் ஒரே சீராகப் பொருந்தும்.

தஞ்சை மாவட்டத்திலிருந்து இதுவரை எந்த தனி நபரிடமிருந்தோ அல்லது நிறுவனங்களிடமிருந்தோ பாம்புகளின் தொல்லை இருப்பதாகவோ, பாம்புகளால் மனித உயிருக்கு ஆபத்து உள்ளதாகவோ புகாரோ அல்லது அவைகளைப் பிடிக்கக் கோரிக்கையோ வரவில்லை. அவ்வாறு வந்தால் அவைகள் உடனுக்குடன் வெகு விரைவில் கவனிக்கப்படும்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, நாகை—காயிதே மில்லத் மாவட்டங்களிலே இன்றைக்கு விஷமுள்ள பாம்புகள் இருக்கின்றன. பாம்புகளை பிடிக்கக்கூடாது, பாம்புத் தோலை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று தடை விதித்த பின்னால், பாம்புகள் உற்பத்தி அதிகமாக உள்ளது. சாதாரணமாக கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் பல பேர் பாம்புக் கடியினால், உயிரிழந்து இருக்கிறார்கள். அனேகமாக இதிலே நூற்றுக்கணக்கான பேர்கள் இறந்திருக்கிறார்கள். அரசு கொடுக்கக்கூடிய உதவித் தொகை கூட, பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டும், அவர்களுக்கு நிவாரணம் கிடைக்காத ஒரு சூழ்நிலை இன்றைய



தினம் இருக்கிறது. ஆகவே, அரசு இந்தச் சட்டத்தை தளர்த்தி அந்தப் பாம்புகளைப் பிடிப்பதற்கான முயற்சிகளிலே ஈடுபடுமா ? அமைச்சர் அவர்கள் கோரிக்கை வரவில்லை என்று சொல்கிறார்கள். இதையே கோரிக்கையாக எற்று அந்த நடவடிக்கையிலே இறங்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாம்புகளை நாம் அதிகமாகப் பிடித்தால், வயல்களிலே இருக்கின்ற நெற்களை பாதுகாப்பதற்கு எலிகள் தொல்லைகள் அதிகமாகப் பெருகும். சேமிப்புக் கிடங்குகளில் எலிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் பாம்புகளே அந்த எலிகளைப் பிடித்துக் கொன்றுவிடுகின்ற காரணத்தால் எலிகளை ஒழிப்பதற்காக பாம்புகளை இன்றைக்கு ஓரளவிற்கு பிடிக்கக்கூடாது என்று மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிற காரணத்தால் இதை நான் குறிப்பிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற மாண்புமிகு முதல்வரவர்கள், தமிழகத்திலே இருக்கின்ற நச்சுப் பாம்புகளை எல்லாம் பிடிக்கின்ற நேரத்தில் (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற பாம்புகளை நீங்கள் குறிப்பிட்டால், பிடிப்பதற்கு இந்த அரசு என்றைக்கும் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலிகளைப் பிடிப்பதற்காக இந்த பாம்புகளை வளர்ப்பதாக அமைச்சரவர்கள் இங்கே அறிவித்தார்கள். உற்பத்தி செய்யக்கூடிய விவசாயத் தொழிலாளர் அழிந்த பின்னர், நாம் இந்த உற்பத்தியை எப்படி எதிர்பார்க்கமுடியும் ? ஆகவே நான் அமைச்சருக்கு சொல்லிக் கொள்கிறேன். உண்மையில் இது மிகப் பெரிய சோதனை. இன்றைக்குக் கூட பல பேர் இறந்து போகின்ற அந்த கொடுமையான காட்சிகளை நாம் பார்க்க முடிகிறது. இன்றைக்கு கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களுக்குச் சரியான மருத்துவ வசதிகூட கிடைக்கவில்லை. அவர்களைக் கொண்டு வந்து மருத்துவமனையில் சேர்ப்பதற்குள்ளாக பல பேர் இறந்து விடுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் விரசு பாம்புகளை வளாக்கின்ற பண்ணைகளின் மூலமாகவாவது அந்தப் பாம்புகளைப் பிடித்துக் கொண்டு வந்து, நீங்கள் அந்த உயிரினங்களை பாதுகாக்க வேண்டுமென்று அங்கேயாவது கொண்டுவந்து விடுங்கள். இது மிகவும் அவசியமானது. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சை மாவட்டத்தில் நிறைய விஷப் பாம்புகள் இருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். (சிரிப்பு). (மேசையைத் தட்டும் ஒலி). எனவே

அவற்றை ஒழிப்பதற்குரிய நடவடிக்கைகளும் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று அமைச்சர் சொல்கிறார். நீங்கள் வேறு எதற்காக அதற்கு வக்காலத்து வாங்குகிறீர்கள்; (சிரிப்பு). மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு ரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எந்தத் தீங்கும் இழைக்காத தண்ணீர்ப் பாம்புகள்தான் அதிகமாக உண்டே தவிர, அதுவிஷப் பாம்பு இல்லை என்பதைத்தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : நான் சொல்வது நல்ல பாம்புகளை பற்றி. நல்ல பாம்புகளைப் பிடிக்க வேண்டுமென்று சொல்கிறேன். நீங்கள் விஷப் பாம்புகளைப் பிடிப்பது பற்றி ஒன்றுமில்லை. ஆகையால் தான் அந்தப் பாம்புகளைப் பிடித்து, உருப்படியாக அந்த விவசாயத் தொழிலாளிகளின் வாழ்விற்காக அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் அமர்ந்து விட்டார். அமைச்சர் பதில் வேண்டாம். அவர் பதில் கேட்கவில்லை. கேட்டு அமர்கிறேன் என்று சொல்லிவிட்டார். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் உற்பத்தி செய்கின்ற உற்பத்தி அளவில் 10 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதம் வரை எலிகளே அவற்றைச் சாப்பிட்டுவிடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி நாட்டிலே இன்றைக்கு பற்றாக் குறை இருக்கிறது என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும். எலிகளை பாம்புகளே தின்று விடுகிறது. ஆகவே அந்தத் தொல்லை குறைகின்றது என்கின்ற அடிப்படையில் வன உயிர் பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் பாம்புகளை இன்றைக்கு கொல்லக் கூடாது என்று மத்திய அரசு தடை விதித்திருக்கின்ற காரணத்தால் அதை நாம் பிடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது சிலபேர் பாம்புகளைப் பிடித்து, தெரியாமல் தோலை உரித்து வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதை யாரும் தடுக்கமுடியவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று தஞ்சை மாவட்டத்தில் சில விஷப் பாம்புகள் இருக்கின்றன. அவற்றை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அடக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே நீங்கள் குறிப்பிடுகின்ற இடத்திற்கு உடனடியாக நம்முடைய துறையின் அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களும், மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களும், தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தான் அந்த விஷப் பாம்புகள் இருப்பதாகச் சொன்னார்கள். தமிழகம் பூராவும் அந்த விஷப் பாம்பு கருநாகப் பாம்பு எல்லாம் நடமாடிக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், நல்ல பாம்பு போல் நடித்து, நடனம் ஆடியும் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் உடனடியாகத் தடுத்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருநாகப் பாம்பு இப்போது படம் எடுப்பதே இல்லை. படம் எடுக்காமல் தடுத்துவிட்டது இந்த அரசு என்பதையும், ஒப்பற்றத் தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்குப் பிறகு கருநாகப் பாம்பு படம் எடுக்க முடியாத அளவிற்கு அடக்கப்பட்டு விட்டது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தல்லவர்; வினா எண் 440, திரு. இரா. நடேசன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

440—

விலை உயர்ந்த ஈட்டி, தேக்கு மரங்களை நட்டு வருவாய் பெருக்க நடவடிக்கை.

*3519 திரு. இரா. நடேசன்

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள காடுகளில் மென்மையான மரங்கள் (Soft Wood) நடுவதால் அரசுக்கு பெரும் இழப்பு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விலை உயர்ந்த உயர்ரக ஈட்டி, தேக்கு மரங்களை நட்டு வருவாய் பெருக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள காடுகளில் மென்மையான மரங்கள் (Soft Wood) நடுவதால் அரசுக்குப் பெரும் இழப்பு ஏற்படுவதில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 9-55

திரு. இரா. நடேசன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே 2 பருவங்களிலும் மழை இருப்பதால் அங்குள்ள மரங்கள் எல்லாம் 100 அடி 150அடி வரை உயரத்தில் இயற்கையாக வளருகின்றன. அந்த இடத்தில் மென்மையான மரங்கள் நடுவதால் அவைகள் விலைக்குப் போகும் போது ஒரு கன அடிக்கு அளவிலே 50 ரூபாய் 60 ரூபாய் தான் வருகிறது. ஒரு கன அடி தேக்கு மரம் விற்றால் 500 ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது. அப்படியானால் அரசுக்கு வருமானம் அதிகம் வரும்— உயர்ந்த மரங்களாக இருப்பதால் மழையும் கூடுதலாக வரும். இவை இரண்டையும் வைத்து மீண்டும் அந்த இடங்களிலே மென்மையான மரங்களை நடுவதற்கு பதிலாக தேக்கு போன்ற மரங்களை நடுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே; ஆண்டு ஒன்றுக்கு 50 ஹெக்டேர் நிலப் பரப்பில் மட்டும் தான் மென்மையான மரங்களை நாம் நட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்குக் காரணம் கன்னியாகுமரி மாவட்டத்திலே கடல் ஓரப் பகுதிகளிலே உள்ள மீனவர்கள் மென்மையான மரங்களை வாங்கி படகுகளாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதே போல பக்கத்து மாவட்டமாக இருக்கிற காமராசர் மாவட்டத்தில் சிவகாசி போன்ற இடங்களில் இருக்கிற தீப்பெட்டி செய்பவர்களுக்கு இந்த மென்மையான மரம் தேவைப் படுகிறது. ஆகவே அரசு இதைக் கருத்திலே கொண்டு மென்மையான மரங்களை நட்டு மீனவர்கள் மற்றும் தீப்பெட்டித் தொழில் செய்பவர்களுக்கு உதவியாக அரசு இந்த நடவடிக்கையை மேற் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே தேக்கு மரங்களை நட முடியுமா என்று கேட்டார்கள். தேக்கு மரங்களை நடவேண்டுமென்றால் அங்குள்ள செடிகளையும் கொடிகளையும் மரங்களையும் அழித்து விட்டுத்தான் தேக்கு மரங்களை நட வேண்டியிருக்கிறது. அதற்கு மைய அரசினுடைய தடை இருக்கிற காரணத்தால், அங்குள்ள மரங்களை அழிக்க முடியாத சூழ்நிலை இருக்கறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் மீன் பிடிப்பவர்களுக்கு இந்த மரம் தேவைப் படுகிறது, என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு





நன்றி, கடலிலே மீன் பிடிப்பவர்களுக்குத் தேவையான மரங்களை அங்குள்ள விவசாயிகள் தாராளமாக பயிர்செய்து நல்ல முறையிலே அதை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக மரங்களை நடும்போது அதை நன்கு பராமரிக்க வேண்டும். அதை ஒழுங்காக பராமரிப்பு செய்ய முடியாத காரணத்தால், அரசாங்கத்திலே நடக்கூடிய இந்த மென்மையான மரங்கள் நல்ல விலைக்குப் போகிற நிலையில் பெரிதாக வளர்க்க முடியவில்லை. ஆகவே மீண்டும் கருணை கூர்ந்து நமது அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா, அந்த இடங்களில் தேக்கு மரம் நட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 50 ஹெக்டேர் நிலப் பரப்பிலே மட்டும்தான் இந்த மென்மையான மரங்கள் நடப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இடங்களை நாங்கள் நேரிடையாகப் பார்வையிட்டு தேக்கு மரங்களை நடுவதற்கு அது தகுதியான இடமாக இருக்குமேயானால் நமது ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவியினுடைய அரசு அதை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர், வினா எண் 441, திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்,

441—

## கணபதி பாளையம் நெசவாளர்கள் வீடுகளில் கூடுதலாக சமையலறை கட்ட கடன் வழங்கல்.

*5212 திரு, வ, சத்தியமூர்த்தி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், கணபதிபாளையம் நெசவாளர்களுக்கு ஏற்கனவே கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் கூடுதலாக சமையலறை ஒன்று கட்டிக் கொள்ள கடன் கேட்டுள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், சமையலறை கட்ட கடன் வழங்க அரசு முன்வருமா ?

[1992 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை

திரு. வ. சதநியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் மூலம் கட்டிக் கொடுக்கும் வீடுகள் எல்லாம் சமையல் அறையைச் சேர்ந்த ஒரு திட்டமாக இருக்கிறது. ஆனால் இதற்கு முன்பு கொடுத்த வீடுகளில் சமையல் அறை இல்லாத வகையில்-சமையல் அறையும் கைத்தறியும் ஒரே இடத்தில் இருப்பதால் பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு புதிதாக சமையல் அறையை கட்டிக் கொள்வதற்கு அரசு கடன் வழங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மூலக் கேள்வியில் கேட்டது கோவை மாவட்டம் குறித்து. இருந்தாலும் வீடு அபி விருத்திக்காக கட்டுகிறபோது, ஹட்கோ கடன் நிதி உதவி ரூ. 3,150-ம் மைய அரசு மானியமாக 800 ரூபாயும், தமிழகத்தின் மானியமாக 200 ரூபாயும் மொத்தமாக ஒரு வீட்டுக்கு 4,150 ரூபாய் வீதம் வழங்கி இருக்கிறது. அதற்கு மனு செய்வார்களே யானால் அவைகள் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்

திரு. வி பி. சந்திரசேகர் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் கணபதி பாளையம் என்பது என்னுடைய, பொள்ளாச்சி தொகுதியிலே இருக்கிறது அங்கே நெசவாளர்களுக்கு கட்டி கொடுக்கப்பட்டு இருக்கின்ற வீடுகளில் சமையல் அடுப்பு களும் தறியும் ஒரே இடத்தில் இருக்கின்ற காரணத்தினாலே விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட கொடுக்கப்பட்டிருக்கின்ற கடன்களில் முறையாக அவர்கள் கட்டியிருக்கிறார்கள். ஆகவே புதிய திட்டத்தின்படி அவர்களுக்கு கட்டி கொடுக்கப் பட்டிருக்கின்ற வீடுகளில் சமையல் அறை கட்டுவதற்காக கடன்கள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

பாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகூ பேரவைத் தலைவர் அவர்களே, கணபதி பாளையம் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள நெசவாளர்களுக்கு 120 உறுப்பினர் களுக்கு வீடு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வீடுகளை அபிவிருத்தி செய்வதற்காக ஹட்கோ நிதி உதவியுடன் கடன் உதவி வழங்கப்படுகிறது, 120 வீடுகளுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு ஒப்பு



1992 ஏப்ரல் 2]

தலும் பெறப்பட்டுள்ளது. ஹட்கோ கடன் மற்றும் மத்திய மாநில மானியம் கிடைக்கப் பெற்றதும் சங்கத்திற்கு பணம் விடுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 442, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

442—

## கொடுமுடியில் மேம்பாலம் கட்டுதல்.

*4747 திருமதி கவிநிலவு தர்மராஜ் ;

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஈரோடு—திருச்சி செல்லும் சாலையில் கொடுமுடி யில் ஒரு மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நினைத்ததை முடித்து சரித்திரம் படைத் துக்கொண்டிருக்கின்ற தங்கத் தமிழகத்தின் சிங்கத் தலைவியி னுடைய ஆட்சியிலே ''இல்லை'' என்ற சொல்லுக்கு இடமில்லாத சூழ்நிலையிலே கொடுமுடி நகரத்தினுடைய இந்த மேம்பாலம் மிகவும் அத்தியாவசியமாக இருக்கிறது என்பதை இந்த நேரத் திலே எடுத்துச் சொல்லி கொடுமுடியை ஒரு தீவு போல மாற்றி ஒரு புறம் காவேரி ஆற்றுக்கரை, மூன்று புரங்களில் புகை வண்டியினுடைய ரயில்வே கேட்டுகள் இடையிலே தவித்துக் கொண்டிருக்கின்ற $3\frac{1}{2}$ இலட்சம் மக்கள் பெருந்தலைவர் காமராஜர் வந்த போதும், புரட்சித் தலைவர் எம.ஜி.ஆர். வந்த போதும், இதய தெய்வம் நடமாடும் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வந்த போதும் அரை மணி நேரம் அங்கு காத்து நிற்க வேண்டிய ஒரு இழிநிலை ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலை யிலே அவசரமாக கொடுமுடியை விட்டு வெளியே வரக்கூடிய

ஒரு சூழ்நிலை இல்லாமல் கர்ப்பிணிப் பெண் கூட அரை மணி நேரம் அங்கு காத்திருந்து ஒரு குழந்தையை பெற்றுவிட்ட ஒரு சூழ்நிலையிலே, பள்ளிக்கு விரைந்து செல்லக் கூடிய ஒரு மாணவன் தந்தையின் முன்னாலே மரணத்திற்கு ஆளாகக் கூடிய ஒரு இழி நிலையில் கொடுமுடியினுடைய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய கருணைக் கடாட்சம் 6½ கோடி மக்களுடைய இதயத்திலே நிறைந்திருக்கின்ற அந்த புரட்சித் தலைவியினுடைய கடைகோடிப் பார்வை கொடுமுடியின் மீது திரும்புமேயானால், ஒரு கோடி ரூபாயை ஒதுக்கினார்கள் என்றால் சுற்றுலா மையத்திற்கு அறிவித்திருக்கின்ற அந்தக் கொடுமுடி மாநகர்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கவிநிலவு தர்மராஜ், துணைக் கேள்வி கேளுங்கள்.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : உலகம் பாராட்டக்கூடிய அளவிலே சுற்றுலா மையமாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற அந்த கொடுமுடி மாநகர் 20 இலட்சம் மக்களை தினசரி சந்தித்துக் கொண்டிருக்கிறது, எனவே இல்லை என்று சொன்ன இந்தத் திட்டத்தை கருணை உள்ளத்தோடு அரசு மீண்டும் பரிசீலிக்குமா, அடுத்த ஆண்டிலாவது எங்களுக்கு விடிவு காலம் பிறக்குமா என்பதை இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த காலங்களில் நடந்த நிகழ்ச்சிகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். தற்போது அவர்கள் சொன்னதைப் போன்ற புகார்கள் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே அந்தப் பகுதியிலிருந்து வரவில்லை. இரயில்வே மேம்பாலம் கட்டுகின்ற நேரத்திலே இன்றைக்கு 75 இடங்களை தேர்வு செய்து இரயில்வேநிர்வாகம் நம்முடைய தமிழகஅரசுக்கு அனுப்பி இருக்கிறது. 50 சதவீதம் நாம் பணம் கொடுக்கின்றோம். இன்றைக்கு இவர் சொல்கின்ற அந்த மேம்பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ 3 கோடி ரூபாய் செலவாகும். இன்றைக்கு முன்னுரிமைப் பட்டியலிலே அவர் குறிப்பிடுகின்ற அந்த கொடுமுடி நகரம் இடம் பெறாத காரணத்தினாலே—அந்த 75-ல் உள்ள பட்டியலில் அந்த கொடுமுடி நகரம் இடம்பெறவில்லை. ஆகவே நம்முடைய தமிழக அரசு அதை எடுத்துச் செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்று கருதுகிறது. இருந்தாலும் எதிர்காலத்திலே அவர் சொல்லிய கோரிக்கைகளை மனதிலே வைத்து இரயில்வே நிர்வாகத்தோடு தொடர்பு கொண்டு அவர்களும் பாதிப் பணம் கொடுக்க வேண்டி இருக்கின்ற காரணத்தினாலே அதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 443, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

**443—**

திருப்பத்தூர் அருகே புறவழிச்சாலை அமைத்தல்.

*5287 திரு. ஏ. கே. சுந்தரவேல் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் அருகே புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகரத்தில் உள்ள சாலைகளில் போக்குவரத்து நெரிசல்கள் அதிகமாக உள்ளதால அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதனால் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான விபத்திலிருந்து மக்களைச் காப்பாற்ற புறவழிச்சாலையை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வி புறவழிச் சாலை அமைக்க வேண்டும் என்பது, இன்றைக்கு எல்லா பெரு நகரங்களிலும் இந்தக் கோரிக்கை எழுந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதைவிட பெரிய நகரங்களுக்கு எல்லாம் முன்னுரிமை கொடுத்து, இன்றைக்கு கோவை, மதுரை, போன்ற இடங்களிலே அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இன்றைக்கு இவர் சொல்லுகின்ற இடத்திலே ஏறத்தாழ 6 கிலோ மீட்டர் சாலை அமைக்க வேண்டியிருக்கிறது. 60 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. உடனடியாக இந்தத் திட்டத்தை எடுத்துச் செய்வதற்கு நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால், இன்றைக்கு திருப்பத்தூர் மக்கள் நலனை கருத்தில் கொண்டு, கொண்டு வருங்காலத்தில் அதைப்பற்றி பரிசீலிக்கலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 444, டாக்டர் ஜெ. பரந்தாமன், திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

444—

## பச்சகுப்பம் இரயில்வே கேட் அருகில் மேம்பாலம் கட்டுதல்.

* 5343 டாக்டர் ஜெ. பரந்தாமன் :

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாதனூர் ஒன்றியம், பேரணாம்பட்டு தொகுதி, பச்சகுப்பம் இரயில்வே கேட் அருகில் சாலையில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும் ;

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பச்சகுப்பம் ரயில்வே கேட் அருகில் மேம்பாலம் கட்டுவதற்கு தேவையான இடத்தை கையகப்படுத்துவதற்காக இன்றைக்குப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்பு அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ''ஆம்,, என்று பதில் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், வெற்றிப் பயணத்தை யாராலும் நிறுத்த முடியாத மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஆம்பூர் பச்சகுப்பம் கேட்டினால் நின்று செல்ல வேண்டி வந்ததால் பேரணாம்பட்டு தொகுதி மக்கள் கோபம் கொண்டு இந்த கேட்டை கண்டிக்க, தண்டிக்க மேம்பாலம் கட்ட விரும்புகிறார்கள். போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு நேரம், எரிபொருள் இரண்டையும் சேமிக்க முடியும் என்பதால் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற முடியுமா என்றும், திட்ட மதிப்பீடு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அவர் கேட்டிருக்கின்ற இந்த மேம்பாலம் கட்டுகின்ற பணி 1991-92-ஆம் ஆண்டு பட்டியலில் சேர்க்கப்பட்டு இன்றைக்கு மாவட்ட வருவாய் நிர்வாகம் மூலம் 4 (1) செக்ஷன்படி நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைச் சொன்னேன். ஆகவே, நிலத்தை கையகப்படுத்தியதற்குப் பின்னால் அந்தப் பணியை விரைவாக தொடங்குவதற்கு இந்தத் துறை நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி-சென்னை நெடுஞ்சாலையில் இதுபோன்று 3 இடங்களில் இந்த ரயில்வே லைன் இருப்பதால்—அந்தப் பகுதியிலிருந்து வருகின்ற நான் மற்றும் 20 சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே சென்னைக்கு வரும்போதும், சென்னையிலிருந்து திரும்பிப் போகும்போதும் நேரம் அதிகமாக ஆகிற காரணத்தால்—அந்தப் பகுதிகளில் எல்லாம் மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு ரயில்வே மேம்பாலம் கட்டுகின்ற நேரத்தில் 50 சதவீதம் ரயில்வே நிர்வாகம் பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதற்கு முன்னுரிமைப் பட்டியலும் அவர்கள் தயாரித்து அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப் பட்ட பட்டியலில் இடம் பெற்ற இடங்களை தேர்வு செய்வதற்கு ரயில்வே நிர்வாகம் இன்றைக்கு வருடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு மேம்பாலங்களுக்குத்தான் அனுமதி அளித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரயில்வே நிர்வாகத்திற்கு மத்திய அரசின் மூலம் சொல்லி அதிகமான நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்பாடு செய்து தருவார்களானால் இந்த அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 445. திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

445—

## தனியார் ஆக்கிரமிப்பை அகற்றி, புல் வளர்க்கும் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை

*2585 திரு. க. அர்ச்சுனன் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் பாதாள சாக்கடை நீரை பனமரத்துப்பட்டி ஏரியில் தேக்கி புல் வளர்க்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு, தனியார் ஆக்கிரமிப்பினால் இத்திட்டம் செயல்படுத்தப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இதற்கான மாற்று திட்டப் பணிகள் (Unaerobic Sludde Blanket) முறை ஆராயப்பட்டு வருகின்றன.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1980 ஆம் ஆண்டு 910 லட்சம் ரூபாயில் ஆரம்பிக்கப்பட்டு இன்றைக்கு நிறைவேற்றாத சூழ்நிலையில் 2260 லட்சம் ரூபாய்க்கு உயர்ந்து இருக்கிற இந்த நிலையில் அரசுக்குச் சொந்தமான ஏரியில் உள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்ற நகராட்சி நிர்வாகம் தொடர் நடவடிக்கை எடுத்து— மாநகராட்சியாக அறிவிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்ற இந்த நேரத்தில்— இந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றத் தடையாக இருக்கிற அந்த நிலைமையைத் தகர்த்து அங்கே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஏன் இவ்வளவு மெத்தனமாக அந்த வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழக்கை முடிப்பதற்காக அரசின் மூலமாக எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஏரியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள நிலம் எவ்வளவு? ஆக்கிரமிப்பு செய்யப்படாத நிலம் எவ்வளவு? ஆக்கிரமிப்பு செய்யப்படாத நிலத்தில் இந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தர முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் கோர்ட்டில் ஸ்டே வாங்கியிருப்பதால் அந்த



ஸ்டேயை வெக்கேட் செய்வதற்காக அரசு மூலமாக எல்லாவித மான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அப்படி ஸ்டே வெக்கேட் செய்யப்பட்டால் இந்தத் திட்டத்தை நிறை வேற்ற எந்தத் தடையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4. . திரு. பி. ஈஸ்வரமூர்த்தி. (இருக்கையில் இல்லை).

வினா எண் 447—திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

447—

கொள்முதல் மற்றும் சேமிப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுதல்.

*1087—திரு. சோ. இராசாராமன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் புதிய கொள்முதல் மற்றும் சேமிப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு கட்டப்பட உள்ளன.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஓர் அறிக்கை அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 2

## விவர அறிக்கை.

நடப்பாண்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தஞ்சாவூர் மாவட்டத்தில் 25 நிரந்தர நேரடிக் கொள்முதல் நிலையங்களைக் கீழ்க்கண்ட இடங்களில் கட்ட உத்தேசித்துள்ளது.

### நேரடிக் கொள்முதல் நிலையம்.

| வரிசை எண். (1) | கிராமம். (2) | வட்டம். (3) |
|---|---|---|
| 1 | தானியக் கோட்டகம் | வேதாரண்யம் |
| 2 | ஆய்மூர் | வேதாரண்யம் |
| 3 | மருதாவணம் | திருத்துறைப்பூண்டி |
| 4 | தாலிக்கோட்டை | மன்னார்குடி |
| 5 | பழையக்கோட்டை | மன்னார்குடி |
| 6 | ராதா நரசிம்மபுரம் | மன்னார்குடி |
| 7 | அச்சுதமங்கலம் | நன்னிலம் |
| 8 | அகரத்திருமலம் | நன்னிலம் |
| 9 | கன்னுக்குடி (கிழக்கு) | ஒரத்தநாடு |
| 10 | தாழைய மங்கலம் | ஒரத்தநாடு |
| 11 | பின்னையூர் | ஒரத்தநாடு |
| 12 | கண்ணன்தங்குடி | ஒரத்தநாடு |
| 13 | திருமங்கலக்கோட்டை | ஒரத்தநாடு |
| 14 | குலமங்கலம் | ஒரத்தநாடு |
| 15 | திட்டை | தஞ்சாவூர் |
| 16 | மாத்தூர் | தஞ்சாவூர் |
| 17 | ஆலத்தூர் | குடவாசல் |
| 18 | திருவிழிமிழலை | குடவாசல் |
| 19 | ஹரித்துவாரமங்கலம் | வலங்கைமான் |
| 20 | எடக்குடி (வடக்கு) | சீர்காழி |
| 21 | பணங்காட்டாங்குடி | சீர்காழி |
| 22 | அடம்பூர் | நன்னிலம் |
| 23 | புத்தகரம் | மன்னார்குடி |
| 24 | அலமத்திக்காடு | பட்டுக்கோட்டை |
| 25 | பெருமகளூர் | பேராவூரணி |



1992 ஏப்ரல் 2]

இது தவிர இந்த ஆண்டு கீழ்க்கண்ட மாவட்டங்களில் சேமிப்புக் கிடங்குகள் கட்டும் வேலை நடைபெற்று வருகிறது:

| வரிசை எண். (1) | தாலுக்கா. (2) | மாவட்டம். (3) | கொள்ளளவு (டன்னில்). (4) |
|---|---|---|---|
| 1 | சாத்தான்குளம் | சிதம்பரனார் | 1,500 |
| 2 | அரியலூர் | திருச்சிராப்பள்ளி | 1,500 |
| 3 | ஆவுடையார்கோவில் | புதுக்கோட்டை | 1,500 |
| 4 | திருச்செங்கோடு | சேலம் | 1,500 |
| 5 | ஒரத்தநாடு | தஞ்சாவூர் | 2,000 |

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், நடப்பு ஆண்டில் தஞ்சை மாவட்டத்திலே, 25 நிரந்தர நேரடிக் கொள்முதல் நிலையங்களை, பல வட்டங்களிலே கட்ட உத்தேசித்துள்ளதாகவும், பல மாவட்டங்களைச் சேர்ந்த 5 இடங்களில் சேமிப்புக் கிடங்குகள் கட்டும் வேலை நடைபெற்று வருவதாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த 25 நிரந்தர நேரடிக் கொள்முதல் நிலையங்கள் போதாது. எவ்வளவு நிதி இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது ? அதற்கான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு விட்டனவா ? எவ்வளவு கொள்ளளவிலே கட்டிடங்கள் கட்டப்பட உள்ளன ? என் தொகுதியிலே பாபநாசம் வட்டத்திலே ஒரு கொள்முதல் நிலையம்கூட கட்டப்படுவதாக இந்த அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. அதையும் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் 1992–93–இல் 25 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதேபோல, மேலும் 5 சேமிப்புக் கிடங்குகளும் எடுத்துக்கொள்ளப்படும். இந்த 25–ல் இங்கே எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற விவரப்படி பாபநாசத்திலேயிருந்து 2 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 20 கிடங்குகளையும், 125 நேரடிக் கொள்முதல் நிலையங்களையும் தஞ்சை மாவட்டத்திலும், நாகப்பட்டினம்–காயிதே மில்லத் மாவட்டத்திலும் சுமார் 220 இலட்சத்தில் கட்டி முடிக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசத்தில் இரண்டு கொள்முதல் நிலையங்களைக் கட்டித் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நன்றியைச் சொல்லி,

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை நடப்பு ஆண்டில் குறுவை அதிகமாக சாகுபடி செய்ய இருக்கின்ற காரணத்தினால் இந்தக் கொள்முதல் நிலையங்களை உடனடியாகக் கட்டி முடிக்க வேண்டும். காரணம், சென்ற ஆண்டு........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள். உடனடியாகக் கட்டி முடிக்கப்படுமா என்று கேளுங்கள். விளக்கமெல்லாம் கொடுக்க வேண்டாம்.

திரு. சோ. இராசாராமன்: சென்ற ஆண்டு கொள்முதல் செய்த நெல்லை எல்லாம் இட வசதி போதாத காரணத்தினால் வீதியிலே அடுக்கி வைத்ததை அரசு அறியுமா? இன்னும் சொல்லப்போனால் பல்வேறு இடங்களில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு அறியுமா என்று கேட்டு விட்டீர்கள். திரும்பவும் விளக்குவதற்குப் போகக் கூடாது. உட்காருங்கள்.

திரு. சோ. இராசாராமன்: கொள்முதல் செய்யப்பட்ட பல்வேறு இடங்களில், இடமில்லாத காரணத்தினால் நெல் கொள்முதல் செய்யாமல் இருப்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதிகமான விளைச்சல் வந்த காரணத்தினால் நாம் அதிகமான நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டியிருந்தது. தேக்க நிலை சில நாட்கள் இருந்தது. மேலும் நமக்குப் போதுமான அளவிற்கு ரெயில்வே வாகன்கள் கிடைக்கவில்லை. எனவே, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற, எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்ற லாரிகளைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்து, உடனடியாகக் கொள்முதலை வேகமாக, துரிதமாகச் செய்தோம். எங்கும் கொள்முதல் செய்யாமல் நிறுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு 25 நேரடிக் கொள்முதல் நிலையங்களை எடுத்துக்கொள்ள இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். ஒரு நேரடிக் கொள்முதல் நிலையம் கட்டுவதற்கு 5 இலட்சம் ரூபாய் செலவாகிறது. அதேபோல ஒரு கிடங்கைக் கட்டி முடிப்பதற்கு 19 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அரசின் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு, எவ்வளவு விரைவாக அந்த இரண்டு மாவட்டங்களில் கட்டி முடிக்க முடியுமோ, அதைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். பன்னீர் செல்வம்.



திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் ஆடுதுறையிலே ஒரு நிரந்தரமான நேரடிக் கொள்முதல் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய முடிவெடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1992-93-இல், எனக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற விவரத்திலே ஆடுதுறை இல்லை. இருந்தாலும் உறுப்பினருடைய வேண்டுகோள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 448. திரு. ஜெ. பாலகங்காதரன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**448—தொழிலாளர் நலக் காப்பீட்டுறுதி மருத்துவமனையில் படுக்கை வசதிகள் செய்தல்.**

*3887 திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருத்தங்கல் நகரில் தொழிலாளர்கள் அதிகம் உள்ளதால் அங்குள்ள தொழிலாளர் நலக் காப்பீட்டுறுதி மருத்துவமனைக்கு படுக்கை வசதிகள் கொண்ட கட்டிடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருத்தங்கலில் தற்போது இயங்கி வருவது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் ஆகும். எந்த மருந்தகத்திற்கும் படுக்கை வசதிகள் அமைப்பதில்லை. மேலும் திருத்தங்கலுக்கு மிக அருகாமையிலுள்ள சிவகாசியில்

50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை இயங்கி வருவதாலும் ஒரு மருத்துவமனை துவங்குவதற்குரிய தொழிலாளர் எண்ணிக்கை திருத்தங்கலில் இல்லாமையாலும் திருத்தங்கலில் படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவமனை கட்ட இயலாத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனேயே சிவகாசியில் மாபெரும் வெடி விபத்து பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்டு, கிட்டத்தட்ட 40 உயிரினங்கள் பலி ஏற்படும் ஒரு நிலைமை ஏற்பட்டது. அந்தக் கொடூரமான வெடி விபத்துக்கு முக்கியமான காரணம் என்னவென்றால், அந்த வெடி விபத்திலே இறந்ததற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், தீக்காய விபத்துச் சிகிச்சைப் பிரிவு இல்லாததுதான் ஆகும். எனவே, அந்தத் தீக்காயப் பிரிவானது ஸ்டெர்லைஸ்ட் ஆக இருக்க வேண்டும். அதையாவது தொழிலாளர் நலக்காப்பீட்டு மருத்துவமனையாகிய திருத்தங்கலில் அமைத்துத் தரப்படுமா ? படுக்கை அறையானது ஏ.சி. பண்ணப்பட்டு திருத்தங்கலில் — ட்வின் சிட்டியாக இருக்கும் திருத்தங்கல் நகரில்—அது அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிவகாசியிலே 50 படுக்கைகள் கொண்ட ஈட்டுறுதி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் கோருகிற ஆலோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 449. திரு. தே. ஜனார்தனன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

449—

சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஒரே மாதிரியான பணி விதிகள்.

*5302 திரு. தே. ஜனார்தனன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்த விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான பணி விதிமுறைகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், தனியார் சர்க்கரை ஆலைகளுக்தும் இவ்விதி அமல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சர்க்கரை ஆலையிலும், கூட்டுறவு சர்க்கரை ஆலையிலும் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு மாத ஊதியம், ஓய்வு பெறும் வயது இவற்றில் பெரும் வித்தியாசம் உள்ளது. இதனை அரசு அறியுமா ? ஒரேமாதிரியான பணி விதிமுறைகளை ஏற்படுத்த அடுத்த ஆண்டிலாவது அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1946ஆம் ஆண்டு தொழில் வேலைகள் நிலை ஆணைகள் சட்டம் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுடைய பணி நிலைகள் நிலையாணைகள் வடிவில் வரையறை செய்யுமாறு நிறுவன உரிமையாளர்களைக் கேட்டுக் கொள்ள வகை செய்கிறது. மைய அரசு கொண்டு வந்த இந்த தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ் மைய மற்றும் மாநில விதிகள் அமைக்கப்பட்டு உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 450, திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

450—

வழக்கறிஞர்களுக்கு வீட்டுவசதி வாரியம் மூலம் வீட்டுமனை.

*5909 திரு. சி. ஞானசேகரன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகம் முழுவதும் உள்ள வழக்கறிஞர்களுக்கு வீட்டுவசதி வாரியம் மூலம் வீட்டுமனை அல்லது கட்டிய வீடுகளை ஒதுக்கித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1992 ஏப்ரல் 2

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரக்கணக்கான வழக்கறிஞர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்று ஆயிரக்கணக்கான வழக்கறிஞர்கள் இன்றைக்குத் தமிழகத்திலே வீடில்லாமல் இருக்கிறார்கள். அப்படியிருக்க குடும்பத்திற்கு ஒரு வீடு என்று நீங்கள் பட்ஜெட்டிலே அறிவித்திருக்கிறீர்கள். வழக்கறிஞர்கள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள்? அவர்களை நீங்கள் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு எப்படியாவது நிலத்தைக் கையகப்படுத்தி வீடில்லாத வழக்கறிஞர் களுக்கு வீட்டுமனையோ அல்லது வீடுகளைக் கட்டித் தரவோ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வழக்கறிஞர்கள் எந்த ஒரு பாவமும் செய்யாத காரணத்தினால்தான் வழக்கறிஞர்களுடைய முன் னேற்றத்தின் மீது என்றென்றும் அக்கறை கொண்டிருக்கிற போற்றுதலுக்குரிய தமிழக முதல்வருடைய அரசு அட்வகேட் வெல்ஃபேர் ஃபண்ட்டிலே எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்குச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர இருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். வழக்கறிஞர் ஒருவர் இறந்துவிட்டால் 60 000 ரூபாய் தருகின்ற திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர் கள் அறிவார்கள். வீட்டு வசதி ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு பிரிவினருக்கும் எத்தனை விழுக்காடுகள் என்று அரசினால் நிர்ணயிக்கப்பட்டு ஏற்கனவே நடைமுறையில் இருந்து கொண்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் வழக்கறி ஞர்களுக்கு மட்டும் ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரத்தை ஒதுக்கீடு செய்வது என்பதற்கு சாத்தியக்கூறு இல்லை என்ற காரணத்தி னால் இதை ஏற்றுக்கொள்ள இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரும் ஒரு வழக்கறிஞர்தான். இன்று, வழக்கறிஞர்கள் இறந்த பின்னால், கொடுக்கக்கூடிய வழக்கறிஞர்களின் நிதியுதவிக்காக நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். ஆனால், அவர்கள் உயிரோடு இருக்கிறபோது, அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்து ஆதரிக்க வேண்டு மென்று சொல்லி, வருகிற நிதியாண்டில், எப்படியாவது 'அட்வகேட் காலனி' என்பதை மாவட்டத் தலைநகரில் எல்லா இடங்களிலும் உருவாக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய் வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலே, சமு தாயத்தில் ஏழையெளிய மக்களுடைய முன்னேற்றம், அரசி னுடைய முக்கிய நோக்கமாகவும், கருத்தாகவும் இருக்கிறது. அந்த அடிப்படையிலே, ஆதி திராவிடர், மலைவாழ் மக்களுக் காக மேம்படுத்தப்பட்ட வீட்டுமனைகள் மற்றும் வீடுகள் ஒதுக்கீடுகள் 18 சதவீதம் இருக்கிறது. அதேபோல், பொது மக்களுக்கு 37 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சலவைத் தொழிலாளர்கள் மற்றும் முடிதிருத்துவோர் சமூகத்தினருக்கு 5 விழுக்காடுகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், இராணு வத்தினர், முன்னாள் இராணுவத்தினர், இராணுவத்தினரின் விதவைகள் போன்றவர்களுக்கு 7½ விழுக்காடுகள் ஒதுக்கப்பட் டிருக்கிறது. மாநில அரசுப் பணியாளர்களுக்கும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியப் பணியாளர்களுக்கும் 18½ சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு பிரிவினருக்கும் ஒதுக் கப்பட்டிருக்கிற சமயத்தில், ஏற்கெனவே பொது மக்களுக்கான ஒதுக்கீடு மிகவும் குறைந்த அளவாக இருக்கிற காரணத் தினால், வழக்கறிஞர்களும் அப்படிப்பட்ட பிரிவுகளில் பங்கு பெற்று பயனடையலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 451, திரு. எஸ். எஸ். ராமசுப்பு மற்றும் திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

451—

ஊனமுற்றவர்கள், விதவைகள், முதியோர்களுக்கு சலுகைகள் வழங்குவதில் காலதாமதத்தைத் தவிர்த்தல்.

*1144 திரு. எஸ். எஸ். ராமசுப்பு :
திரு. க. அர்ச்சுனன் :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊனமுற்றவர்கள், விதவைகள், முதியோர்களுக்கு அரசு சலுகைகள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், காலதாமதத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1992 ஏப்ரல் 2

(அ) அப்படி ஏதும் காலதாமதமில்லை.

(ஆ) ஆதாரத்தோடு எங்கு தாமதம் இருக்கிறது என்று தெரிவித்தால், தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. எஸ். எஸ். ராமசப்ப : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றவர்கள், விதவைகள், முதியோர்கள் ஆகியோர்கள் தகுதியின் அடிப்படையில் சலுகைகள் வாங்குவதற்காக— இந்தச் சலுகைகளைப் பெறுவதற்கு— அப்ளிகேஷன் கொடுக்கும்போது, தகுதியின் அடிப்படையிலே எல்லா அப்ளிகேஷன்களும் இருந்தபோதிலுங்கூட, சில வரையறைகள் அதாவது, இந்த மாவட்டத்திற்கு இவ்வளவுதான் இந்தப் பகுதிக்கு இவ்வளவுதான் என்று வரையறைகள் வைத்திருப்பதனால், காலதாமதம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி ஏதாவது வரையறைகள் இருக்கின்றனவா? அப்படி வரையறைகள் இருந்தால், அதைத் தளர்த்தி, எல்லோருக்கும் தகுதியுள்ள அத்தனை பேருக்கும் மிக விரைவில் இந்தச் சலுகைகள் அளிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குப் பணம் வழங்குகிற பணியை மட்டும் சமூகநலத்துறை செய்கிறது. யார், யாருக்குப் பணம் வழங்கப்பட வேண்டும் என்பதை ஆய்வு செய்து அவர்களுக்குப் பணம் வழங்குகிற பணியை வருவாய்த் துறையைச் சேர்ந்த, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கோட்டாட்சித் தலைவர், வட்டாட்சித் தலைவர் ஆகியோர் செய்கிறார்கள். இங்கே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், மனுக்களைப் பரிசீலனை செய்வதில், காலதாமதம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். இரண்டாண்டுக்கால, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், இந்த மனுக்களைப் பரிசீலனை செய்து, பணம் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது. அதற்குக் காரணம், அவர்கள் புதிய மனுக்களைப் பரிசீலனைக்கு ஆறு மாதத்திற்கு ஒரு முறை அல்லது ஓராண்டிற்கு ஒரு முறை என்று எடுத்துக் கொண்டதால், நிறைய மனுக்கள் அங்கே தேங்கிப் போய்விட்டன. அவர்களுடைய ஆட்சியில் வெறும் 5 லட்சம் பேருக்கு மட்டுமே, அதை வழங்க முடிந்தது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், இந்த 9 மாத காலத்தில், பழைய மனுக்களும் பரிசீலிக்கப்பட்டு, 5 லட்சத்து 80 ஆயிரம் பேருக்கு புதிதாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தி. மு. க. ஆட்சியில் புதிய விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால், மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்,



1992 ஏப்ரல் 2]

பொறுப்பேற்றவுடன் 3 மாத காலத்திற்கு ஒருமுறை, விண்ணப்பங்களைக் கண்டிப்பாக ஆய்வு செய்து, கூடுதலாக உள்ள விண்ணப்பங்களையும் எடுத்து, உதவித் தொகை உடனுக்குடன் வழங்க வேண்டுமென்று உத்தரவை, சமூக நலத்துறைக்கு வழங்கியிருக்கிற காரணத்தினால், எங்கள் அன்புத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் இந்த உதவித் தொகை பெறுவதில் காலதாமதம் இல்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனநிலை பாதிக்கப்பட்டவர்களை, பெற்றோர்களும், உற்றார் உறவினரும் கைவிட்டு, அவர்கள் ஆதரவற்ற நிலையில் ரோடுகளில் அலையும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்டவர்களுக்கும்கூட, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் பரிகாரம் கிடைத்தது என்கிற வகையில், ஊனமுற்றவர்களாக அவர்களையும் கருதி, அவர்களுக்கும் சமூக நலத்துறை மூலம் உதவிட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன வளர்ச்சி குறைந்தவர்களும், ஊனமுற்றவர்களாகத்தான் சமூக நலத்துறையால் கருதப்பட்டு, அவர்களுக்கென்று சில நிலையங்கள் அமைக்கப்பட்டு அதில் அவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அப்படிக் குறிப்பிட்டு யாரையாவது சொன்னால், அந்தப் பள்ளியில் சேர்க்கலாம் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 452, திரு. தா. வேடியப்பன். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

452—

அத்திமூர்—களியம் காலனிக்கு நிலம் கையகப்படுத்தும் அரசாணையை செயல்படுத்த நடவடிக்கை.

*6804 திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) போளூர் தொகுதி அத்திமூர்—களியம் காலனிக்கு நிலம் கையகப்படுத்தும் அரசாணை செயல்படுத்தப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) இதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து நிலம் கையகப் படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): போளூர் தொகுதி அத்திமூர்—களியம் காலனி மக்களுக்கு நிலம் கையகம் செய்து பயனாளிகளுக்கு வீட்டு மனைகள் வழங்க தொடர் நடவடிக்கை விதிகளின்படி எடுக்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு விரைவில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

முற்பகல் 10–25

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய களியம் காலனி ஏறத்தாழ 100 குடும்பங்களுக்கு மேற்கொண்ட காலனியாகும். இங்கே வீட்டு மனைகள் இல்லாமல் நிறைய மக்கள் பனப்பாம்பட்டு ஏரிப் புறம்போக்கை அதிகமாக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான, ஒவ்வொரு குடும்பத்திலேயும் 2, 3 குடும்பங்களாகப் பிரியும் அளவுக்கு உள்ள அனைத்து மக்களுக்கும் தனித்தனியாக, வீட்டு மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, களியம் காலனியில் குடியிருக்கும் குடும்பங்கள் 150 ஆகும். மொத்தம் உள்ள வீடுகள் 100. எனவே, 50 ஆதி திராவிட குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. மிக விரைவில் வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வழங்கப்படும் வீட்டு மனைப்பட்டாக்களுக்கு நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசின் சார்பில் வீடுகள் கட்டித்தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் அதிகப்படியான வீடுகளை உள்ளாட்சித் துறையின் மூலமாகக் கட்டிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு 50,000 வீடுகள் கட்டிமுடிக்கப் பட்டு விட்டன. எதிர்காலத்தில் இது பற்றி உள்ளாட்சித் துறையின் மூலமாகப் பரிசீலிக்கலாம்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 453, திரு. கு. லாரன்ஸ். மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

453—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை கிராமங்களில் வாழும் மக்களுக்கு வீட்டுவசதி.

*1960 திரு. கு. லாரன்ஸ் :

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை கிராமங்களில் வாழும் மக்களின் வீடுகள் இயற்கையின் சீற்றத்தினால் இடிந்து விழுவதைத் தடுக்க அம்மக்களுக்கு அரசு உறுதியான வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரைப் பகுதிகளில் அடிக்கடி கடலின் சீற்றத்தினால் நிலமற்ற ஏழைகள் தாங்கள் சுயமாகக் கட்டிய வீடுகளை இழந்து துன்பப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்திலே இந்தக் கடற்கரைப் பகுதி என்பது அரபிக்கடலைத் தாங்கியிருக்கிற பகுதி. அரபிக் கடல் சற்றுச் சீற்றமான கடல் அலைகளைக் கொண்டிருக்கிற பகுதி. எனவே, அந்த நிலமற்ற, வீடற்ற ஏழைகள் அடிக்கடி பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு ஒரு நிரந்தரமான திட்டத்தை வகுக்கிற முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையின் சீற்றத்தை எதிர்த்துப் போராடும் மீனவர்களின் துயரை நீக்கும்பொருட்டு நமது ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991-92-ல் 2,100 வீடுகளை கடற்கரை மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்குக் கட்டித்தர உத்தரவிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையிலே கன்னியாகுமரி மாவட்டத்துக்கு மட்டும் 699 வீடுகள் கட்டித்தர உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை தான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலமற்ற ஏழை மீனவர்களுக்கு 699 வீடுகளைக் கட்டித்தர மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருப்பதற்காக நான் என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆறு மாதங்களுக்கு முன்னால் இந்த கடற்கரைப் பகுதி கிராமங்களிலே கடல் சீற்றத்தினால் நூற்றுக்கணக்கானவர்களுடைய வீடுகள் இடிந்து விட்டன. எனவே, அந்த மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் முன்னுரிமை இந்தத் திட்டத்தில் அறிவிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வீடு ஒன்றுக்கு தற்போது ரூபாய் 17,000 ஒதுக்கப்பட்டு வருகின்றது, இதை மேலும் அதிகப்படுத்தலாமா என்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. வருகின்ற நிதி ஆண்டிலே மீனவர்களுக்கு வீட்டு மனைகள் அளிக்கும் பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 454, டாக்டர் (திருமதி) வெ. சரோஜா. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

454—

சங்ககிரியில் சுண்ணாம்புக்கல் தூள் செய்யும் தொழிற்சாலை

*4186 டாக்டர் (திருமதி) வெ. சரோஜா :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சங்ககிரியில் சுண்ணாம்புக்கல் தூள் செய்யும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில். அத்தொழிற்சாலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(அ) இல்லை,

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை,



டாக்டர் (திருமதி) வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எல்லா வகையிலும் மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருந்தாலும் அந்தத் தொழிற்சாலைக்கான மூலப் பொருட்கள் அங்கே கிடைப்பதால், அங்கு அந்தத் தொழிற்சாலையை அமைக்க இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் வரும் ஆண்டிலாவது அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுண்ணாம்புக்கல் கிடைக்கும் தன்மை அந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறது என்பது உண்மை. அதே நேரத்தில் அந்த சுண்ணாம்புக் கற்களை நொறுக்கி, தூளாக்கச் செய்யும் தொழில் நிலையம் அமைக்க தொழில் முனைவர்கள் முன்வருவார்களேயானால் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அதனை ஊக்குவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 446, திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

446—

காவிரி கூட்டுக் குடிநீர்த்திட்டத்தில் தாராபுரத்தைச் சேர்த்தல்.

* 4323 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காங்கேயம், வெள்ளகோயில் போன்ற பகுதிகளின் குடிநீர் வசதிக்காக உருவாக்கப்பட்ட காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் தாராபுரம் சேர்க்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) முத்தூர், 6 ஊரகப் பேரூராட்சிகள், தாராபுரம் நகராட்சி, காங்கேயம் நகரப் பேரூராட்சி மற்றும் 86 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூன்றாவது கட்டத்தில் தாராபுரம் நகராட்சி சேர்க்கப்பட்டு அதற்கான முதல் கட்டப் பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 2043 இலட்சம் அமைப்புப் பணிக்கும் (Insstallation) மற்றும் ரூ. 115 இலட்சம் வருட பராமரிப்பு பணிக்கும் அரசு,

அரசு ஆணை (நிலை) எண். 14, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 21–1–1992-ல் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் ( * ) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-30

## 2. சிறப்புக்குறிப்பு.

### (அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் சில கோயில்களில் நடைபெற்றுள்ள சிலையுடைப்பு மற்றும் திருட்டுச் சம்பவங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து சிறப்பு கவன ஈர்ப்பு. திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு கோயில் களில் சிலைகள் தொடர்ச்சியாக உடைக்கப்பட்டு வருவது குறித்து திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, திரு. இரா. நடேசன், டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் என்னுடைய கவனத்திற்கு ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வர அனுமதி அளிக்கிறேன். திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நெல்லை மாவட்டத்திலும், அதைப்போல சிதம்பரனார் மாவட்டத்திலும் இந்தச் சிலை உடைப் புச் சம்பவமானது ஒரு பெரும் பரபரப்பையும், மக்கள் மத்தியில் ஒரு பீதியையும் உருவாக்கி இருக்கிறது. அன்றாடம் காலையில் எழுந்தவுடன் பத்திரிகையைப் படித்தோம் என்றால் இந்த ஊரில் சிலை உடைப்பு என்ற செய்தியைத்தான் பார்க்கி றோம். சாதாரண கோயில்களில் இவை நடக்கின்றன. ** கொள்ளை அடிப்பவர்கள் என்றால் பெரிய கோயில்களில் 3 இலட்சம், 4 இலட்சம் என்று கொள்ளை அடித்தார்கள். ஆனால் இப்போது வர வர சிறு சிறு கோயில்களிலும் கொள்ளை அடிக்கிறார்கள், சிலைகளை உடைக்கிறார்கள். பல இடங்களில் கொலைகூட பண்ணுகிறார்கள். தர்மபுரி மாவட்டத்தில் ஒரு காவலாளி கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





அவர் உண்டியலைக் காத்துக்கொண்டிருந்த காவலாளி. இது போன்ற சம்பவங்கள் ஓராண்டுக் காலமாகத் தொடர் சம்பவங்களாக நடந்துகொண்டிருகின்றன. திருநெல்வேலி மாவட் டத்தை எடுத்துக்கொண்டால் என்னுடைய தொகுதியில் கங்கை கொண்டானில் ஒரு அம்மன் கோயில் சிலையை மூன்று துண்டு களாக உடைத்திருக்கிறார்கள். மிகப் பரிதாபகரமாக இருக் கிறது. அதைப் பார்க்கும் போது மக்கள் எல்லாம் குமுறக் கூடிய நிலை இருக்கிறது. பக்தர்கள் அங்கே சென்று கண்ணீர் வடித்து அழுகிறார்கள். அந்த அளவுக்கு இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு வ.உ.சி. மாவட்டத்தில் பல் வேறு கிராமங்களில் அதாவது காட்டுநாயக்கன்பட்டி, பழங் கோட்டை, துரைசாமியார்புரம், வல்லநாடு, கருங்குளம் ஆகிய ஊர்களிலும், அதைப்போல மாரந்தை என்ற எங்கள் பகுதியில் உள்ள கிராமத்திலும் வீரகாஞ்சிபுரம், விளாத்தி குளம் அருகே பெருமாள்கோயிலிலும் உள்ள ஆஞ்சநேயர் சிலை உடைக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற பல்வேறு சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. கோயில்களில் சிலை உடைக்கப் படுவது என்பது போன்ற சம்பவங்கள் தொடர் கதையாகி இருக்கிறது. இன்றைக்கு அந்தப் பகுதியில் உள்ள மக்கள் எல் லாம் பெரிய ஐயப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள். மாண்பு மிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு இந்தக் கோயில்களை அதாவது அறநிலையத் துறையை தன்னுடைய கையிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரே இந்தத் துறையை வைத்து இன்றைக்கு சிறப் பாக—எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் கூடச் சொன்னார்கள். கோயில்களின் சிலைகளைச் சிறப்பாகப் பராமரிப்பதற்காகவும், கோயில்களுக்கு திருப் பணிகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதற்காகவும் இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களே, இந்தத் துறையைக் கையில் வைத்துச் சிறப்பாகச் செய்யவேண்டும் என்ற ஒரு குறிக்கோளையும் நம்முடைய சட்டமன்றத்திலே சொல்லி இருக்கிறார்கள். ஆனாலும் கூட இந்தத்துறைக்கு ஒரு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே இவ் வாறு ஏற்படுத்துகிறார்களோ என்று மக்கள் ஐயப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

சாமியே இல்லை என்று சொல்லக்கூடிய கட்சிக்காரர் களும், அதைப் போல ராமர் கோயிலை வைத்தே இன்றைக்கு ஒரு கட்சியை நடத்திக் கொண்டிருப்பவர்களும் இதிலே ஒரு அரசியலை நடத்திச் செல்லவேண்டும் என்றும், அதன் மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு களங்கத்தை உருவாக்க வேண்டும் என்றும் செய்கிறார்களோ என்று கூட ஒரு ஐயப்பாடு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

அதுமட்டுமல்ல. விடுதலைப் புலிகளைத் தங்கள் கையிலே வைத்துக்கொண்டு ஆட்சிபுரிகிற சிலர் கூட இங்கே இந்தச் சிலைகளை உடைப்பதன் மூலம் ஒரு பீதியை மக்கள் மத்தியில் உருவாக்கி, அப்படி மக்கள் மத்தியில் உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், இந்த ஆட்சிக்கு ஒரு இக்கட்டை உருவாக்கலாமா என்றும் கூட கருதிக்கொண்டு செய்கிறார்களோ என்கிற ஒரு ஐயப்பாடு இன்றைக்கு மக்கள் மத்தியில் இருக்கிறது.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு எங்களுடைய பகுதியில் பார்க்கிறபோது, அதாவது அங்கே இருக்கின்ற மக்கள் எல்லாம் தினசரி இந்தக் கோயில் உடைப்புச் சம்பவங்களைப் பார்க்கின்றபோது இதில் ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை, ஏன் அதிகாரிகள் மிகவும் மெத்தனமாக இருக்கிறார்கள் என்று என்றைக்கும் பேசிக்கொண்டிருப்பது என்பது சர்வசாதாரணமான நிகழ்ச்சியாகப் போய்விட்டது. அந்த அளவுக்கு இது மிகவும் கவலை கொள்கிற அளவுக்கு இன்றைக்கு உருவாகி இருக்கிறது. இதை அரசியல் ஆக்குவதற்காக சில கட்சிக்காரரர்கள் இதைப் பயன்படுத்திக்கொண்டு இன்றைக்கு ஊர்வலங்கள்கூட நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக சிலர் பல்வேறு பிரச்சினைகளைக் கூறி மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதற்கு உடனடியாக ஒரு தீர்வு காணவேண்டும். கோயில்கள் நன்கு பராமரிக்கப்பட வேண்டும்; இந்து மதத்தினுடைய ஐதிகங்கள் காக்கப்படவேண்டும் என்பனவற்றை இங்கே கோரிக்கையாக நான் வைக்கிறேன். இப்போதுள்ள சூழ்நிலைகளுக்கு ஒரு முடிவு கட்டி, மிக விரைவாக, துரிதமாக நடவடிக்கைகளை எடுத்து கோயில்களை நீங்கள் காத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சிலை உடைப்புச் சம்பவங்களுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்; அரசியல்வாதிகள் அதாவது விஷமிகள் சிலர் செய்கிற இந்தக் காரியங்களுக்கு ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்று சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்கின்ற ஒரு உறுதியையும் இங்கே நான் கேட்டுக் கொண்டு, இந்த அவையிலே இதற்கு நீங்கள் பதில் சொல்லவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—35

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம். இதிலே எல்லோரும் பேசவேண்டும் என்று கேட்பார்கள்.





*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: ஒரு ஆஸ்பெக்ட் மட்டும் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிலை உடைப்பைக் கண்டித்து கடந்த திங்கட்கிழமை விஸ்வ இந்து பரிட்சத் என்ற இயக்கம் தமிழ்நாடு முழுவதுமாக ஊர்வலம் நடத்தியது. அந்த ஊர்வலத்தை நான் நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே இருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்கள் என்ன கோஷம் போட்டார்கள் என்று சொன்னால் 'தமிழக அரசே, தமிழக அரசே, சிலை உடைப்பை நிறுத்த வேண்டும். சிலை உடைப்பை நிறுத்தாவிட்டால் மதக் கலவரங்கள் தொடரும். மதக் கலவரங்கள் தொடர்ந்தால், வன்முறை பெருகும்.'' என்று கோஷம் இடுகிறார்கள். அதிலே என்ன வருகிறது என்று சொன்னால் சில சிறுபான்மை மக்கள் சில ஊர்களிலேயிருக்கின்றபோது இந்தச் சம்பவங்கள் நடக்கும் என்று சொன்னால் ஒன்றும் தெரியாத இந்த சிறுபான்மை மக்கள் இவற்றிற்கு இலக்காக்கப்பட்டு விடுவார்கள். நன்றாக, நிம்மதியாக கடந்த ஓராண்டாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழக மக்கள் மத்தியிலே மீண்டும் மதக் கலவரங்களை மூட்டுவதற்கு ஒரு திட்டமிட்டசூழ்ச்சி நடக்கிறது. நான் அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்பினேன். அதுவும் அந்த பெரிய கற்சிலைகளை 10, 15 பேர்கள் சேர்ந்துதான் உடைக்க முடியும். அதை தனி ஸ்குவார்ட் வைத்துக்கூட கண்டுபிடிக்கமுடியவில்லை என்று சொல்கின்றார்கள். ஆகவே அதிலே இரண்டு வகைகள். ஒன்று கோவில்கள் காப்பாற்றப்படவேண்டும். இரண்டு, சமூக அமைதி நிலவ வேண்டும் இந்த இரண்டு கோரிக்கைகளை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ஆர். சிங்காரம், திரு. இரா. நடேசன், திரு. சி. ஞானசேகரன். மற்றும் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர், திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள திருக்கோயில்களில் நடைபெற்றுள்ள சிலை உடைப்புகள் தொடர்பாகவும் திருட்டுக்கள் தொடர்பாகவும் விவாதிக்க வேண்டுமென்று 6 சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர். இவை அனைத்தும் ஒரே பொருள் தொடர்பானவை என்பதால் என்னுடைய பதிலினை ஒட்டு மொத்தமாக அளிக்க விரும்புகிறேன்.

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், கங்கைகொண்டான் அருள்மிகு கைலாசநாத சுவாமி திருக்கோயிலில், கடந்த 4—2—1992 அன்று இரவு, திருடர்கள் ஒரு குழுவாகச் சென்று, கோபுரத்தின் வடக்கே உள்ள மதில் சுவர் வழியாக,

கயிறு கட்டி உள்ளே நுழைந்து சுவாமி சன்னதியின் அருகே இருந்த விநாயகர் சிலையை பீடத்தில் இருந்து அகற்றியுள்ளனர் கர்ப்பக் கிரக கதவின் பூட்டினை உடைத்து, 5 அடி உயரமுள்ள அருள்மிகு ஆனந்தவல்லியம்மன் கல் திருமேனியை உடைத்து, பீடத்திலிருந்து அப்புறப்படுத்தியுள்ளனர். அதே கோயிலில், 4 அடி உயரமுள்ள துவார பாலகர் கற் சிலையையும் 1 அடி உயரமுள்ள நந்தீஸ்வரர் கற்சிலையையும், 2 அடி உயரமுள்ள சிறிய விநாயகர் சிலையையும், 3 அடி உயர முள்ள மற்றுமொரு சிலையையும் பீடங்களிலிருந்து அகற்றி யுள்ளனர். மேலும் 2½ அடி உயரமுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி சிலையை உடைத்துள்ளனர்.

அம்மன் சன்னதியில் இருந்த உண்டியலில் வெளிப்பூட்டை உடைத்துள்ளனர். ஆனால் உண்டியலின் உள் பூட்டு திடமாக இருந்தமையால், அதனைத் திறக்க முடியவில்லை. எனவே உண்டியல் பணம் களவு போகவில்லை. இந்த நிகழ்ச்சி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டவுடன் கங்கை கொண்டான் காவல் நிலைய குற்ற எண். 46 92-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல் துறையினர், கைரேகை நிபுணர், மற்றும் புகைப்பட வல்லுநரை அனுப்பி வைத்து புலன் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

இந்த திருக்கோயில், ஊரைவிட்டுத் தள்ளி தனியாக உள்ள நிலையில் இவ்வாறு திருட்டு முயற்சிகள் நடந்துள்ளன. அது மட்டுமின்றி, திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் மற் றும் சிதம்பரனார் மாவட்டங்களில், அடிக்கடி சிலை உடைப்பு மற்றும் களவு நடைபெற்று வருவதால், ஒவ்வொரு திருக்கோயி லிலும் இரவுக்காவல் பணியைத் தீவிரப்படுத்தவும், இரவுக்காவ லர்கள் இல்லாத திருக்கோயில்களின் இதர பணியாளர்களில் ஒரு வரை, இரவுக் காவல் பணி செய்திட நியமிக்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. உடைக்கப்பட்ட அருள்மிகு ஆனந்தவல்லி அம்மன் சிலைக்குப் பதில், புதிய சிலை விக்கிர கத்தினை விரைவில் செய்து வைக்க, தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்படி சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாவண்ணம் தடுத்து நிறுத்த, போர்க்கால அடிப்படை யில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அதன் மூலம் பொதுமக்கள் மனதில் நம்பிக்கையைத் தோற்றுவிக்குமாறும், தக்க அறிவுரைகள், காவல் துறையினருக்கும், இந்து அறநிலையத் துறையினருக்கும் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 14—2—1992 அன்று, திருநெல்வேலியில் உள்ள அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் இருந்த, சுமார் 750 கிராம் எடையுள்ள வெள்ளி பிரம்ம வளையத்தை, யாரோ திருடிச் சென்றுவிட்டனர். உள்ளூர் காவல் துறையினர் தீவிர புலன் விசாரணை செய்து, அக்கோயிலில் பணிபுரியும் இரண்டு அர்ச்சகர்களை கைது செய்து, களவாடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



குற்றாலத்தில் உள்ள செண்பகாதேவி அம்மன் ஆலயத்தி லுள், சில அடையாளம் தெரியாத நபர்கள் 17—3—1992 அன்று இரவு, பூட்டை உடைத்து உள்ளே புகுந்து, ரூபாய் 800 மதிப்புள்ள வெள்ளி மற்றும் பித்தளைப் பொருட்களை களவாடி யுள்ளனர். இது குறித்தும் காவல் துறையினர் வழக்கு பதிந்து தீவிர புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

முற்பகல் 10.40.

திருட்டு சம்பந்தமாக நெல்லை—கட்டபொம்மன் மாவட்டத் தில் ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர், 2 தலைமைக் காவ லர்கள் மற்றும் 4 காவலர்கள் அடங்கிய தனிப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

புலனாய்வில் உள்ள சிலை திருட்டு வழக்குகள், மாநில குற் றப் பிரிவின் சிலை திருட்டுத் தனி பிரிவிற்கு மாற்றம் செய்யப் பட்டு, ஒரு காவல் துறை கண்காணிப்பாளரின் தலைமை யில், தீவிர புலனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இத்தகைய குற்றங் கள் நடவாமல் தடுக்கவும், நடந்துவிட்ட குற்றங்களை விரைவில் கண்டுபிடிப்பதற்கும், தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசுப்பு அவர்கள் பேசுகையில் தருமபுரி மாவட்டத்தில் ஒரு கோவிலில் பணிபுரிந்த காவலர் கொலை செய்யப்பட்டதைப்பற்றி இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள்.

தர்மபுரி ஓம் சக்தி மாரியம்மன் கோயிலில் கடந்த 30–3–1992 அன்று நடைபெற்ற காவல்காரர் திரு. கோவிந்தன் கொலை வழக்குத் தொடர்பாக 3 குற்றவாளிகளில் இருவரை காவல் துறையினர் கண்டுபிடித்து 1–4–1992 அன்று கைது செய்துள்ளனர். மூவரும் தர்மபுரியைச் சேர்ந்தவர்கள். கைது செய்யப்பட்டுள்ள குமார் என்ற சிவகுமார் ஒரு முன்னாள் தண்டனைக் கைதி. எக்ஸ் கான்விக்ட். மற்ற ஒருவர் பாஸ்கர். முதல் குற்றவாளி. தலைமறைவாக உள்ள தேசிங் என்பவரை காவல் துறை யினர் தேடி வருகின்றனர். மேலும் இம்மூன்று குற்றவாளி களும் கடந்த 19–3–1992 அன்று தர்மபுரியில் நடந்த மர அறுவை ஆலை, சா மில்-லில் பணியில் இருந்த இரவுக்காவல ரின் கொலை வழக்கிலும் சம்பந்தப்பட்டவர்கள் என்பது தெரிய வந்திருக்கிறது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், கோயில் திருட்டு மற்றும் சிலை உடைப்பு பற்றி குறிப்பிட்டு கோயில் களைப் பாதுகாக்க தெரிவித்த அனைத்து கருத்துக்களும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நமது கலாச்சார பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் கலைப் பொக்கிஷங் களாகத் திகழும் நமது திருக்கோவில்களையும் அவற்றின்

உடைமைகளையும் பாதுகாப்பதே எங்கள் அரசின் தார்மீகக் கடமை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏற்கெனவே இம்மாமன்றத்திற்கும் தமிழக மக்களுக்கும் தெரிவித்துள்ளேன்.

சமீப காலமாக நடைபெற்று வரும் கோவில் திருட்டுகளையும் சிலை உடைப்புகளையும், நான் உன்னிப்பாக கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். இதனை முற்றிலுமாக தடுத்து நிறுத்த, நிரந்தரமாக ஒரு சிறப்பு ஏற்பாட்டைச் செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன். இந்த சிறப்பு ஏற்பாட்டினைக் குறித்து, விரைவில் ஆய்ந்து முடிவு செய்து வருகிற 9 ஆம் தேதி இந்து அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு என்னுடைய பதிலுரையில் அதனை அறிவிக்க உள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ராமசுப்பு அவர்களும் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் பேசுகின்றபோது அரசியல் காரணங்களுக்காக இந்தக் கோயில் திருட்டுச் சம்பவங்களும் திட்டமிட்ட செயல்களாக இருக்குமோ என்ற ஐயப்பாட்டினையும் இங்கே தெரிவித்தார்கள். இதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல இத்தகைய கோயில் திருட்டுகள், சிலை உடைப்புகள், காவலர்கள் கொலை போன்ற குற்றங்களை முற்றிலுமாக தடுப்பதற்கு ஒரு நிரந்தரமான ஏற்பாட்டினை நான் இப்பொழுது உருவாக்கி வருகிறேன். இதனைப் பற்றி தீவிரமாக ஆராய்ந்து வருகிறேன்.

எனவே. அதைப் பற்றிய விவரங்களை வருகிற 9 ஆம் தேதி என்னுடைய பதில் உரையில் தெரிவிக்கிறேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் கூறிக்கொண்டு அமைகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் உரைக்குப் பிறகு என்ன ?

(ஆ) டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாளையொட்டி 14—4—1992 ஆம் நாளன்று விடுமுறை அறிவிக்கப்பட வேண்டியது குறித்து.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வருகிற 14 ஆம் தேதி டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மத்திய அரசு விடுமுறை நாளாக அறிவித்துள்ளதுபோல தமிழக அரசும் வருகிற 14 ஆம் தேதி அன்று விடுமுறையாக அறிவிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திடீரென்று கேட்டீர்களானால் எப்படி? அதை ஆய்வு செய்து முடிவு சொல்வார்கள்.

3. கவனஈர்ப்பு

(அ) மதுக்கரை சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகையினால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவனஈர்ப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,** என்று சொன்னது, ஒருவேளை தவறான ஒரு கருத்தை உருவாக்கிவிடும் என்பதால் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்திரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் திரு. கே. செல்வராஜ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்.

முற்பகல் 10—45

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மதுக்கரை சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகையினால் ஏற்படும் பாதிப்பு" குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

விவர அறிக்கை.

திருவாளர்கள் அசோசியேடட் சிமெண்ட் கம்பனீஸ் லிமிடெட், கோயம்புத்தூர் 1934-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இத்தொழிற்சாலை கீழ்க்கண்ட பொருட்களை உற்பத்தி செய்கின்றது:

1. சாதாரண போர்ட்லாண்ட் சிமெண்ட்—மாதமொன்றிற்கு 9,000 டன்.

2. போர்ட்லாண்ட் பொசலோனோ சிமெண்ட்—மாதமொன்றிற்கு—40,000 டன்.

3. கடும்பதமான செங்கல் ( Clinkers )—மாதமொன்றிற்கு 41,250 டன்.

இத்தொழிற்சாலையில் கீழ்க்கண்ட மூலப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1. சுண்ணாம்புக்கல்—நாளொன்றிற்கு 2,500 டன்.

2. ஜிப்சம்—நாளொன்றுக்கு 65 டன்.

3. தாது இரும்பு—20 டன் நாளொன்றிற்கு.

4. சுட்ட பொசலோனோ களிமண்—மாதத்திற்கு—200 டன்.

5. கரி—நாளொன்றுக்கு—400 டன்.

இத் தொழிற்சாலையில் கீழ்க்கண்ட தேவைக்கு நீர் பயன்படுத்தப்படுகின்றன:

1. தொழிலாளர்களின் அன்றாடத் தேவை—நாளொன்றிற்கு 100 கிலோ லிட்டர்.

2. செய்முறை—நாளொன்றிற்கு 2,000 கிலோ லிட்டர்.

இத்தொழிற்சாலையிலிருந்து நாளொன்றிற்கு 75 கிலோ லிட்டர் வடிகால் கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது. செயல் முறைக் கழிவுநீர் செயல்முறைக்கே பயன்படுத்தப்படுகின்றது.

சுண்ணாம்புக்கல் உடைக்கப்பட்டு நீருடன் கலக்கப்பட்டு அரை நீர்மக் கலவையாக்கப்படுகிறது. இரும்புத் தாது மற்றும் பாக்சைட் அரை நீர்மக்கலவையுடன் கலக்கப்பட்டு ஒத்திருக்கின்ற அரை நீர்மக் கலவையாக்கப்பட்டு சுழலும் அடுப்பில் சூடேற்றப்பட்டு கடும்பதமான கிளிங்கர் பெறப்படுகின்றது. இவை குளிர வைக்கப்பட்டு ஜிப்சம் சேர்த்து சிமென்ட் ஆலையில் அரைக்கப்பட்டு சிமெண்ட் பெறப்படுகிறது.

இத் தொழிற்சாலையில் கீழ்க்கண்ட பகுதிகள் உள்ளன.



1. சுண்ணாம்புக்கல் உடைக்கும் பகுதி
2. அரைக்கும் பகுதி.
3. சுண்ணாம்புக்கல் முழுமையாக்கும் பகுதி.
4. இரும்புத்தாது அரைக்கும் பகுதி.
5. கரியை துகல்களாக்கும் பகுதி.—3 நெ.
6. சுழலும் அடுப்பு—5 நெ.
7. சிமெண்ட் ஆலை—5 நெ.
8. மூட்டைக் கட்டும் பகுதி —3 நெ.

இத்தொழிற்சாலையில் முன்பு சுழலும் அடுப்பிலிருந்து வரும் தூசியைக் கட்டுப்படுத்த சங்கிலிமுறை பயன்படுத்தப்பட்டது. சிமெண்ட் மற்றும் மூட்டை கட்டும் பகுதியில் தூசியினைக் கட்டுப்படுத்த துணியினால் ஆன வடிப்பான் பொருத்தப்பட்டிருந்தது. அதனால் காற்று மாசுபடுதல் குறித்து நிறைய புகார்கள் வந்தவண்ணமிருந்தன.

தற்பொழுது இவ்வாலை நவீனமாக்கம் மற்றும் விரிவாக்கத்திற்காக ரூ. 47 கோடி செலவில் புதிய சுழலும் அடுப்பு மற்றும் நவீன மாசு தடுப்பு சாதனங்களைப் பொருத்தியுள்ளது. பழைய ஐந்து சுழலும் அடுப்புகளில் மூன்று அடுப்புகள் இடிக்கப்பட்டு மீதமுள்ள இரண்டு மட்டுமே செயலில் உள்ளன அவற்றில் ஒரு பழைய சுழலும் அடுப்பிற்கு எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேட்டர் என்று தூசிகட்டுப்படுத்தும் சாதனத்தைப் பொருத்தி இயக்கி வருகின்றது. மற்றொரு சுழலும் அடுப்பு இயக்கப்படுவதில்லை.

இத்தொழிற்சாலை நவீனமாக்கும் மற்றும் விரிவாக்கத் திட்டத்தில் கீழ்க்கண்ட தூசி கட்டுப்பாடு சாதனங்களை பொருத்தவுள்ளது.

1. புதிய சுழலும் அடுப்பு, கரி அரைக்கும் ஆலை மற்றும் பழைய சுழலும் அடுப்பு ஆகியவற்றிற்கு தனித்தனியே எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேட்டர் பொருத்தியுள்ளது.

2. சிமெண்ட் ஆலைக்கு துணியால் ஆன வடிப்பானோடு கூடிய தூசு சேகரிப்பான் 7 நெம்பர்.

3. சிமெண்ட் மூட்டைக்கட்டும் பகுதியில் தூசு சேகரிப்பான் —3நெ.

4. புதிய சுழலும் அடுப்பு குளிரூட்டும் பகுதிக்கு தூசு பிரிப்பான் பொருத்தியுள்ளது. இப்பகுதிக்கு எலக்ட்ரோ ஸ்டேட்டிக் பிரிசிபிடேட்டர் பொருத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நவீனமாக்கப்பட்ட தொழிற்சாலையில் இயக்கத்திலுள்ள சுண்ணாம்புக்கல் உடைக்கும் ஆலை, அரைக்கும் ஆலை சுண்ணாம்புக்கல் மேம்பாடு அடையும் பகுதி இரும்புத்தாது

அரைக்கும் பகுதி, சிமெண்ட் ஆலை மற்றும் மூட்டை கட்டும் பகுதிகளோடு வடிக்கும் பகுதி உலர்த்தும் பகுதி. பைரோ செய்முறைப் பகுதி, கரி அரைக்கும் பகுதி மற்றும் சுழல் அடுப்பு ஆகியவை பொருத்தப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

இத்தொழிற்சாலை காற்று மாசு தடுப்பு சாதனத்தினைத் தொடர்ந்து நல்ல முறையில் இயக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தனது ஒப்புதலை 31-3-1992 வரை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இத்தொழிற்சாலையினை முனைப்பாக கண்காணித்து வருகின்றது.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பத்தூர் மதுக்கரை சிமெண்ட் தொழிற்சாலையின் வெண்புகை மண் கரிப்புகையால் அந்தப் பகுதியில் வாழும் சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வெண்புகை மண் குடிநீரில் கலந்தும், வீடுகளின் உட்புறம்புகுந்தும், எல்லாப் பொருள்களையும் வெள்ளைக் கலராக்கிவிடுகிறது. உணவுப் பொருட்கள் அனைத்தும் கெட்டு விடுகின்றன. சுற்றுப்புறமுள்ள விவசாயிகளின் விவசாய விளைச்சல் பயிர்களில் குருத்துப் பகுதியில் இந்த சிமெண்ட் வெண் புகை மண் விழுந்து பயிர் வளராமல் பாதித்து, விவசாயிகள் நஷ்டம் அடைகிறார்கள். குடிநீரில் கலந்து, இந்தப் பகுதி மக்கள் நோய்க்கு உள்ளாகிறார்கள். ஆதலால் அரசு மாசுக் கட்டுப்பாட்டுத் துறையின் மூலம் சுகாதார வசதிகள் செய்து கொடுத்து அந்தப் பகுதி மக்களைக் காப்பாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே இந்த நிலை இருந்திருக்கிறது. இப்போது அந்த ஆலை நவீனப்படுத்தப்பட்டு இருக்கிறதென்று எனக்கு குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். மாசுக் கட்டுபாட்டு வாரியத்தின் மூலமாகவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தொடர்ந்து இது போன்ற தவறுகளை அந்த ஆலை செய்யுமானால், அங்கே இந்தக் குறைப்பாடு இருக்குமானால், அதற்குரிய நடவடிக்கையை மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மேற்கொள்ளும்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் 31.3,1992 வரை நியந்தனை விதித்து, நவீனப்படுத்த அரசு ஆணை பிறப்பித்ததாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்துள்ளார்கள் அந்தத் தேதி முடிந்துவிட்டது இன்னும் அந்த ஆலையின்



2 பகுதிகள் நவீனப்படுத்தாமல், அந்தப் புகை வந்து கொண்டே இருக்கின்றது. எனவே இந்த நீண்ட காலப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசு உடனடியாக அந்த நிர்வாகத்தை அழைத்துப் பேசி புகை வராமல் தடுக்கவும், இந்தப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணவும் ஆவன செய்ய இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேதிக்கு முன்னாலே பதில் சட்ட மன்றத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் தொடர்ந்து மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே இதே நிலை நீடிக்குமானால் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அந்த ஆலை மீது உரிய நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் டி. என். எச். 130—விசைத்தறித் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப் பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் டி. என். எச். 130 விசைத்தறித் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்காதது,'' குறித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் . மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

## விவர அறிக்கை

திருநெல்வேலி சரகத்திலுள்ள டி.என்.எச். 130 வீரவநல்லூர் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு திங்கள் தோறும் 7-ம் தேதி சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதே போன்று இத்திங்களிலும் பிப்ரவரி 1992 திங்களுக்கான ஊதியம் மார்ச்

7 ஆம் தேதி வழங்கப்படவேண்டும். ஆனால் சங்கத்தின் நிதி நெருக்கடி காரணமாக வழங்க இயவில்லை. 1992 ஆம் ஆண்டிற் கான காசுக்கடன் மத்திய வங்கியிலிருந்து பெறுவதில் ஏற்பட்ட காலதாமதமே இந்நிலைக்கு காரணம். இருப்பினும் தற்போது 26—3—1992 ஆம் தேதி அன்று அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஊதியம் வழங்கப்பட்டு உறுப்பினர்கள் அனைவரும் எவ்வித இடையூறுமின்றி பணிக்கு வருகின்றனர்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரவநல்லூர் டி. என். எச். 130 விசைத் தறித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் விசைத் தறி தொழிற்கூடம் ஒன்று அங்கே இயங்கி வருகின்றது. ஊரக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின்கீழும் தாட்கோ நிறுவனத் தின் மூலமும் சுமார் ரூ.27இலட்சம் மூலதனத்தில் இந்தத் தொழிற் கூடம் அமைக்கப்பட்டது. 1989 பிப்ரவரியில் அந்தத் தொழிற் கூடம் இயங்கத் துவங்கியது. 50 விசைத்தறி மெஷின்களும் 3 ஓய்ண்டிங் மெஷின்களும் பொறுத்தப்பட்டு, 3 ஷிப்டுகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இத்தொழிற்சாலையில் 51 சதவிகிதம் ஆதி திராவிடர்களும், 40 சதவிகிதம் வறுமை கோட்டிக்குக் கீழே வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் பணியாளர்களாக நூற்றுக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். தற்போது தனி அதிகாரி ஒருவர் பொறுப்பில் இயங்கிக் கொண்டிருக்கும் அந்தத் தொழிற்சாலையிலே நெசவு உற்பத்தி குறைந்துகொண்டிருக்கிறது. இன்னும் ஓரிரு வாரங்களில் முழுமையாக உற்பத்தி நின்றுவிடும் நிலை உள்ளது. இது சம்பந்த மாக தனி அதிகாரி எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை தொழிலா ளர்களுக்கு உரிய சம்பளம் மாதந்தோறும் முறையாக வழங்கப் படவில்லை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர். திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், உங்களைக் கேள்வி கேட்பதற்காகத்தான் அழைத்தேன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு சரியான முறையில் மாதா மாதம் சம்பளம்வழங்கப்படாததால், மிகவும் இக்கட்டான சூழ் நிலையில் தொடர் உண்ணாவிரதம் இருந்தார்கள். நான் நேரில் போய் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்கள் அதை கைவிட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு மாதாமாதம் சரியான நேரத்தில் சம்பளம் வழங்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாதமும் 7 ஆம் தேதி சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. பிப்ரவரி மாதத்தின் சம்பளம் மட்டுந்தான் 26—3—1992 அன்று தரப்பட்டது.



முற்பகல் 10—50

பிப்ரவரி மாதத்திற்குரிய சம்பளம்மார்ச் மாதம் 7 ஆம் தேதி தரப்பட வேண்டும். அதுதான் 26-3-1992 அன்று தரப் பட்டது. அதற்குக் காரணம் காசுக்கடன், மத்திய வங்கியிலிருந்து பெறுவதில் ஏற்பட்ட காலதாமதம்தான் என்பதைக் கோடிட்டுக் காட்டி மாண்புமிகு உறுப்பினர் அது குறித்த குறிப்புகளைத் தருவார்களேயானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிக்கை அளித்தல்

## பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991—92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக் கின்றேன் :

(1) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1977—78 மற்றும் 1978—79 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக்கணக்குக் குழு அளித்த முப்பத்தோறாவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத் துறை பற்றிய பரிந்துறைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய முப்பத்தெட்டாவது அறிக்கை.

(2) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1983—84–ம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கையில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய பத்திகள்மீது பொதுக் கணக்குக் குழு அளித்த ஐம்பத்தேழாவது அறிக்கை (எட்டாவது பேரவை) மற்றும் இருபத்தேழாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவையில் மேலும் தொடரப்பட்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய முப்பத்தொன்பதாவது அறிக்கை.

## 5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

**(அ) நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள் பணித் தொழில்கள், ஆகியவற்றின் மீதான வரிச் சட்ட முன்வடிவு, 1992.**

மாண்புமிகு பேரவைத் தலைவர். அரசினர் சட்டமுன் வடிவுகள். அறிமுகம் செய்தல், 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள் மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரிச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள், ஆகியவற்றின் மீதான வரிச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர். 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன் வடிவு. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



" 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''. எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போ ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போ ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.எம். ஆனந்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. மானியக்கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும —தொடர்ச்சி.

மானியக்கோரிக்கை எண் 17 —கல்வி- தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992-93 ஆம் ஆண்டுக் கான மானியக்கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி.

கல்வி மானியம் என்கிற காரணத்தால் இரண்டு நாட்கள் ஒதுக்கப்பட்டு, நேற்றைய தினம் அதிகமான உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். இன்றும் அதைவிட அதிகமான உறுப்பினர்கள் பேச வேண்டும் என்று வாய்ப்பு கோரியிருக்கிறார்கள். முன் வரிசையில் இருக்கின்ற உறுப்பினர்கள் பலர் பேசவேண்டியிருக் கிறது. ஏற்கனவே நான் கொடுத்த வாக்கு தியின்படி 12-30 முதல் 12-45 மணிக்குள் பதில் அளிக்க வாய்ப்பு அளிக்க வேண்டியுள்ளது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு உறுப் பினர்கள் 7 மணித்துளிகளுக்குள்ளும், முன் வரிசை தலைவர்கள், இருக்கிற நிலைமைகளை உணர்ந்து பத்து நிமிடத்திற்குள்ளும் முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. எஸ். டேனியல்ராஜ்.

முற்பகல் 10-55

<u>திரு. எஸ். டேனியல்ராஜ்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி பற்றிய மானியக் கோரிக்கையின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை கூற விழைகின்றேன். மொத்த செலவினங்களில் கல்விக்காக 21 சதவீதம் ஒதுக்கப்படுவதை நான் மனதார வரவேற்கின்றேன். கல்வியானது ஒரு காலத்திலே சமூகப்பணியாகக் கருதப்பட்டது. ஆனால் இப்போது அப்படியல்ல. தற்போது கல்வியானது சமூகப் பொருளாதார முன்னேற்றத்தில் முக்கிய அங்க மாகக் கருதப்படுகிறது. நாட்டிலே எதிர் காலத்தினுடைய சமுதாயத்தை மாணவர்கள்தான் உருவாக்குகின்றார்கள். நல்ல மாணவர்களை உருவாக்குகின்ற பொறுப்பு நமக்கு இருக்கின்றது. நல்ல மாணவர்களை உருவாக்க வேண்டுமென்றால், கல்வியினுடைய தரத்தை உயர்த்தவேண்டும். கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதற்கு தற்போதுள்ள பாடதிட்டங்களை முறையாக ஆசிரியர்கள் கற்றுக்கொண்டு, அவர்களுடை திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களைப் பொருத்தமட்டில் அவர்கள் கல்வி பயின்ற நேரத்திலே எந்த பாடதிட்டங்களைப் பயின்றார்களோ அதே பாடத்திட்டங்களைத்தான் இன்றைய தினத்திலே புரிந்து வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அரசை பொருத்தமட்டிலே தற்போதுள்ள தொழில் நுட்பக் கல்விக்கு ஏற்ப, பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு அரசு வேண்டிய நடவ்டிக்கைகளை எடுக்க வேண்டும்.

மேலும், தற்போது பள்ளிக்கூடங்களிலே 100 மாணவர் களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை இருந்து வருகிறது. ஒரு ஆசிரியர் 100 மாணவர்களை எப்படிக் கட்டுப்படுத்தி பாடம் சொல்லிக் கொடுக்க முடியும் என்பதையும், அவர்களுக்குள் எப்படி ரிலேஷன்ஷிப் இருக்க முடியும் என்பதையும் அரசு உணர்ந்து, 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறை யிலே நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆசிரியர்களைப் பொருத்தமட்டிலே, திறமை இல்லாத மாணவர்களுக்கு டியூஷன் சொல்லிக் கொடுப்பதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், டியூஷன் சொல்லி கொடுப்பதன் மூலமாகத்தான் பணம் வசூலிக்க முடியும் என்ற ஒரே நோக்கத்திற்காக பள்ளிக்கூடத்திலே ஒழுங்காகப் பாடங் களைச் சொல்லிக்கொடுக்காமல் டியூஷன் சொல்லிக்கொடுப்பதிலே அவர்கள் கவனத்தைச் செலுத்திக்கொண்டு இருக்கிறார்கள், ஆசிரியர்களைப் பொருத்தமட்டிலே, அவர்கள் டியூஷன் சொல்லிக் கொடுப்பதிலே எந்த அளவிற்கு ஆர்வம் காட்டு கிறார்களோ, அந்த அளவிற்குப் பள்ளிக்கூடத்திலே பாடம்



சொல்லிக் கொடுப்பதற்கும் அவர்கள் ஆர்வத்தைக் காட்ட வேண்டுமென்று ஆசிரியர்களுக்கு இந்த நேரத்திலே மெத்தப் பணிவன்போடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

தனியார் பள்ளிகளையும் அரசு பள்ளிக்கூடங்களையும் கல்வித் தரத்தைப் பொருத்தமட்டில் நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அரசுப் பள்ளிக்கூடங்களிலே கல்வித் தரம் எந்த அளவிற்குக் குறைந்து இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். ஆகவே, அரசைப் பொருத்தமட்டில் அரசு பள்ளிக் கூடங்களிலே குறைந்தது 50 சதவீத மதிப்பெண் பெற்றுக் காட்ட வேண்டும் என்பதை ஆசிரியர்களுக்கு அரசு உணர்த்த வேண்டும். ஆகவே, ஓய்வு பெற்ற அதிகாரிகள் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழுவை அரசு அமைத்து, இந்த அரசு கல்விக்கூடங்களைக் கண்காணிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இன்றைய தினத்திலே பல்கலைக் கழகங்களைப் பொருத்த மட்டிலே அவை வியாபாரக் கேந்திரமாக உருவாகிக் கொண்டு வருகின்றன. நேற்றைய தினத்திலே கூட பத்திரிக்கையிலே மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலே 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற என்ஜினியரிங் பாடத் தேர்விலே கலந்து கொண்ட 14 மாணவர்களுடைய தேர்வுத்தாள்கள் திருத் தப்படாமலேயே வெளிவந்து இருக்கின்றது என்பதை மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலே நடைபெற்ற சிறப்புக் கூட்டத் திலே சிறப்பு மெம்பர் கூட ஆதாரத்தோடு அந்த விடைத்தாள் களைக் காட்டி இருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும் போது மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தினுடைய பெருமை எந்த அளவிற்குக் குறைந்துகொண்டு வருகிறது என்பதை நாம் உணரவேண்டும் ஏதோ மதுரை காமராசர் பல்கலைக் கழகம்தான் தவறு செய்துகொண்டு இருக்கிறது என்று நாம் கருதிவிடக் கூடாது. நான் அரசை குறை கூறுவதாக அமைச்சர் அவர்கள் கருதிவிடக்கூடாது, ஆனால், பல்வேறு வகையான பல்கலைக் கழகங்களிலேகூட இன்று தவறுகள் நடந்து கொண்டி ருக்கின்றன. ஒரு காலத்திலே பட்டம் பெற வேண்டுமென்றால் வெளி மாநிலங்களுக்குச் சென்று நம்முடைய மாணவர்கள் பட்டம் பெறக்கூடிய நிலை இருந்தது மாறி, இன்றையதினத் திலே தமிழகத்திலே இருக்கின்ற பல்கலைக் கழகங்களிலே பணத்தைக் கொடுத்து பட்டம் வாங்குகின்ற நிலைமை எல்லாம் உருவாகிக்கொண்டு வருகிறது. அதோடு மாத்திரமல்லாமல், அஞ்சல்வழித்துறை என்று ஒரு துறை இருந்துகொண்டுஇருக்கிறது, அதிலே பல்வேறு தவறுகள் நடந்துக்கொண்டிருக்கின்றன. புரஃபெஷனல் கோர்ஸ் படிக்க வேண்டுமென்றால்

இன்றைய தினத்திலே பல்கலைக் கழகத்திற்கு 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் கட்டித்தான் அட்மிஷன் வாங்கக்கூடிய நிலைமை எல்லாம் இன்றைக்குப் பல்கலைக் கழகத்திலே இருந்துகொண்டு இருக்கிறது. ஆகவே, பல்கலைக் கழகத்தில் பரவிக்கொண்டிருக்கிற இந்த வியாதி புற்று நோயாக மாறாத அளவுக்கு அரசைப் பொறுத்தவரையில் உடனடியாக தீவிர நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

இப்போது நிதிநிலை ஆதாரத்தை மையமாக வைத்துக் கொண்டு இன்றைய தினம் சுயநிதி பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் எல்லாம் ஆரம்பிப்பதற்கு அரசு ஊக்கப் படுத்திக் கொண்டிருக்கிறது. அதை நான் மனதார வரவேற்கிறேன். வியாபார நோக்கத்தோடு இன்றையதினம் சுயநிதி கல்வி நிறுவனங்கள் நடத்தப்பட்டு வருவதை நானும் ஒப்புக்கொள்கிறேன். இருந்தாலும் தமிழகத்தில் இருக்கிற மாணவர்கள் வெளிமாநிலங்களுக்குச் சென்று, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களுக்குச் சென்று, அங்கே கேபிடேஷன் பீஸ் எல்லாம் கொடுத்து இன்றையதினம் அட்மிஷன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்தில் இருக்கிற பணம் வெளி மாநிலங்களுக்குச் செல்லாத வகையில் இந்த சுயநிதி நிறுவனங்களை ஆரம்பிப்பதற்கு அரசு ஊக்கப்படுத்துவதை நான் மனதார வரவேற்கிறேன். இன்று சுயநிதி கல்வி நிறுவனங்களில் 50 சதவீதம் இடஒதுக்கீடு அரசுக்கு வழங்கப்படுகிறது ஆனால் அதேநேரத்தில் தனியார் கல்லூரிகளில் முதுநிலைப்பட்டம் பெறும் படிப்பிற்குரிய இட ஒதுக்கீடு முழுவதுமாக தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதை மாற்றி தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிற இந்த முதுநிலைப் பட்டப்படிப்பு பெறுவதற்குரிய இட ஒதுக்கீட்டிலே 50 சதவீதத்தை அரசு பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற ஆணையை நீங்கள் உடனடியாக பிறப்பிக்க வேண்டும். அதற்குரிய சட்டத் திருத்தத்தை அரசு கொண்டுவர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தேர்வைப் பொறுத்தவரையில் விடைத் தாளில் இப்போது 'ரீ-வேல்யுவேஷன்' முறையைத் தடை செய்து விட்டு 'ரீ-டோட்டலிங்' முறையை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். 'ரீ-டோட்டலிங்' முறையில் எந்த அளவுக்கு நியாய நிலைமை இல்லையென்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் கூறவிரும்புகிறேன். ஒரு ஆசிரியரைப் பொறுத்தவரையில் விடைத் தாளைத் திருத்துகிற நேரத்தில் அவர்களுடைய கவனக்குறைவு காரணமாக ஒருவேளை இரண்டு



பக்கங்களை விட்டுவிட்டு திருத்திவிட்டால், இந்த 'ரீ-டோட்டலிங்' முறையில் இருக்கிற டோட்டலை சரிசெய்யலாமே தவிர விடுபட்ட பக்கங்களைத் திருத்துவதற்கு அதிலே இடம் இல்லை. ஆகவே, மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, மறுபடியும் 'ரீ-வேல்யுவேஷன்' முறையைக் கல்வித் துறையில் கொண்டு வந்து, ஓய்வுபெற்ற அதிகாரிகள் கொண்ட ஒரு குழுவை அமைத்து மாணவர்கள் முன்னிலையில் 'ரீ-வேல்யுவேஷன்'' செய்தால் நிச்சயமாக மாணவர்களுக்கு கல்வித்துறையின் மீது நம்பிக்கை ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.

தமிழகத்தில் பல கல்லூரிகளில் இன்றைய தினம் அட்டானமஸ் முறை அமலில் இருந்துகொண்டிருக்கிறது. இந்த அட்டானமஸ் முறை காரணமாக கல்லூரிகளில் மாணவர்கள் படிக்காமலே, பணம் கொடுத்து பட்டம் வாங்கக்கூடிய நிலை உருவாகலாம். அதோடு கல்லூரிகளில் இருக்கிற நிர்வாகிகள் நல்ல தரமுள்ள மாணவர்களை, நன்றாக படிக்கிற மாணவர்களைப் பழிவாங்குகிற நிலை கூட அட்டானமஸ் முறையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அட்டானமஸ் முறையைக் கல்லூரிகளில் ஒழித்து அந்தக் கல்லூரிகளை எல்லாம் பல்கலைக் கழகத்தின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1967 ஆம் ஆண்டிற்கு முன்னதாக ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். போன்ற உயர்கல்வியில்தமிழகம் முதலிடம் வகித்து வந்தது. இப்போது தமிழகம் தலைகீழாக மாறிவிட்டது. ஐ.ஏ.எஸ்.ஐ.பி.எஸ். உயர் கல்வியைப் படிப்பதற்கு அவர்களுக்கு பயிற்சிமையங்கள் அரசு அனுமதியோடு நடைபெற்று வருகின்றன. அப்படி ஆறு மையங்கள் தமிழகத்தில் நடைபெற்று வருகின்றன. அந்த மையங்களில் பயிற்சி பெறுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்றால் வருடத்திற்கு 24,000 ரூபாய் என்று வருமான வரம்பு வைக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக திறமையான மாணவர்கள் இந்தப் பயிற்சி மையங்களில் சேர முடியாத நிலை இன்றைக்கு உருவாகி இருக்கிறது. ஆகவே அரசைப் பொறுத்தவரையில் இந்த வரம்பைத் தளர்த்தி ஆறு மையங்களுக்குப் பதிலாக மாவட்டத்திற்கு ஒரு மையம் என்ற நிலையை உருவாக்கி, அதிகமான மாணவர்களை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். நுழைவுத் தேர்வுக்கு அனுப்புவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

இன்று மைனாரிட்டி என்ற பெயரில், சில தனி நபர்கள் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.லட்சக்கணக்கான ரூபாயைக் கொள்ளை அடித்துச்

கொண்டிருக்கிறார்கள். சட்டத்தின் மூலமாக அவர்கள் பதுங்கி
கொள்கிறார்கள். அவர்களை அரசின் மூலமாக ஒன்றும் செய்ய
முடியவில்லை. அதை மாற்றுவதற்கு புரட்சித் தலைவர்
எம.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளி
யிலும் இடைநிலை ஆசிரியர் பள்ளி, வொக்கேசனல் குரூப்பிலே
சேர்க்கப்பட்டது. இடையிலே, திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சிக் காலத்திலே அது நிறுத்தப்பட்டது. ஆகவே, மறுபடியும்
அரசு மேல்நிலைப் பள்ளிகளிலே வொக்கேசனல் குரூப்பிலே இந்த
இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைத் துவக்க முன்வருவார்
களானால், நிச்சயமாக மாணவ, மாணவிகளுக்கு அந்த மைனாரிட்டி
இன்ஸ்டிடியூசன்களுக்கு செல்ல முடியாத நிலைமை உருவாகும்
என்பதை இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன். இது ஒரு பெரிய பிரச்சினை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், அரசு நடுநிலைப்
பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தவேண்டும்
என்றாலும், அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைபள்ளி
களாக உயர்த்தவேண்டும் என்றாலும், பொதுமக்களுடைய
பங்குதொகை கட்ட வேண்டியிருக்கிறது. தனியார் பள்ளிகளை
எடுத்துக் கொண்டால், அவர்களின் பள்ளியின் தரத்தை உயர்த்த
வேண்டும் என்றால், அவர்களே, பொதுமக்கள் பங்குதொகையைச்
செலுத்துகிறார்கள். இதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவர்
களிடத்தில எவ்வளவு பணம் வேண்டுமானலும் அரசு பெற்று
கொள்ளலாம். ஆனால், அரசு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலை
பள்ளிகளாக உயர்த்துவதற்கோ, அல்லது அரசு உயர்நிலைப்
பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்கோ நீங்கள்
பங்குத்தொகை கேட்கின்ற நேரத்திலே, ஏழை எளியவர்கள், தாழ்த்
தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் வாழ்ந்து
கொண்டிருக்கிற அந்தப் பகுதிகளிலே எப்படி வசூல் செய்து
அவர்கள் அரசுக்கு பங்குத் தொகையை செலுத்த முடியும் என்பதை
நீங்கள் புரிந்து கொண்டு, அரசு கல்வி நிறுவனங்களுக்கு இதைத்
தளர்த்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கவிநிலவு
தர்மராஜ்.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க
அதற்கு தக' என்பதற்கு ஏற்ப, இந்த கல்வி மானியத்திலே
எனக்குப் பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு நடமாடும் தெய்வம்



புரட்சித் தலைவியின் பொன்னான பாதங்களைத் தொட்டு,
வணங்கி, 'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றணைத் தூறும் அறிவு' என்று சொல்வார்கள், அந்த
அறிவுக்கு இலக்கணமாய்' ஆன்ற புலமை படைத்த ஆசிரியர்
சமுதாயத்திற்கும், மாணவச் செல்வங்களுக்கும் நல்லதையே
செய்யவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே,
இதயதெய்வம், புரட்சித் தலைவியினுடைய அரசு பீடுநடை
போட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் கல்லூரி நிர்வாகமும்
பல்கலைக்கழக நிர்வாகமும், கடந்த திராவிட முன்னேற்றக்
கழகத்தினுடைய ஆட்சியிலே சின்னாபின்னப்பட்டு. சீரழிக்கப்
பட்டு, அவல நிலைக்கு, அபய நிலைக்கு, அனாதை நிலைக்கு
தள்ளப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவியினுடைய
கருணை கடாட்சத்தால், சென்னைப் பல்கலைக் கழகத்தி
னுடைய பேரவை உறுப்பினராக, பெண்களுக்கு பெருமை
தேடித்தரக்கூடிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களால்,
நியமிக்கப்பட்ட நான், பல்கலைக்கழகத்திலே திராவிட
முன்னேற்ற கழகத்தினுடைய ஆட்சியிலே நடந்த அலங்
கோலங்களைச் சுட்டிக்காட்டி 69 வினாக்களைப் பேரவைக்
குழுவிற்கு சமர்பித்து இருந்தேன். ஆனால், திராவிட
முன்னேற்ற கழகத்தினுடைய ஆட்சியிலே நியமிக்கப்பட்ட
அதே அரசு உயர் அதிகாரிகள், அந்த நிர்வாகத்தையும் ஆட்டிக்
கொண்டிருக்கிற காரணத்தால், என்னுடைய 69 கேள்வி
களிலே 60 கேள்விகள் பதில் அளிக்கப்படாமல் ஒதுக்கி வைக்கப்
பட்டு இருந்தது. நான் கேட்ட முக்கியமான கேள்விகள் எல்லாம்
என்ன என்பது, அத்தனை பேரவை உறுப்பினர்களுக்கும் நிச்சய
மாகத் தெரிந்திருந்தபோதிலும் வாய்மூடி மௌனிகளாக,
'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்று நினைத்து,
இன்று இந்தச் சமுதாயத்தை அழிக்கவேண்டும் என்ற எண்
ணத்தின் அடிப்படையிலே, நம்முடைய இதய தெய்வம்,
புரட்சித் தலைவியினுடைய பொன்னான ஆட்சிக்குக் களங்கம்
கற்பிக்கக்கூடிய விதத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத்
தால் நியமிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினுடைய பெரிய
பொறுப்புகளிலே இருப்பவர்கள் இன்னும் நடமாடிக் கொண்டு
இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே வேதனை
யோடு சுட்டிக் காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே
பதிவாளர் பொறுப்புக்கு ஒரே ஒரு நாளிலே தீர்மானம்
போட்டு, 2-5-1989 அன்று இரவு 7-30 மணிக்கு பேரவையைக்
கூட்டி, பதிவாளர் நியமனத்தை மாற்றி, வேறு ஒரு பதி
வாளரை நியமனம் செய்ய வேண்டும் என்று சொல்லி அன்றைய
முதல்வர் கருணாநிதியினுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு

[திருமதி கவிநிலவு தர்மராஜ்] [1992 ஏப்ரல் 2

பேரவை இரவு 8-30 மணி அளவிலே முடிவு எடுத்து, அடுத்த நாள், 3–5–1992 அன்று, அசோக் வரதன் ஷெட்டி என்பவரை, அவசர அவசரமாக, தஞ்சையிலேயிருந்து அழைத்து ஐ.ஆர்.டி.பி.யினுடைய துறையிலே வேலைப் பார்த்துக்கொண்டிருந்த அவரை, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை எந்தவிதமான சிரமமின்றி, தரமுமின்றி விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு—அந்தப் பணிக்கு வரக்கூடியவர், 50 வயது நிரம்பியவராக இருக்கவேண்டும். அவர், ஆசிரியத்துறையிலே பேராசிரியர் பணியை 10 ஆண்டுக் காலம் நிறைவேற்றியிருக்கவேண்டும், எந்தத் துறையிலேயாவது ஒரு டாக்டர் பட்டம் பெற்றிருக்கவேண்டும், அதுமட்டுமல்லாமல் 10 ஆண்டுகளுக்கு நிர்வாகப் பொறுப்பிலே இருந்திருக்க வேண்டும். இந்த விதிமுறைகளை எல்லாம் மீறி அவர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவருக்கு வேண்டியவர் என்ற காரணத்தால், பல்கலைக்கழகத்தை அவருடைய கைக்குள் போட்டுக் கொள்ளவேண்டும் என்ற காரணத்தால், ஒரே நாளிலே—பதிவாளரை நியமனம் செய்திருக்கிறார்கள், இப்படிப்பட்டதொரு கொடுமை 130 ஆண்டுக் கால சரித்திரத்திலே இந்தப் பல்கலைக்கழகத்திலே நடந்ததில்லை என்று சொல்லி, இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய கவனத்திற்குக் கொண்வரவேண்டுமென்று பல்கலைக் கழகத்தில் இருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களும், லட்சக் கணக்கான மாணவர் சமுதாயமும் இன்று புரட்சித் தலைவியினுடைப கருணைக்காக எதிர்கால ஒரு விடியலுக்காக, விடியலுக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்

முற்பகல் 11–10

அதோடு மரியாதைக்குரிய அசோக் வரதன் ஷெட்டி, அந்தப் பதவியில் அமர்ந்த பிறகு அநியாயமான முறையில் கேட்பாரற்ற நிலையிலே 400 ஊழியர்கள், ஆசிரியர் பெருமக்கள் வேண்டுமென்று பழிவாங்கப்பட்டு. இதயதெய்வம் புரட்சித் தலைவரால் நியமிக்கப்பட்டு, அவரது ஆட்சிக்காலத்தை சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் வேறு வேறு இடங்களுக்குப் பணிமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கொடுமையை இந்த நேரத்தில் இந்த அவையின் முன்னால் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்கலைக் கழகத்தினுடைய பேரவையில், நான் வைத்திருக்கிற, 69 கேள்விகளில், 60 கேள்விகளை ஓதுக்கியிருக்கிறீர்களே, சட்ட நுணுக்கத்தை எனக்கு நீங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்களா? எதன் அடிப்படையில் இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது. என்று நீங்கள் ஓதுக்கி



1992 ஏப்ரல் 2] [திருமதி கவிநிலவு தர்மராஜ்]

யிருக்கிறீர்கள் என்று கேட்டால் அவர்களுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. எனவே மக்கள் பிரதிநிதிகள் அத்தனை பேரும் அமர்ந்திருக்கக் கூடிய இந்த அவையில் 234 தொகுதிகளையும் தன்னுடைய ஆளுமைத் திறனுடைய சக்தி படைத்த, ஒரு ஆற்றல் மிகுந்த சேவையால் இன்று தன் கைவசம் வைத்திருக்கக் கூடிய $6\frac{1}{2}$ கோடி மக்களுடைய இதய நாயகி, நடமாடும் தெய்வம், பொன்மனச் செல்வி, புரட்சித் தலைவியின் முன்னிலையில் அவருடைய பாதக் கமலங்களிலே இந்த வேதனைக்குரலை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மரியாதைக்குரிய பெரியோர்களே, நல்லவர்களும், வல்லவர்களும், ஆன்றோர்களும், சான்றோர்களும், அமர்ந்திருக்கக் கூடிய பேரவை நம் சென்னைப் பலகலைக் கழகத்தினுடைய பேரவை.

சென்னைப் பல்கலைக் கழகம், அது அன்னைப் பல்கலைக் கழகம் என்ற பெயர் பெற்றது. இந்த சென்னைப் பல்கலைக் கழகம் அன்னைப் பல்கலைக் கழகமாக இருந்த நேரத்திலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவருடைய ஆட்சியில் பாலவாக்கம் பகுதியில் ரூ. 1 கோடியை ஓதுக்கி, பேராசிரியர்களுக்கு, ஊழியர்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதற்காக 168 பேருக்கு வீடு கட்டுவதற்கான பணியை நிர்ணயம் செய்திருந்தார்கள். அதிலே ரூ. 1 கோடி செலவு செய்யப்பட்டிருக்கிறது. 168 பேர்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்பதற்காக ரூ. 1 கோடி செலவிலே கட்டப்பட்ட அந்தத் திட்டத்தின் மீது வேண்டுமென்றே திட்டமிட்டு, அவமானப்படுத்தவேண்டுமென்று புரட்சித் தலைவரின் ஆட்சியைக் கொச்சைப்படுத்தவேண்டுமென்று அடிப்படையில் பழியைச் சுமத்தி, அந்தக் காலத்திலேதான், தான் ஒரு பெரிய கதாநாயகன் என்று உலவிக் கொண்டிருந்த துரைமுருகனுடைய தூண்டுதலின் பேரில், இந்த அவையிலேயும், சட்டமன்றப் பேரவையிலேயும், பத்திரிகைகளிலும்கூட பாலவாக்கம் வீட்டுவசதி வாரியத்திலே குறைப்பாடுகள் இருக்கின்றன. சிமெண்ட் ஊழல் என்று சொல்லி, ஒரு மாபெரும் குற்றத்தை வைத்தார்கள். அப்போது கல்வித்துறை அமைச்சராக இருந்தவரும், இன்றும் கல்வித்துறை அமைச்சராக இருந்துக்கொண்டிருக்கிற மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு கல்வித்துறை அமைச்சருடைய ஆலோசனையின் பேரிலும், இதய தெய்வம் புரட்சித் தலைவரின் அனுமதியின் பேரிலும் இந்த வழக்கு உண்மையிலே சி.பி., சி,ஐ.டி-யிடம் ஒப்படைக்கப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு. சிமெண்ட் கடத்தல் நடைபெறவில்லை, ஆனாலும் கட்டுமானப் பணிகளில் ஒரு சில குறைபாடு இருக்கிறது என்று விளக்கிக்கூறினார்கள். ஆனால் எதிலுமே பங்கு பெறாமல் ஆசிரியர் சங்கத்தினுடைய தலைவராக மட்டும் பொறுப்பேற்று ஆசிரியர் சமுதாயத்தை வாழ வைக்கவேண்டுமென்ற எண்ணத்தி

னுடைய அடிப்படையிலே இருந்த ஆசிரியர் சங்கத்தினுடைய துணைத் தலைவராக இருந்த மரியாதைக்குரிய திரு. ரங்கநாதன், திரு. பஷா என்பவர்கள் 33 மாதங்களாக வேலையிலிருந்து, பணியிலிருந்து நீக்கப்பட்டு தற்காலிகமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் இந்தப் பல்கலைக் கழகத்தில் நிரந்தரமாக நடந்து கொண்டிருக்கின்றன.

அதோடு மட்டுமில்லாமல், நம்முடைய கல்லூரித்துறையின் இயக்குநராகவும், கல்வித்துறையின் செயலாளராகவும் இருக்கக் கூடிய அந்த இரண்டு பெரும் தலைவர்களுடைய தலைமையில் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் பணி நிர்ணயம், வேலைப் பளுவை நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற ஒரு திட்டத்தை வரையறுத்து, அதற்கு ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரை ஓர்க் ஆர்டர் கொடுக்கப்படாத காரணத்தால் கல்லூரிப் பேராசிரியர்களும், கல்லூரி முதல்வர்களும் செய்யக் கூடிய பணிகளைச் சரியாக செய்ய இயலாமல் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பட்ட ழிநிலையில், இந்தக் கல்லூரியின் சூழ்நிலையும் இருக்கிற காரணத்தால் அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நல்லதொரு ஆட்சியை இந்தச் தமிழ்ச் சமுதாயத்தில் நடத்தி கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில் 'தலைவாரி பூசூட்டி உன்னை பாடசாலைக்கிப் போ என்று சொன்னார் என் அன்னை, சிலை போல ஏன் அன்று நின்றாய், நீ சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய் மலை வாழை அல்லவோ கல்வி நீ வாயார உண்ணுவாய் போ, என் புதல்வி' என்று சொல்லக் கூடிய ஒரு புரட்சி யுகத்தை பெண் கல்வியை பெண்ணின் பெருமையை இந்தச் சமுதாயத்தில் நிலைநிறுத்தி, தான் ஒரு கலியுக ஜான்சி ராணி என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவகள், அன்னைப் பல்கலைக்கழகமாம் சென்னைப் பல்கலைக் கழகத்தைக் காப்பாற்றி, அந்தப் புல்லுருவிகளை புரட்சித் தலைவருடைய பெயருக்குக் களங்கம் கற்பிக்கக் கூடிய சில துரோகிகளை அந்த இடத்திலேயிருந்து அடையாளம் காட்டி அப்புறப்படுத்தி பல்கலைகழகத்தைக் காப்பாற்ற வேண்டும்.

முற்பகல் 11-15

அஞ்சல் வழிக் கல்வியிலே பல லட்சக் கணக்கான ரூபாய்களுக்கு ஊழல்களை நடத்தியிருக்கிறார்கள், அடுத்த மாதம் தேர்வு வர இருக்கிறது. மரியாதைக்குரிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த இருக்கிறார்கள். ஆனால் பல்கலைக் கழகத்திலே



3லட்சம் மாணவர்களுக்கு பரீட்சை நடக்க இருக்கிறது அடுத்த மாதம். அந்தத் தேர்விலே அவர்கள் பங்கு கொள்ள முடியாத அளவுக்கு இன்னும் புத்தகமே அவர்களுடைய கைகளுக்குப் போய்ச் சேரவில்லை. கோடிக்கணக்கான ரூபாய் ஊழல் அஞ்சல் வழியாகத் தான் சென்னை பல்கலைக் கழகத்திற்கே ஒரு மாபெரும் பெருமை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பெருமையை. அருமையை குலைக்கக்கூடிய சதித்திட்டங்கள் பல இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர், தமிழகத்தின் இதயத் துடிப்பாக இருக்கக் கூடிய இதய தெய்வம், நடமாடும் தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள், தயவுசெய்து சென்னைப் பல்கலைக் கழகத்திலே தி.மு.கழக ஆட்சியில் நடந்த அலங்கோலங்களை— 2½ ஆண்டு ஆட்சியிலே நடந்த நிர்மாணங்களை, பணி நிரந்தங்களை தயவுசெய்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டு ஒரு தனி விசாரணைக்குழு அதற்காக அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டு, அவர்களிடம் ஆசிரியர் சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டும், மாணவச் செல்வங்களுக்கு வழி காட்ட வேண்டும், சென்னைப் பல்கலைக் கழகத்தை எந்த வழியிலாவது தன்னுடைய தத்துப் பிள்ளையாக ஏற்றுக் கொண்டு அதனிடத்திலே டாக்டர் பட்டம் பெற்றிருக்கிற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், வறுமைக்கு வைத்தியம் செய்வதால் பெண்மைக்குப் பெருமை தேடித் தந்தவர், காவிரியை மீட்டுத் தந்த கலைச்செல்வி பல்கலைக் கழகத்தை மீட்டு, நிலையான ஆட்சி நடத்தக் கூடிய புரட்சித் தலைவி மாட்சிமிகு பல்கலைக் கழகத்தை மீண்டும் மீட்டுத் தரவேண்டும் என்று கேட்டு அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கவிநிலவு தர்மராஜ் அவர்கள் பேசுகிறபோது ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி அசோக்வரதன் ஷெட்டி அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அவர் எங்கள் மாவட்டத்திலே இருந்து வந்தவர் என்பது உண்மைதான். ஆனால் அவர் தங்கள் இஷ்டத்திற்கு நடப்பார் என்று கருதித்தான் தஞ்சையிலே பிராஜக்ட் ஆபிசராக இருந்த அசோக் வரதன் ஷெட்டி அவர்களை இங்கே கொண்டு வந்தது உண்மைதான். ஆனால் அவர் அவர்களுடைய இஷ்டத்திற்கு நடக்கவில்லை என்பதற்காக, தவறு செய்த பணியாளர்களை நீக்கிய காரணத்தினாலேதான் அவரை தி.மு.கழக அரசு ஏற்றுக் கொள்ளமால் மீண்டும் அவரை மாற்றி விட்டார்கள். அப்படிப்பட்ட நேர்மையான அதிகாரி அவர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அசோக் வரதன் ஷெட்டி அவர்களை தி.மு.கழக ஆட்சியிலே மாற்றவில்லை. கவர்னர் ஆட்சியிலே மெத்த சிரமப்பட்டு மாற்றினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனி சாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, இன்றைய கல்வி மானியக் கோரிக்கை மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லா நான் விழைகின்றேன். நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இன்றைக்கு கல்வித் துறையிலே ஒரு சிறந்த அனுபவம் மிக்க அமைச்சர் ஆவார்கள், அவர்கள் தமிழ்நாட்டிலே கல்வியமைச்சராக இருந்ததோடு மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளுச்குச் சென்று அந்த நாடுகளிலே இருக்கக் கூடிய கல்வியின் தன்மைகளை, அவர் முன்பு கல்வியமைச்சராக இருந்தபோது பார்த்து வந்து அதேபோன்ற கல்வி அமைப்பினை தமிழகத்திலேயும் உருவாக்க வேண்டும் என்கிற நல்ல முயற்சிகளை அவர் முன்னாள் அமைச்சராக இருந்தபோது எடுத்துக் கொண்டார் என்பதை நான் நிச்சயமாக அறிவேன்.

1991-92 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 1299 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டது. ஆனால் 1992—93 ஆம் ஆண்டிற்கு 1517 கோடி ரூபாய் இன்றைய தினத்திலே ஒதுக்கியிருக்கிறார்கள். சுமார் 218 கோடி ரூபாய் அதிகமாக கல்விக்காக இன்றைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். சுமார் 21 சதவீதம் இன்றைய தினம் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையிலேயே மகிழ்ச்சிகரமான ஒரு திட்டம் ஆகும். காரணம் தமிழகத்திலே இருக்கக் கூடிய கல்வி நிலமைகளைப் பற்றி இங்கே இருக்கக் கூடிய சட்டப் பேரவை உறுப்பினர்களாக இருந்தாலும் மாண்புமிகு அமைச்சர்களாக இருந்தாலும் நன்கு உணர்ந்தவர்கள். தமிழகத்திலே இன்றைக்கு புதிய கல்வி திட்டங்கள் பல வகையாக போட்டாலும் கூடதொடர்ந்து சுதந்திரம் பெற்று 44 ஆண்டுகளுக்குப் பின்னால் தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய மக்களை அருகாமையிலே இருக்கிற கேரளா போன்ற மாநிலத்திற்கு ஈடு இணையாக கொண்டு வர முடியாத ஒரு சூழ்நிலைமை இருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து அதற்கான பல்வேறு கல்வித் திட்டங்களை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். கிராமப் புறத்தில் இருக்கிற ஏழை எளிய மாணவர்கள் ஆரம்பப் பள்ளியில் படிக்கின்றபோது அவர்களுக்கு இன்றைதகு கல்வியைச் சரியாக போதிக்க முடியாத சூழ்நிலை கல்வி நிலையங்



களில் அமைந்திருக்கிறது. ஆரம்பத்திலே மாணவர்கள் சரியாக படிக்க வேண்டும் என்றால், அவர்களுக்கு கல்வியைச் சரியாக போதிக்க வேண்டும் என்று சொன்னால் அங்கு இருக்கின்ற கல்வியில் சீரமைப்பை கண்டிப்பாகக் கொண்டு வர வேண்டும். 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஆரம்பப் பள்ளிகளில் 90 முதல் 92 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுக்கக் கூடிய நிலை இருக்கிறது. அதே போன்று ஆரம்பப் பள்ளிகளைப் பார்த்தோம் என்று சொன்னால் இடையிலே ஒரு தடுப்புச் சுவர் கிடையாது. அதே போன்று, இடையிலே தடுப்புகள், மறைப்புகள் கிடையாது.

முற்பகல் 11–20

அந்தந்த ஆசிரியர்கள் தங்களுக்கு எதிரே மாணவர்களைக் கூட்டமாக உட்கார வைத்து பாடம் நடத்தக்கூடிய நேரத்தில் அந்த மாணவர்கள் தங்களுடைய கல்வியில் சரியாக கவனம் செலுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ஆரம்பப்பள்ளி கல்விக்கு இந்த தினத்திலே அதிகமாக நிதி ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்பதோடு அந்தப் பள்ளிகளுடைய கட்டிடங்களைச் சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல ஆண்டுக்காலமாக பள்ளிக்கட்டிடங்கள் இடிபாடுள்ள கட்டிங்களாக பல கிராமங்களிலே இருக்கின்றன. குறிப்பாக மழைக் காலங்களிலே பார்த்தால் 3 மாதங்கள் அந்தப் பள்ளிகள் சரியான முறையிலே நடைபெறுவதில்லை. மழை காலங்களிலே ஆசிரியர்கள் பள்ளிக்கு வருகின்ற பேழக் மாணவர்களுக்கு பாடம் நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. பள்ளிகளுக்குச் சரியான கட்டிடங்கள், கீற்றுக் கொட்டகைகள் இல்லாத காரணத்தால் 3 மாத காலங்களுக்கு பாடம் நடத்த முடியாத முறைகேடுகள் இருக்கின்றன. சரியான கட்டிட வசதி இல்லாத காரணத்தினால் பாடம் படிக்க முடியாத சூழ்நிலை கிராமப்புற மாணவர்களுக்கு இருக்கிறது.

மேலும் பள்ளிகளிலே இருக்கின்ற ஆசிரியர்கள் காலியிடங்களை தமிழக அரசு உடனடியாக பூர்த்தி செய்ய வேண்டும். சுமார் 16,000–க்கு மேல் காலியிடங்கள் இருப்பதாக அரசுக் குறிப்பிலே தென்படுகிறது. ஆகவே இந்த 16,000 ஆசிரியர்களையும் நீங்கள் உடனடியாக நியமிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று கிராமப்புறங்களிலே ஆரம்பப் பள்ளியிலிருந்து மாணவர்கள் நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்கு மற்றும் கல்லூரிகளுக்கு வருவது

என்பது மிகச் சிரமமாக இருக்கிறது. இதற்குக் காரணம் கிராமப்புறங்களிலே ஆரம்பத்திலே அவர்களுடைய கல்வியின் தரம் குறைவாக இருக்கிறது. தரமான கல்வி அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே அவர்களால் மேல் படிப்பை எட்டிப் பிடிக்க முடியவில்லை. அதற்கு மாறாக இன்றைக்கு சட்டக் கல்லூரியாக இருந்தாலும், மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும், பொறியியல் கல்லூரியாக இருந்தாலும் ஓரளவிற்கு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள்தான் வருகிறார்கள். அரசு ஊழியர்கள் குடும்பத்திலிருந்து வரக்கூடிய மாணவர்களுக்குத் தான் இது போன்ற மேல் படிப்புக்கு வரக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றனவே தவிர, அரசு எதிர்பார்ப்பது போன்று, அமைச்சர் எதிர்பார்ப்பது போன்று, நான் எதிர்பார்ப்பது போன்று கிராமப் புறத்திலே இருக்கின்ற, அடிமட்டத்திலே இருக்கின்ற அந்த மாணவர்கள் இன்றைக்கு மேல்படிப்பிற்கு வர முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கு அடித்தளமான அவர்கள் ஆரம்பக் கல்வியை ஒழுங்குபடுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக கிராமப்புறத்திலும், நகர்ப்புறத்திலும் இருக்கின்ற மாணவர்களுடைய படிப்பில் இருக்கின்ற வித்தியாசங்களைப் போக்குகின்ற வகையில், கிராமப்புறங்களிலிருந்து வரக்கூடிய மாணவர்களுக்கு மார்க் அடிப்படையிலாவது, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற இடங்களுக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் சலுகை அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-25

அதே போல் வகுப்புவாரி சலுகை என்பதை விட கிராமப்புற மாணவர்களுக்கு இது போன்ற மார்க் சலுகை அளிப்பது என்பது மிகவும் உதவிகரமாக இருக்கும்.

அதே போல் மாணவர்களிடத்தில் இந்த நேரத்தில் சமூகப் பார்வையோடு பாட திட்டங்கள் கொண்டு வர வேண்டும். இன்றைக்குப் பாட திட்டங்களில் நாட்டுப் பற்று என்பதும் சமூகப் பார்வை என்பதும் குறைந்து இருக்கிறது. இதனால் மாணவர்கள் கல்லூரிகளில், பொறியியல் கல்லூரிகளில் மற்ற கல்லூரிகளில் படிக்கின்றபோது அந்த மாணவர்கள் சமுதாயத்திற்கு விரோதமாக சில காரியங்களில் போரட்டங்களில் ஈடுபடுகிறார்களே என்று சொல்லி வருத்தப்படுவதில் எந்தவித நியாயமும் இல்லை. ஆகவேதான் அவர்களுக்கு சமூகப் பற்றுள்ள நாட்டுப்பற்றுள்ள அந்தப் பாடத் திட்டங்களை ஏதோ மாணவர்களுக்கு மட்டும் அல்ல பாடம் சொல்லிக்கொடுக்கின்ற ஆசிரியர்களுக்குக் கூட அந்த வாய்ப்புக்களை மாண்புமிகு



அமைச்சர் அவர்கள் காலத்தில் உருவாக்கித் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம். டாக்டர்களாக இன்ஜினியர்களாக வரவேண்டும் என்று சொன்னால், ஏழை எளிய மக்களால் வர முடியவில்லை. டாக்டர் படிப்பை படிக்க முடியவில்லை. அனேகமாக கொள்கைக் குறிப்பில்கூட சொல்லியிருக்கிறார்கள். 3½ லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாய் வரை டாக்டர் சீட்டுக்குக் கொடுத்து வியாபாரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று. ஆக இதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும்.

படித்துக் கொண்டு இருக்கக்கூடிய மாணவர்கள் இறுதியாக அவர்கள் டாக்டர் பட்டத்தைப் படிக்க வேண்டும் என்று விரும்பினாலும் கூட கையில் பணம் இல்லாத காரணத்தால் படிக்க முடியாத சூழ்நிலையில் பரிதவிக்கிற நிலையை நாம் காணமுடிகிறது. 1989—1990 ஆம் ஆண்டு நல்ல முதன்மை மார்க் எடுத்து இருக்கிற மாணவர்கள் படிக்கவேண்டும் என்று விண்ணப்பம் கொடுத்தபோதுகூட பணம் இல்லாமல் அவர்களுக்கு சீட்டு கொடுக்க முடியாது என்று சொல்லக்கூடிய பரிதாபமான நிலையை என்னால் காண முடிந்தது. அது போன்ற நிலையிலிருந்து ..........(மணியடிக்கப் பெற்றது) இன்னும் கோரிக்கைக்கு போகவில்லை..........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்;</u> 10 நிமிடங்கள்தான்.

<u>திரு. ஜி. பழனிசாமி;</u> இல்லையே.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்;</u> 11-17-க்கு ஆரம்பித்து இருக்கிறீர்கள். இப்போது என்ன நேரம் என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

<u>திரு. ஜி. பழனிசாமி;</u> நான் முடித்து விடுகிறேன். பேப்பரை புரட்டிவிட்டேன். அடுத்ததற்குப் போய் விடுகிறேன். இதுபோன்று அந்த மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட அறிவிக்கும்போது சொன்னார்கள். ஆசிரியர்களின் நலன்களை அரசு பாதுகாக்கும், மாணவர்களின் நலன்களை ஆசிரியர்கள் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லி உங்களுடைய தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டீர்கள். அதே போல் இன்றைக்கு ஆசிரியர்களுக்கு இருக்கக்கூடிய ஊதியத்தில் இருக்கின்ற முரண்பாடுகளை, 5-வது ஊதியக் குழுவில் உள்ள முரண்பாடுகளை,

அரசு போக்குவதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு, தலைமை ஆசிரியர்களுக்கு அந்தப் பள்ளியில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு சம்பளத்தில் இருக்கக் கூடிய குறைபாடுகளை நீக்க அந்த ஆசிரியர் அமைப்புகளைக் கூட்டி விரைவாகப் பேசி, அவர்கள் போராட்டங்கள் நடத்தாத வகையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் ஆசிரியர்களை மாற்றம் செய்வது என்பதில் இன்றைக்கு பல முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. அடிக்கடி தேவையற்ற டிரான்ஸ்பர்களை செய்கிறார்கள். அதன் மூலமாக மாவட்டக் கல்வி அலுவலகங்களில் இன்றைக்கு ஏற்பட்டு இருக்கின்ற முறைகேடுகள் பலவற்றை எங்களால் காண முடிகிறது. ஆகவே, இப்படிப்பட்ட தேவையற்ற மாற்றங்கள் செய்வதை அரசு தவிர்க்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் கல்வித் துறையில் தனியார் பள்ளிகளில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு வழங்கும் சலுகைகளை அளிக்க வேண்டும். நம்முடைய தமிழக அரசு அதற்கு ஒரு சட்டத்தை நிறைவேற்றி அவர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கக் கூடியது போல், தனியார் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டு இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் நீங்கள் சட்டங்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, கல்லூரி போன்றவற்றில் இயக்குநர்களாக மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியில் பணியாற்றக்கூடியவர்களுக்கும் அந்தச் சலுகையை வழங்க அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடியுங்கள். இன்றைக்கு ஒன்றும் அதற்குமேல் முடியாது.

திரு. ஜி. பழனிசாமி: தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு தொகுப்பு ஊதியம் என்கிற நிலையிலிருந்து மாற்ற வேண்டும். அந்தத் தொகுப்பு ஊதியம் என்பது தேவையில்லை. அப்படிப்பட்ட நிலையிலிருந்து அந்தத் தொகுப்பு ஊதியத்திலிருந்து ஆசிரியர்களுக்கு மறு வாழ்வு அளிப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல ஐ.டி.ஐ. படித்திருக்கக்கூடிய ஆசிரியர்கள் இன்றைய தினத்திலே பல்வேறு கோரிக்கைகளை வைத்துப் போராடி இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே கவனம் செலுத்தி, அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிவோடு பரிசீலித்து, படிப்படியாக அவர்களை வேலையில் நிரந்தரம் செய்வதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள். நிச்சயமாக அவர்கள் அதைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும்.

அதேபோன்று, 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்புத் தேர்வுகளை 10 இலட்சம் பேர்களுக்கு மேல் எழுதுகிறபோது, தேர்வு எழுதுவதற்காக அனுப்பப்படக்கூடிய வினாத்தாள்களெல்லாம், அங்கே சரியான ஊழியர்கள் இல்லாத காரணத்தினாலும், போதுமான அலுவலகங்கள் இல்லாத காரணத்தினாலும் ஏற்படுகின்ற தவறுகள் நிறைய இருக்கின்றன. இதனால், கன்ஸ்யூமர் கோர்ட்டுகளுக்கு நிறைய பேர் போகிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் கல்வி நிலையங்களிலே ஏற்படுகின்றன. அதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, ஐந்தாம் வகுப்பு வரையில் இருக்கக்கூடிய, ஆரம்பப் பள்ளிகளிலே பெண்களை மட்டும் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களாக நியமிக்கின்ற நிலையிலிருந்து, பெண்களுக்கு 50 சதவீதம் ஆண்களுக்கு 50 சதவீதம் என்று நியமிப்பதுதான் சரியானதாக இருக்கும். இதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், ஆசிரியர்களாக பணியாற்றக்கூடிய பெண்கள் பாடம் நடத்திவிட்டு, தனியாக வரக்கூடிய சூழ்நிலைகள் இல்லாத பள்ளிகள் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. ஆகவே, முழுமையாக அந்தப் பள்ளிகளிலே பெண்கள் பாடம் நடத்துவது என்பது முடியாத காரியம். அதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி, அதோடு முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: முடித்து விடுகிறேன். அதேமாதிரி சுயநிதிக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் நிலையும் அப்படித்தான் இருக்கிறது. அந்தக் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதிலே இன்றைக்கு நடக்கக்கூடிய அந்த வியாபாரங்களுக்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

## 7. அறிவிப்பு

டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி அவர் பிறந்த நாளான 14—4—1992ஆம் நாள் விடுமுறை தினமாக அறிவிக்கப் பெறுதலும், அன்றைய தினப் பேரவை அலுவல் பிறிதொரு நாள் எடுத்துக்கொள்ளப் பெறுதலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் எழுப்பி, கோரிக்கை விடுத்ததைப் போல, பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்துள்ளதை ஏற்றுக்கொண்டு, அரசுக்குக் முதலமைச்சர் அவர்கள், டாக்டர் அம்பேத்கார் அவர்களின் நூற்றாண்டுவிழா நிறைவையொட்டி அவருடைய பிறந்த நாளான 14—4—1992 அன்று மாநில அரசு அலுவலகங்களுக்கும், மாநில அரசு சார்புடைய நிறுவனங்களுக்கும் விடுமுறை அளித்து இருப்பதாகப் பேரவைக்கு அறிவிக்கக் கோரியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்று பேரவைக் கூட்டம் இல்லை. அன்று எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கைகள் வேறு ஒரு நாளில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 8. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### மானியக் கோரிக்கை எண் 17—கல்வி— தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. செல்லக்குமார்.

டாக்டர் அ. செல்லக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே. கல்விக்காக அதிக நிதி இந்த ஆண்டு ஒதுக்கி ருக்கும் இந்த அரசையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர் ளையும் முதற்கண் நான் மனதார பாராட்டக் கடமைப்பட் டிருக்கிறேன். அதிலும், குறிப்பாக, '' இளமையில் கல் '' என்ற அவ்வைப் பிராட்டியாரினுடைய வாய்மொழிக்கேற்ப இளமை யிலே கல்வியைக் கற்றுக் கொடுக்கின்ற தொடக்கக் கல்விக்கு இந்த அரசு அதிக நிதி ஒதுக்கி இருப்பது என்பது பெருந்தலைவர் காமராஜர் வகுத்த வழியிலே, பாதையிலே இந்த அரசு நடைபோடுகிறது என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது. படிக் கப் படிக்க பெருகிக் கொண்டிருக்கின்ற அறிவாற்றல் என்பது, வறுமையின் காரணமாகவும், சமுதாயச் சூழ்நிலையின் காரண



மாகவும், அந்த அறிவைப் பெற முடியாத எண்ணற்ற இளைஞர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் 40 விழுக்காடுகளுக்கு மேற்பட்டவர்கள் இந்த நாட்டிலே இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அக இருளை அகற்றி, அறிவொளியை ஏற்படுத்தவேண்டுமென்ற காரணத்திற்காக, மத்திய அரசினுடைய முழுமையான ஒப்புதலோடும், ஆதரவோடும் மாநில அரசு நல்ல ஒரு அறிவொளி இயக்க திட்டத்தினை உருவாக்கி, இன்றைக்கு நல்ல முறையிலே நடத்திக்கொண்டு இருக்கிறது. ஆனால், இந்த அரசு எந்தவொரு நோக்கத்திற்காக இந்தத் திட்டந்தினைக் கொண்டு வந்ததோ அந்த நோக்கம் கறைபட்டு விடுமோ, களங்கப்பட்டு விடுமோ என்று சொல்லுகின்ற அளவிற்கு இன்றைக்கு அந்தத் திட்டம் இடதுசாரி தீவிரவாதிகளினுடைய கையிலே சிக்குண்டு, சிதறுண்டு இருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு எங்கு பார்த்தாலும் அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அந்த அறிவொளி இயக்கத்தினை ஏற்றுக்கொண்டு தங்களுடைய கொள்கைகளைப் பிரச்சாரம் செய்வதற்காக அதைப் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். என்பதை அரசு தன்னுடைய கவனத்திலே கொள்ள வேண்டும். அதனை நிவர்த்தி செய்வதற்காக, இந்தத் திட்டத்தினை நல்ல வழியிலே கொண்டு வந்து, எந்த நோக்கத்திற்காக இந்தத் திட்டம் கொண்டுவரப் பட்டதோ, அதனை நல்லமுறையிலே கொண்டுவருவதற்கு அரசுக்கு நான் ஒரு வேண்டுகோளாகச் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு, படித்து வேலையில்லாது இருக்கின்ற எண்ணற்ற இளைஞர்கள், இந்தத் திட்டத்திலே தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கு வழிவகுக்கின்ற விதமாக இந்த அறிவொளி இயக்கத்திலே தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்ற இளைஞர்கள் நாளைக்கு அரசு வேலைவாய்ப்புக்காக, நேர்முகத் தேர்வுக்குச் செல்கின்றபோது, அவர்களுக்குச் சிறப்புச் சலுகையாக 5 மதிப்பெண்களை கொடுக்கின்ற ஒருநல்ல திட்டத்தினை அரசு கொண்டு வருமேயானால், நிச்சயமாக இந்தத் திட்டத்திலே இளைய தலைமுறை தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள். எனவே, இந்த அறிவொளி இயக்கத் திட்டத்திற்கு இளைஞர்கள் இல்லை என்கின்ற காரணத்தினாலே இது தடைபடுகின்றது என்கிற ஒரு நிகழ்ச்சி நடைபெறாது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

இன்றைக்குத் தமிழகத்திலே ஏறத்தாழ 68 அரசு அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருந்து வருகின்றன. ஆனால், கடந்த காலத்தில், கடந்த திராவிட முன்னேற்றக்

கழகத்தினுடைய அரசு அரசாணை 536 இன்படி அரசு அங்கீ
காரம் கொடுக்கும் என்கின்ற சட்டத்தின்படி அரசு ஆசிரியர்
பயிற்சிப் பள்ளிகளைத் துவக்கலாம் என்று சொன்னதன் காரண
மாக, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலே ஆசிரியர் பயிற்சிப்
பள்ளிகள் நலிந்து வருகின்றன. ஆனால் அந்தப் பள்ளிகள்
துவக்கப்பட்ட பிறகு, அரசு மாற்றத்தின் காரணமாகவும்,
கொள்கை மாற்றத்தின் காரணமாகவும் அந்தப் பள்ளிகளிலே
இரண்டாண்டுக் காலம் படித்த மாணவர்கள் தேர்வு எழுத
முடியாத ஒரு அவல நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள்.
எங்களைப் பொறுத்தவரையில் அரசு அங்கீகாரம் கொடுக்கப்பட
வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை என்றாலுங்கூட, தனி
யாருக்கு அந்தப் பள்ளிகளைக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள்
வற்புறுத்தாவிட்டாலும், அந்த இரண்டாண்டுக் காலம் அந்தப்
பள்ளிகளிலே படித்து விட்டு இன்றைக்குத் தேர்வு எழுத முடி
யாத அவல நிலையிலே இருக்கின்ற அந்த இளைஞர்களுடைய
எதிர்காலத்தை மனத்திலே கருதி, தயவுசெய்து நீங்கள் அவர்
களைத் தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதோடு,
அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு நீங்கள் அங்கீகாரம்
கொடுக்கின்றீர்களா இல்லையா என்பதைக் கொள்கை ரிதியாக
நீங்கள் முடிவெடுத்து அதற்குப்பிறகு அறிவித்தாலும், அவர்
களை உடனடியாகத் தேர்வு எழுதுவதற்கு நீங்கள் உத்தரவிட
வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்ள விரும்பு
கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் ஏறத்தாழ 30,000-க்கும் மேற்
பட்ட நர்சரி பள்ளிகள் இருக்கின்றன. நர்சரி பள்ளிகளினால்
தமிழகத்திலே பலன் இல்லை என்று யாரும் சொல்லிவிட முடி
யாது. தெருவுக்குத் தெரு இன்றைக்குப் பள்ளிகள் இருக்
கின்றன. பள்ளிக்கூடங்களுக்குச் சென்று கல்வியைக் கற்க
முடியாவிட்டாலும்கூட, தன்னுடைய வீட்டுக்கு அருகிலே
இருக்கின்ற நர்சரிப் பள்ளிகளிலே குழந்தைகளை அனுப்புகின்ற
நல்ல நிலை இன்றைக்கு இருந்து வருகிறது. ஆனால் ஒன்றை
மட்டும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, அவர்களிடமிருந்து
அரசு ஏறத்தாழ இரண்டாயிரம் ரூபாய் நிதியாகப் பெற்றிருக்
கிறது. ஆனால் அதற்குப் பிறகு அவர்களுக்கு என்று வரைமுறை
வைத்து இதுவரை கொடுக்கப்படவில்லை. தயவுசெய்து நீங்கள்
அவர்களுக்கு ஒரு வரைமுறை வைத்துக் கொடுத்து அந்தப்
பள்ளிகளை நீங்கள் ரெகக்னைஸ் பண்ணுகிறீர்களோ இல்லையோ,
அதற்காக ஒரு ரெகுலரைஸ் பண்ணியாவது அந்தக் கல்வித்
திட்டத்தை நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று நான்
மன்றாடிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ஜவஹர்லால் நேரு அறிவியல் முன்னேற்றத்
திட்டம் என்று மத்திய அரசினுடைய உன்னதமான திட்டத்தின்
படி எல்லா மாநிலங்களுக்கும் மத்திய அரசு நிதி ஒதுக்கியிருக்



கிறது. அந்தத் திட்டத்தின் இரண்டாவது பேசிஸ்படி ஏறத்
தாழ அதனுடைய பணி இன்றைக்கு நடந்து வருகிறது. அதற்கு
3.5 கோடி ரூபாய்க்கான புத்தகங்களை வாங்குவதற்கு மத்திய
அரசு நிதி ஒதுக்கியிருக்கிறது. அது ஒரு தனியார் பதிப்பகத்தி
லிருந்து வாங்கப்பட்டிருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்
திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். இதிலே குறிப்பிடுகிற
பொழுது இவ்வளவு அதிக ரூபாய்க்கான புத்தகங்களை அரசுவாங்கு
கின்றபொழுது எந்தவிதமான டெண்டரோ அல்லது எந்தவிதமான
பத்திரிகை விளம்பரங்களோ கொடுக்காமல், நேரடியாகப்
பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் ஒரு தனியார் கம்பெனியை
அழைத்து, இத்தனை கோடி ரூபாய்க்கான புத்தகங்களை
வழங்க வேண்டுமென்று சொல்லி அதை வழங்கியிருக்கிறார்கள்.
என்பதை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர
விரும்புகிறேன். இதிலே என்ன நிலைமை என்று சொன்னால்,
அந்தத் தனியார் கம்பெனி என்பது, அந்தக் கம்பெனியிடமிருந்
தும், அதனுடைய ஏழு பினாமி கம்பெனிகளிடமிருந்தும்தான்
அந்தப் புத்தகங்கள் இன்றைக்கு வாங்கப்பட்டிருக்கின்றன என்
பதையும், அந்தப் புத்தகங்கள் அத்தனையும் போரூரிலே இருக்
கின்ற ஒரு பங்களாவிலே அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றன
என்பதையும், அந்தப் புத்தகங்களைப் பள்ளிக் கல்வி இயக்குநர்
அவர்கள் தேர்வு செய்வதற்குப் பதிலாக அந்தப் புத்தகங்களைக்
கொடுக்கின்ற செல்லர்தான் தேர்வு செய்து கொடுத்திருக்கின்
றார்கள் என்பதைக் கல்வியமைச்சருடைய கவனத்திற்கு நான்
கொண்டுவர விரும்புகிறேன்.

அதுபோன்று, நெல்லை மனோன்மணியம் பல்கலைக்கழகம்
தோற்றுவிக்கப்பட்டு இத்தனை ஆண்டுகள் ஆகியும்கூட அங்கே
சரியான கட்டிட வசதி இல்லாத காரணத்தால் இன்றைக்கு
யுனிவர்சிட்டி கிரான்ட்ஸ் கமிஷன் கொடுக்கின்ற அந்த நிதியைப்
பெறமுடியாத சூழ்நிலை இன்றைக்கு மனோன்மணியம் பல்
கலைக் கழகத்தில் இருந்து வருகிறது என்பதை அரசின் கவனத்
திற்குக் கொண்டு வந்து, அதற்குத் தயவுசெய்து உடனடியாகக்
கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்கக்கூடிய நல்ல ஒரு முயற்சியைச்
செய்யவேண்டுமென்று நான் உங்களை வேண்டிக்கொள்ள
விரும்புகிறேன்.

நெல்லையிலே இன்றைக்குப் பல்கலைக் கழகம் துவக்கப்பட்ட
பிறகு நெல்லையிலே சட்டக் கல்லூரி இல்லை என்பதையும்,
அதை மனத்திற்கொண்டு ஒரு சட்டக் கல்லூரியைத்
தோற்றுவித்து, அதற்கு மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர்
அருமைத் தலைவர் இராஜீவ் காந்தி அவர்களுடைய பெயரையும்
சூட்ட வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குத் தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் பெயரைச் சூட்ட வேண்டும் என்று இங்கே நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்,

குறிப்பாக தனியார் பள்ளிகளிலே ஏற்கெனவே இருக்கின்ற ஒரு இடம் காலியாகி விட்டது என்று சொன்னால், அது மைனாரிட்டி பள்ளியாக இருந்தாலும் சரி, மற்றவையாக இருந்தாலும் சரி. அந்தப் பள்ளியிலே இருக்கின்ற ஆசிரியர் பணி, அவர் இறந்து விட்ட காரணத்தினாலேயோ அல்லது ஓய்வு பெற்றதன் காரணமாகவோ அந்த இடம் காலியாகிறது என்று சொன்னால் மீண்டும் அந்தப் பள்ளி இங்கே தமிழக அரசிடம் அந்த இடத்தை நிரப்ப வேண்டுமென்று கேட்டு, அனுமதி பெற்ற பிறகுதான் நிரப்புகின்ற ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது, இதன் காரணமாக எவ்வளவோ தடைகள் ஏற்படுகின்றன என்பதையும். காலதாமதம் ஏற்படுகிறது என்பதையெல்லாம் அரசு மனதிலே கொண்டு, தயவு செய்து இது போன்று இல்லாமல், ஏற்கெனவே அவர்களுக்கு வழங்கப் பட்டு இருக்கின்ற அனுமதியின் அடிப்படையில் வைத்து அவர்கள் ஆசிரியர்களை நியமித்துக் கொள்கின்ற ஒரு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11,40

குறிப்பாக, இன்றைக்குச் சென்னையிலே இருக்கிற சில மாநகராட்சிப் பள்ளிகளினுடைய நிலை என்னஎன்பதை கல்வியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாநகராட்சிப் பள்ளிகள் என்பது, சமூக விரோதிகளினுடைய கூடாரமாக திகழ்ந்துவருகிறது என்பதை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அங்கே கள்ளச் சாராயம் விற்கிற வியாபாரிகள், ஒட்டு மொத்தமாக அந்தப் பள்ளிகளை இரவு நேரங்களில் பயன்படுத்துகிறார்கள் என்பதையும், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், லாயிட்ஸ் ரோடிலே உள்ள மாநகராட்சிப் பள்ளிக்குச் சென்று இரவு நேரத்திலே பார்ப்போமேயானால். அங்கே கள்ளச் சாராயம் விற்பவர்களையும். அங்கேதான் அது மொத்த வியாபாரமே என்கிற அளவுக்கு இருப்பது மட்டுமல்ல; காலையிலே கல்வி கற்க வருகிற மாணவர்கள், இரவு நேரத்தில் அவர்கள் விட்டு வீட்டுச் சென்ற அந்தக் கழிவுகளை எடுத்து அகற்றுவதற்கும், அந்தச் சாராயப் பாட்டில்களை அகற்றுவதற்கும் வேண்டிய ஒரு நிலைக்கு அவர்கள் வந்துள்ளார்கள் என்பதையும் கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



கல்வி என்பது, இந்த நாட்டினுடைய சமுயதாயத்தைச் சீர்திருத்துவதற்காகப் பயன்படுத்துகிற ஒரு திட்டம். அந்த உன்னதமான திட்டத்திலே, நீங்கள் சமுதாயத்திற்கு ஒரு வளர்ச்சியை ஏற்படுத்துகிற விதத்தில், நல்ல முறையில் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்துகிற உங்களை மனதாரப் பாராட்டி, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ரெ. சியாமளா.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை ஈன்றெடுத்த தாயினும் மேலாக பரிவுடன் என்னை, நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திற்கு 'செனட்' உறுப்பினராகவும், நெல்லை சிதம்பரனார் மாவட்டத் திருக்கோயில்களின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் நியமித்த, உலகம் போற்றும் உத்தமத் தலைவியாக விளங்குகிற எங்களது மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் தொட்டு, எனது பணிவான வணக்கத்தினையும், நெஞ்சார்ந்த நன்றியையும் காணிக்கையாக்கி, கல்வித் துறை மானியத்தின் மீதான எனது உரையைத் தொடங்குகிறேன்.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'',

என்று கல்வியின் மாண்பை, அதன் சிறப்பினை, வள்ளுவர் தெளிவாகக் கூறுகிறார். கல்வியைப் பொறுத்துத்தான், கல்வியின் சமுதாயத்தில் மறு மலர்ச்சியே ஏற்படுகிறது. பெருகிக் கொண்டே பரிணாம வளர்ச்சி, நாள்தோறும் வேறுபாடின்றி கல்வி கற் போகிறது. பள்ளிகள், சாதி, சமய வேறுபாடின்றி கல்வியறிவை ஊட்டும் பிக்கும் கோயில்களாக விளங்குகின்றன. கல்வியறிவை ஊட்டும் இந்தக் கோயில்கள், வலிவும் பொலிவும் கொண்டு விளங்க நமது அரசு பல்வேறு சீரியத் திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செம்மையாகச் செயல்படுத்தி வருகிறது. மகாத்மா காந்தியடிகள், மனிதன், குழந்தைகள், இவர்களின் மனம், உடல், உள்ளம் ஆகியவற்றில் அடித்தளத்தில் அமைந்துள்ள சிறந்த ஆற்றலை, நல்ல பண்புகளை வெளிக் கொணரும் அரிய செல்வம் தான் கல்வி என கல்வியின் பெருமையைப் பற்றி கூறியுள்ளார். கடுமையான நிதிப் பற்றாக்குறை இருந்த போதிலும். நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கல்விக்காக, மிகவும் தாராளமான மனதுடன், அதிக முன்னுரிமை கொடுத்து 1,517.18 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். 450 ஓராசிரியர் பள்ளிகள் அனைத்திலும், இரண்டாவது ஆசிரியரை

நியமிக்க நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு அளித்துள்ளார். வரும் கல்வி ஆண்டில், 20 உயர் நிலைப் பள்ளிகளும், 10 மேல் நிலைப் பள்ளிகளும் தொடங்கவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது. கல்லாமை என்பது இல்லாமையாக வேண்டுமென்றும், அனைவருக்கும் கல்வி என்ற கோட்பாட்டை உணர்ந்து, நமது புரட்சித் தலைவி அவர்கள் தொடக்கக் கல்விக்கு முக்கியத்துவம் தந்து, 1992—93 இல் புதிய திட்டமாக கூடுதல் மாணவர்களைச் சேர்ப்பதற்காக 1,400 இடைநிலைப் பணியிடங்களை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். 500-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட பள்ளிகள் இல்லாத ஊர்களுக்கு, அதாவது சிற்றூர்களுக்கு 200 தொடக்கப் பள்ளிகள் புதிதாக ஆரம்பிக்க ஏற்பாடு செய்துள்ளார்கள். நமது கல்வி முறையானது, தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி, மேல் நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழிற் கல்வி என பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. தொடக்கக் கல்வி கற்க வரும் மாணவர்களில், சிலர் ஏழ்மையின் காரணமாகவும், குடும்ப வருமானத்தைப் பெருக்க வேண்டிய சூழ்நிலையாலும், பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தி விடுகின்றனர். இந்த 'ட்ராப் அவுட்' ஐை தவிர்க்க, இலவச சத்துணவு, இலவசப் புத்தகம், இலவச பஸ் பாஸ், இலவச சீருடை ஆகியவற்றை நாம் கொடுக்கிறோம். அவ்வாறாக இருந்த போதிலும், மாணவர்களுக்கு தொடக்கக் கல்வியில் ஈடுபாடு ஏற்படுத்தும் பொருட்டு, இருக்கைச் சூழலுடன் கூடிய வகுப்புகளை நடத்துவதன் மூலமும், விளையாட்டுடன் கூடிய போதனா முறையை, அதாவது Play wuy teaching method ஏற்படுத்துவதன் மூலமும், குழந்தைகளை கல்வியின்பால் ஒன்றி ஈர்க்கும் நிலையை நாம் ஏற்படுத்தலாம் என்று அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவ, ஆசிரியர் விகிதாச்சாரம் குறைக்கப்பட்டு ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் குழந்தைகள் அமையும் நிலையை நாம் ஏற்படுத்த வேண்டும். The destiny of India is being shaped in the classroom என்று கூறுவார்கள். அதாவது, வகுப்பறைகளில்தான் இந்தியாவின் தலைவிதியே நிச்சயிக்கப்படுகிறது.

முற்பகல் 11-45

அதனால் நாம் நம்முடைய கல்வித் தரத்தை உயர்த்த பாடுபட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். நாம் இன்றைக்கு பல இடங்களில் அங்கீகாரம் பெறாத இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிலையங்களைக் காண்கிறோம். அங்கு முறையான ஆசிரியர் பயிற்சி, போதனா முறை இல்லாததை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இரண்டு வருடங்களில் கற்க வேண்டிய போதனா முறைகளை இரண்டு அல்லது மூன்று மாதங்களில் அந்த ஆசிரியர்



பயிற்சிப் பள்ளிகளில் சேர்ந்து மாணவர்கள் வெளியே வரும் போது அவர்களுடைய கல்வித்தரம் எப்படி இருக்கும் என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள். போதனா முறை தரமானதாக இல்லாமல் இருப்பதால், முறைப்படி கற்காத காரணத்தால், அவர்களுடைய கல்வித்தரம், மிகவும் குறைந்து காணப்படுவதால் அவர்களைப் பணியில் அமர்த்தும் போது நல்ல, தரமான கல்வியை அவர்கள் போதிக்க முடியாத நிலைமையை நாம் காண்கிறோம். அவற்றை நாம் களைய முயற்சி எடுக்க வேண்டும். அது போன்ற கல்வி நிலையங்களை நாம் முறைப்படுத்த வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களும், ஆசிரியர்களும் பள்ளி நூலகத்தை நல்ல முறையில் பயன்படுத்த மேலும் சிறப்பான வழி வகைகளைச் செய்திட வேண்டும். நாம் இன்றைக்கு நவீன காலத்தில் ''கம்ப்யூட்டர்'' உலகத்தில் வாழ்ந்து வருகின்றோம். தினந்தோறும் நவீன, புதிய கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்து கொண்டே இருக்கின்றன. அவற்றை எல்லாம் நமது ஆசிரியப் பெருமக்கள் நல்ல முறையில் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அவற்றை எல்லாம் தெரிந்துகொண்டு வகுப்பறைகளில் சென்று மாணவர்களுக்குக் கற்பித்தால்தான் தற்கால மாணவ சமுதாயத்தை நம்மால் ஈர்க்க முடியும். அத்தகைய ஆசிரியர்களின்பால்தான் மாணவர்களுக்கு ''அட்ராக்ஷன்'' கிடைத்து, அவர் சொல்லும் பல நல்ல விஷயங்களை ஏற்றுக் கொள்வார்கள். பழைய ஸ்டீரியோ டைப் மெத்தேட்படி நாம் கல்வி கற்பிக்காமல், போதனா முறையில் பல புதிய முறைகளை கடைப்பிடிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். இவ்வளவு முன்னேறிய நிலையிலும் கூட, சில பள்ளிகளில் 10-வது வகுப்பு பொதுத் தேர்வில் Zero per cent i.e. Nil Per cent தேர்ச்சி பெறுவதை நாம் காண்கிறோம். இத்தகைய குறைகளைப் போக்க நாம் அரும்பாடுபட வேண்டும். அத்தகைய பள்ளிகளில் ஆசிரியர்களும், நிர்வாகமும் பொறுப்பேற்கவும், கல்வி அதிகாரிகள் அத்தகைய பள்ளிகளை அடிக்கடி கண்காணித்து அதன் தரம் உயர முயற்சியும், தனிக் கவனமும் செலுத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியப் பெருமக்கள் பொறுப்புணர்வுடனும், சமுதாய நோக்குடனும், கடமையுணர்ச்சியுடனும் செயலாற்ற வேண்டும். அவர்களிடையே, Accountability இருக்க வேண்டும். நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூட கடந்த 10 தினங்களுக்கு முன்பு Accountability என்பதைப் பற்றிக் கூறினார்கள். ஒரு மாணவன் குறைந்த விழுக்காடு பெற்று தேர்ச்சி பெற்றால் அந்த ஆசிரியர்கள் முழுப் பொறுப்புஏற்க வேண்டும். The Teachers concerned must be held responsible 101 such grave depression தற்போதுள்ள ஆசிரியப் பெருமக்களில் பலர் Trade union Mantality உடன் செயல்படுவதை நாம் கண்கூடாகக்காண்கிறோம்.

Instead of developing academic culture they develop trade Union culture அதை நாம் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். (மணியடிக்கப் பெற்றது)

அடுத்து, மேல்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி ஆகியவற்றை நாம் எடுத்துக் கொண்டோமேயானால், ஒரு சில பாடப் பிரிவுகளுக்குத் தான் அதிக வரவேற்பு உள்ளது. அதற்கு டிமாண்டு உள்ளது. அதைத் தவிர்க்க, நாம் தொழில் கல்விக்கு உரிய முக்கியத்துவம் தர வேண்டும். பல சுயநிதி நிறுவனங்கள் அரசால் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களைப் பின்பற்றாமல், ஒழுங்கற்ற முறையில் செயல்படுவதை நாம் களைய முயற்சி எடுக்க வேண்டும், ஆசிரியர்களுடைய Standard of Education உயர, கல்வித் தரத்தையும், கல்வி கற்பிக்கும் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்களுக்கு அடிக்கடி inservice training refresher course போன்ற பணியிடைப் பயிற்சிகளை அதிகம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். எந்தவொரு நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தொழில் நுட்பத்தில் பயிற்சி பெற்றவர்கள் இன்றியமையாதவர்கள் ஆகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

ஜப்பான் போன்ற மேலை நாடுகளைப் போல நாமும் தொழில் வளர்ச்சியில் முன்னேற வேண்டுமானால், தொழில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும். சிறிய வகுப்பு அறைகளிலே, அதாவது தொடக்கக் கல்வி நிலையிலேயே, தொழிற் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். L.O.E. i.e. Life-oriented education என்று நாம் வைத்திருக்கிறோம். அந்த வாழ்க்கைக் கல்வி முறையை நன்றாகக் கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொண்டு...... (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள்.

திருமதி ரெ. சியாமளா : தொழில் கல்விக்கு இப்போது அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்கள், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நம்மிடம் இன்றைக்கு அதிகமான இளைஞர்கள் வருகிறார்கள். வேலை கேட்டு வருவதைக் காண்கிறோம். அவர்களிடம், நாம் என்ன படித்திருக்கிறாய்? என்ன வேலை செய்ய முடியும்? என்ன வேலைக்குப் படித்திருக்கிறாய் என்றெல்லாம் கேட்போமானால், அவர்களிடமிருந்து இன்ன வேலைக்குத்தான் என்று குறிப்பிடும்படியான பதில் வராது. ஏதாவது ஒரு வேலை தாருங்கள் என்று சொல்வதைத்தான் நாம் கேட்க முடியும். அந்த நிச்சயமற்ற சூழ்நிலையை, அந்தத் தன்மையை நாம் மாற்ற வேண்டுமானால், தொழில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் பல நிலைகளிலே (மணியடிக்கப் பெற்றது) தரப்பட வேண்டுமாய் கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற கல்வி மானியத்தின் மீது பேசுகிற வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்ததற்காக முதலாவதாக உங்களுக்கு எனது நன்றியினைக் கூறிக்கொண்டு, இன்று சட்டமன்றத்தில் காலையிலே வருகிற 14 ஆம் தேதி டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய பிறந்த தின விழாவிற்கு தமிழக அரசும், மத்திய அரசைப் போல் விடுமுறை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க வருகிற 14 ஆம் தேதி விடுமுறை அளித்ததற்காக, தமிழக அரசுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் எனது நன்றியினைக் கூறிக் கொண்டு, கல்வித் துறை மானியத்தின் மீது சில கருத்துக்களைக் கூற விழையலாம் என்று கருதுகிறேன்.

கிட்டத்தட்ட தமிழகத்தினுடைய வருமானத்தில் 21 விழுக்காட்டைக் கல்விக்காகச் செலவிடுகின்ற விதத்தில் அதாவது 1,517 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து தமிழகத்தில் கல்வி மறுமலர்ச்சியினை ஏற்படுத்துவதற்காக இந்த அரசு கொண்டுவந்திருக்கின்ற நல்ல திட்டங்களைப் பாராட்டுகிற அதே நேரத்தில், இருக்கின்ற சில குறைபாடுகளையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் பள்ளிகளைப் பொறுத்தவரையில் தொடக்கப்பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளிகள் வரை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள பள்ளிகள் சரியாக சீரமைக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

அதுமாத்திரமல்ல, சில பள்ளிகளில் அதிகமான மாணவர்கள் இருந்தாலும் அதற்கேற்ற ஆசிரியர்கள் இல்லை. சில பள்ளிகளில் போதுமான மாணவர்கள் இல்லாமல் அதிகமான ஆசிரியர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. அரசினுடைய விகிதாச்சாரக் கணக்குப்படி 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்கின்ற வகையில் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் சில பள்ளிகளில் அது நடைமுறையில் இருக்கிறது; பல பள்ளிகளில் அது நடைமுறையில் இல்லை.

கடந்த பல ஆண்டுக்காலமாக ஆசிரியர்களுடைய நியமனம் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தால் கல்வியின் தர குறைந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையை நான் அரசின் கவனத்

திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே,
அதிலே அரசு கவனம் செலுத்தி பள்ளிகளில் அதிகமான ஆசிரியர்
களை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் வலியுறுத்த
கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் அரசு அங்கீகாரம் பெற்ற
பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் பல ஆண்டுகளாக
ஊதியம் பெறாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அவர்கள்
பலவிதமான போராட்டங்களை நடத்தி இன்றைக்கு அமைச்ச
ராகப் பொறுப்பேற்று இருக்கின்ற மரியாதைக்குரிய மாண்புமிகு
அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் கூட கடந்த 1—6—1992-ல்
இருந்து எல்லோருக்கும் அதாவது 15 ஆண்டுகாலமாக வேலை
செய்பவர்களுக்கு ஊதியம் வழங்கப்படும் என்கிற உத்தரவாதத்
தைத் தந்து இருக்கிறார்கள். அதை உடனடியாக அமல்படுத்த
வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்
கிறேன்.

இந்த நல்ல சந்தர்ப்பத்தில் மாண்புமிகு அமைச்சரின் கவனத்
திற்கு ஒன்றை நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இன்றைய தினம் இட ஒதுக்கீடு பற்றி ஒன்று சொல்ல விரும்பு
கிறேன். ஒரு முக்கியமான கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.
நமது சென்னை மாநகரிலே மாத்திரம் 4 பள்ளிக்கூடங்கள் இயங்கி
வருகின்றன. பத்மா சேஷாத்ரி பள்ளி, ஸ்டேட் ஆஃபீஸர்ஸ்
அசோசியேஷன் என்கிற விதத்தில் ஒரு கல்வி ஸ்தாபனம், பி.எஸ்.
சீனியர் செக்கண்டரி ஸ்கூல், இன்னொன்று என்னுடைய ஞாபகத்
திற்கு வரவில்லை. ஆக இந்த நான்கு பள்ளிகளில் சென்ட்ரல்
சிலபஸ் நடந்துகொண்டிருக்கிறது. அந்த சென்ட்ரல் சிலபஸ்
நடக்கின்ற பள்ளிகளில் குறிப்பிட்ட ஒரு வகுப்பினர்,
வகுப்பினர் என்று கூறிக்கொள்பவர்கள் மாத்திரம் படிக்கின்ற
விதத்தில் எஸ். ஐ. சி. யில் அப்ரண்டீஸ் ட்ரெயினிங் கொடுக்கிற
விதத்தில் செயல்படுத்துகிறார்கள். அப்ரெண்டீஸ் ட்ரெயினிங்
என்று சொன்னால் ப்ளஸ்—1, ப்ளஸ்—2 முடித்து வெளியே
வந்தவுடன் அவர்களுக்கு எல். ஐ. சி.-யிலே அப்பாயின்ட்மென்ட்
கொடுக்கிறார்கள். அவர்களுக்கு ஸ்டைஃபன்ட்—ஆக ஆயிரம்
ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் அதிலே பிற்படுத்தப்பட்ட,
தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் யாரையும்
சேர்ப்பது கிடையாது. முழுக்க முழுக்க மேல் மட்டத்தைச்
சார்ந்த மேற்குடி மக்களுக்கு மாத்திரம் தான் அது என்று வகுக்கப்
பட்டிருக்கிறது. அதிலேயும் இட ஒதுக்கீட்டை அமல்படுத்த
வேண்டும். அதிலே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமு
தாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் படிப்பதற்கான வாய்ப்பினை
ஏற்படுத்துகிற விதத்தில் இந்த அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும்
என்று இந்த நேரத்தில் மெத்தப் பணிவுடன் கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல ஆசிரியர்களுடைய பிரச்சினை என்று வருகிற
போது, அரசு கலைக் கல்லூரியில் 1986 முதல் ஒப்பந்த அடிப்
படையில் கிட்டத்தட்ட 325-க்கு மேற்பட்ட எம்.ஃபில், பிஎச்.டி.



முடித்தவர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் கல்வியாண்
டுத் தொடக்கத்தில் நியமனம் செய்யப்பட்டு கல்வியாண்டு இறுதி
யில் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். கோடை விடுமுறைக்
கான காலத்தில் சம்பளம் கொடுக்கின்ற சூழ்நிலை இல்லை.
எனவே இதை அரசு கவனத்தில் கொண்டு அப்படிப் பணியாற்றிக்
கொண்டிருப்பவர்களை நிரந்தரம் செய்யவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல சட்டக் கல்லூரியில் ஆசிரியர்களாகப் பணி
யாற்றுகிற 29 பேரும் இதேபோல் ஒப்பந்த அடிப்படையில்
நியமிக்கப்பெற்று கல்வியாண்டுத் தொடக்கத்தில் பணியில்
சேர்கிறார்கள். அந்தக் கல்வி ஆண்டு முடிகிறபோது அவர்களைப்
பிரித்துவிடுகிற சூழ்நிலையில் அவர்களுக்கு சம்பளம் கொடுக்காத
ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே அரசு இதில் கவனம் செலுத்தி
அப்படிப்பட்ட ஆசிரியர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

1984-க்குப் பிறகு ஆங்கிலப் பாடத்தைப் போதிக்க ஆங்கில
இலக்கியம் படித்தவர்களை நியமிக்க வேண்டும் என்றிருந்தும்
அப்படி நியமிக்காமல் இருக்கின்ற சூழ்நிலையை அரசினுடைய
கவனத்திற்குக் நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.
எப்படி மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற
ஆசிரியர்கள் அதாவது புலவர்கள், தமிழ் ஆசிரியர்கள் தமிழ்ப்
பாடங்களை நடத்துவதற்கு நியமிக்கப்படுகிறார்களோ, அதே
போல் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்களை ஆங்கிலப் பாடத்திற்
கான ஆசிரியர்களாக உயர்நிலைப்பள்ளிகளில் நியமித்திட
வேண்டும் என்ற கோரிக்கையை இங்கே நான் வலியுறுத்தக்
கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-55

அதேபோல, பகுதிநேர தொழில் கல்வி ஆசிரியர்களுக்குப்
பயிற்சி அளித்து பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னாலே சொல்லியிருந்தார்
கள். அந்த அடிப்படையிலே எந்த எந்தத் துறையிலே அவர்களுக்கு
பணிப் பயிற்சி அளிக்கவேண்டுமோ அதை அளித்து உடனடியாக
அவர்களை வேலையிலே நிரந்தரம் செய்திட வேண்டுமென்று
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் பயிற்சி
காலத்தில் ஊதியம் எதுவும் வழங்கப்படுமா? அவர்கள் பயிற்சிக்
காலம் எவ்வளவு என்பதை நிர்ணயித்து அரசு அறிவிக்கவேண்டும்
என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, இன்னும் ஒரு கவலைக்குரிய விஷயம். அது
என்ன என்று சொன்னால், இப்போது டீச்சர்ஸ் டிரெயினிங்
முடித்து இருக்கின்றவர்களிலே சுமார் 120 ரூபாய் சம்பளம்

பெற்று 300-க்கு அதிகமான ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். பெரும்பாலானவர்கள் கைம்பெண்களாகத்தான் இருக்கின்றார்கள். அவர்கள் 4 ஆண்டுகள் தையல் பயிற்சி பெற்று டீச்சர்ஸ் டிரெயினிங் கொடுத்து அவர்கள் பணியிலே இருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு கொடுக்கப்படக்கூடிய சம்பளம் 120 ரூபாய். எனவே, அரசு இதிலே கவனம் செலுத்தி அவர்களுக்கு அதிகமாக சம்பளத்தைக் கொடுப்பதோடு அவர்களை வேலையிலே நிரந்தரம் செய்திடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதைப்போலவே ஆசிரியர் பயிற்சி இன்று பள்ளிகளில் வழங்குகிற நேரத்தில் ஒரு புதிய கொள்கையினை இந்த அரசு அறிவித்திருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளில் முழுவதும் ஆசிரியைகளை நியமிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதே நேரத்தில் அதற்கான பயிற்சியைப் பெற்ற ஆசிரியர்கள் பெருவாரியாக வெளியிலே நிற்கிறார்கள். எனவே அரசு தன்னுடைய முடிவிலே 50 சதவிகிதம் ஆண்களுக்கும், 50 சதவீகிதம் பெண்களுக்கும் என்று அதை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இப்போதும்கூட தொடர்ச்சியாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் பயிற்சி அளித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே பயிற்சி அளித்துவிட்டவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் இல்லை என்ற சூழ்நிலை வருவது மிகவும் வருந்தக்கூடிய நிகழ்ச்சி. எனவே அவர்களை நியமித்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல, இன்னொன்றும் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் எல்லாப்பகுதிகளிலும் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் எல்லாம் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பெருவாரியான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் கிடையாது. எனவே தமிழ்நாட்டில் ஒரு பகுதியாக கன்னியாகுமரி மாவட்டம் இருந்தும் அவர்கள் இடம் மாற்றிக் கொள்கின்றபோது நெல்லை மாவட்டத்தில் எல்லையிலேயிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்ற சூழ்நிலைதான் இருக்கிறது. அந்த மாவட்டத்திற்குள்ளே பிரவேசிக்கின்ற ஒரு வாய்ப்பை நழுவ விடுகிறார்கள். எனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வருகின்ற அரசுப் பள்ளிகளில் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களை நியமிக்கலாம் என்ற சட்டத்தினை நீங்கள் அளித்திட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதே போல, வாழ்க்கைக் கல்வி, தொழில் கல்வி ஆசிரியர்கள் கிட்டத்தட்ட 1,250 பேர்கள் முந்தைய அரசால் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளார்கள். அவர்களுடைய வாழ்க்கை இன்றைக்குக் கேள்விக்குறியாக இருக்கிறது. எனவே நீங்கள் அதையும் கவனத்திலே கொண்டு அவர்களை பணியில் நிரந்தரம் செய்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இன்றையதினம் தமிழ்நாட்டில் மொத்தம் 27 திட்டப்பகுதிகளில் செயல்பட்டு வந்த தொடர் கல்வி மற்றும் முதியோர் கல்வித் திட்ட மையம் கைவிடப்படும் நிலையில் உள்ளதாக இருக்கிறது. இத்திட்டம் தொடரவும், அதில் பணியாற்றிவரும் 706 பணியாளர்கள் பணியில் தொடரவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) முடித்துவிடுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> முடித்துவிடுங்கள். ஊருக்குப் போகவேண்டும் என்று சொன்னீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் ;</u> 8 நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன. அதேபோல இன்னும் உங்களுடைய கவனத்திற்கு 2, 3 கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரைக்கும், கல்வி மானியத்தின் கீழ் வருகிறது. இந்த விளையாட்டுத்துறையை எல்லோருமாக விளையாட்டாக விட்டு விடுகிறார்கள். அதிலே தனி கவனம் செலுத்தாத சூழ்நிலை இருந்து கொண்டிருப்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கேரள மாநிலத்தில் விளையாட்டுத் துறையில் இளைஞர்களை, மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்காக 10—வது, 12—வது வகுப்பு அரசாங்கத் தேர்வுகளில் பங்குபெறும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு கிரேஸ் மார்க்குகளைக் கொடுக்கிறார்கள். அதன் மூலம் அதிகமான இளைஞர்கள் தங்களை விளையாட்டுகளிலே ஈடுபடுத்திக் கொள்கின்ற ஒரு வாய்ப்பு வருகிறது. இன்றைக்கு இந்தியாவிலே கூட கேரள மாநிலம் விளையாட்டிலே முன்னேறி இருக்கின்றது என்று சொன்னல், இப்படிப்பட்ட என்கரேஜ்மெண்ட் அங்கே இருக்கிறது. ஈகே ஒட்டுமொத்தமாக இல்லை. எனவே கிரேஸ்மார்க் கொடுக்கின்ற ஒரு திட்டத்தை அரசு அறிவிக்க வேண்டுமென்பதை நான் இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்திலேதான், இன்றைக்கு மின்வாரியத்திலே கூட 'ஸ்போர்ட்ஸ் கோட்டா' என்று வைத்து மிகச் சிறந்த விளையாட்டு வீரர்களை எல்லாம் தேர்வு செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களை அரசு உற்சாகப்படுத்த வேண்டுமென்று சொன்னால் இப்படிப் பட்ட கார்ப்பரேஷன்களில் வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும். அதைக் கொடுக்க முன் வந்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்பற்றி பின்னாலே பேச வருகிறேன்.

நண்பகல் 12–00

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பின்னாலே வருவதற்கு நேரம் இல்லை. சீக்கிரம் முடியுங்கள்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> ஆக, என்னைப் பொறுத்த வரைக்கும் படிக்கின்ற இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு உற்சாகம் ஊட்டுகின்ற விதத்தில்தான் இதை நான் குறிப் பிட்டிருக்கிறேன். அதைப்போல நம்முடைய போக்குவரத்துக் கழகங்களில்கூட, முன்பு நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது, மரியாதைக்குரிய மறைந்த முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியின்போது, டிரான்ஸ் போர்ட் கார்ப்பரேஷன்களில் எல்லாம் விளையாட்டு வீரர் களை நியமித்து அவர்களை என்கரேஜ் பண்ணுகிற விதத்தில் அவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுத்து வந் தார்கள். ஆனால் இப்பொழுது அந்த என்கரேஜ்மென்ட் அவ்வளவு இல்லையோ என்கிற குறைபாடு பரவலாக இருக்கிறது. எனவே, அதை நான் உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற் றது) அதைப்போல பயந்து, பயந்து பேச வேண்டியிருக்கிறது சார்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அமைச்சர் அவர்களுக்கு பதில் உரைக்கு நாம் நேரம் தர வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முன்பே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும்.



<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்போல மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன். பொதுவாக இந்த ஸ்டேடியங்கள் இருக் கின்றனவே, அந்த ஸ்டேடியங்களைச் சுற்றியிருக்கிற கடை கள் மற்றும் ஸ்தாபனங்களின் மூலம் வருகின்ற வாடகை போன்ற வருமானங்களை எல்லாம் அந்த ஸ்டேடியத்துக்கு, விளையாட்டுத் துறைக்குத் தான் பயன்படுத்துவார்கள். எல்லா மாவட்டங்களிலும் அப்படித்தான் பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் ஸ்டேடியத் திலிருந்து வரக்கூடிய வருமானங்கள் அப்படிப் பயன்படுத்தப் படவில்லை. விளையாட்டுத் துறைக்கோ, விளையாட்டுத் துறையினுடைய வளர்ச்சிக்காகவோ அது பயன்படுத்தப்பட வில்லை. எனவே, அந்தப் பணத்தை விளையாட்டுத் துறைக்கே பயன்படுத்த ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தின் முதல்வராக புதிதாக பொறுப் பேற்றுக் கொண்டிருக்கிற முதலமைச்சர் அவர்கள் பொறுப் பேற்ற பிறகு 'ஸ்போர்ட்ஸ் அதாரிட்டி ஆஃப் தமிழ்நாடு' என் கிற ஒரு அமைப்பை, ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி, அதற்கு இன்றையதினம் ஒலிம்பிக்கினுடைய சேர்மன் ஆக இருக்கக் கூடிய மரியாதைக்குரிய சிவந்தி ஆதித்தன் அவர்களை தலை வராகப் போட்டிருக்கிறார்கள். அவருடைய பெரு முயற்சியின் அடிப்படையில், விளையாட்டுத் துறையை முன்னேற்ற வேண் டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில், ஆவலின் அடிப் படையில் பல முயற்சிகளை அவர்கள் இன்றையதினம் மேற் கொண்டாலும், அதற்கு இணையாக நிர்வாக இயக்குநர் ஒரு வரை, மரியாதைக்குரிய ரவீந்திரன், ஐ.பி.எஸ். அவர்களைப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்கின்றபோது, அவர்கள் எடுக்கின்ற முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு இவர்களிட மிருந்து வராத காரணத்தினால் விளையாட்டுத் துறையில் பல முன்னேற்றங்களைக் கொண்டுவர முடியாமல், மரியாதைக் குரிய சிவந்தி ஆதித்தன் அவர்கள் எடுக்கின்ற முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் நம்முடைய அக்கவுண்டென்ட் ஜெனரல் ஆபிசிலிருந்து ஒரு பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதாவது "தமிழ்நாடு ஸ்டேட் ஸ்போர்ட்ஸ் டெவலெப்மென்ட் கார்ப்ப ரேசன்' என்கிற ஒரு வாரியம் தனியாக இயங்குகிறது. அதுபோல 'யூத் கமிஷன்' என்கிற கமிஷன் இருக்கிறது. இப்படி இரண்டு அமைப்புகள் செயல்படுவதால் அரசுக்கு தேவையற்ற முறையில் செலவு பல கோடி ரூபாய் ஏற்படுகிறது என்றும் விளையாட்டுத் துறைக்காக இரண்டு அமைப்புகள் தனித் தனியாக இருப்பதற்கு பதில் ஒரே துறையாக 'ஸ்போர்ட்ஸ் அதாரிட்டி ஆஃப் தமிழ்நாடு,

என்கிற விதத்தில் அமைத்து செயல்படுத்தினால் இந்த விளையாட்டுத் துறையை என்கரேஜ் பண்ணுவதற்கான சாத்தியக்கூறு இருக்கும் என்று பரிந்துரை செய்திருக்கிறது. எனவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி இந்தத் துறையை என்கரேஜ் பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஸ்போர்ட்ஸ் கோச்சஸ் என்று இருக்கிறார்கள். தமிழ்நாடு பூராவும் 135 பேர்தான் இருக்கிறார்கள். சம்பள வித்தியாசம் இருக்கிறது. 3-வது, 4-வது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில்தான் ஊதியம் தந்திருக்கிறார்கள். 5-வது ஊதியக் குழுவின் அடிப்படையில் பேசிக்கிலேயே கிட்டத் தட்ட 900 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. மத்தியில் இருக்கிற கோச்சுக்கு இணையாக தமிழ்நாட்டில் இருக்கிற கோச்சசுக்கும் சம்பளத்தை அவர்களுடைய அனுபவத்தைப்பொறுத்து உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : திருமதி கற்பகம் இளங்கோ.

<u>திருமதி கற்பகம் இளங்கோ</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று '' என்ற வள்ளுவர் பெருந்தகையின் இலக்கணத்திற்கு இணங்க நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நமது தமிழகத் திற்கு பெருமை சேர்க்க, இந்திய திருநாட்டிலே முதன்மை மிக்க நாடாக நமது தமிழ்நாட்டை மாற்ற வேண்டுமென்ற அந்த எண்ணத்திலே பணிபுரிகின்ற இந்த நேரத்தில் அவரது சீரிய தலைமையின்கீழ் நான் கல்வி மானியக் கோரிக்கையின்கீழ் பேசும் வாய்ப்பைப் பெற்றமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசியல் கூட்டங்களில் நிகழ்காலத்தைக் காண்கிறேன், ஆனால் பள்ளிகளில் வருங்காலத்தைக் காண்கிறேன் என பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். நமது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆசிரியர்கள் நான் வணங்கும் தெய்வங் கள் என்று கூறினார்கள். இவ்வாறு தலைவர்களால் பாராட்டப் பட்ட ஆசிரியர்களுக்கு சிறப்புச் சேர்க்கும் வகையில் நமது தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக பதவி ஏற்கும் முதல் அழைப்பிதழை தனக்குக் கல்வி கற்றுத் தந்த ஆசிரியருக்கு அனுப்பி பெருமை தேடித் தந்த இதய தெய்வம் முதல்வர் அவர்களுக்கு எனது நன்றி யினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஜப்பான் போன்ற நாடுகள், பள்ளிக் கல்வியில் தாய்மொழி கல்வியைப் பின்பற்றி மிகச் சிறந்த தொழில் வளம் பெற்று வருவதைப் போன்று தாய்மொழிக் கல்விக்கு நம் முதலமைச்சர் அவர்கள் முன்னுரிமை அளித்து தொடக்கக் கல்வியை நன்கு வளர்த்து வருகின்றார்கள். பன்னாட்டுக் கல்வி ஆய்வு முடிவுகள் கூறுவது போன்று ஒரு மனிதனின் ஆளுமை வளர்ச்சி, சிந்திக்கும் திறன், நுண்ணறிவு முதலியவை தொடக்கக் கல்வியின் அடிப் படையில் நிகழ்வதால் நம் முதலமைச்சர், தொடக்கக் கல்விக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்துள்ளது பாராட்டுவதற்குரிய ஒன்று ஆகும்.

பிற்பகல் 12-05

வறுமைக் கோட்டின்கீழ் வாழும் இலட்சக்கணக்கான குடும்பங்களின் குழந்தைகள் வயிற்றுப் பசியும், அறிவுப் பசியும் தீர புரட்சித் தலைவி சத்துணவு வழங்கும் திட்டத்தினை மிகச் சிறப்பாக நாட்டின் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நம் முதலமைச்சர் அவர்கள் நடத்தி வருகிறார்கள். இதனால் பள்ளிக் கல்வியின் தேக்க நிலை 20 சதவிகிதம் கீழாகக் குறைந்துள்ளது மிகவும் சிறப்பு அம்சமாகும். இத்தகைய சத்துணவுத் திட்டத்தால்தான் இன்றைய தமிழக தொடக்க நிலைப் பள்ளிகளில் 100 சதவிகிதம் பள்ளிச் சேர்க்கை ஏற் பட்டுள்ளது என்று கூறினால் மிகையாகாது. இதன் மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற குறியீட்டளவை தமிழகம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தொலை நோக்கால் பெற்றுள்ளது.

ஒரு நாடு முன்னேற, அதன் மக்களுக்கு கல்விச் செல்வத்தை முழுதாக ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் 1992-93 ஆம் ஆண்டிற்கு தமிழக அரசு 1517.78 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது மிகவும் சிறப்பு அம்சமாகும். இத்தகைய ஒதுக்கீடு உலக அரங்கில், தொழில் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகள் தங்கள் நிதி ஒதுக்கீட்டில் கல்விக்குச் செலவிடுவதைப்போன்று உள்ளது. இவ்வாறாக இந்த நிலை நீடித்து, 1995 ஆம் ஆண்டிற் குள் இந்தியாவிலேயே எழுத்தறிவு நிலையில் தமிழகம் முதலிடம் பெற வேண்டுமென்று அயராது உழைத்து, அந்தக் கல்விப் பணி களில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு, மாவட்டந்தோறும் அறி வொளிச் சுடரை நம் முதலமைச்சர் ஏற்றி வருகிறார்கள்.

தமிழக அரசு பெண் கல்வி முன்னேற்றத்திற்காக இட ஒதுக்கீடு, வேலையில் இட ஒதுக்கீடு, நிறைந்த கல்விச் சலுகைகள் தந்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியுள்ளது. மேலும் புரட்சித் தல்லவர் ஏற்படுத்திய அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிப் பணிகளில் நம் முதலமைச்சர் முழு ஈடுபாடு

செலுத்தி வருவது பெண்டிர் மேம்பாட்டிற்கு அளப்பரிய பணி ஆற்றி வருவதாகும். அரசு கல்வியியல் கல்லூரிகளையும், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களையும் தேசிய கல்விக் கொள்கைக் கிணங்க மதிப்புமிக்க உயர்ந்த செயல்திறன் கொண்ட Institute of Advance Studies in Education ஆக மாற்றி, நிறைந்த ஆசிரியப் பயிற்சி வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தமை எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு உள்ளது. முதலமைச்சர் வழிகாட்டலின் பேரில் தமிழகத்தில் மேல்நிலைப் பள்ளிக் கல்வி சிறந்த முறையில், நிர்வகிக்கப்பட்டு தொழில் மற்றும் மருத்துவக் கல்லூரிகளுக்கு முழுதும் தகுதி அடிப்படையிலேயே சேர்க்கை வழங்குவது ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்வில் மலர்ச்சி ஏற்படுத்தியுள்ளது. மேலும் இந்தியாவிலேயே மேல்நிலைப் பள்ளி அளவில் தொழிற் கல்வி பயிலும் மாணாக்கரில் 50 சதவிகிதத்திற்கும் மேலாகத் தமிழகத்தில் சிறந்த முறையில் பயில்கின்றனர் என்று தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் ஆய்வு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. நம் முதலமைச்சரின் கல்விப் பணிகளை நாடே போற்றுவதற்கு இது ஒரு சான்றாகும்.

பல்கலைக் கழகங்களில் நிதி நெருக்கடி ஏற்படும்போதெல்லாம் மாணவர்கள் நிறைந்த கல்வி வசதிகள் பெற வேண்டும், அவர்களுடைய கல்விச் செல்வம் பெருக வேண்டும் என்ற அடிப்படையில் நம் முதலமைச்சர் தாராளமாக நிதி அளித்து பல்கலைக் கழக வளர்ச்சிக்கு பெரும் துணை செய்து வருகிறார்கள். அரசுக்கு நிதித் தட்டுப்பாடு இருந்தாலும், அவற்றைக் கருதாது பல்கலைக் கழகங்களுக்கு நிறைந்த மானியம் அளித்து வருகிறார் நம் புரட்சித் தலைவி அவர்கள்.

என் தொகுதிக்கு அழகப்பா பல்கலைக் கழகம் அளித்து, மறைந்த வள்ளல் அழகப்பரின் ஆத்மா சாந்தி அடையச் செய்த நம் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மலின் கொடை மிகவும் பாராட்டுதற்குரியது. அழகப்பர் கண்ட கனவை நினைவாக்கியவர் புரட்சித் தலைவர். அவருக்கு என் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் மாநிலத்தில் மத்திய பல்கலைக் கழக மானியக் குழு அமைப்பு போன்று, மாநிலப் பல்கலைக் கழக மானியக் குழு ஒன்று ஏற்படுத்தி, பல்கலைக் கழகம் மற்றும் அதன் துறைகட்கு வேண்டிய நிதி உதவியை அம்மாநிலப் பல்கலைக்கழக மானியக் குழு மூலம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பல்கலைக் கழகத் துறைகள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, School of Excellence, Centre of Excellence ஆக மாற்றலாம். பெரும்பாலும் பள்ளி, மேல்நிலைப்பள்ளி கல்லூரி கல்வித் துறைகள், இயக்குநரகங்கள், பல்கலைக் கழகத் துறைகளோடு உறவின்றி தனித்தனியாக இயங்குகின்றன. பல்கலைக் கழகத் துறைகள் தனித்தனியே இயங்காமல் ஆய்வு அடிப்படையில் ஒருங்கிணைந்து, சமுதாயத்திற்குப் பயன்தரத்தக்க ஆய்வுகளை மேற்கொள்ளலாம். அரசுக் கல்வியியல் கல்லூரிகளை Centre of Advance Study in Educaiton ஆக ஆக்கியதுபோல, சில பல்கலைக் கழகக் கல்வியியல் துறைகளை Centre of Advance Study in Education என்று ஆக்கலாம்.



மேலை நாடுகளில் உளவியல் (சைகாலஜி) பாடத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, ஆரம்பக் கல்வியிலிருந்தே மாணவர்களுக்குப் போதித்து வருவதால் மாணவர்களின் அறிவு வளர்ச்சியில் ஒரு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு, நாடு வளர்ச்சி அடைந்து வருகிறது. எனவே அது போன்று நம் தமிழ்நாட்டிலும் ஆரம்பக் கல்வி முதலே சைக்காலஜி பாடத்தைப் போதிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம் மாநிலத்தில் கிராமப்புறங்களில் பயிலும் மாணவர்களுக்கும் நகரங்களில் பயிலும் மாணவர்களுக்கும் இடையே அறிவுத் திறனில் மிகுந்த வித்தியாசம் காணப்படுகிறது. கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் ஒரே மாதிரியான கல்வி கிடைக்கும்படி அரசு ஆவன செய்ய வேண்டும்.

எல்லா மாவட்டங்களிலும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ். கோச்சிங் சென்டர்ஸ் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் M.B.A., Bakery Training Course, Catering Technology, Correspondence Course போன்ற புதிய கோர்சுகளை ஆரம்பித்து, Central University-ஆக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடியில் கல்வித் தொண்டாற்றி இன்றும், என்றும் மாணவ, மாணவியர்களின் நெஞ்சங்களில் அணையா விளக்காய் வாழ்ந்துகொண்டிருக்கும் வள்ளல் அழகப்ப செட்டியாரின் வாழ்க்கை வரலாற்றை தமிழ்நாடு அரசு பள்ளி மாணவர்களின் பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

காரைக்குடியில் ஒரு பெரிய விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தொழில் நுட்பக் கல்லூரி பெண்களுக்கென அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையில் உரையாற்ற வாய்ப்புப் பெற்றமைக்குத் தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு அஸ்திவாரமாகத் திகழ்வது கல்வியாகும். அதே போல சமூகத்தில் இருக்கிற சாதி, மத வேறுபாடுகளை உடைத்தெறிகிற, களைந்தெறிகிற சக்தியும் கல்விக்கு மட்டுமே உண்டு. தந்தை பெரியார் அவர்கள் கல்வியைப் பற்றி சொல்லுகிறபோது, '' ஒருவனுடைய படிப்பு எந்த நிலையிலே தடைபட்டாலும் அதுவரை அவன் கற்ற கல்வி அவனுக்கு சமுதாயத்தில் ஏதாவது ஒரு பணியைச் செய்கிற சக்தியை கொடுத்திருக்க வேண்டும் ; அதுதான் உண்மையான கல்வி '' என்று சொன்னார். ஆனால் இன்றைக்குத் தரப்படுகிற கல்வி முறை, தொடர்ந்து ஆங்கிலேயர் காலத்திலிருந்து, எந்தப் பாடத் திட்டங்களும், போதனா முறையும் அமுலில் இருந்ததோ, அவைதான் தொடர்ந்து வருகின்றன. சமீப காலத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே ஓரளவிற்கு தொழில் நுட்பக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு மாற்றங்கள், இன்றைக்கு இருக்கிற நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் அன்றைக்குக் கல்வி அமைச்சராக இருந்தபோது ஏற்படுத்தப்பட்டது என்றாலும் கூட தந்தை பெரியார் அவர்கள் சொன்னதைப் போல முழுமையான மாறுதல் கல்வித் துறையிலே ஏற்படவில்லை. பாட முறையிலேயும், பாடத் திட்டங்களிலேயும், பாடம் நடத்துகிற முறையிலேயும் முழுமையான மாறுதல்களைக் கொண்டு வருவதற்கு அரசு கல்வி அறிஞர்களைக் கொண்ட குழுக்களை அமைத்து முழு கவனத்தோடு பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏறக்குறைய 40 இலட்சம் பேர் இன்றைக்கு தமிழக வேலை வாய்ப்பு அலுவலங்களிலே பதிவு செய்து வேலை இல்லாமல் இருக்கிறார்கள். சுமார் ஆண்டுக்கு ஐந்து இலட்சம் பேர் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி ஆகியவற்றில் இருந்து வெளியே வந்து வேலை வாய்ப்பு அலுவலகங்களிலே வேலை தேடி பதிவு செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் முறையாக வேலை வாய்ப்பு கிடைக்காத காரணத்தினால் இன்றைக்கு வெறும் கலைக் கல்லூரி படிப்பு எல்லாம் வெறும் சாதாரண பட்டம் என்பது போல் கேள்விக்குரியாக இருக்கிறது. மீரா என்ற கவிஞர்கூட சொல்லுவார். மூன்றாண்டுகள் படித்து



[திரு. எஸ். திருநாவுக்கரசு]

பட்டம் வாங்கிக் கொண்டு ஒருவன் வீட்டுக்கு வேகமாக ஓடி வந்தான். அவனுடைய தம்பி இன்னுமொரு புறத்திலே வேகமாக ஓடினான். அப்படி ஓடுகிற தம்பியை அண்ணன் தடுத்து நிறுத்தி, நான்தான் பட்டம் வாங்கி வந்திருக்கிறேன், நீ எங்கே ஓடுகிறாய் என்று கேட்டான். தம்பி சொல்லுவான், நீ பட்டம் வாங்கி வந்துவிட்ட காரணத்தால் நான் நூல் வாங்க கடைக்கு ஓடுகிறேன் என்று தம்பி சொல்லுவதாக இருக்கிறது. ஆக கலைக் கல்லூரியில் தரப்படுகிற பட்டங்களை ஒரு கவிஞர் கேலி செய்தார். ஆனால் விளையாட்டாக அந்தக் கருத்தை நாம் எடுத்துக்கொள்ள முடியாத அளவிற்குத்தான் பாட முறைகள், கல்வி முறைகள் அமைந்திருக்கின்றன என்பது சிந்தனைக்குரிய ஒன்றாகும்.

கல்வியைப் பொறுத்த வரையில் இந்தியாவிலேயே கேரளா முன்னணியில் இருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம், கேரளாவிலே மொத்த ஆண்டு வருமானத்தில் ஏறத்தாழ 34 சதவீதம் கல்விக்காக மட்டுமே ஒதுக்கப்படுகிறது. அப்படி ஒதுக்கப்படுகிற காரணத்தால்தான் கேரளா இந்தியாவிலேயே முதல் இடத்திலே இருக்க முடிகிறது.

பிற்பகல் 12-15

தமிழ்நாட்டிலே பார்த்தால் சென்ற 1991-92ஆம் ஆண்டிலே ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு ஏறக்குறைய ரூ. 1,299 அல்லது ரூ. 1,300 கோடி. 1992-93ஆம் ஆண்டிலே ரூ. 1,518 கோடி. இது கணக்கு ரீதியாகப் பார்த்தால் ரூ. 218 கோடி அதிகம். என்றாலும் கூட சென்ற ஆண்டு வருமானம் இந்தஆண்டு வருமானம் அந்த வருமான அடிப்படையிலே அந்த ஒதுக்கீட்டை நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால் ஏறக்குறைய 48 கோடி ரூபாய் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு கல்வித்துறைக்குக் குறைவாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. சென்ற ஆண்டு அரசாங்கத்தினுடைய வருமானம் 5,347 கோடி. அப்போது ஒதுக்கியது 1,299 கோடி. இந்த ஆண்டு அரசாங்கத்தினுடைய வருமானம்—நான் சொல்வது பட்ஜெட் எஸ்டிமேட் ; சென்ற ஆண்டு பட்ஜெட் எஸ்டிமேட்டை வைத்துத்தான் சொல்கிறேன் ; பட்ஜெட் எஸ்டிமேட்டை வைத்து கல்வித் துறைக்காக ஒதுக்கிய தொகையைச் சொல்கிறேன்—இந்த ஆண்டு பட்ஜெட் எஸ்டிமேட்டை வைத்து கல்வித் துறைக்காக ஒதுக்கி இருக்கிற பணம் 1,518 கோடி ; இந்த ஆண்டு பட்ஜெட் ஏஸ்டிமேட் 6,446 கோடி, நியாயமாக எவ்வளவு ஒதுக்கி இருக்க வேண்டுமென்று சொன்னால் ஏறக்குறைய 47 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கி இருக்க வேண்டும். ஆக மொத்தத்திலே கல்வித்துறைக்கு சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு ஏறக்குறைய 50 கோடி ரூபாய் குறைவாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்த அணுகுமுறை சரியான அணுகுமுறை அல்ல ; இது கல்வித்துறையினுடைய வளர்ச்சிக்குப் பயன்படாது என்று நான் முதலிலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மொத்தத்திலே பட்ஜெட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது 21 சதவீதம், இந்த ஆண்டு ஒதுக்கீடு, டோட்டல் பட்ஜெட்டிலே இது, ஆல் இந்தியா ஆவெரேஜைப் பார்த்தால் 23.8 சதவீதம், அல்லது ஏறக்குறைய 24 சதவீதம். மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது ஆல் இந்தியா ஆவெரேஜோடு ஒப்பிட்டால் 21 சதவீதம். இதுவே புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே. . .

திரு. வி. கே. லட்சுமணன் : துணைத் தலைவர் அவர்களே, பாய்ன்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன் : உறுப்பினர் அவர்கள் சொல்வது இந்த ஆண்டுக்குக் கொடுக்கப்பட்ட புள்ளி விவரம் அல்ல ; அது 1986-87-ல் கொடுக்கப்பட்ட விவரம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய கையிலே கொடுக்கப்பட்ட கொள்கைக் குறிப்பிலே கூட கல்வித் துறை என்ன சொல்லி இருக்கிறது என்றால்; 1986-87-ல் தேசிய சராசரி 23.8 சதவீதம் ; ஆனால் தமிழகத்தினுடைய சதவீதம் 27 என்று தரப்பட்டு இருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் அதுபற்றி நான் பேசவே இல்லை ; இனி மேல்தான் பேச இருக்கிறேன் ; அதைத்தான் சொல்ல வந்தேன். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்தில் 1986-87-ல் ஏறக்குறைய 27 சதவீதம் ஒதுக்கப்பட்டு இருந்தது. நேஷனல் ஆவெரேஜ் அப்போது பார்த்தால் 23.8 சதவீதம். நேஷனல் ஆவெரேஜை விட அதிகமாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் 1986-87-ல் 27 சதவீதம் ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆனால் இன்றைக்கும் நேஷனல் ஆவெரேஜ் 23 சொச்ச சதவீதமாகத்தான் இருக்கிறது. அப்படி இருக்கின்ற போது இன்றைக்கு ஒதுக்கப்பட்டு இருப்பது, இந்த பட்ஜெட் டோடு ஒப்பிடுகிறபோது 21 சதவீதம்தான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, நேஷனல் ஆவெரேஜை விடவும் இது குறைவாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது ; புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்டதை விட குறைவாக ஒதுக்கப் பட்டு இருக்கிறது ; சென்ற ஆண்டு பட்ஜெட் கணக்குப்படிப்



பார்த்தாலும் ஏறக்குறைய 48 கோடி குறைவாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது, இதை நான் ஒரு பெரிய குறையாகச் சொல்லவில்லை. ஆனால் பட்ஜெட் அலாட்மென்ட் செய்கிறபோது ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்குகிறபோது, எந்த துறைக்கு அதிகரிக்க வேண்டும், எந்தத் துறைக்கு குறைக்க வேண்டும் என்பதை கவனித்திலே கொண்டு அதிகாரிகள் யோசிக்க வேண்டும். சென்ற ஆண்டினுடைய வருமானத்தையும் ஒதுக்கீட்டையும், இந்த ஆண்டினுடைய வருமானத்தையும் ஒதுக்கீட்டையும் ஒப்பிட்டு ஒதுக்கீடுகளை வருகிற ஆண்டிலேயாவது செய்ய வேண்டும் என்பதை சுட்டிக்காட்டத்தான் இதை நான் சொன்னேன் இதிலே கல்வி அமைச்சர் அவர்களுடைய குறைபாடு ஒன்றும் கிடையாது. அதிகாரிகள் இங்கே உட்கார்ந்து ஒவ்வொரு டிமாண்டிலேயும் எவ்வளவு ஏவ்வளவு தொகை ஒதுக்க வேண்டும் என்று வருகிறபோது இந்தத் துறைக்கு குறைவாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அது தவறு என்பதைச் சுட்டிக்காட்டத் தான் இதை நான் இங்கே குறிப்பிட்டேன்.

அதேபோல் தொடக்கக கல்வியைப் பொறுத்தவரை டைரக்டிவ் பிரின்சிபிள்ஸ், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஏறக்குறைய 14 வயது வரை கட்டாயக் கல்வி தர வேண்டும் என்று டைரக்ஷன் இருக்கிறது. ஆனால் உண்மையிலேயே நடை முறையில் அது பின்டற்றப்படுவதில்லை. 14 வயது வரை எல்லாக் குழந்தைகளும் கிராமங்கிளிலே பள்ளிகளுக்கு அனுப்பப்படுகிறார் களா. கட்டாயக் கல்வி கற்கிறார்களா என்று கேட்டால், அந்த நிலை உண்மையிலேயே கிராமப்புரங்களிலே இல்லை. காரணம், வறுமை மற்றும் பல்வேறு காரணங்கள். எனவே நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் நான் கேட்டுக் கொள்வது 14 வயது வரை கூட அல்ல, குறைந்தது 10 ஆம் வகுப்பு வரையாவது கட்டாயக் கல்வி கொண்டுவரப்பட வேண்டும். எல்லோரும் படிக்கிற அந்தச் சூழ்நிலை உருவாக வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதிலே மொத்தக் கணக்குப்படி பார்த் தால் ஆரம்பப்பள்ளிகளில் ஏறக்குறைய மொத்தம் படிப்பவர்கள் ஒரு கோடியே 28 இலட்சம். 30 இலட்சம் பேர்கள் படிக்கி றார்கள். அதிலே சுமார் 57 இலட்சம் பேர்களுக்கு குறையாமல் பெண்கள் படிக்கின்றார்கள் ஆரம்பப் பள்ளிகளில். இதிலே ட்ராப்—அவுட்ஸ்—இடையில் 5 ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு வரை, ஆரம்பப் பள்ளிகளிலிருந்து நடுநிலைப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளிலிருந்து உயர்நிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து மேல்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளி களிலிருந்து கல்லூரிகள்—இப்படிப் போகிறபோது இதிலே மிகப் பெரிய அளவில் ட்ராப் அவுட்ஸ் இருக்கிறது. பலபேர் படிக்காமல் நின்று போகிறார்கள். அதை அரசு கவனத்தில் எடுத்து ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1992 ஏப்ரல் 2

பிற்பகல் 12–20

ஒன்று முதல் ஐந்து வரை வகுப்புகளில் மாணவர்களை விட மாணவிகள் அதிகமாக நின்று போய் விடுகிறார்கள். இதைப் போல நடுநிலைப் பள்ளிகளில் ஏறக்குறைய பாதி அளவுக்கு 46, 47 சதவீத அளவுக்கு ஆரம்பப்பள்ளிகளிலிருந்து நடுநிலைபள்ளிகளுக்கு வருகிற அளவிலே நின்று விடுகிறார்கள். அதற்கு பல்வேறு விதமான காரணங்கள் உண்டு. எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போல ஆரம்பப்பள்ளிகளிலிருந்து நடுநிலைப்பள்ளிகளுக்கு போகிறபோது, நடுநிலைப் பள்ளிகளுடைய எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும்.

ஆரம்பப் பள்ளிகளில ஒரு பள்ளிக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை மாற வேண்டும். ஏனென்றால் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையில் ஒரே ஆசிரியர். ஒரு வகுப்புக்கு 40 பேர். ஒரு பள்ளிக்கு 200 பேர். ஒரு ஆசிரியர் காலையிலிருந்து மாலை வரையில் செல்லிக் கொடுத்து, அரசாங்க பள்ளிகளுடைய தரத்தை உயர்த்த முடியாது. ஆகவே, குறைந்தபட்சம் ஒரு ஆரம்பப் பள்ளிக்கு இரண்டு ஆசிரியர்கள் என்ற நிலையிலாவது ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் (மணியடிக்கப் பெற்றது.) இப்போதுதான் பேச ஆரம்பித்தேன்.

ண்புமிகு போவைத் துணைத் தலைவர் : 11 நிமிடங்கள் முடிந்து விட்டன.

திரு, எஸ். திருநாவுக்கரசு : வேகமாக2 சொல்லி விடுகிறேன். இதிலிருந்து பார்த்தால் அரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து கல்லூரிக்குப் போவது எவ்வளவு என்று பார்த்தால் மொத்தம் 15 சதவீதம். ஆரம்பப் பள்ளிகளிலிருந்து உயர்நிலை கல்விக்கு 65 சதவீதம் தான் போகிறார்கள். அந்த 65 சதவீதத்தில் 15 சதவீதம் தான் கல்லூரி அளவுக்கு போய்ச் சேருகிறார்கள். எனவே தான் ஆரம்பப் பள்ளிகளுடைய எண்ணிக்கை ஒரு கோடி 20 லட்சமாக இருக்கிற எண்ணிக்கை, கல்லூரிக்கு வருகிறபோது 2 லட்சமாக குறைந்து விடுகிறது. எனவே படிப்பவர்களுடைய எண்ணிக்கை பல்வேறு மட்டங்களில் தடைபட்டு விடுகிறது. புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய காலத்தில் சத்துணவுத் திட்டம், இலவசமாக காலணிகள் வழங்குவது, இலவசமாகப் பாட புத்தகங்சள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள் கொடுப்பது என்று பல்வேறு திட்டங்களை அறிவித்த காரணத்தால் ஓரளவுக்கு கடந்த காலத்தில் நம்முடைய மாண்புமிகு இன்றைய கல்வி அமைச்சர்



1992 ஏப்ரல் 2] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அன்றைக்கும் கல்வி அலமச்சராக இருந்தபோது எண்ணிக்கை கணிசமாக ஆரம்பப்பள்ளி அளவில் உயர்ந்திருக்கிறது என்பது உண்மை தான். ஆனால் இது போகப் போக குறைந்து விடுகிறது. அப்படி குறையாமல், தொடர்ந்து கல்வி கிடைக்கிற வகையில் அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கோளகிறேன்.

அதேபோல கல்லூரிகள், டெக்னிக்கல் எஜிகேஷன் சம்பந்தப்பட்ட பி.ஈ., அல்லது பாலிடெக்னிக் கல்லூரிகள் இவற்றையெல்லாம் பார்த்தால் மொத்தம் 39 என்ஜினியரிங் காலேஜ்ஸ் என்றால் அதிலே செல்ப் பைனான்சிங் 30 காலேஜஸ் இருக்கின்றன. அதிலே பாலிடெக்னிக் என்று எடுத்துக்கொண்டால் 132 பாலிடெக்னிக்ஸ் தமிழ்நாடு முழுவதும் இருந்தால், அதிலே 73 பிரைவேட் பைனான்சிங் காலேஜ்ஸ்ஸாக இருக்கின்றன. நான் இதைக் குறிப்பிடக் காரணம் சுயநிதிக் கல்லூரிகளை தமிழ்நாட்டில் ஆரம்பிப்பது தேவையான ஒன்று தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வேண்டுமென்று தான் அதற்கு அனுமதி அளித்தார்கள். இது தேவையும் கூட. இங்கேயிருந்து பலபேர் வாய்ப்பு கிடைக்காதவர்கள் வேறு மாநிலங்களில் இதுபோன்ற செல்ப் பைனான்சிங் நடக்கிற காரணத்தால் அங்கே பணம் கொடுத்து சேர்ந்து கொண்டிருந்தார்கள். குறைந்தபட்சம் இந்தப் பணம் தமிழ்நாட்டில் புழக்கத்தில் இருக்கும் என்பது உண்மை தான். ஆனால் அதேநேரத்தில் அதற்கு ஒரு வரம்பு இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. அமௌண்ட்டைப் பார்த்தால் எம்.பி.பி.எஸ்., என்றால் 6 லட்சம் ரூபாய், பி.ஈ., கம்ப்யூட்டர் கோர்ஸ் என்றால் 1½ லட்சம், 2 லட்சம், ரூபாய் என்று போகிறபோது அதுவும் பி. ஈ. பாலிடெக்னிக் இது போன்று தொழில் கல்வியில் பெரும்பான்மையான கல்லூரிகளை தனியாருக்குக் கொடுத்து விட்டு, தனியார்கள் இதிலே பல லட்சு ரூபாய் கொடுத்தால் சேர முடியும் என்றால், இந்த நாட்டிலே இருக்கிற ஏழையெளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆதிதிராவிட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் அந்தக் கல்லூரியில் போய் படிக்க முடியாது பல லட்ச ரூபாய் செலவு செய்யக்கூடிய பணக்காரர்கள் மட்டும் தான் செல்ப் பைனான்சிங் காலேஜில் இடம் பெற முடியும். மற்றும் கவர்மென்ட் காலேஜைப் பொறுத்தவரையில் மார்க் வைத்து மெரிட் பிரகாரம் ஓரளவுக்கு கீழே சேரமுடியாமல் தடுத்து விடுகிறோம். அலலது ஓரளவுக்கு மேலே இருப்பவர்களுக்கு தான் கிடைக்கிறது. இதிலே எள்னுடைய ஆலோசனை என்னவென்றால் பிரைவேட்செல்ப் பைனான்சிங் காலேஜில் 50 சதவீதம் கவர்ன்மெண்ட் போட்டது போக, 50 சதவீதம் அவர்களுக்குக் கொடுத்தால், அதிலே குறைந்த பட்சம் 10 சதவீதம் அல்லது 20 சதவீதமானது கம்பல்சரியாக பின்னாலே வேறு

ளாதார ரீதியாக, சமூக ரீதியாக பின்தங்கியவர்களுக்கு ப்ரீயாக தர வேண்டுமென்று ஏதாவது செய்ய முடியுமா என்று கல்வி யமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். நான் செல்ப்-பைனான்ஸ் காலேஜைப்பற்றிச் சொல் கிறேன். 150 சீட்டுகளை அவர்கள் பில்—அப் பண்ணால், அதிலே 10 பர்சென்டை, 10 சீட்டுக்களையோ, அல்லது 20 சீட்டுக்களையோ குறைந்தபட்சம் பணம் வாங்காமல், எஸ்.சி—க்கோ, எஸ்டி-க்கோ, மோஸ்-பேக்வார்ட் கம்யூனிட் டிக்கோ, அவர்கள் இலவசமாக, பணம் வாங்காமல் தர வேண்டும். அரசாங்கம் அவர்களுக்கு சட்டப்படி உத்தரவு போடமுடியா விட்டாலும் கூட, ஒரு இன்ஸ்ட்ரக்சன் கொடுக்க முடியுமா?

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 50 சதவீத இடங்களுக்கு அரசாங்கமே தேர்ந்தெடுத்து அனுப்புகிறது. அவர்களிடத்திலே, கேப்பிடேசன் பீஸ் வாங்குவதில்லை. அப்படி வாங்குவதாகப் புகார்கள் வருகிறபோது, நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரியும். 50 சதவீதத்திற்கு நீங்கள் அனுப்புகுறபோது, மெரிட் பிரகாரம் அனுப்புகிறீர்கள், கவர்ன்மெண்ட் காலேஜிலே போடுகிறீர்கள். அங்கே இடமில்லை என்றகிறபோது, பிரைவேட், செல்ப்-பைனான்ஸ் காலேஜிக்கு போடுகிறீர்கள். அது, according to the Merits according to the marks அடிப்படையில்தான் கிடைக்க முடியும், ஆனால் செல்ப்—பைனான்ஸ் காலேஜிலே என்ன செய்கிறார்கள் என்றால், according to Mcrit, according to Marks சேர்ப்பதில்லை. யாரை வேண்டுமானாலும் சேர்க்கலாம். எலிஜிபிலிட்டி இருந்தால் போதும், 60 சதவீதம் இருந்தால் போதும், என்று சொன்னால், 60 சதவீதம் மார்க் இருந்தாலே, அவர்கள் 150 பேர்களை பில்—அப் பண்ணிவிடலாம் They do not admit standard according to Mcrit or according to the marks அப்படிச் சேர்ப்பதில்லை. அவர்களுக்கு சுயமாக அனுமதி கொடுத்து விடுகிறோம். 150 பேர்களையும் வெறும் 60 பர்சென்ட் மார்க் எடுத்தவர்களைக்கூட சேர்த்துக்கொள்ள முடியும், மார்க் தேவையில்லை, அவர்



களுக்கு, செல்ப்—பைனான்சுக்கு, ஆனால் நீங்கள் அட்மிட் பண்ணு வது எப்படி என்றால், மார்க் பிரகாரம் மெரிட் உள்ளவர்களுக்குத் தான் அனுப்புகிறீர்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், அந்த மார்க்குக்கு கீழே இருப்பவர்களுக்கு, தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் அவர்கள் பணம் கட்டி சேருகிறார்கள். பணம் கட்டி யார் சேரமுடியும். லட்சக்கணக்கில் பணத்தைக் கட்டி யாராவது ஒரு ஆதிதிராவிட குடும்பத்தைச் சேர்ந்தவன் போய்ச் சேர முடியுமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிகவும் தவ றான ஒரு கருத்தைச் சொல்வது போல எனக்குப் படுகிற கார ணத்தாலே நான் குறுக்கிட வேண்டியதாக இருக்கிறது. பணமும் நான் தரமாட்டேன். நன்றாகப் படித்து நான் மார்க்கும் வாங்க மாட்டேன், எனக்கு நீங்கள் இடம் தர வேண்டும் என்று கேட்பது போல இருக்கிறது. இது அவ்வளவு சரியாகப்படவில்லை. இந்த 50 சதவீதம் அரசு தேர்ந்தெடுக்கிற கோட்டாவில்— எம்.பி.சி., பி.சி., எஸ்.சி. என்று இட ஒதுக்கீடு வைத்துத்தான் தந்துகொண்டிருக்கிறோம். மீதி 50 சதவீத இடங்களை நாம் மேனேஜ்மெண்டுக்குத் தருவதற்குக் காரணம், முழுச்செலவையும் அவர்களே ஏற்றுக்கொண்டு நடத்துகிற காரணத்தால், அந்தச் செலவுக்கு பணம் தரக்கூடியவர்களிடத்திலே, பணத்தை வாங்கிக் கொள்கிறார்கள். அந்தமுறையிலே அந்த மீதி 50 பர்செண்டுக்கு அரசாங்கத்தின் சார்பிலே அனுப்பப்படுகிற 50 சதவீதம் பேருக்கும் சேர்த்து அவர்கள் கல்வி தரவேண்டிய ஒரு நிலையில் இருக்கிற காரணத்தால் அவர்களுக்குத் தரப்பட்ட 50 சதவீதத்திலே அவர்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டிருக் கிறார்கள். ஆனால் ஒன்றை இப்போது நான் கூற விரும்புகிறேன். செல்ப்—பைனான்சிங், இந்த முறை சரியில்லை என்பதை அகில இந்திய அளவிலே பேசிக் கொண்டிருக்கிற காரணத்தால், அவர்கள் என்ன திட்டம் கொண்டுவர இருக்கிறார்கள் என்றால். இந்த காலேஜை நடத்துவதற்கு என்ன செலவு ஆகிறதோ, அதை அனைத்து மாணவர்களும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று ஒரு திட்டத்தை மத்தியிலே பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அது வரும்போது, அதனுடைய சாதகப் பாதகங்களைப் பார்த்து நாம் இந்த முறைகளிலே மாற்றம் செய்து கொள்ளலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கல்வித்துறையிலே நீண்ட அனுபவம் உள்ளவர் நம்முடைய மாண்புமிகு அமைச்சர். நான் அவரை ஒன்றும் குறை சொல்லவில்லை அரசாங்கத்தையும் குறையாகச் சொல்லவில்லை. நான் சொல்வது ஒரு யோசனை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்தான்

மாற்றிச் சொல்கிறார்கள். நான் சொன்னது, படிக்காத குற்றத்தை இரண்டு பேருமே செய்கிறார்கள். வசதி உள்ள வீட்டுப் பிள்ளையும் செய்கிறான், வசதி இல்லாத வீட்டுப் பிள்ளையும் செய்கிறான். ஆனால் அவர்களுடைய முன்னோர்கள் செய்த புண்ணியத்தினாலே, பணக்காரர்களுடைய வீட்டுப் பிள்ளைகளுக்கு ஒரு லட்சம் ரூபாயில் இடம் கிடைக்கிறது. பணம் இல்லாதவக்களுக்கு இடம் கிடைக்கவில்லை, இதைத்தான் நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள் என்று எடுத்துக் கொண்டால், கூட, அதிலேயும் படித்தவர்கள் இருக்கிறார்கள். நம்முடைய மேல் நிலைக் கல்வி வந்ததற்குப் பிறகுதான், தாழ்த்தப்பட்டவர்கள் இந்த ஓப்பன் காம்படிசனிலே ஒரு சதவீதம், இரண்டு சதவீதம் இடம் பெறக்கூடிய அளவிற்கு உயர்ந்து இருக்கிறார்கள். இதற்கு முன்னாலே, ஒரு சதவீதம் குறைவாகத்தான் வாங்கிக் கொண்டிருந்தார்கள். 18-க்கு 17 சதவீதம் கூட நிரப்பப்படாமல் இருந்தது. ஆனால், மேல் நிலைக் கல்வியை தாய்மொழியிலே கொண்டு வந்ததற்குப் பிறகு, இப்போது 18-க்கும் மேலே, 19, 20 சதவீதம் என்று சொல்கிற அளவிற்கு அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், மார்க் வாங்காதவர்களுக்குத் தர வேண்டும் என்று சொன்னால், ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சில பேர்களுக்கு தர்மமாகத் தர வேண்டும் என்று கூறுவதாக தான் எனக்குப்படுகிறது. அப்படி என்றால், அது மேனேஜ்மெண்டினுடைய நல்ல உள்ளத்தைப் பொறுத்து' அதைச் செய்து கொள்ளலாம்.

திரு, எஸ். திருநாவுக்கரசு : நான் அதைத்தான் சொல்கிறேன். தர்மமாகத்தான் கொடுங்கள் என்று சொல்கிறேன். அதிலே தப்பு இல்லையே, நான் சொல்வதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் புரிந்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன், அவர்களுக்குப் புரியும். அவர் சைட்—டிராக்கிற்காக ஏதோ சொல்கிறார்கள், மாற்றி மாற்றி, அவருக்குப் புரியாதது அல்ல. நான் சொல்வது என்னவென்றால், ஒரு ஆதி திராவிட குடும்பம், 60 மார்க் வாங்கின பையன், எலிஜிபிலிட்டி உள்ள மார்க். அதேமாதிரி இன்னொரு பையன், பணக்காரப் வீட்டுப் பையன், அதே 60 மார்க் வாங்கினவன், இந்த பணக்கார வீட்டு மகனுக்கு, 60 மார்க் வாங்கினவனுக்கு பணம் இருக்கிற காரணத்தாலே, அட்மிஷன் கிடைக்கிறது. ஆனால், அந்த ஏழை மாணவனுக்கு 60 பர்சென்ட் மார்க் வாங்கியவனுக்கு, பணம் இல்லாத காரணத்தாலே



அட்மிஷன் கிடைக்காது. அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். திருப்பித் திருப்பி, 50 சதவீதத்தை, ஒதுக்குகிறீர்களே, அதிலே 10 பர்செண்டை கம்பல்சரியாக அவர்களுக்கு கொடுக்கச் சொல்லுங்களேன். எஸ். சி-க்குத் கொடுக்கச் சொல்லுங்கள்- அதனால் நான் என்ன கேட்கிறேன் என்றால், பணம் இல்லாதவர்களுக்கு பொருதாரத்திலே நலிவுற்றவர்களுக்கு ஏழைகளுக்கு, 10 சதவீதத்தை, ஒரு செல்ப் பைனான்ஸ் காலேஜிலே பிரைவேட்டாக, பெர்சனலாக அட்மிட் பண்ணவேண்டும் என்று நீங்கள் ஏன் இன்ஸ்ட்ரக்சன் கொடுக்கக்கூடாது என்று தான் நான் கேட்கிறேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதிலே என்னால் புரிந்துக் கொள்ள முடிந்தது ஒன்று தான். இந்த பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மறறும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு வைத்திருக்கும் குறைந்த பட்ச மார்க்கை குறைத்தால் அந்த மாணவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மாணவர்களைப்போல இடம் கிடைக்கின்ற வாய்ப்பு கிடைக்கலாம் அல்லது ஒரு சில பேருக்காவது கிடைக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவது போல் நினைக்கிறேன். அந்த மார்க் குறைக்கும் விஷயத்திலே அரசு பரிசீலனை செய்வதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : அது வேறு சிந்தனை. மார்க்கை குறைத்து அவர்களுக்கு ஒரு ஏற்பாடு செய்வது அல்லது வாய்ப்பு அதிகமாக தருவது என்பது வேறு விதமான சிந்தனை. நான் என்ன சொல்லுகிறேன் என்றால் பொருளாதார ரீதியிலே அட்மிஷன் கொடுக்கிறபோது மாணவர்களை அக்கார்டிங் டூ மெரிட்ஸ் என்று மார்க் பிரகாரம் சேர்ப்பது இல்லையே, 65 மார்க் பெற்றவர்களை விட 60 மார்க் பெற்றவர்களுக்குக் கொடுக்சிறார்கள். கம்பல்சரியாக, ஸ்டிரிக்டாக அக்கார்டிங் டூ மெரிட்ஸ் அவர்கள் சேர்ப்பது கிடையாது. அதனால் நான் என்ன சொல்கிறேன், என்றால் மார்க் வித்தியாசம் பார்க்காமல் பணம் பார்த்து சேர்க்கிறபோது அதிலே ஏழைகளுக்கு தார்மீகமாக 10 சதவீதம் வையுங்கள். இதை ஒரு ஆலோசனையாகத்தான் நான் சொல்லிக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு ; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுக் கொண்டேயிருந்தால் அதற்கு நான் என்ன செய்வது. அதேபோல நார்ம்ஸ் பிரகாரம் பார்த்தால் ஆறு கிலோ மீட்டருக்கு ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் 848 இடங்களில் தமிழ்நாட்டிலே இன்னமும் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. அதேபோல நார்ம்ஸ் பிரகாரம் 8 கிலோ மீட்டருக்கு ஒரு மேல்நிலைப் பள்ளி இருக்க வேண்டும், அப்படிப் பார்த்தால் ஏறக்குறைப 550 பள்ளிகள் இன்னும் தமிழ்நாட்டிலே ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது, ஆனால் இந்த வருஷம் எவ்வளவு ஆரம்பிக்கிறோம் என்றால் 10—20 பள்ளிகளைத்தான் ஆரம்பிக்கிறோம். இதிலேயும் அரசு கவனம் செலுத்த வேண்டும். இரண்டாவது மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை 2,500 ஸ்கூல்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு அதற்கு மராமத்து செய்வதற்காக ஒதுக்கி இருக்கிற தொகை ஆறு லட்சம் ரூபாய். அது போதவே போதாது (மணியடிக்கப் பெற்றது).

அதற்கு அடுத்து ஆசிரியர்கள் போராட்டங்கள், மாணவர்கள் போராட்டங்கள் இவையெல்லாம் ஆறப்போடாமல் உடனடியாக அனுபவம் மிக்க கல்வி அமைச்சர் அவர்கள் அவர்களை அழைத்துப் பேசி உடனடியாக அவர்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் ஆசிரியர்களுடைய நலம் மிக முக்கியமானது. போலிசுக்கு எப்படி ஒரு ஹவுசிங் கார்ப்பரேஷன் இருக்கிறதோ, அதே மாதிரி ஒவ்வொரு டிபார்ட்மென்டிற்கும் எப்படி ஹவுசிங் கார்ப்பரேஷன் தனித் தனியாக இருக்கிறதோ அதேபோல ஆசிரியர்களுக்கும் டீச்சர்ஸ் ஹவுசிங் கார்ப்பொரேஷன் என்று சொல்லி ஒரு கார்ப்பொரேஷன் ஆரம்பிக்கலாம். அப்படி ஆரம்பிப்பீர்கள் என்று சொன்னால் மைய அரசின் பண்ட் உங்களுக்குக் கிடைக்கும். அதை இந்த அரசு பரிசீலிக்க வேண்டும். ஆகவே, ஆசிரியர்களுக்கு தனியாக ஒரு வீடு கட்டும் கழகம்ஆரம்பிக்க வேண்டுமென்றும் அதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்றும் நான் கேட்டு கொள்கிறேன்.

அடுத்து அறிவொளி இயக்கம் என்று ஒன்று இருக்கிறது. 15 கோடி இந்த ஆண்டு அதற்கு செலவு என்று போட்டிருக்கிறார்கள், டிஸ்டிரிக்டிலே இரண்டு கோடி செலவு செய்கிறார்கள். இது முழுக்க முழுக்க கிரிமினல்வேஸ்ட், நேஷனல் வேஸ்ட் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கையெழுத்து போடக் கற்றுக் கொடுப்பதாகச் சொல்லி பெரும்பாலும் கலெக்டர்கள் நடந்து போகிற மாதிரி பெரிய பெரிய போஸ்டர்கள் போட்டு விளம்பரம் போட்டு ஒரு மாவட்டத்திற்கு இரண்டு கோடி ரூபாய் அலாட் ஆகியிருக்கிறது என்று சொன்னால் அதிலே ஒன்னே முக்கால் கோடி வெறும் விளம்பரத்திற்கே போகிறது, அதில் அவர்கள், எம். எல். ஏ.க்களைக் கூட கூப்பிடுவது கிடையாது, எம். எல். ஏ.க்கள் மட்டுமல்ல எம். பி.க்களையோ, அமைச்சர்களையோ கூட அவர்கள் அழைப்பது கிடையாது. இது வெறும் அநாவசிய செலவாகப் போகிறது. இந்தப் பணத்தை ஆரம்பக் கல்விக்கு செலவு செய்தாலும் பரவாயில்லை. (மணியடிக்கப் பெற்றது.)



ஒரே ஒரு நிமிஷம். அதற்கு அடுத்து கிறிஸ்துவ சமயத்தை சேர்ந்த பெருமக்கள் சில பள்ளிகளிலே இருக்கும் பிரச்சினைகளைப் பற்றி ஏற்கனவே ஊர்வலம் போனார்கள். உண்ணாவிரதம் இருந்தார்கள். அமைச்சர் அவர்கள் கூட அவர்களைக் கூப்பிட்டு பேசினார். ஆனால் அது இன்னும் தீர்க்கப் படவில்லை என்பது மனக்கவலையாக இருக்கிறது. ஆசிரியர்களை நிரந்தரம் செய்தல், கூடுதல் சம்பளம் கொடுத்தல் போன்ற பிரச்சனைகளில் அரசு உடனடியாக தலையிட வேண்டும் என்றுகேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ்., ஐ. ஆர். எஸ்., ஐ.எப்.எஸ். போன்ற ஆல் இந்தியா சர்வீஸ்களுக்கு எல்லாம் தமிழ்நாட்டிலே ஷெட்யூல்டு கேஸ்ட் என்று இருப்பவர்களுக்கு கிடைக்கும் ரிசர்வேஷன்தான் கிடைக்கிறதே தவிர நம்முடைய கோட்டா முழுவதுமாக கிடைப்பது இல்லை. அதற்குத் தனியாக ஒரு குழுவையாவது வைத்து ஆராய்ந்து ஏன் குறைகிறது, என்ன காரணம் என்று ஆய்வு செய்து, ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். கிடைப்பதற்த—அதிகமாகக் கிடைப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், (மணியடிக்கப் பெற்றது—குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம் ஒரு பொதுப் பிரச்சினை, தமிழ்நாடு மனநோய் ஆசிரியர் சங்கம் என்று சொல்லி பயிற்சி பெற்றவர்கள் 2 ஆயிரம் பேர்களுக்கு முதலிலே வேலை கொடுத்து பிறகு அவர்களை நீக்கியிருக்கிறார்கள், சேலத்திலே பயிற்சி பெற்றவர்கள். அந்த 2 ஆயிரம் பேர்களும் இப்போது வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி அரசு மிகவும் அனுசரணையோடு, பரிவோடு கவனிக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. அ. தேவராஜ்.

பிற்பகல் 12-35

திரு. அ. தேவராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த கல்வி மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசின் வருமானத்தில் நான்கில் ஒரு பங்கை கல்விக்காக ஒதுக்கிய புரட்சித் தலைவி அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன். நாட்டில் அராஜகமும், அலங்கோலங்களும் தலைவிரித்து ஆடும்போது கடவுள் பல்வேறு அவதாரங்களில் தோன்றி, அவ்வராஜகத்தையும் அலங்கோலங்களையும் அழித்து தர்மத்தை நிலைநாட்டுகின்ற வகையில் நாட்டில் நடப்பதாகப் புராணங்கள் தெரிவிக்கின்றன.

அதேபோன்று தி.மு.க.ஆட்சியில் அக்கிரமும் அநியாயமும் நடந்து மக்கள் அவதிப்பட்டதால் ஆண்டவன் புரட்சித் தலைவி உருவத்திலே வந்து தர்மத்தை நிலைநாட்டினார் என்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கின்றோம். தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு, ஏழை எளியோர் பயன்பெறும் வகையிலும் வாழ்க்கையில் அவர்கள் முன்னேற வேண்டுமென்ற கொள்கையினை ஏற்று செயல்படுத்துகின்ற அவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்து பெருமை ஏற்படுத்திக் கொண்ட பல்கலைக் கழகம்தான் சென்னைப் பல்கலைக் கழகம் ஆகும்.

அந்த சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற சிண்டிகேட் தேர்தலில் இதுவரையில் அண்ணா தி.மு.க.வினர் பங்கு ஏற்காத நிலையில், என்னை வேட்பாளராக நிறுத்தி வெற்றி பெறச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதே நேரத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை ஆதரிக்கின்ற வகையிலும், அவர்களின் தலைமையை ஏற்றுக் கொள்கின்ற வகையிலும், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் ஆகியோர் ஓட்டு மொத்தமாக எங்களை வெற்றி பெறச் செய்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அந்த சென்னைப் பல்கலைக் கழகம், தமிழகத்திலுள்ள 14 பல்கலைக் கழகங்களுக்கும் தாய்ப் பல்கலைக் கழகமாக இன்று விளங்கிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமன்றி ஆங்கி



லேயர்களால் ஏற்படுத்தப்பட்ட மூன்று பல்கலைக் கழகங்களில் முதன்மையான பல்கலைக் கழகம் சென்னைப் பல்கலைக் கழகம் ஆகும். ஆனால் அந்தப் பல்கலைக் கழகத்தின் அடித்தளமாக உள்ள பேராசியர்களுக்கு சிண்டிகேட்டில் பங்கு பெற உரிமையில்லை. இதுபோலவே மதுரை பல்கலைக் கழக பேராசியர்களுக்கும் சிண்டிகேட்டில் பங்குபெற உரிமையில்லை. சென்னை பல்கலைக் கழகத்தின் குழந்தைகளான மற்ற பல்கலைக் கழகங்களில் பேராசிரியர்கள் சிண்டிகேட்டில் பங்கு ஏற்க வாய்ப்பு இருக்கும்போது இந்தப் பல்கலைக் கழகத்தில் இந்த உரிமை இல்லாமல் இருப்பதை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி, தமிழக முதல்வர் அவர்களை இந்த உரிமை கிடைக்க ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் ஆசிரியர்களும் சிண்டிகேட்டில் இடம் பெறுவதற்கு ஏதுவாக சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள தடையை நீக்கி சிண்டிகேட்டில் பல்கலைக் கழகப் போராசியர்கள் பிரதிநிதித்துவம் பெற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உதவிட வேண்டுகின்றேன்.

மேலும் தமிழ்நாடு கல்லூரிகளில் ஆசிரியர்களின் பணிவரன் முறையை நிர்ணயிப்பதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் தன் அறிக்கையை சமர்ப்பித்து இருக்கவேண்டும். ஆனால் இதுவரையில் அவ்வறிக்கை அரசுக்குக் கிடைக்கவில்லை, இதன் விளைவாக பல கல்லூரிகளில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாமல் பல இடங்கள் காலியாக உள்ளன. குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், எனது தொகுதியைச் சார்ந்த செய்யாறு அரசினர் கலைக் கல்லூரியில் கூட 17 இடங்கள் காலியாக உள்ளன. இதை மாண்புமிகு புரட்சித் தலைவியின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பணிவரன் முறைக் குழுவின் அறிக்கையைப் பெற்று கல்லூரிகளில் ஆசிரியர்களை நியமனம் செய்ய ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

மேலும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை வகுப்புவாரி விகிதாச்சாரப்படி தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும், மிகவும் பிற்படுத்தபட்ட மாணவர்களுக்கும் நியாயம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை நாடு அறியும். நல்லோர் அறிவர். ஆனால் ஒரு சில கட்சியைச் சேர்ந்தவர்கள் மாணவர்கள் தேர்வை சந்திக்கின்ற நேரத்தில் கல்லூரி அமைதியைக் கெடுக்கும் வகையில் கல்லூரியின் முன்னே தேவையற்ற போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். இதை அவர்கள் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் தி.மு.க. வினர் ஒரு அதிகாரியின் துணையோடு பல் வேறு ஊழல்கள் புரிந்துள்ளதாக சென்னைப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கமும், ஆசிரியர் அல்லாத சங்கமும் முறையிட்டு இருக்கின்றார்கள். அவர்களின் குறைகளை பல்கலைக் கழகத்தில் களைந்திட எங்கள் முயற்சிகளுக்கு ஆதரவும் ஆசியும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வழங்குமாறு வேண்டுகிறேன்.

தமிழ் கூறும் நல் உலகம் போற்றும் புரட்சிக்கவி பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் வாரிசுகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 10 இலட்சம் வழங்குவதாக மறைந்த டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். ஆனால் அதனை நிறை வேற்றுவதற்கு முன்பாகவே அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்கள். எனவே விலைமதிப்பற்ற பாவேந்தரின் படைப்பு களுக்கு ஈட்டுத் தொகையாக அந்தத் தொகையினை அந்தக் குடும்பத்திற்கு வழங்க வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று தமிழை உலகமெங்கும் பரப்பிக் கொண் டிருக்கும் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களுக்கு ஒரு சிலையை சென்னையில் அமைக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பேறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதல்வராக பொறுப்பேற்றபோது முதலாவதாக துவக்கிய முதல் கல்லூரி செய்யாறு அரசினர் கலைக் கல்லூரி, அந்தக் கல்லூரிக்கு இந்த ஆண்டு வெள்ளி விழா ஆண்டு வருகின்றது.

பிற்பகல் 12.40

அதேபோன்று செய்யாறு அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு இந்த ஆண்டு 75-வது ஆண்டு நிறைவு பெறுகிறது. அதேபோல செய்யாறிலே கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற சர்க்கரை ஆலை தமிழகத்திற்கு அர்ப்பணிக்கப்படாமல் இருக் கிறது. இந்த மூன்றையும் தமிழ்நாட்டிற்கு அர்ப்பணிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அவர்களுடைய திருக் கரங்களால் துவக்கி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே வெள்ளி விழா ஆண்டாக இருக்கும் செய்யாறு கல்லூரிக்கு புதிய பாடத் திட்டங்களை பி. எஸ்ஸி., கம்ப்யூட்டர் மற்றும் பி. ஜி. கோர்ஸ்களை அளிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன், அதுபோன்று உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாக ஆக்குகின்ற இந்த தருணத்திலே செய்யாறிலே இருக்கின்ற மாமண்டூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அனுமதி வழங்க ஆவன செய்ய வேண்டுகிறேன், மத்திய பல்கலைக் கழகம் வர விருப்பதை பின் தங்கிய மாவட்டமாக உள்ள செங்கை





திருவண்ணாமலை மாவட்டத்தில் அதை ஏற்படுத்தித் தர மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்; டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை.

டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே. பொது மற்றும் தொழில் கல்விக்கு 70.81
கோடி திட்ட ஒதுக்கீடு உள்ளிட்ட 1,518 கோடி ரூபாயை
ஒதுக்கீடு செய்துள்ளது கல்விக்கு நம் அரசு அளிக்கும முக்கியத்து
வத்தைக் காட்டுகிறது. குறிப்பாக ஆரம்பக் கல்வியின்
தரத்தை உயர்த்த ஒவ்வொரு ஆரம்பப் பள்ளிக்கும் குறைந்
தது 3 ஆசிரியர்களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது
பாராட்டுக்குரிய ஒன்றாகும். உயர்நிலைப் பள்ளிகளுக்கு
மேலும் கட்டிட வசதிகளும், விஞ்ஞான ஆய்வுக் கூடங்களும்
கருவிகளும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது, தொழில்
கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது, எனினும்
அரசின் திட்டத்தின் பலன் சரியான முறையில் மாணவ
சமுதாயத்திற்குப் போய் சேர சில கருத்துக்களை கருத்தில்
கொள்வது நல்லது. நூலகங்களுக்கு 75 இலட்சம் ஒதுக்கப்
பட்டுள்ளது. புத்தகங்களுக்காக நிதி ஒதுக்கும்போது
அவற்றை நல்ல முறையில் வைத்து பாதுகாத்து மாணவர்களுக்குக்
கும், ஆசிரியர்களுக்கும் மக்களுக்கும் பயன்படும் வகையில்
அலமாரிகள் வாங்கவும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.
பல கல்லூரிகளில் ஆண்டு தோறும் கிடைக்கும் ஒதுக்கீட்டில்
புத்தகங்கள் மட்டுமே வாங்க அனுமதி உள்ளது. அலமாரிகள்
வாங்க நிதி இல்லாததால் புத்தகங்கள் கட்டி வைக்கப்பட்டு
யாருக்கும் பயன் படாமல் வைக்கப்பட்டுள்ளன. கரையான்,
எலி இவைகளால் புத்தகங்கள் வீணாக்கப்படுகின்றன. பல
பள்ளிகள், கல்லூரிகளில் நூலகத்திற்கு ஒரு நூலகர் மட்டுமே
இருப்பதால் அவர் விடுப்பில் செல்லும்போது நூலகம்
திறக்கப்படுவதில்லை. மருத்துவ விடுப்பு போன்ற நீண்ட
விடுப்பில் நூலகர் செல்லும் போது விடுப்புக் காலம் முழுவதும்
தொடர்ந்து நூலகம் மூடப்படும் நிலையில் உள்ளது. இதைத்
தவிர்க்க ஒவ்வொரு நூலகத்திற்கும் நூலகர் தவிர இளநிலை
உதவியாளர் அல்லது துணை நூலகர் ஒருவரை நியமிக்க
வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். பள்ளி, கல்லூரிகளின்
ஆசிரியர்கள் தேவை இருக்கிறது. பணியிடங்கள் உள்ளன,
ஆனால் அவை நிரந்தர அடிப்படையில் இல்லாமல் ஒப்பந்த
அடிப்படையில் நியமிக்கப்படுகின்றன. இந்த ஆசிரியர்கள்
ஜூலை கடைசி அல்லது ஆகஸ்டு மாதம் நியமிக்கப்பட்டு கடைசி
வேலை நாளன்று பணியிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். பல
ஆண்டுக் காலமாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பல
ஆசிரியர்கள் தங்கள் எதிர்காலம் என்னவென்றே தெரியாமல்

ஊதிய உயர்வு இல்லாமல் பணிபுரிவதால் வாழ்க்கையின் விரக்தி அடைந்து தங்கள் முழுக் கவனத்தையும் பாடம் சொல்லிக் கொடுப்பதில் செலுத்த முடியாமல் தங்கள் திறமையை வெளிப் படுத்தாமல் இருக்கிறார்கள். இதனால் ஃப்ரெஸ்ட்ரேட்டட் யூத்துகள் போன்ற ஒரு சமுதாயம் கல்வித் துறையில் உரு வாகிக் கொண்டிருக்கிறது. இதனால் நாட்டு நலன் பெரிதும் பாதிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை; இப் பிரச்சனை வெகு விரைவில் தீர்க்கப்பட வேண்டும். கல்வி நிலயத்தி னுடைய கட்டிடங்கள் பல நீண்ட காலத்திற்கு முன்பு கட்டப்பட்டு மோசமான நிலையில் உள்ளன. மாணவர்கள் எண்ணிக்கை உயர்ந்துள்ள அளவிற்கு கட்டிட வசதிகள் அதிகரிக்கவில்லை. சிறுசிறு பழுதுபார்க்கும் வேலைக்கு கூட பி.டபிள்யூ.டியை அணுக வேண்டியுள்ளது. இதற்கான அதிகாரம் கல்லூரி முதல்வர்களுக்கு வழங்கப்பட வேண்டும். கல்லூரி மாணவர்களிடம் ஆண்டு தோறும் வசூல் செய்யப் படும் சில தொகைகள் செலவிடப்படாமல் பெர்சனல் டெபா சிட் கணக்கில் இலட்சம் ரூபாய் வரை உள்ளது. இந்தத் தொகைகளை சிறு ரிப்பேர், பராமரிப்பு, பழுதுபட்ட மரத் தளவாடங்களைப் பழுது பார்த்தல் போன்றவற்றிற்குச் செலவு செய்ய அந்தந்தக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் விற்பனை மூலம் கிடைக்கும் தொகை பெரும் அளவில் தேங்கியுள்ளது. இவற்றைப் பயன்படுத்த அரசு அனுமதி வழங்க வேண்டும். ஆண், பெண் இருபாலர் படிக்கும் கல்லூரிகளில் ஆயா கட்டாயமாக நியமிககப்பட வேண்டும். உடற் கல்விக்கும் ஒரு பெண் ஆசிரியர் நியமிக் கப்பட வேண்டும். பல கல்லூரிகளில் மாணவிகள் கோர்ஸ் இல்லாத போது தங்க இட வசதி இல்லை. அதாவது ஓய்வு அறை இல்லை. அதாவது ஓய்வு அறையும் இல்லை, அதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். மூத்த முதல்வர்கள் அல்லது ஓய்வு பெற்ற முதல்வர்கள் போன்ற ஒரு கமிட்டியை அமைத்து ஒவ்வொரு கல்லூரிக்கும் சென்று அங்குள்ள பிரச்சினைகள் பற்றி ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை சமர்பிக்கச் செய்து கோரிக்கைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். அடுத்தது ஒவ்வொரு கல்லூரியிலும் பல துறைகளுக்குத் தேவையான புள்ளி விவரங்களைக் கொடுக்கும் போதெல்லாம் தயாரித்து அனுப்பிட தட்டச்சர்களுக் கும், உதவியாளர்களுக்கும் வேலைப் பளு அதிகமாக இருப்பதால் மாணவர்களுக்குத் தேர்வு நடத்த வினாத்தாள் தயாரிக்க சிரமம் ஏற்படுகிறது. எனவே அரசு . கல்லூரிகளுக்கு ஒரு ஜிராக்ஸ் மிஷின் வழங்க பரிசீலனை செய்ய வேண்டுமென்று



கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு ஜிராக்ஸ் மிஷின் வழங்கினால் கல்வியின் தரம்......(மணியடிக்கப் பெற்றது) ஒரே ஒரு நிமிடம் மட்டும்....சிறப்பாக அமைத்து தேர்வு அடிக்கடி நடத்த இயலும்.

முற்பகல் 12-45

அடுத்து உதவித் தொகை. எஸ்.சி., எஸ்.டி., பி.சி., எம்.பி.சி., போன்ற மாணவர்களுக்கும் வழங்கப்படும் உதவித் தொகை அநேகமாக பிப்ரவரி—மார்ச்சில் தான் கிடைக்கிறது, ஆனால் தேர்வுக் கட்டணம் செப்டம்பர் மாதத்திலேயே கட்ட வேண்டியுள்ளது. கட்டணம் செலுத்தாத மாணவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே இது குறித்தும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரே விஷயம் என் தொகுதியைப் பற்றி மட்டும். அரியலூர் தொகுதியில் அரசு ஆர்ட்ஸ் கல்லூரி ஒன்று துவங்கப் பட்டு 25 ஆண்டுகள் ஆகிறது. ஆனால் அதன் கூரை கல்நார் கூரையாக, கல்நார்க் கூரை கட்டிடத்திலே இன்றும் அரசுக் கல்லூரி இயங்கி வருகிறது. இந்நிலையை மாற்றி கட்டிட வசதியைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கல்லூரியில் பி.காம்., ஜியாலஜி போன்ற பட்ட வகுப்புக்களைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டு கொள் கிறேன். எனது அரியலூர்த் தொகுதியில் சிமெண்ட் தொழிற் சாலை இருக்கிறது. மைன்ஸ் நிறைய இருக்கிறது. ஜியாலஜி பட்டப் படிப்பு கொண்டு வந்தால் வசதியாக இருக்கும்.

கல்லூரியில் படிக்கிற மாணவ மாணவியர்களுக்கு போதிய ஓய்வு அறை இல்லை. ஆகவே, ஓய்வு அறை வசதியைச் செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சா. பன்னீர் செல்வம்.

திரு. சா. பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டுக்கான கல்வி மானி யக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூற அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி என்றாலே பெருந்தலைவர் காமராஜர் அவர்களைப் பற்றி நினைக்காமல் இருக்க முடியாது. கிராமத்திலுள்ள ஏழை, எளிய மக்களுடைய குழந்தைகள் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இலவசக் கல்வியோடு இலவச சீருடைத் திட்டம், மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றைக் கொண்டு

வந்தார்கள். அந்த வகையில் அவர்கள் மக்கள் மத்தியில் கல்விக் கண் கொடுத்த காமராஜ் என்று பாராட்டுகின்ற வகையில் இருந்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் அதே நோக்கத்தில் ஏழை எளிய சிறுவர் சிறுமியர் பசி இல்லாமல் படிக்கவேண்டும் என்ற முறையில் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து மக்கள் மத்தியில் அழியாத புகழைப் பெற்றுத் திகழ்ந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நிதி ஒதுக்கீடு செய்திருந்தாலும் உங்கள் காலத்தில்தான் தமிழகத்தில் உள்ள அனைவரும் படித்தவர்களாக வேண்டும் என்ற வகையில் கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற நிலையை அடைய நமது அரசு சட்டத்தில் அனைத்து சிறுவர் சிறுமியரும் 6 முதல் 14 வயது வரை கட்டாயமாகக் கல்வி வழங்கவேண்டும் என்னும் விதி இடம் பெற்று இருந்தாலும் இதை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு கண்டிப்புடன் நிறைவேற்றினால் வருங் காலத்தில் தமிழக மக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர் களை மனமார பாராட்டுவார்கள்.

இன்றைக்கு கிராமத்தில் இருக்கின்ற சிறுவர், சிறுமியர்களில் பள்ளிப் படிப்பைத் தொடராமல் டிராப் அவுட்ஸ் பட்டியலில் வந்து விடுகிறார்கள். இந்த நிலையைத் தடுத்து நிறுத்தி அவர் களைக் கல்வி கட்டாயமாகத் தொடரச்செய்ய சமூக வளர்ச்சி ஏற்பட கல்வியில் புரட்சியை ஏற்படுத்திய பெருமை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு போலவே இந்த ஆண்டும் நமது அரசு பெருகி வரும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு கூடுதலாக ஆசிரியர் பணியிடங்களை அறிவித்து இருக்கிறார்கள். இதற்காக அரசைப் பாராட்டுகிறேன். அரசு அறிவித்துள்ள இந்தக் கூடுதல் ஆசிரியர் பணியிடங்களில் வரும் கல்வி ஆண்டு தொடங்குவதற்கு முன்பாக ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

அரசு கூடுதல் பணியாட்களை அறிவிக்கிற அதே நேரத்தில் திடீர் மரணத்தால் அல்லது ஒய்வு பெறுவதால் ஏற்படுகின்ற காலியிடங்களை நிரப்புவதிலும் கவனம் செலுத்த வேண்டும். சில கல்வி நிலையங்களில் ஏற்கெனவே உள்ன காலியிடங்கள் ஒரு சில ஆண்டுகளாக நிரப்பப்படாமல் உள்ளன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். உதாரணமாக பச்சையப்பன் கல்லூரி போன்ற சில கல்லூரிகளில் ஒரு சில துறைகளில் பணியிலிருக்கும் போது இறந்த ஆசிரியர்களின் இடங்களை ஒரு ஆண்டுக்கு மேல் நிரப்பாமல் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



இந்த நிதி ஆண்டில் 1,400 இடைநிலை ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட இருக்கிறார்கள் என்று அரசு அறிவித்து இருக்கிறது. இப்படிப் புதியதாக நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு முதல் 2 வருடங்களுக்குத் தொகுப்பு ஊதியம் ரூபாய் 800 வழங்கும் என்று அரசு அறிவித்து இருக்கிறது. இப்படி தொகுப்பு ஊதியமாக ரூபாய் 800 வழங்குவதற்குப் பதிலாக அவர்களுக்கு முறைப்படி வழங்கவேண்டிய அடிப்படைச் சம்பளத்தோடு அதற்குரிய இதர படிகளையும் வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்கவேண்டும் என்ற காரணத் தால் ஒரு சில கருத்துக்களோடு நான் முடிக்க விழைகிறேன். பள்ளி களில் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் இயங்கி வருவதை நாம் அறிவோம். அந்தச் சங்கங்களின் கணக்குகளை சரியாக தணிக்கைக்கு உட்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாணவர்கள் நெறி தவறிபோகாமல் இருக்கவும், அவர்கள் திறமையை பெரிதுபடுத்தும் பொருட்டு அவர்களுக்கு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, நுண்கலை சம்பந்தப் பட்ட போட்டிகள் போன்றவற்றை மாதம் ஒரு முறையாவது நடத்த வேண்டுமென்று எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் அரசு ஆணை பிறப்பித்து அது சரியாக செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்பு கல்வி அமைச்சராக இருந்தபோது அரசு நிதி உதவி பெரும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்களுக்கு அரசு நேரடியாக ஊதியம் வழங்கும் முறையைக் கொண்டு வந்தார்கள். இந்த முறை அமுலுக்கு வந்த பிறகு சில தனியார் கல்வி நிலையங் களில் நிர்வாகிகள் மெத்தனப் போக்கினால் ஆசிரியர் களுக்கு மாதம் 10 ஆம் தேதி வரையில் சம்பளம் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. இந்த நிலையை மாற்றிட தகுந்த நடவடிக்கையை எடுத்திட வேண்டுமென மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12--50

அரசு கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கும் வீடு கட்டுவதற்கு கடன் வழங்குவதைப்போல, தனியார் கல்வி நிலையங்களிலே பணி புரிபவர்களுக்கும் அரசு நிதி உதவி செய்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தொழில் வரியை அரசே கட்டவேண்டும். இல்லையெனில் அந்த வரியிலிருந்து ஆசிரியர்களுக்கு விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில கல்லூரிகளிலே ரிசர்ச் டிபார்ட்மென்ட் இருக்கிறது. இந்தத் துறையில், பல்கலைக்கழகங்களில் இருப்பதைப்போல ரீடர்ஸ் பணியிடங்களை அரசு உருவாக்கவேண்டும். இது ஆசிரியர்களுடைய நீண்டநாள் கோரிக்கை என்பது குறிப்பிடத் தக்கது.

சென்னைப் பல்கலைக் கழகத்திலே மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கும், தமிழகத்தினுடைய முன்னாள் முதல்வர் காலஞ்சென்ற திரு. எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் இருக்கைகள் ஏற்படுத்தப்படவேண்டும். பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகத்தை, நிர்வாகச் சீர்திருத்தங்களுக்காக முந்தைய எம். ஜி. ஆர். அவர்களுடைய ஆட்சி எடுத்துக்கொண்டது. அ.தி.மு.க. ஆட்சியின்போது விரைந்து செயல்பட்டு வந்த இந்த அறக்கட்டளை, தி.மு.க. ஆட்சியின்போது நன்கொடை வசூல் செய்வது போன்ற பல தவறுகளைச் செய்து இருக்கிறது. இவைகளை விசாரிக்கும் வகையில் ஒரு நீதி விசாரணைக்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

150 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாட இருக்கும், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் படித்த சென்னை பச்சையப்பன் கல்லூரியிலே அண்ணாவின் பெயரிலே ஒரு கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியான திண்டிவனம் தொகுதியிலுள்ள கலைக்கல்லூரியிலே நீண்டநாள் கோரிக்கையாக, கெமிஸ்ட்ரி பி.எஸ்ஸி., பட்டப் படிப்பை தமிழில் கற்க வகுப்பு தொடங்க வேண்டுமென்ற நிலை அரசினுடைய பரிசீலனையிலே பல ஆண்டுகளாக நிலுவையிலே உள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே இந்த, இந்த ஆண்டே தொடங்குவதற்கான அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஊட்டி, கலைக் கல்லூரிலே எம்.எஸ்ஸி கணித வகுப்பும், பி. ஏ.-இல் கார்ப்பரேட் செக்கரட்டரிஷிப் வகுப்பும் வரும் ஜீன் 22 இல் ஆரம்பித்துத் தருமாறு கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம், ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித் தேவர்.



திரு. எஸ். ஆண்டித் தேவர் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற கல்வி மானியக் கோரிக்கையின் மீது அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பிலே எனது கருத்தினையும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். சென்ற ஆண்டைவிட 218 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கியதோடு மட்டுமல்லாமல் ஆரம்பக் கல்விக்காக அதிக நிதி ஒதுக்கி முக்கியத்துவம் கொடுத்து உள்ளார்கள் ஆரம்பக் கல்விதான்—மாணவர்களுக்கு மட்டுமல்ல, படிக்கின்ற சமுதாயத்திற்கு, எப்படி கட்டிடத்திற்கு அடித்தளம் முக்கியமோ, அதேபோன்று ஆரம்பக் கல்விதான்—மாணவர்களுக்கு அடிப்படையாக அமையும். ஆரம்பக் கல்வியை எவ்வளவு ஆரோக்கியமாக மாணவர்கள் பெறுகிறார்களோ, அதன் அடிப்படையிலேதான், அதற்குமேல் படிக்கின்ற படிப்புகளும், பிற்கால வாழ்வும் அமையும். மாணவர் சமுதாயம் முன்னேற வேண்டுமென்பதற்காக 21 சதவீத மானியத்தை ஒதுக்கி, கல்வியை முன்னேற்றுவதிலே இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை இந்த மானியக் கோரிக்கையின் மூலமாக நாம் அறிந்து கொள்ளலாம். அதுமட்டுமல்லாமல் கல்வி அறிவே இல்லாதவர்கள் இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று அறிவொளி இயக்கம் ஆரம்பித்து, 15 வயதுக்கு மேற்பட்ட 35 வயதுக்குட்பட்டவர்களுக்கு எழுத்தறிவு, கல்வியறிவு கற்பிக்க வேண்டுமென்ற ஒரு திட்டத்தினை இப்போது நடைமுறைப் படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அந்தத் திட்டம் நல்லமுறையிலே நிறைவேற்றப்படவேண்டும். அந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் நான் கலந்துகொண்டு இருக்கிறேன். அந்த நிகழ்ச்சிகளைச் சிறப்பாக ஏற்பாடு செய்தார்கள். அதற்காக வால்போஸ்டர் அடிக்கிறார்கள். அதற்குப் பிறகு தொடர் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. அரசு இதிலே கவனம் செலுத்தி, அதிகாரிகளையும் பொது மக்களையும் அந்த இயக்கத்திலே கலந்து கொள்வதற்கு, அதன் மூலம் அவர்கள் பயன்பெறுவதற்கு, இன்னும் வேறுமுறைகளைக் கையாள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

தொடக்கக் கல்வியை எடுத்துக்கொண்டால் கிராமப்புறப் பள்ளிகளிலே ஓராசிரியர் என்று இருந்ததை இரண்டு ஆசிரியர்களாக ஆக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி சொல்லுகின்ற அதே நேரத்தில் இரண்டு ஆசிரியர்கள் கூட 5 வகுப்புப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கின்றபோது, ஒரு வகுப்புக்குச் சொல்லிக்கொடுக்கின்ற நேரத்திலே இன்னொரு வகுப்பு மாணவர்கள் சும்மாதான் இருக்க வேண்டும் அல்லது

ஒன்றாவது வகுப்பு மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கின்ற பாடத்தை 2-வது வகுப்பு, 3-வது வகுப்பு, மாணவர்களும் கேட்கவேண்டும். ஆகவே, நிதிப் பற்றாக்குறை இருந்தாலும் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கி, வருகின்ற ஆண்டிலேயாவது ஒரு வகுப்புக்கு ஒரு மாணவர் இருக்க வேண்டும் (சிரிப்பு) தவறு, திருத்திக் கொள்கிறேன். ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும். மாணவர்களை முன்னேற்ற வேண்டும் என்பதற்காக நமது அரசு சத்துணவுத் திட்டம். இலவசப் புத்தகம் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களை நிறைவேற்றினாலும் படிக்காதவர்கள் பாதியிலே விட்டுச் செல்கிறவாகள் விழுக்காட்டைப் பார்த்தால், 1-வது வகுப்பு முதல் 5-வது வகுப்பு வரையில் 17 விழுக்காடு இருக்கிறது. 6 முதல் 8 வகுப்பு வரையில் உள்ள மாணவர்களின் விழுக்காடு 40 என்று இருக்கிறது. அதையும் குறிப்பாக எடுத்துப் பார்த்தால் கிராமப்புறப் பள்ளியில்தான் அது நடக்கும். மாநகராட்சிப் பள்ளிகளில் அல்லது மாநகர்களில் இருக்கிற மாணவர்கள் விழுக்காடு குறைவாகத்தான் இருக்கும்.

பள்ளியிலே இருந்து பாதியிலே செல்கிறார்கள். ஏன் அங்கே இப்படிச் செல்கிறார்கள் என்றால் வறுமைதான் காரணமாக இருக்கிறது. 14 வயது வரையில் கட்டாயக் கல்வி கொடுக்கின்ற நமது அரசு அதில் என்ன குறை இருக்கிறது என்று தெரிந்து, அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எவ்வளவு காலமானாலும் நாம் தொடர்ந்து ஆங்கிலேயர் வைத்திருந்த கல்வி முறையே வைத்திருக்கிறோம். பள்ளியிலே படித்துவிட்டு வருகிறவர்கள் நாள்பட்டு படிக்கிறார்களே தவிர தரம் உயர்ந்திருக்கிறதா என்றால் இல்லை. பி.ஏ. படித்துவிட்டு வருகின்ற ஒரு மாணவரை, 'ராமா இஸ் ரன்னிங்' இதற்கு பாஸ்ட் டென்ஸ் என்ன என்று கேட்டால் சொல்ல முடியவில்லை உதாரணததிற்குச் சொல்ல வேண்டுமென்றால் என்னிடம் 6 பி. டி. ஆசிரியர்கள் பரீட்சை எழுதிவிட்டு வேலைக்குச் சொல்லுங்கள் என்று வந்தார்கள். 'சூப்பரின்டென்டென்டு' என்று எழுதுங்கள் என்று சொன்னேன். 6 பேர்களும் அந்த வார்த்தையைச்சரியாக எழுத முடியவில்லை. அப்படியானால் அவர்களுடைய கல்வித் தரம் எப்படி இருக்கிறது என்று நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. அவர்கள்தான் ஆசிரியர்களாக வருகிறார்கள்.

அது மட்டுமல்ல, ஆசிரியர்கள் பரிட்சை எழுதுகின்ற காலங்களிலதான் அவர்கள் கோரிக்கை வைத்து 'ஸ்டிரைக்' செய்கிறார்கள். மார்ச் மாதம் நாங்கள் 'எக்ஸாமினேஷனுக்கு'



வரமாட்டோம் என்று போராடுகின்ர் நிலையை மாற்ற வேண்டும்.
சங்கங்கள் வைத்திருக்கிறார்கள்; வைத்திருக்கட்டும். அது மாணவர்
களைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு இருக்கக்கூடாது. மார்ச் மாதம்
தான் நாங்கள் ஸ்டிரைக் செய்வோம். அல்லது பேபபர் திருத்த
வரமாட்டோம் அல்லது எக்சாமினர்களாக வரமாட்டோம் என்று
சங்கங்கள் பெயரால் சொல்லுகிறார்கள். அவர்களுடைய குறைகளை
மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்லலாம்; அரசிடம் முறை
யிடலாம். அதை விட்டுவிட்டு, பரிட்சை காலங்களில் ஸ்டிரைக்
செய்கிறார்கள்.

சென்றமுறை பார்த்தோம். கிறிஸ்தவக் கல்லூரியிலே ஒரு
ஆசிரியரை நீக்கினார்கள் என்று சொன்னால் அதை முறைப்படி
அணுகாமல் தமிழ்நாடு முழுவதும் ஆசிரியர்கள் போராட்டம் நடத்
தினார்கள். இது எந்த அளவிற்கு மாணவர்களைப் பாதிக்கிறது
என்று பார்க்கவேண்டும். அது போக நமது அரசு 'எதிலும் தமிழ்
எங்கும் தமிழ், என்று வைத்திருக்கிற நிலையை நான் பாராட்டுகி
றேன். ஆனால் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பது எங்கே
கொண்டு போய் விட்டது என்று சொன்னால் மத்தியிலே ஐ.ஏ.எஸ்..
ஐ.பி.எஸ் , பரீட்சை எழுதுகிறபோது தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்
மிகவும் குறைந்த அளவிலே தான் தேறுகிறார்கள். இதை நான்
குறிப்பிடுகிறபோது, தமிழ் எந்த நிலையிலும் இருக்கக்கூடாது என்று
சொல்லவில்வல. மத்தியிலே தேர்வாணைக் கழகத்திலே தமிழிலும்
பரிட்சை எழுதலாம் என்ற முறையை புரட்சித் தலைவி அரசு வற்
புறுத்திப் பெற வேண்டும். அதன் மூலம் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.,
அதிகாரிகள் நமிழ்நாட்டிலே இருந்து நிறையபேர்கள் வரவேண்டும்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் ; இப்போதே தமிழிலும் எழுதலாம்
என்ற நிலை இருக்கிறது.

திரு. எஸ் ஆண்டித் தேவர் ; இருந்தால் அதற்காக நன்றி
தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும் நமது மாணவர்களிருந்து
அதிகமாக வரமுடியவில்லை. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்
றால் 19 மாவட்ட ஆட்சித் தலைவர்களில் 16 மாவட்ட ஆட்சித்
தலைவர்கள் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்
கள், இப்படி மத்தியிலே இந்த ஆட்சிமொழி இருந்தாலும் நாம்
பயிற்சி கொடுத்து அவர்களை ஆட்சிப் பொறுப்புக்கு, ஐ.ஏ.எஸ்.
அதிகாரிகளாக வருவதற்கு ஐ.பி.எஸ்., அதிகாரிகளாக வருவதற்கு
அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

அது மட்டுமல்ல. 5—வது வகுப்பு வரையில் பெண் ஆசிரியர்கள்
தான் வேலை பார்க்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சியில் கொண்டுவந்தார்கள். பெண்களுக்குச் சம உரிமை கொடுப்
பதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் ஐந்து வகுப்பு வரை...........
(குறுக்கிடுகள்)

பிற்பகல் 1—00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை ஏற்பாடு செய்திருப்பது புரட்சித் தலைவியினுடைய ஆட்சிதான் என்று உறுப்பினர்கள் அத்தனைபேரும் குரல் கொடுக்கிறார்கள்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் ; புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இருந்தாலும் நான் வேண்டுவது சம உரிமை இருக்கிறது. மாணவர்களும் இடைநிலை ஆசிரியர்கள் பயிற்சி படித்திருக்கிறார்கள். ஆகவே, ஆண்களுக்கும் சம உரிமை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது ஒரு துரதிருஷ்டவசமான நிலைமை. பெண்களுக்கு நாம் வாய்ப்பு தர வேண்டுமென்பதற்காக ஒரு கொள்கையை அறிவித்து அதை நாம் நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறோம். இத்தனை நாளும் சமுதாயத்திலே பின் தங்கி இருந்தவர்கள், ஆண்களிலே தோன்றிய தலைவர்களாலும், பெண்களிலே தோன்றிய தலைவர்களாலும் பெண்களுக்கு நல்ல உரிமை தரப்பட வேண்டும் என்று கோரப்பட்டு வந்த ஒரு கோரிக்கைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஒரு வடிவம் தந்திருக்கிறார்கள். ஆண்களுக்கு 6-வது, 7-வது, 8-வது வகுப்புக்கள் இருக்கின்றன. அதிலே ஆண்கள் பதவி பெற்று அதிலே ஆசிரியர்களாகப் பணி புரியலாம். இருந்தாலும் கொஞ்ச காலத்திற்குப் பெண்களுக்கு இந்த வாய்ப்பைத் தருவது நல்லது. நம் வீட்டிலேயும் பெண்கள் இருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் ; மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலுக்கு நன்றி. இருந்தாலும் என் கருத்தைச் சொன்னேன். அது மட்டுமல்லாமல் (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நேரம் ஆகிவிட்டது.

திரு. எஸ். ஆண்டித் தேவர் ; ஒரே வார்த்தையில் முடித்துக் கொள்கிறேன். ஆசிரியர்களுக்குப் பணிக்கொடை—இந்தத் தொகுப்பு ஊதியம் என்று கொடுப்பதை மாற்றி அவர்களுக்கு முழுச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். ஒரு மணிக்கு மேலாகிவிட்டது. பத்து நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டும்.



*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூறிவிட்டு நான் அமர்ந்து கொள்கிறேன்.

நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் இதற்காக வருமானத்திலேயே கிட்டத்தட்ட நான்கிலே ஒரு பாகம் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். கல்விக்காக எவ்வளவு பணம் ஒதுக்கினாலும்கூட, பிறகு அது பற்றாக்குறையாக வரும்பொழுது நாமே இங்கே ஒரு அப்ரோப்ரியேஷன் பில்லைக் கொண்டு வந்து அதற்கு வேண்டிய பணத்தையெல்லாம் எடுத்துக் கொள்ளக் கூடிய நிலைமை இருக்கின்ற காரணத்தினாலே அதைப்பற்றிக் குறைவு என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்.

இந்த ஆரம்பக் கல்வியில் குழந்தைகள் படிக்கிறார்கள். அங்கே போதுமான அளவிற்கு—ஆண்டித் தேவர் அவர்கள் சொன்னதைப் போன்று — ஆசிரியர்கள் இல்லை. ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினாலே அவர்கள் இந்தக் காம்படிஷன் மார்க் அடிப்படையில் படிப்படியே வரும்பொழுது, மெடிக்கல் கல்லூரியாக இருந்தாலும் சரி, என்ஜினியரிங் கல்லூரியாக இருந்தாலும் சரி, லா காலேஜாக இருந்தாலும் சரி, இந்த மார்க் அடிப்படை வரும்பொழுது போதுமான அளவிற்கு மார்க்குகளை அவர்களால் பெற முடியவில்லை. அதற்காக, எப்படி இருந்தாலும் ஆரம்பக் கல்வியிலே தயவு செய்து, இந்த 1 ஆம் கிளாஸ், 2 ஆம் கிளாஸீக்கு ஒரு ஆசிரியர், 3 ஆம் கிளாஸீக்கு ஒரு ஆசிரியர்; 4 ஆம் கிளாஸீக்கு ஒரு ஆசிரியர்; 5 ஆம் கிளாஸீக்கு ஒரு ஆசிரியர் என்று இப்படி 4 ஆசிரியர்களையாவது இப்பொழுது நம்முடைய கல்விக் கண் திறந்த எங்களுடைய தலைவர் கறைபடாத கரம் படைத்த தலைவர் காமராஜ் அவர்கள் 30,000 பள்ளிகளை ஓராசிரியர் பள்ளிகளைக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு நம்முடைய முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் மேற்கொண்டு 10,000 பள்ளிகளைக் கொண்டுவந்து— இன்றைக்கு 40,000 பள்ளிகள் இருந்து கொண்டிருக்கின்றன கிராமத்தில் ஆரம்பப் பள்ளிகள். இதிலே ஆசிரியர்கள் நியமிப்பதிலே நிச்சயமாக இந்த 2, 3 ஆசிரியர்கள் எல்லாம் போதாது. ஆசிரியர்களை அதிகமாக நியமிப்பதற்கான ஒரு நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

அதோடு, பெண்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். அதை அறிந்துதான் நம்முடைய மதிப்பிற்குரிய நம் அத்தனை பேருடைய அன்பையும் அபிமானத்தையும் பெற்ற நம்முடைய

முதல்வரவர்கள் ஆரம்பக் கல்வி முழுவதிலும் பெண்களாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால் நன்றாகப் படித்து, பி.ஏ., எம்.ஏ., படித்து அவர்கள் கல்லூரியிலே ஏழாயிரம், எட்டாயிரம் சம்பளம் வாங்கினாலும் அவர்களைத் திருமணம் செய்து கொடுக்கும்பொழுது அவர்களுக்குப் பல சிக்கல்கள் வருகின்றன. எவ்வளவு பணம், எவ்வளவு நகை என்ற பிரச்சினையெல்லாம் எழுகின்றன. அது ஆண்களுக்கு வரவில்லை. ஆண்கள் வேலை செய்யாமல் இருந்தாலும்கூட, அவர்கள் அதிலே ஈடுபடாமல், எப்படியோ அந்த மனைவி சம்பாதிக்க வேண்டுமென்று நினைக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே, பெண்களுக்குத்தான் பொறுப்பையும், பெண்கள் கையிலே ஆசிரியர் பயிற்சிக்கு எங்கே இருக்கிறார்களோ அவர்களைத் தேடிப் பிடித்தாகிலும் அதை நிரப்ப வேண்டுமென்று நான் அன்போடும், பணிவோடும் கோரிக்கையாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பிறகு 200 பள்ளிகளை ஆரம்பிப்பதற்கு திட்டத்தில் இடம் இருக்கிறது. நிச்சயமாக எங்கேயெல்லாம் பள்ளிகள் இல்லையோ அது அத்தனையிலும் பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்க நம்முடைய முதல்வரவர்களும்; அமைச்சரவர்களும், இதை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை ஆரம்பிக்கும்பொழுது—இவர்களுக்குக் கட்டிட வசதி கூட, பழைய காலத்திலே கட்டிய கட்டிடங்கள்—பழைய காலத்திலே கட்டிய கட்டிடங்கள் எல்லாம் பலயிடங்களிலே ரிப்பேராக இருக்கிறது. புதுப்பிக்க வேண்டும். மீண்டும் இந்த ஆண்டு 64 கட்டிடங்கள் கட்டுவதற்காக ஹட்கோவிலிருந்து கடன் பெற்றாகிலும் இந்தக் கட்டிடங்களைக்கட்ட வேண்டும் எனவே, எங்கேயெல்லாம் பள்ளிகள் இல்லாமல், பள்ளிக் கட்டிடங்கள் இல்லாமல், குழந்தைகள் மரத்தடியில் இருக்கிறார்களோ, அதையெல்லாம் ஆராய்ச்சி செய்து—''சர்வே'' செய்து அந்தக் குழந்தைகளுக்கு, இப்படிப்பட்ட கடன்களை வாங்கியாவது பள்ளிகளைக் கட்டுவதற்கான ஒரு முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1—05

அதன் பிறகு, குடி நீர் வசதி, பெண்களுக்கும், ஆண்களுக்கும் தனித்தனியாக கழிப்பிட வசதி. அவர்களுக்கு ஓய்வு அறை—ஓய்வு அறை இருந்தால்தான், பகல் உணவு சாப்பிடும்போதாகிலும், இவர்கள் அங்கே சென்று ஓய்வு எடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும், இந்த நாட்டினுடைய மிகப்பெரிய தலைவர்களை எலலாம் உருவாக்குவது,. ஆசிரியர்களுடைய கடமையும் பொறுப்புமாகும் மிகப் பெரிய உலகத் தலைவர் நேருஜி போன்ற



வர்கள், காந்தியடிகளைப் போன்றவர்கள், நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் காமராஜைப் போன்றவர்கள், அண்ணாவைப் போன்றவர்களை எல்லாம் அப்படி உருவாக்கியதே ஆசிரியர்கள்தான். ஆசிரியர்களுக்கு அப்படிப்பட்ட மிகப் பெரிய பொறுப்பிருக்கிறது. அந்த மிகப் பெரிய பொறுப்பு வாய்ந்த ஆசிரியர்களுடைய குறைகள் என்ன இருந்தாலும் அதை நாம் நிவர்த்தி செய்து கொடுப்பதோடு மட்டுமல்ல ; அவர்களுக்கு எந்த ஒரு இடைஞ்சலும் வராத அளவுக்கு நாம் செய்தால்தான் அவர்கள் மன நிறைவோடு இந்தப் பணியை ஆற்ற முடியும். அவர்கள் சற்று கோளாறாக ஆகிவிடுவார்களானால், குழந்தைகளும் கோளாறாக ஆகிவிடுவார்கள்.

இப்போது, கல்லூரியை எடுத்துக் கொள்வோம். கல்லூரியிலே படிக்கக்கூடிய மாணவர்கள் அதிகப்படியாக மார்க் வாங்குவதற்கு என்னென்னவோ வைத்திருக்கிறோம். ஆனால், அவர்கள் மார்க் வாங்க முடியாத அளவுக்கு சூழ்நிலை ஏற்படுவதற்குக் காரணம், நான் அறிந்தவரையிலே, நான் கேள்விப்பட்ட வரையிலே, சில இடங்களிலே ஓரமாக முட்டை விற்கிறார்கள். அப்படி ஓரமாக முட்டை விற்கும்போது, அதிலே சில போதைப் பொருட்களைப் போட்டு, கல்லூரியின் வெளியிலே வரும்போது, விற்கிறார்கள். அதைப் பெண்கள்கூட வாங்கிச் சாப்பிடக்கூடிய நிலைமை இருப்பதாக எனக்குத் தகவல் சொன்னார்கள். அதையெல்லாம், அப்படி இருந்தால், கவனமாகப் பார்த்து, அந்தச் சூழ்நிலை இல்லாமல் தவிர்ப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்று அன்போடு என்னுடைய வேண்டுகோளாக வைக்கிறேன்.

பிறகு, அஞ்சல் வழிக் கல்வி. அஞ்சல் வழிக் கல்வியை எடுத்துக் கொண்டால், அட்லீஸ்ட் பிளஸ் டூ-வாவது படித்திருக்க வேண்டும். ஆனால், ஏழாவது படித்து, பிராக்கட்டிலே போடக் கூடியவர்கள், ஆறாவது படித்து, பிராக்கட்டிலே போடக்கூடியவர்களெல்லாம் கல்லூரியிலே பணத்தைக் கட்டிவிட்டு, அவர்கள் எம்.ஏ., என்று பிராக்கட்டிலே போடுகிறார்கள். அதுவும் மதுரை காமராஜ் கல்லூரியிலே, அந்த யுனிவர்சிடியிலே நடக்கிறது என்றால், அது மிகுந்த வேதனையளிக்கிற ஒன்றாக இருக்கிறது. எனவே, பிளஸ் டூ படித்தவர்கள்தான் பி.ஏ., எம்.ஏ., அஞ்சல் வழி மூலமாகக் கல்லூரியிலே படிக்க வேண்டும் என்ற ஒரு நிலைமையை நாம் உருவாக்கினால்தான், கல்வியினுடைய தரம் உயரும். இப்போது எத்தனையோ எம்.ஏ., படித்தவர்கள் இருக்கிறார்கள், பி.ஏ., படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய படிப்பும், திறமையும், அவர்கள், கஷ்டப்பட்டுப் படித்து, பாஸ் பண்ணியதனாலேதான், அவர்கள் பட்டம் வாங்க முடிந்தது. ஆனால், பணத்தை அஞ்சல் வழிக் கல்லூரியில் கட்டிவிட்டு, உடனே பிராக்கட்டிலே எம் ஏ., பி.ஏ., என்று போடுவார்களேயானால்—ஒரு பையன் என் ஊரிலேயே

ஏழாவது பாஸ் பண்ணவில்லை; அவன் அஞ்சல் வழிக் கல்லூரியில் பணம் கட்டியிருக்கிறான்; அஞ்சல் வழிக் கல்லூரியில் பணம் கட்டிவிட்டு, பெயரைப் போட்டுக் கொண்டு, பிறகு எம்.ஏ., என்று பிராக்கட் போட்டிருந்தால், பார்த்துவிட்டு, என்னப்பா இது யார் என்று கேட்டால்—எங்கள் ஊரிலே யார் எம்.ஏ. படித்திருக்கிறார்கள் என்று கேட்டால்—அந்தக் காலத்திலிருந்தே எங்கள் ஊரிலே படித்தவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. வரையில்தானே என்று கேட்டபோது, எல்லாம் பணம் கட்டியாகிவிட்டது என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்குமானால், கல்வியின் தரம் மிகவும் குறைந்து விடும். எனவே, அதில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நாம் சீருடை கொடுக்கிறோம். எட்டாவது வகுப்பு வரைக்கும் எல்லோருக்கும் சீருடை கொடுக்கிறோம். அந்தச் சீருடை கொடுப்பதிலேகூட, தனியார் பள்ளிகளிலே படிக்கக்கூடிய குழந்தைகளுக்குச்சீருடையுடன் வந்தால், பார்ப்பதற்கு அழகாக, இலட்சணமாக இருக்கும். ஆனால், நாம் கொடுக்கிற சீருடை—அதை, அளவு தெரியாமல் தைத்து விடுகிறார்கள். எட்டாவது படிக்கிறவர்களுக்கு இந்த வயதுதான் இருக்கும்; பத்தாவது படிக்கிறவர்களுக்கு இந்த வயதுதான் இருக்கும் என்று தைப்போமானால் அது நன்றாக இல்லை. ஆகையினால், அந்தந்த ஆசிரியர்களை விட்டே அளவெடுக்கச் சொல்லி, வகுப்பிலே படிக்கக்கூடிய அந்தக் குழந்தைகளுக்குச் சீருடை தைத்துக் கொடுப்போமானால்—சீருடைத் திட்டத்தை காமராஜ் அவர்கள் கொண்டு வரும்போது, பள்ளியிலே படிக்கிற குழந்தைகளுக்கு ஒரு பிள்ளை நல்ல பட்டுப் பாவாடை அணிந்து வந்தால், இன்னொரு பிள்ளை சாதாரண ஒரு பாவாடை அணிந்து கொண்டு வந்தால், இவர்களுக்குள்ளே ஒரு வித்தியாசம் வரும்; இது பணக்காரன் வீட்டுக் குழந்தை, இது ஏழை வீட்டுக் குழந்தை என்ற பாகுபாடு தெரியாமல் இருப்பதற்காகத்தான் அன்றைக்கு இந்தச் சீருடைத் திட்டத்தைக் கொண்டு வந்தார்; ஆகையினால் இந்தத் திட்டம் செம்மையாகப் பயன்பட வேண்டுமென்றால் இதை நல்ல முறையிலே அளவு எடுத்துத் தைத்துக் கொடுப்போமானால், ஒரு நல்ல நிலைமை உருவாகுமென்று இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு கணக்கு எடுத்துப் பார்க்கும்போது, 64 சதவிகிதம் ஓரளவுக்குத் தமிழகத்தைப் பொறுத்த வரையிலே கல்வியிலே நாம் வந்திருக்கிறோம் என்று இருக்கிறது. அந்த 64 சதவிகிதம் இருக்கிறதா என்று மறு பரிசிலனை செய்ய வேண்டும். நாங்கள் விரும்புவதெல்லாம், நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய காலத்திலே, 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் கல்வியறிவே இல்லாதவர்கள் இல்லை என்ற ஒரு நிலைமை உருவாக வேண்டும் என்பதுதான் எங்களைப் போன்றவர்களின் ஆசை. அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்.





அதன் பிறகு, பெண்களுக்கு—உண்மையிலேயே மிகவும் பாராட்ட வேண்டிய ஒன்று. இரண்டு குழந்தைகளும் பெண் குழந்தைகள் என்றால், அந்த வீட்டில் தகப்பனுக்கோ, தாய்க்கோ அல்லது மாமன், மாமிக்கோ ஒரு ஆண்பிள்ளை பிறக்கவில்லை; ஆண்பிள்ளை பிறக்கவில்லையே என்று அவர்களுக்கு வருத்தம். இப்படியே இவர்களுடைய வீட்டில் நான்கு குழந்தைகள், பெண் குழந்தைகளாகப் பிறந்து விடுகின்றன. அப்படிப் பிறந்தவுடன் அந்தப் பெண்களைப் பராமரிப்பதற்கு—இன்றைக்கு இது எல்லாச் சமுதாயத்திலேயும் இவ்வாறு இருக்கிறது. சாதாரண ஏழைக் குடும்பத்திலேகூட; என்னென்ன நகை போடுகிறீர்கள் என்று கேட்கக்கூடிய நிலைமை வந்து விடுகிறது. இந்த நிலைமையை ஆராய்ந்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஒரு வீட்டில் இரண்டு பெண் குழந்தைகள் இருந்து இந்த இரண்டு பெண் குழந்தைகளை வைத்துக் கொண்டு, மேற்கொண்டு குழந்தைகள் வேண்டாமென்று தாய், தந்தை முடிவெடுப்பார்களேயானால் அந்தக் குழந்தைகளுக்கு இரண்டாயிரம் ரூபாய் முதலீடு செய்து, அவர்களுடைய 20ஆம் வயதிலே அதை 10 ஆயிரம் ரூபாயாகக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருப்பதும், அதுமாத்திரம் அல்லாமல், மேற்கொண்டு படிக்க வேண்டும் என்றாலும் கூட அதற்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்ற ஒரு திட்டம் இருக்கின்றதே, இது உண்மையிலேயே மிகவும் பாராட்டப்படக்கூடிய ஒரு திட்டம். வரவேற்கப்படக்கூடிய ஒரு திட்டம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதனாலே பல பெண்கள் பல குடும்பங்கள் நல்ல முறையில் முன்னுக்கு வரும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

பிறகு சத்துணவு. மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்த காரணத்தினாலே இன்றைக்குப் பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகள் — சென்று அழைக்காமலேயே பள்ளிக்கு வரக்கூடிய குழந்தைகள் கிட்டத்தட்ட 82,83 இலட்சம் வருகிறார்கள் என்று கணக்கிலே இருக்கிறது. நிச்சயமாக வருகிறார்கள். அவர்களுக்கு சத்துணவு கொடுக்கும்போது, சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் சோறு போட வேண்டுமா ? அதைச் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, நாளைக்கு தீபாவளி, பொங்கல் என்றால், முதல் நாளே சோறு போட்டு விடுகிறோம். அது தேவைதானா ? அந்த மாதிரி சனி, ஞாயிறு நாட்களில் போடாமல் இருந்தால் பணத்தை மிச்சப்படுத்தவாம். சனி, ஞாயிறு ஆகிய கிழமைகளில் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. பிள்ளைகள் வீட்டிலேயே சாப்பிட்டுக் கொள்வார்

இந்த நிலைமையை சற்று மாற்றினால் — சனி, ஞாயிறு..

லீவு என்றால் நாளைக்கு சோற்றையும் சேர்த்து வாங்கிப்போ
என்று போடுவார்களேயானால் அது நன்றாக இருக்காது.
ஆகவே, அதைச் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். விடுமுறை நாட்களில் சத்துணவு போடு
வதைத் தவிர்க்க வேண்டும்.

மேலை நாடுகளில் படிக்கும்போது தொழில் கல்வியையும்
சேர்த்துச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இங்கே படித்துவிட்டு
வேலையில்லாமல் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். பி.ஏ.,
எம்.ஏ., எம்.காம்., என்று படித்த ஆண்கள், பெண்கள், ஆயிரக்
கணக்கில், லட்சக்கணக்கில் இருக்கின்றார்கள். என்னிடம்
சிலபேர் வந்து அம்மாவிடம் சொல்லி ஏதாவது வேலை வாங்கிக்
கொடுங்கள் என்கிறார்கள். எப்படியோ சில காரியங்களை
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் செய்து கொடுக்கின்றார்
கள். நீங்கள் சொன்னால் நடக்கும் என்று சொல்லி என்னிடம்
கொடுத்துவிடுகிறார்கள். பி.ஏ., எம்.ஏ. படித்தவர்களுடைய
பெட்டிஷன் நிறைய கையில் வைத்திருக்கிறேன். அம்மா
அவர்கள் சொல்கிறார்கள். வேலை கொடுப்பதற்கு நல்லவாய்ப்
பாக அவர்கள் படித்துவிட்டு வரும்போது தொழில் கல்வியையும்
சேர்த்து படித்துவிட்டு வரவேண்டும். அப்படித் தொழில்கல்வி
கற்றுவிட்டு வெளியே வரக்கூடியவர்கள் தங்களுடைய காலிலே
நிற்கமுடியும். திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் கூடச்
சொல்வார்கள், Try to stand on your own legs
நீ உன் சொந்தக் காலிலேயே நில். இன்னொருவன் காலிலே
ஓடாதே என்பார்கள். அதைப்போன்று அவர்களுடைய
காலிலே நின்று அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்
கொள்ளக்கூடிய அளவு நம்முடைய திட்டங்கள் அமைந்தால்,
வேலைவாய்ப்பை ஓரளவுக்குச் செய்ய முடியும் என்பதையும்
இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பிறகு ஆசிரியர்கள். இவர்கள் கல்வி கற்பிக்கும்போது
கடுமையான உழைப்பு வேண்டும். கட்டுப்பாடு வேண்டும். ஒழுக்
கம் வேண்டும். இவை மூன்றையும் ஆசிரியர்கள் போதிக்கின்றார்
கள், இவை மூன்றுமே ஒழுங்காக இருந்தால்தான் குழந்தைகள்
கட்டுப்பாட்டுடன், தாமே தம் காலில் நிற்கக் கூடிய அளவுக்கு
நிலைமை அமையும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்
கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கிறோம். அந்த
வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போது பள்ளிக்கூடத்தை ஒட்டிக்
கட்டுவதற்கு சரியில்லை என்றாலும், அவர்கள் எங்களுக்கு வீடு
இல்லை என்று சொல்வார்களேயானால், எங்கே வேண்டும் என்று
கேட்கிறார்களோ அங்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்தால்
நன்றாக இருக்கும் என்பதையும்கூறிக்கொள்ள விரும்புகிறேன்



பிறகு 'ரிசர்வேஷனில்' சொல்லுகிறேன். ஏனென்றால்,
நான் அந்த சமுதாயத்தில் பிறந்துவிட்டேன். என்னடா இந்த
அம்மா எப்போது பார்த்தாலும் இதைச் சொல்லிக்கொண்டிருக்
கிறார்கள் என்று தயவுசெய்து நீங்கள் நினைக்கக்கூடாது.
மாண்புமிகு முதல்வர் அவர்களும் நினைத்துவிடக்கூடாது.
ஏனென்றால், என்னிடம் நிறைய காகிதம் வந்திருக்கிறது.
போடி யூனியனில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவல்படி, 400
ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அந்த 400 ஆசிரியர்களிலே 12
பேர்கள்தான் எஸ்.சி., எஸ்.டி. ஆசிரியர்கள் இருக்கின்றார்கள்.
நீங்கள் முதல்வரிடத்தில் இதுபற்றிச் சொல்லக்கூடாதா என்
கிறார்கள். அதையெல்லாம் நான் சொல்லாவிட்டால், இந்த
அம்மா அதையெல்லாம் பேசாது. இந்த அம்மா அதைப்
பேசுமா ? நமக்குச் செய்யுமா என்ற ஒரு குரோத நிலையை
உருவாக்கிவிடுகிறார்கள். ஆகையால், எங்கெங்கெல்லாம்
இந்த 18 சதவீதம் இல்லாமல் இருக்கிறதோ அங்கெல்லாம்
சற்றுக் கவனம் செலுத்தி ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஏற்பாடு
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு, நான் ஒரு விஷயமாக அடிக்கடி ஆபீசரிடம் போவேன்.
கணவன் ஒரு பக்கம் வேலை செய்ய, மனைவி ஒரு பக்கம்
இருக்க, இது ரொம்பக் கொடுமை. 10 கி.மீ. தூரத்திற்குள்
இருக்கும்படி அவர்களுக்கு வேலை கொடுங்கள். அவர்கள்
தற்பொழுதுதான் கல்யாணம் ஆனவர்களாக இருப்பார்கள்.
அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கும். குழந்தைகள்
தாயிடம் இருக்க வேண்டும், அல்லது தந்தையிடம் இருக்க வேண்டு
மென்று நினைக்கும். ஆனால், கணவனையும், மனைவியையும்
கொண்டுபோய் ஒரு நூறு மைலுக்கு அப்பால் போட்டுவிடு
கிறார்கள். இதெல்லாம் கல்வித் துறையிலே மாத்திரம் அல்ல,
எல்லாத் துறையிலும் இருக்கிறது. கணவன், மனைவி இருவரும்
வேலை செய்தால், அவர்கள் 10 கி.மீ. தூரத்திற்குள் வேலை
பார்க்கும்படியான ஒரு சூழ்நிலையில், உதவியைச் செய்யும்படி
இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

விளையாட்டு மைதானம் இருக்கிறது. இங்கே, கோட்டை
யில் 5,000 பேர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு
விளையாடுவதற்கு அந்த இடம் இருக்கிறது. அதிலே யாரோ
குடிசை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அலட்சியம்
பண்ணக்கூடாது. அவர்களை வெளியேற்றக்கூடிய நிலையை
உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது எத்தனை டைரக்டர்கள் இருக்கிறார்கள்? ஆரம்
பக் கல்விக்கு ஒரு டைரக்டர். ப்ளஸ் டூ-க்கு ஒரு டைரக்டர்.
முன்பெல்லாம் ஒரே டைரக்டர்தான் இருப்பார். இப்போது
அந்தத் துறைக்குக் கூட ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரைப்

போட்டுவிட்டு, அவர் செயல்பாட்டின் கீழே மற்ற டைரக்டர்கள் எல்லாம் பணியாற்றக்கூடிய நிலை இருந்தால் வேலைகளைப் பகிர்ந்து செய்வதற்கான ஒரு நல்ல நிலைமை உருவாகும். அவர்களுக்குள்ளே ஒற்றுமை இல்லாத நிலைமையைப் பார்க்கிறோம். இதை அவர்கள் யாரும் சொல்லவில்லை. இருந்தாலும் அவர்களிடம் பேசும்போது அவர்களிடையே ஒரு ஒற்றுமை இல்லாமல் இருக்கிறதோ என்று கூட நாங்கள் எல்லாம் நினைக்கிறோம். அந்த நிலையை மாற்றுவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

பிற்பகல் 1-15

அதோடு ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ கேள்விகளின்போது சில விஷயங்களைச் செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதை நான் எழுதிக் கொடுக்கிறேன். அதையெல்லாம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டு உரையை முடிக்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு கல்வியமைச்சர்.

<u>*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித்துறை மானியத்தின் மீது இன்றைக்கு விவாதம் முடிந்து பதிலளிக்கின்ற ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. இதற்கு முன்னாலே 10 முறை இதே மன்றத்தில் கல்வி மானியத்திற்கு பதிலளித்து பேசிய எனக்கு இன்னொரு முறையும் அதாவது 11-வது முறையாகவும் பேசுகின்ற வாய்ப்பை எனக்குத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக கொள்கையைப்பற்றிப் பேசி இருக்கிறார்கள். கல்வித் துறையினுடைய கொள்கை என்பது ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு கட்சிக்கும் என்று வகுக்கப்படுகிற கல்விக் கொள்கை அல்ல. இந்தியாவிற்கு தேசிய அளவில் அதற்கென இருக்கின்ற நிபுணர்களை, அறிஞர்களைக் கொண்ட குழு அமைத்து ஒரு கொள்கையை வடித்து அந்த தேசிய கல்விக் கொள்கையைத்தான் எல்லா மாநிலங்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற முறையில் நாம் பின்பற்றி வருகிறோம். ஆகவே கட்சிகளுக்கும், கல்விக் கொள்கைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. குறிப்பாகத் தமிழ்நாட்டில் மட்டும் இந்தியை புகுத்துவதை எதிர்க்கின்ற காரணத்தால் அந்த ஒரு மாற்றத்தை



மட்டும் நாம் செய்திருக்கிறோமே தவிர மற்ற அடிப்படைகளில் தேசிய கல்விக் கொள்கையை மற்ற எல்லா மாநிலங்களையும் விட தமிழ்நாட்டில்தான் நாம் சிறப்பாகப் பின்பற்றி வருகிறோம். இந்த தேசிய கல்விக் கொள்கை இன்றிருப்பது முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடைய காலத்தில் உருவாக்கப்பட்ட ஒன்று. அதற்குப் பிறகு தேசிய முன்னணி ஆட்சி வந்தபோது கூட அதே கல்விக் கொள்கையைப்பற்றி ஆராய்வதற்கு ஆசாரியர் இராமமூர்த்தி கமிட்டி என்று ஒரு கமிட்டி போட்டார்கள். அவர்களும் ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் போய், இப்போது மதிப்பிற்குரிய திரு. நரசிம்மராவ் அவர்கள் அரசு வந்ததற்குப் பிறகு ஆந்திரப் பிரதேச முதல்வர் ஜனார்த்தன ரெட்டி அவர்களுடைய தலைமையில் ஒரு குழு போட்டு 10 நாட்களுக்கு முன்புதான் அவர்களும் ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். இந்த அறிக்கைகள் எல்லாம் இந்த தேசிய கல்விக் கொள்கையை எப்படி அமல்படுத்துவது என்பதற்கான அறிக்கைகள்தானே தவிர பெரிய அளவில் தேசிய கல்விக் கொள்கையை மாற்றம் செய்கிற அறிக்கைகள் அல்ல.

பொதுவாக நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கல்விக் கொள்கையினுடைய லட்சியம் எதுவாக இருக்கவேண்டும் என்பதற்கு நான் ஒரு குறளைச் சொல்ல விரும்புகிறேன்:—

> '' அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
> என்னுடைய ரேனும் இலர்.''

செல்வங்கள் எல்லாம் அறிவாற் படைக்கவும் காக்கவும் படுதலின், அஃது உடையாரை எல்லாம் உடையார் என்றும், அவை எல்லாம் முன்னே அமைந்து கிடப்பினும் அழியாமல் காத்தற்கும் தெய்வத்தான் அழிந்துழிப் படைத்தற்கும் கருவியுடையர் அன்மையின், அஃது இல்லாதாரை, என்னுடையரேனும் இலர் என்றும் கூறினார் என்பதுதான் பரிமேலழகருடைய உரையாகும். அறிவு இருந்தால் எல்லாம் உண்டு. அறிவு இல்லை என்றால் எல்லாம் இருந்தும், இல்லை என்பதுதான் இந்தக் குறளினுடைய பொருள் ஆகும். அப்படிப் பார்க்கிறபோது இந்தியாவில் எல்லா வளமும் இருக்கிறது. ஆனால் நாம் ஏழை நாடாக இருந்து கொண்டு இருக்கிறோம். ஆனால் ஜப்பானில் எந்த வளமும் கிடையாது. அவர்கள் பணக்கார நாடாக இருக்கிறார்கள். அப்படி என்றால் என்ன வித்தியாசம் என்றால் இந்தக் குறளில் என்ன சொல்லப்படுகிறதோ அந்த வித்தியாசம்தான். உலகத்தில் இருக்கிற விஞ்ஞானிகளில் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியாவில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இருந்தாலும் நாம் ஏழை நாடாகத்தான் இருக்கிறோம். ஜப்பானில் ஆயிரத்திற்கு மூன்றுபேர் விஞ்ஞான அறிவு படைத்தவர்களாக இருக்கிறார்கள்.

[டாக்டர் செ. அரங்கநாயகம்]

இந்தியாவில் ஆயிரத்திற்கு 3 பேர்தான் விஞ்ஞான அறிவுபடைத்தவர்களாக இருக்கிறார்கள். கணிதம், விஞ்ஞானம், மருத்துவம் போன்ற துறைகளில் அறிவுபெற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே நம் கல்வித் துறையைப் பொறுத்தமட்டில் இங்கே இருக்கின்ற மக்களில் இந்தமாதிரி அறிவுபடைத்தவர்கள், விஞ்ஞான அறிவுபடைத்தவர்கள், உயர்ந்த அறிவு படைத்தவர்கள் எவ்வளவு பேரை நாம் அதிகப்படுத்த முடியுமோ, கூடுதலாக்க முடியுமோ அந்த அளவுக்கு கல்வித் தரமானது சமுதாயத்தினுடைய முன்னேற்றத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் பயன்படும் என்று நாம் நம்புகிறோம். அந்த அடிப்படையில் தமிழ்நாட்டின் கல்வித் துறை என்பது தமிழ்நாட்டை ஒரு ஜெர்மனியாக அல்லது ஜப்பானாக உருவாக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவிக்குக் கிடைத்த ஒரு நல்ல ஆயுதமாக, படைக்கலனாக, கருவியாக இருக்கும் என்ற உறுதியினை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1—20

கல்வியினுடைய லட்சியம் பற்றி ஆச்சார்ய இராமமூர்த்தி கமிட்டி கூறுவதாவது, "Value education is to be construd as a continuous process which is to be sustained throughout the proceses of growth of the individual from childhood to adolescence ; that to adulthood and so on." குழந்தைகள் பிறந்ததிலேயிருந்து முதியவன் ஆகின்றவரைக்கும் தொடர் நிகழ்வாக, தொடர் நிகழ்ச்சியாக கல்வி பெறுவது, பயன் தரும் கல்வி பெறுவது இருக்கவேண்டும் என்பது ஆச்சார்ய இராமமூர்த்தி கமிட்டியினுடைய ஒரு கருத்தாகும். அதே போல, "It is also the role of value education to bring about integration of the hand, head and heart to ensure that education does not alienate the students from the family, community and life." வாழ்க்கையிலேயிருந்து, ஒரு சமுதாயத்திலே இருந்து அல்லது குடும்பத்திலே இருந்து மாணவனை அன்னியப்படுத்தாத விதத்தில் ஒருவனுடைய அறிவு வளர்ச்சியையும் ஒருவனது உள்ளத்தையும், உள்ளப் பண்பாட்டையும் ஒருவனுக்கு இருக்கின்ற ஆற்றல்வளர்ச்சியையும் ஒருங்கிணைத்துக் கொண்டு போகக்கூடிய அளவுக்கு இப்போதும் பயன் தரக்கூடிய கல்வி முறையானது இருக்க வேண்டும் என்று அவர்கள் சொல்கின்றார்கள். "One of the key roles of education should be creation of a work culture at all stages of education so that the individval develops into a socially and economically useful human being with respect for the welfare of living beings." சுற்றியும் இருக்கின்ற மற்றவர்களுக்குப்பயன்படக்கூடிய அளவுக்கு சமுதாய ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பயன்படக்கூடிய அளவிற்கு ஒரு தனி மனிதனை உருவாக்கக்



[டாக்டர் செ. அரங்கநாயகம்]

கூடிய விதத்தில் கல்வி முறை இருக்கவேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். "Critical appreciation and concern for the cultural and artistic heritage of the commnnity—country has to be instilled among the students." மாணவர்களுடைய உள்ளங்களில் நம்முடைய பாரம்பரியம்பற்றி, கலாச்சாரத்தைப் பற்றி நல்ல உணர்வுகளையூட்ட வேண்டும் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்து இருக்கின்றார்கள். "it is this package of values which will help the creation and sustenance of an enlightened and humane society in the country." ஒரு மனிதாபிமானமுள்ள அறிவார்ந்த சமுதாயத்தை இந்த நாட்டிலே உருவாக்குவதற்கு இந்த முறையில் கல்வித்துறையானது முயற்சி எடுக்க வேண்டும்என்பது ஆச்சார்ய இராமமூர்த்தி கமிட்டியினுடைய கருத்து. இராமமூர்த்தியினுடைய கருத்து என்றால் அது தேசிய கல்விக் கொள்கையினுடைய அடிப்படையே இதுதான் என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நல்ல கொள்கைகளுக்கேற்ப தமிழ்நாடு கல்வித் துறை இந்த கல்விப் பணியினை ஆற்றும் என்ற நம்பிக்கையையும் உறுதியையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சார்பில் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி.)

கல்விக்கு இன்னொரு பெயர் மனித சக்தியைப் பயன்படுத்துவது என்பதாகும். நம்முடைய நாட்டிலே எல்லா வளங்கள் இருந்தும் நம் நாட்டிலே இருக்கின்ற மிக முக்கியமான செல்வமாகியது மக்கள் தொகை. இவர்களுடைய அறிவையும் ஆற்றலையும் நம்முடைய மக்களின் இடத்திலே மறைந்து கிடக்கின்ற அறிவையும் ஆற்றலையும் பண்படுத்தி பயன்படுத்துகின்ற விதத்தில் கல்வித்துறை கல்விப் பணியாற்ற வேண்டும்.

இன்றைக்கு 100 கோடி பேர்கள் இருக்கிறோம் என்றால் ஒரு மனிதனைப் பார்த்தவுடன் அவன் 3 நேரமும் சாப்பிடுகிறான் என்பது அனைவருக்கும் தெரிகிறதே தவிர, அவனிடத்திலே மறைந்து கிடக்கின்ற அறிவையும், ஆற்றலையும் சரியானபடி வளர்ப்போமேயானால் அந்த ஒருவன் 10 பேர்களுக்கு சாப்பாடு போடுவான் என்கின்ற ரகசியத்தை நாம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. தமிழ்நாடு கல்வித் துறை அந்த ரகசியத்தை உணர்ந்துள்ளது. அந்த முறையில் நம் பள்ளிகளிலே கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு அவர்களிடத்திலே மறைந்து கிடக்கின்ற அறிவையும் ஆற்றலையும் வளர்க்கின்ற அந்த நல்ல பணியினை சரியாக செய்யும் என்கின்ற நம்பிக்கையை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[டாக்டர் செ. அரங்கநாயகம்]

வேலை வாய்ப்புகள் இல்லை என்பதல்ல. சில பேர் கல்வித் துறையிலே இன்ஜினியரிங் கல்வி ஆரம்பிக்க வேண்டும் என்றால் படித்தவனுக்கு வேலையில்லை என்று சொல்லுகின்றார்கள். இந்தியாவை ஒரு அமெரிக்காவாக ஆக்கவேண்டுமென்றால், எவ்வளவு வேலை காத்துக் கிடக்கிறது என்பதை நாம் பார்ப்போமேயானால், வேலையில்லை என்பதல்ல, நம்முடைய குழந்தைகளுக்கு, நம்முடைய இளைஞர்களுக்கு நம்முடைய மாணவர்களுக்கு, நாம் எத்தனை பேர்களுக்கு எந்த அளவிற்கு கல்வி தர வேண்டுமோ அந்த அளவிற்கு கல்வி தந்து உயர்த்துவதன் மூலம் அவர்கள்தான் வேலை வாய்ப்புகளை உருவாக்கப் போகிறார்கள் என்கின்ற உண்மையை தான் இந்த சட்டமன்றத்திலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

வேலை வாய்ப்புகள் இல்லை, அதுவும் இந்தியாவில் இல்லை என்பது சரியான கருத்தே அல்ல. வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். அந்த வேலை வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய இளைஞர்களை நாம் உருவாக்க வேண்டும். அந்தப் பணியை கல்வித் துறை செய்தாக வேண்டும். ஒரு முக்கிய மாறுதல் ஒன்றை நான் இங்கே குறிப்பிட்டுக்கூற விரும்புகிறேன்.

பிற்பகல் 1—25

உங்கள் எல்லோருக்கும் தெரியும். சிறுபான்மை மக்களுக்கு அரசியல் சட்டத்தில் தரப்பட்டிருக்கிற உரிமையானது. அந்த உரிமையின் அடிப்படையில் அவர்கள் அரசின் அனுமதி பெறாமலேயே பள்ளிகளை ஆரம்பிக்கலாம். ஆரம்பித்ததற்குப் பிறகு நாம் அனுமதி தர மறுத்தால் அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். வழக்கு மன்றத்திலே நமக்கு ஆணை பிறப்பிக்கப்படுகிறது, அனுமதி தரச் சொல்லி. நாம் அதை ஏற்று தருகின்றோம். அனுமதி தருவதோடு மட்டும் விடுவதில்லை. அவர்கள் ஆரம்பித்த காலத்திலிருந்து நிதி உதவியையும் தர வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கும் கோர்ட்டிலே உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் அனுமதி தருவதில்லை, அரசாங்கத்தைக் கேட்காமலேயே பள்ளிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. அந்தப் பள்ளிகளுக்கு நாம் பணம் தர வேண்டுமென்று கோர்ட் உத்தர விடுகிறது. தர முடியாது என்று சொல்கிற அளவுக்குக் கூட அரசுக்கு உரிமையில்லை என்கின்ற நிலைமை இன்றைக்கு இருப்பது நம்முடைய சமய சார்பற்ற தன்மைக்கே ஒரு குந்தகத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் நான் இங்கே கொஞ்சம் லேசாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் அதைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருப்பதற்கு இது தருணம் அல்ல. இருந்தாலும் பெரும்பான்மை மக்களுக்கு, இந்துக்



[டாக்டர் செ. அரங்கநாயகம்]

களுக்குத் தருகின்ற அத்துணை சலுகைகளையும் அவர்களுக்குத்
தர வேண்டும் என்கிற அடிப்படையில் தான் அதைச் சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அரசு நம்முடைய அனுமதியை மறுத்த நிலையிலே
நம்முடைய கையிலே இருப்பதை பிடுங்கிக் கொள்வது போல
மானியம் வாங்குவதை ஒரு அரசு பார்த்துக் கொண்டிருக்க
முடியாது. இருந்தாலும் அரசியல் சட்டப்படி தர வேண்டு
மென்று இருக்கிற அடிப்படையில் தந்து கொண்டிருக்கிறோம்.
அதை இனிமேற்கொண்டு இந்துக்களானாலும் சரி, கிறிஸ்
தவர்களானாலும் சரி, முஸ்லீம்களானாலும் சரி, அவர்களாக
கல்வி நிறுவனங்களை ஆரம்பிக்கிறபோது கல்வி நிறுவனங்
களுக்கு இனி நிதி உதவி கிடையாது. இனிமேல் ஆரம்பிக்கப்
போகிற தனியார் துறை கல்வி நிறுவனங்களுக்கு நிதி உதவி
நிறுத்தப்படுகிறது. இனி கிடையாது, அதிலே பாரபட்சம்
கிடையாது. இந்துக்களுக்கும் ஒரே முறைதான், கிறிஸ்தவர்
களுக்கும் ஒரே முறைதான். (மேசையைத் தட்டும் ஒலி)
முஸ்லீம்களுக்கும் ஒரே முறை தான். ஆகவே, இப்படி ஒரு
நியாயத்தைத் தருவதன் மூலம் அரசுக்கு இருக்கின்ற அந்த
மேலாண்மையை சுட்டிக்காட்ட நாங்கள் விரும்புகிறோம்.
ஆகவே, இந்த முடிவை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்
எடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

இதிலே இன்னொன்றையும் நான் இந்த இடத்தில் குறிப்பிட
விரும்புகிறேன். இந்த டிரெயினிங் ஸ்கூல்ஸ் பற்றி எல்லாம்
சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இதனுடைய பாதிப்பு
களை நாங்கள் உணர்ந்துஅனுமதிதரமறுத்திருக்கிறோம். அனுமதி
தர மறுத்ததோடு மட்டுமல்லாமல் இதை முழுவதையும்
ஒழித்துவிட வேண்டும் என்பதற்காக புதிய ஒரு திட்டத்தையே
கொண்டு வந்தோம். அது, மேல்நிலைப் பள்ளிகளில் வொக்கே
சனல் கோர்ஸ் ஆக செக்கண்டரி கிரேட் டிரெயினிங் இருக்கும்
என்று சொல்லி ஏறக்குறைய 500 பள்ளிகளில், அரசுப் பள்ளி,
தனியார்ப் பள்ளிகளில் எல்லாம் நடத்திக் கொண்டிருந்தார்
கள். நல்ல முறையில் நடந்து கொண்டிருந்தது. எங்க
ளுடைய நோக்கம், 3 ஆண்டுக் காலத்தில், இனி மேற்கொண்டு
2 ஆண்டு டிரெயினிங் ஸ்கூல் என்கிற அந்தத் திட்டம் அறவே
கிடையாது. அதை அரசு எடுத்து விடுகிறது., இனி மேற்
கொண்டு முழுக்க முழுக்க ஹையர் செக்கண்டரி பள்ளிகளில்
அந்த வொக்கேசனல் கோர்ஸ் என்கிற அடிப்படையில் தரப்
படுகிற அந்தப் பயிற்சி மட்டும் தான் இருக்கும் என்று சொல்லு
வதன் மூலம் ஒரு தவறான முறை வளர்ந்து வருவதைத் தடுத்து
நிறுத்துகிற திட்டத்தோடு அன்றைக்கு அதைக் கொண்டு
வந்தோம். ஆனால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்
களுடைய ஆட்சிக்குப் பிறகு, அதிலே ஏற்பட்ட சில மாற்றங்

களின் காரணமாக நாம் எதை ஒழிக்க வேண்டுமென்று கருதி னோமோ அது வளரவும், எது இருக்க வேண்டுமென்று கருதி னோமோ அது ஒழிக்கப்பட்ட நிலையையும் நாம் பார்த்தோம்.

இங்கே சில சட்டமன்ற உறுப்பினர்கள் யோசனையாகச் சொன்னார்கள். இன்றைக்கு அது பெரிய அளவிலே வளர்ந்து நாம் அனுமதி மறுத்தாலும் தினமும் இரண்டு பள்ளிகளுக்கு நம்முடைய உயர் நீதிமன்றத்திலிருந்து அனுமதி பெற்று வந்து விடுகிறார்கள். அரசியல் சட்டத்தைக் காட்டி அவர்கள் தருகின்ற காரணத்தால் அவர்களை நாங்கள் குறை சொல்ல முடியவில்லை. இருந்தாலும் ஒரு தவறான நிலைமை வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை அரசு உணர்கிறது. இன்றைக்கு நீதிமன்றத்தினுடைய கருத்துக்கு ஏற்ப நாம் அனுமதி தந்து கொண்டிருந்தாலும் விரைவில் இந்தப் பள்ளிகளை ஒழிக்கவும், பழைய வொக்கேசனல் கோர்ஸ்-ஆக இருந்த ஆசிரியர் பயிற்சியைக் கொண்டு வரவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடன் கலந்து நடவடிக்கை எடுப் போம் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுக்கூற விரும்பு கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சிறுபான்மை என்கிற அடிப்படையில் தங்களுடைய உரிமை களை இப்படி பயன்படுத்தி வருகிற இந்த நிலைமைகள் அதற்குப் பிறகு நீடிக்காது என்கிற நம்பிக்கையையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நவோதயா பள்ளிகள். இதைப்பற்றி காங்கிரஸ் உறுப்பினர்கள் அதிகம் கவலைப் படுகிறார்கள். அது வந் தால் நல்லது, ஏன் விட்டு விடுகிறீர்கள், 2½ கோடி ரூபாய் தருகிறார்கள், ஆனால் வேண்டாம் என்று சொல்கிறீர்களே அது நேருவின் பெயரில் இருக்கிறது......

பிற்பகல் 1-30.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> பேரவையின் முன் அனுமதி யுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: ஆகவே அதுவந்தால் நல்லதுதானே என்று கருத்துக்களை அடிக்கடி கூறிக்கொண்டிருக்கி றார்கள். இப்போதும் சொல்லியிருக்கிறார்கள். நவோதயாப் பள்ளி உருவான நேரத்தில் தமிழ்நாட்டின் கல்வி அமைச்சராக நான் இங்கே இருந்தேன். அந்தத் திட்டத்தை மத்திய அமைச்சர் வெளியிடுவதற்கு முன்னாலேயே இப்படி ஒரு திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து அன்றைக்கு அது கருவாக



இருந்த நேரத்திலேயே நம்முடைய அதிருப்தியை, எதிர்ப்பைக் காட்டியிருக்கிறோம். அதற்கு ஒரு காரணம் அந்த நேரத்திலே சொல்லப்பட்டது. நவோதயாப் பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கும். இந்தி பயிற்று மொழியாக இருக்கும்; 50 சதவிகிதம் மாணவர்கள் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர் களாக இருப்பார்கள், மீதி 50 சதவிகிதம் மாணவர்கள் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்; 2½ கோடி ரூபாய் செலவாகும், எல்லாம் இலவசம் என்று சொன்னார்கள். இதை எதிர்த்ததற்கு காரணம் இந்தி இருக்கிறது என்பதல்ல. தமிழ்நாட்டில் நடத்தப்படும் ஒரு பள்ளிக்கூடத்தில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கிறது. இந்தி பயிற்று மொழியாக இருக்கிறது. ஆனால் தாய்மொழியான, வட்டார மொழியான தமிழ் பயிற்று மொழியாக இல்லையே என்ற அடிப்படையிலே நாம் எதிர்ப்பைத் தெரிவித்தோம். அதுமட்டுமல்ல. பள்ளிகளிலே படிக்கிற மாணவர்களுக்கு அவர்களுடைய தாய்மொழியிலேதான் கல்வி தர வேண்டுமென்பது தேசியக் கல்விக் கொள்கை. அந்த தேசிய கல்விக் கொள்கையின் ஒரு புறத்திலே சொல்லப்பட்டிருக் கும் இந்தக் கொள்கைக்கு விரோதமாக நவோதயாப் பள்ளிகள் செருகப்பட்டிருப்பதை நாங்கள் பார்த்தோம். தேசிய கல்விக் கொள்கை என்பது அறிஞர்களாலே, நிபுணர்களாலே உருவாக் கப்பட்ட கல்விக் கொள்கை என்பது தெளிவாகிறது. நவோதயாப் பள்ளிகள் என்பது அரசியல் காரணத்திற்காக நுழைக்கப்பட்ட தென்பதை நாம் பார்க்க முடிகிறது. என்ன காரணம் என்றால் தமிழ்நாட்டிலே படிக்கிறவன், தமிழ்மொழியிலே படிக்கிறவன் தமிழ்நாட்டைப் பற்றி மட்டும் நினைக்கிறான். இந்தியாவைப் பற்றி நினைப்பதில்லை. அப்படி எல்லா மாநிலங்களிலும் இருந் தால் இந்தியாவைப் பற்றிக் கவலைப்படுகிறவர்கள் யார்? ராஜீவ் காந்தி தவிர யார் என்ற நிலைமை அன்றையதினம் இருந்தது. இன்றைக்கும் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. நான் மறுக்கவில்லை. ஆனால் நாம் சொல்கிற கருத்து, நாம் தமிழன் என்கின்ற முறையிலேதான் இந்தியன் ஆகிறோம். நான் தமிழன் அல்ல என்றால் இந்தியனும் அல்ல. நான் தமிழ்நாட்டில் வாழும் தமிழன் என்ற முறையிலேதான் இந்தியன் என்ற உரிமை எனக்குக் கிடைக்கிறது. நான் தமிழன் அல்ல என்கின்றபோது, இந்தியன் என்கிற உரிமை இல்லாமல் போகிறது. ஆகவே இந்த அடிப்படையிலே தாய்மொழியான தமிழைப் புறக்கணித்து ஒரு கல்வித் திட்டத்தை, அதுவும் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புக்குத் தலைமையிடமாக இருக்கும் தமிழ்நாட்டில் கொண்டுவருவது நடக்கின்ற ஆட்சிக்கு ஒரு எதிர்ப்பை உருவாக்குவது போல ஆகு மென்ற கருத்தின் அடிப்படையில் அன்றைக்கு ஒரு பாதுகாப்பான நடவடிக்கையை எடுத்தோம் (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் நவோதயா பள்ளிகள் பற்றிப் பேசி வருகின்றபோது, அங்கே Medium of Instruction either English or Hindi என்று சொன்னார்கள். ஆனால் அதே நேரத்தில் வெளி மாநிலங்களிலிருந்து வருகிற மாணவர்கள் 50 விழுக்காடும், நமது மாநிலத்திலிருந்து மாணவர்கள் 50 விழுக்காடும் படிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதென்று சொன்னார்கள். எனக்கு ஒரு ஞாபகம். அங்கே படிக்கும் மாணவர்கள், தமிழ் மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள் என்றால் தமிழையும் ஒரு பாடமாகப் படிப்பதற்கு அங்கே வழிசெய்யப்பட்டிருக்கிறது என்பது நவோதயாப் பள்ளிகள் பற்றிய குறிப்பில் உள்ள ஒரு தத்துவம். அது அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு வந்ததா என்று அறிய ஆசைப்படுகிறேன். ஆந்திராவில் உள்ள தெலுங்கர்களுக்கும், கர்நாடகத்தில் உள்ள கன்னடியர்களுக்கும், கேரளாவிலே இருக்கும் மலையாளம் பேசுகிறவர்களுக்கும் இல்லாத எதிர்ப்பு உணர்வு ஏன் நமக்கு மட்டும் இருக்க வேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை. அதையும் நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மாநிலம்தான் இந்தி எதிர்ப்பிலே முதல் இடத்திலே இருந்த மாநிலம்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திராவில், இல்லாத எதிர்ப்பு, கேரளாவிலே இல்லாத எதிர்ப்பு, கர்நாடகத்திலே இல்லாத எதிர்ப்பு இங்கு மட்டும் ஏன் என்று கேட்பது, ஒரு ஐம்பதாண்டுக்கால தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றைத் தெரிந்துகொள்ளாமல் கேட்பதாகத்தான் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழ்நாட்டினுடைய இந்தி எதிர்ப்பின் உணர்வின் காரணமாகத்தான், '' நீங்கள் விரும்புகிறவரைக்கும்' ஆங்கிலம் இருக்கும் '' என்ற உறுதிமொழியைப் பண்டித நேரு அவர்களே தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கூட அதை உணர்ந்துதான் சொன்னார்கள். இங்கே ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒருவேளை காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களில் டெல்லியிலிருந்து போடும் உத்தரவுகள் அனைத்துக்கும் தலையாட்டலாம். ஆனால் வேறு கட்சியைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் அப்படி இருக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-35.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு '' கிளாரிஃபிகேஷன் ''.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்டதற்கு பதில் வருகிறது. ஒவ்வொன்றுக்கும் இப்படிக் கேட்டால் வளர்ந்து கொண்டே போகும்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தி எதிர்ப்பு உணர்வு கேரளாவிற்கு இல்லை, கர்நாடகாவிற்கு இல்லை என்று சொல்லவில்லை. நவோதயா பள்ளிகளுக்கு எதிர்ப்பு அந்த மாநிலங்களில் எல்லாம் இல்லை. நவோதயா பள்ளிகளுக்கு அந்த மாநிலங்களில் எல்லாம் எதிர்ப்பு இல்லாதபோது ஏன் நம்முடைய மாநிலத்தில் மட்டும் எதிர்ப்பு இருக்க வேண்டும். நமக்குக் கிடைக்கிற வாய்ப்பை நாம் ஏன் எதிர்க்க வேண்டும் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத்தான் அமைச்சர் பதில் சொன்னார்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுவதை முழுவதும் கேட்டுவிட்டு மாண்புமிகு உறுப்பினர் சொல்லலாம். நாம் இப்போது மாறிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சற்று பொறுமையாக இருந்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் என்ன பேசுகின்றார் என்பதை முழுமையாகக் கேட்டால் நல்லது என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் தமிழக அரசு ஒரு புதிய கொள்கை முடிவை எடுத்திருக்கிறது. அந்த புதிய கொள்கை முடிவு என்ன என்பது எனக்கு ஏற்கெனவே தெரியும். அதனை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிக்க இருக்கிறார்கள். அதற்கு வாய்ப்புத் தராமல் மாண்புமிகு உறுப்பினர் தவறாக புரிந்து கொண்டு குறுக்கீடு செய்து கொண்டே இருக்கிறார் என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த நவோதயா பள்ளிகளுடைய கல்வித் திட்டத்திலே பல மாறுதல்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாறுதல்களில்—தாய்மொழிக் கல்வி எட்டாவது வகுப்பு வரைக்கும் தரும் என்பதும், அதற்கு மேல் ஆங்கிலம் அல்லது இந்தி இருக்கும் என்பதுபோன்ற மாறுதல்களை அவர்கள் கொண்டு வந்திருப்பதாக எங்களுக்கு விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் இப்போது அந்த நவோதயா பள்ளிகள் நடைபெற்று வருகின்றன.

அதோடு இராமமூர்த்தி கமிட்டிகூட நான் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் மாறுதல் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறது. நானும் மத்தியிலே உள்ள கல்வி அமைச்சரை, வேண்டுமானால் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களையும்—அவர்கூட முன்பு கல்வி அமைச்சராக இருந்தவர்தான்—சந்தித்து, தமிழ்நாட்டிலே நவோதயா பள்ளிகளைக் கொண்டுவருவதற்கு இப்படிப்பட்ட மாறுதல்கள் இருக்கின்றனவா என்று தெரிந்து அதற்குப் பிறகு நவோதயா பள்ளிகளை ஆரம்பிப்பதற்கு எங்களுடைய ஆதரவைத் தர முடிவு எடுத்திருக்கிறோம் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இரண்டரை கோடி ரூபாய் செலவில் மாவட்டத்திற்கு ஒரு பள்ளிக்கூடம் வருவதை நாங்கள் என்ன காரணத்திற்காக தடுத்துக் கொண்டிருந்தோமோ அந்தக் காரணம் இல்லை என்று சொல்லும்போது, தொடர்ந்து தடுத்துக் கொண்டிருப்பது நல்லதல்ல என்பதையும் கருத்திலே கொண்டுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள். மாநில அரசின்கீழ் செயல்படுகிற பள்ளிகளைப் போல் அல்லாமல், மத்திய அரசின் கல்வித் திட்டத்தின்கீழ் செயல்படுகிற கேந்திர வித்தியாலயா, சி.பி.எஸ்.ஈ. பள்ளிகளைப் போல அந்த நவோதயா பள்ளிகளும் அந்தத் திட்டத்தின்கீழ், அவர்களுடைய அதிகாரத்தின்கீழ் செயல்பட இருக்கிறது என்பதையும், அதை அனுமதித்திருக்கிற நாம் இதையும் அனுமதிக்கிறோம்; இதை எதிர்க்கவில்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக நவோதயா பள்ளிகள் மாற்றங்களோடு தமிழ்நாட்டிலே இனி செயல்படும்.

இதிலே குறிப்பாக நான் சொல்ல வேண்டிய ஒன்று—நவோதயா பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்கின்றபோது ஒவ்வொரு மாவட்டத்திலும் வாழ்கின்ற கிராமத்து மாணவர்கள் மத்தியில் ஒரு சோதனை நடத்தி அதிலே மிகச் சிறந்த அறிவு படைத்த மாணவர்களைச் சேர்க்கின்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தாய் மொழியில் படிக்கக்கூடிய, அதில் தான் படிக்க முடியும் என்ற நிலையில் உள்ள கிராமத்து ஏழை மாணவர்களுடைய நிலையைப் பற்றி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சிந்தித்து ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள். இங்கே நான் ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேல்நிலைக் கல்வி முறை வருவதற்கு முன்பு கல்லூரியில் பி.யூ.சி. வகுப்பு இருந்தது. அந்த வகுப்ப நடந்து கொண்டிருந்த நேரத்தில், என்ன படித்திருக்கிறீர்கள் என்று கேட்டால், பி.யூ.சி. ஃபெயில் என்று சொல்லுவார்கள். இன்றைக்கும் அப்படிச் சொல்லக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அவன் எஸ்.எஸ்.எல்.சி.யோடு படித்து நிறுத்தியிருந்தால், எஸ்.எஸ்.எல்.சி பாஸ் என்று சொல்லிக் கொண்டிருப்பான். தெரியாத்தனமாக பி.யூ.சி. வகுப்பிலே போய் சேர்ந்து, அதுவரை தமிழிலே படித்தவன் அங்கே போய் ஆங்கிலத்திலே படித்தால், எதிர்பாராத விதமாக ஃபெயில் ஆகி வாழ்க்கை பூராவும் நான் பி.யூ.சி ஃபெயில், பி.யூ.சி. ஃபெயில் என்று சொல்லிக் கொண்டிருக்கிற ஒரு கூட்டம் கிராமத்து அளவிலே நிறைய இருக்கின்றன.



ஆகவே அப்போது பி.யூ.சி. கல்வியே தவறு என்று தேசிய கல்விக் கொள்கையிலே சொல்லப்பட்டிருக்கிற காரணத்தால் அதை நாம் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கொண்டு வந்து மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தி, பதினோராவது, பன்னிரண்டாவது வகுப்புகளைக் கொண்டு வந்தோம் அதிலும் பத்தாவது வகுப்பிலே, எந்த மொழியிலே படிக்கிறானோ அதே மொழியிலேயே எந்தப் பள்ளியிலே படிக்கிறானோ அதே பள்ளியிலேயே அதே மொழியிலேயே தாய் மொழியிலேயே 11-வது, 12-வது வகுப்புகளிலே அறிவு பெறுகின்ற நிலைமையை உருவாக்கினோம். அதாவது இரண்டாண்டு கல்லூரிக் கல்வியை, ஏறக்குறைய ஆயிரத்திற்கு மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில், கிராமம் தொட்டு கொண்டு வந்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருக்கு உண்டு. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). இது இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் நடைபெறாத ஒரு கல்விப்புரட்சியாகும். அந்தப் புரட்சியினுடைய விளைவு என்ன? பி.யூ.சி. இருக்கின்ற போது என்ஜினியரிங் கல்லூரியிலே 18 சதவீதம் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் இருந்தார்கள். 16 சதவீதம், $16\frac{1}{2}$ சதவீதம் அவர்களுக்கு குறைந்தபட்ச மதிப்பெண், பாஸ் ஆனால் போதும், பி.யூ.சி.யிலே பாஸ் ஆனால் போதும். 50 மார்க் அல்லது 60 மார்க் என்று மற்றவர்களுக்கு இருப்பது போல் இடையாது. பாஸ் ஆனால் போதும் என்ற நிலையிலே கூட அந்த 18 சதவீதத்தை அவர்கள் பூர்த்தி செய்யவில்லை. தி.மு.க. ஆட்சியில் அந்த ஒரு சதவீதத்தை எடுத்து, போனால் போகுது பிற்பட்டோர் பையன் அடையட்டும் என்று தரவில்லை: வேறு விதத்திலே மற்றவர்களுக்குத் தந்து அவர்கள் பூர்த்தி செய்தார்கள். ஆனால், இந்த மேல்நிலைக் கல்வி வந்ததற்குப் பிறகு தாழ்த்தப்பட்ட மக்கள் 18 சதவீதத்தை பூர்த்தி செய்தார்கள், என்பது மட்டுமல்ல. ஓப்பன் காம்பெட்டிஷனிலே 1 சதவீதம், $1\frac{1}{2}$ சதவீதம் பெறுகின்ற அளவுக்கு அறிவால் உயர்ந்து இருக்கிறார்கள். இதை ஒரு மிகப் பெரிய சமுதாயப் புரட்சியாக நாம் கருதுகிறோம். அதற்குக் காரணம் தாய்மொழிக் கல்வி. ஆகவே தாய்மொழியிலே கல்வி தந்தால்தான் இவர்கள் படிக்க முடியும் என்பது.

பிற்பகல் 1–40

அதேபோல பம்பாயிலே கூட ஒரு பிரச்சினை. அங்கே 8-வதுக்கு மேல் தாய்மொழிக் கல்வி இல்லை. பம்பாயில் இருக்கிற சமுதாய உறவினர்கள் கூட்டங்களில் அதிகமாக தமிழ் இளைஞர்கள் இருப்பதற்குக் காரணம் அவர்கள் படிப்பை 8-வதோடு நிறுத்திவிடுவதுதான். ஆகவே, இன்றைய தினம் அங்கே மேலும் தாய்மொழியிலே கல்வி தரவேண்டும் என்கிற ஒரு முயற்சி எடுத்து, அவர்களுக்குப் பாடப் புத்தகங்களை அனுப்பி பம்பாயிலே வாழுகிற தமிழர்களுக்குக்கும் கூட இன்றைக்கு நாம் உதவி செய்து இருக்கின்றோம். ஆக, தாய்மொழிக் கல்வி

என்பது. ஆங்கில மொழியிலே படிக்க முடியாதவர்கள்
அதனாலே அறிவை வளர்த்துக் கொள்ள முடியாதவர்கள்,
சாதாரணக் குடும்பங்களிலே இருந்து வருகின்றவர்களைக்
கை தூக்கிவிட வேண்டுமேயானால் இன்றைக்கு சமுதாயத்திலே
ஏழ்மையின் காரணமாக நல்ல அறிவுபடைத்த குழந்தைகள்
இருக்கின்றன; ஆனால், படிக்க வசதியற்ற காரணத்தினால்
படிக்க வாய்ப்பை இழந்து ஆடு, மாடு மேய்த்துக்கொண்டு
ஏதாவது ஒரு வேலையைச் செய்து கொண்டு இருந்துவிடுகிறார்
கள். அந்தக் குழந்தைகளினுடைய அறிவும் ஆற்றலும் சமுதாயத்
திற்குப் பயன்பட முடியாமல் போகிறதே என்பது மட்டுமல்ல,
அந்த அறிவும் ஆற்றலும் வீணாகப்போகிறது என்பதை
நாம் உணர்கின்றோம். அதைத் தடுத்து நிறுத்தி, பணம்
இல்லாத காரணத்தினாலே அவர்களுடைய அறிவும் ஆற்றலும்
சமுதாயத்திற்குக் கிடைக்காமல் போகக்கூடாது என்கிற முடிவில்
மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தாய் மொழியிலேயே
கல்வி தருகிற அத்தகைய உயர்ந்த அறிவு படைத்த அந்த
ஏழை வீட்டு கிராமத்துக் குழந்தைகளைப் பொறுக்கியெடுத்து ஒரு
இடத்திலே வைத்து அவர்களுக்கு உணவும் உடையும் படிப்பும் மற்ற
வசதிகளும் தந்து நவோதயா பள்ளிகளின் மூலம் என்ன நடை
பெற வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்களோ அதைவிட
அதிகபடியான அளவிற்கு — ஆந்திராவிலே இதே பிரதமராலே
ஆரம்பிக்கப்பட்ட ரெசிடென்சியல் பள்ளிகளிலே என்ன நடை
பெறுகிறதோ, அதைப்போல—ஒரு நல்ல மறுமலர்ச்சியை தமிழ்
நாட்டில் ஏற்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவித் அவர்கள்
முடிவு செய்து இருக்கிறார்கள் (பலத்த மேசையைத் தட்டும் ஒலி)
என்பதை இங்கே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்பு
கின்றேன் அவைகளை எல்லாம் ஸ்கூல்ஸ் ஆஃப் எக்செலென்ஸ்
என்று வைத்துக்கொள்ளலாம். ஒரு சமுதாயத்தினுடைய
மேன்மைக்கு, மெஜாரிட்டி, மைனாரிட்டி என்பது ஆட்சிக்கு
வருவதற்காக இருக்கலாம். ஆனால் சமுதாயம் முன்னேறுறதற்கு
நுற்றுக்கு 4 பேர், 3 பேராக இருக்கக்கூடிய அறிஞர் பெருமக்க
ளாலேதான் சமுதாய மாற்றங்கள், சமுதாய முன்னேற்றங்கள்
ஏற்பட்டு வருகின்றன ஆகவே அப்படி Men of excellence
அவர்களை உருவாக்க இந்தியாவிலே இதுவரையிலும் எந்த
மாநிலத்திலேயும் ஒரு குறிப்பிடத்தக்க முயற்சி எடுக்கப்பட்டது
இல்லை.

அமெரிக்காவிலே இருக்கின்ற கல்வித் திட்டம் பற்றி அவர்கள்
என்ன சொல்கிறார்கள் என்றால், ''அமெரிக்கனுக்கு விரோதி
வெளியிலே இல்லை' அமெரிக்காவிலே இருக்கின்ற கல்வித்
திட்டம் தான். ஏனென்றால் சராசரி அமெரிக்கனைத் தான் அது
உருவாக்கிக் கொண்டு இருக்கிறது. அங்கே இருக்கின்ற அந்தக்
கல்வி முறையைப் பற்றி ஒரு ரிப்போர்ட், அதிகார பூர்வமான
குழுவே ரிப்போர்ட் தந்து இருக்கிறது. ஆகவே



அப்படிப்பட்ட ஒரு அவல நிலைமை இந்தியாவுக்கு வந்து கொண்டி ருக்கிறது. இந்தியாவினுயை எதிர்காலத்தைப்பற்றி கவலை தெரிவிக் கின்ற சில பேர், இந்தியா வந்து ஒரு காலத்திலே '' Sub—Standard Person'' தரம் குறைந்த மனிதர்களாலே விளைவிக்கப்படுகிற பாதிப் புகளுக்குப் பலியாகக்கூடிய நிலைமை இந்தியாவுக்கு இருக்கிறது என்பதையும் சொல்கிறார்கள். ஆகவே' Men of excellance உயர்ந்த அறிவுபடைத்தவர்களை பல்வேறு துறைகளிலேயும் உருவாக்க வேண்டிய பொறுப்பை கல்வித்துறை எடுத்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கு தமிழ்நாடு கல்வித்துறை அதிலே, அந்தப் பாதையிலே காலடி எடுத்து வைக்கிறது. அந்த பெருமைக்குரிய காரியத்தை இந்தியாவுக்கே ஒரு முன்னோடியான ஒரு திட்டத்தைக் கொண்டு வருகிற காரியத்தைமாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள்(பலத்த மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குச் செய்கிறார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது— இந்த 8-வது படித்து வந்தால் பியூனாக அட்டெண்டராக பல பேர் பணியாற்றிக்கொண்டு இருக்கி றார்கள். அவர்கள் எல்லாம் அதற்கு மேலே தங்களுடைய அறிவை வளர்த்துக் கொள்ள வாய்ப்பற்றவர்களாக இருக்கி றார்கள். எஸ். எஸ். எல். சி, யார் வேண்டுமானாலும் எழுதி விடலாம். ஆனால் 8-வது படித்த ஒரு ஏழை வீட்டுப் பையன் அவனாக எஸ். எஸ். எல்.சி. எழுதக்கூடிய அளவுக்கு அவனுக்கு வாய்ப்பு வசதிகள் இல்லை. அவனுக்குச் சொல்லித் தரப்பட வேண்டும், அவனுக்கு பயிற்சி தரவேண்டும். அந்த வாய்ப்பு இல்லையென்றால் யார் வேண்டுமானாலும் எஸ். எஸ். எல். சி. எழுதலாம் என்றால் இவன் எழுதமாட்டான், சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் இருப்பவன், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன், மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவன், அந்த வாய்ப்பை அவன் அனுபவிக்க முடியவில்லை வாய்ப்பு தரப்படுகிறது ஆனால் அனுபவிக்க முடியவில்லை. ஆகவே அந்தக் குறைப் பாட்டைப் போக்குவதற்காக ஒரு 'ஓப்பன் ஸ்கூலை'' ஆரம்பித்து இருந்தோம். நான் தான் பின்தங்கியவர்களுக்காக பாடுபடுகிற தலைவன், என்னை விட்டால் வேறு யாரும் இல்லையென்று சொல்கிற, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி ஆட்சிக்கு வந்த இந்த இரண்டாண்டு காலத்தில் பின்தங்கியவர் களுக்கு, மிகப் பின்தங்கியவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு செய்த ஒரு மிகப் பெரிய உதவி அந்த ஓப்பன் ஸ்கூலை மூடியது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன். பின்தங்கியவர்களுக்கு, மிகவும் பின்தங்கியவர்களுக்கு, தாழ்த்தப் பட்டவர்களுக்கு என்ன செய்ய வேண்டும்.

ஏது செய்ய வேண்டும் என்று கூட நிலையில் அவர் இருக்கிறார்கள் என்பதை தான் நான் இங்கே பரிதாபத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். அந்த ஓப்பன் ஸகூலை மறுபடியும் ஆரம்பிப்பதென மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முடி வெடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

ஐ.ஏ. எஸ்.; ஐ.பி எஸ்.; தேர்வுகளில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் ஏன் அதிகம் பேர் தேற முடிவதில்லை. இது ஒரு மிகப் பெரிய சர்ச்சைக்குரிய பிரச்சினையாக பேசப்பட்டு வருகிறது. அந்த இரண்டு, மூன்று காரணங்களைச் சொல்லலாம். ஒன்று - இந்தப் பரிட்சை, தேர்வை நடத்துகிற இடம் டெல்லி. டெல்லிக்கு அருகில் இருககிறவர்களுக்கு இருக்கிற வாய்ப்புகள் தென்கோடியில் இருக்கிற தமிழ்நாட்டு மாணவர்களுக்கு இலலையென்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு அடுத்த கோச்சிங் செண்டர்ஸ். அது டெலலியில இருக்கிறது. மற்ற இடங்களில இலலை. அந்த குறைபாட்டினைப் போக்க தமிழக அரசு நடவடிக்கையெடுத்து வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இப்பேகது ஆர்வத்தோடு அந்த் கோச்சிங் சென்டர்களை ஆரம்பிப்பதில கவனம் செலுத்தி கொண்டிருக்கிறார்கள். அந்த செண்டர்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

அதற்கு அடுத்து இன்னொரு காரணம், தமிழ்நாட்டில தான் ஆசிரியர்களுடைய வேலை நிறுத்தம் என்பது மிகவும் சாதாரணமாக நடந்து வருகிறது. மற்ற மாநிலங்களில கூட இப்படி இலலை. எதற்கெடுத்தாலும் வேலை நிறுத்தம் 10 நாள் ஆசிரியர்கள் செய்தால், 10 நாள் பையன் செய்வான். ஆகவே எட்போது பார்த்தாலும் கலலூரிகள் மூடியிருக்கிற நிலைமை. சில வருடங்களில 20 நாள் 23 நாள் கூட நடைப்பெற்று இருககிறது. சம்பளம் மட்டும் வருடம் முழுவதும் வாங்கிக்கொண்டு இருந்திருக்கிறார்கள். ஆகவே, ஏதாவது ஒரு வருடத்தில அவனுக்கு ஒரு பாதிப்பு ஏற்பட்டாலும் அது கடைசி வரைக்கும் இருக்கும். நாற்றங்காளில ஒரு பாதிப்பு ஏற்பட்டால அந்த நாற்றையெடுத்து நீங்கள் நட்டால கூட அதில முழுமையான மகசூலைப் பெற முடியாது. அதைப்போல நம்முடைய குழந்தைகள், நம்முடைய மாணவர்கள், நம்முடைய இளைஞர்கள் எந்த ஆண்டு பாதிக்கப்பட்டாலும், அதற்குப் பிறகு அந்த பாதிப்பு தொடர்ந்து இருக்கிறது என்ற அடிப்படையில ஆசிரியர்களுடைய வேலை நிறுத்தம் என்பது நம்முடைய மாணவர்களுடைய முன்னேற்றத்திற்கு ஒரு மிகப்பெரிய தடையாக இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.



இந்த நேரத்தில் அதையும் சொல்லிவிடுகிறேன். ஒரு தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் நடைபெற்றால் தொழிலாளிக்கு சம்பளம்—'நோ பே, நோ ஒர்க்" என்ற முறையில் இல்லாமல் போகலாம், முதலாளிக்கு இலாபம் இல்லாமல் போகலாம். அதோடு அது சரி. ஆனால் கல்லூரிகளில், பள்ளிகளில் வேலை நிறுத்தம் நடைபெற்றால் நிர்வாகிகளுக்கு என்ன பாதிப்பு, ஆசிரியர்களுக்கு என்ன பாதிப்பு என்பதை விட, அங்கே படிக்கிற மாணவர்களுக்கு என்ன பாதிப்பு?—மூன்றாவது கட்சி. அந்த மாணவர்கள் யார்? இந்த நாட்டினுடைய எதிர்காலம். இந்த நாட்டினுடைய எதிர்காலத்தை பாதிக்கக்கூடிய விதத்தில் ஒரு காரியத்தைச் செய்வதற்கு யாருக்காவது உரிமை இருக்கிறதா என்றால், அந்த உரிமை இல்லை. அந்த உரிமை இருக்கக்கூடாது என்பதுதான் நம்முடைய கருத்தாகும். ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்று தடைச்சட்டம் கொண்டு வரப் போவதில்லை. ஆனால், இந்த மாமன்றத்தின் மூலமாக, அரசின் மூலமாக, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் மூலமாக கேட்டுக் கொள்வது, தயவு செய்து, இந்த சமுதாயத்தின் எதிர்காலத்தை, இந்த நாட்டினுடைய எதிர்காலத்தை பாதிக்கிற அந்த பாவகரமான செயலில் மதிப்பிற்குரிய ஆசிரியர்கள், போற்றுதலுக்குரிய ஆசிரியர்கள் ஈடுபட வேண்டாம் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இனிமேற்கொண்டு தமிழ்நாட்டில் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள் என்ற கெட்ட பெயர் வராமல் ஆசிரியர் சமுதாயம் பார்த்துக் கொள்ள வேண்டும், ஆகவே, ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ்., என்பதில் நம்முடைய மாணவர்கள் ஏன் அதிகப்படியாக தேறவில்லை என்பதற்கு இன்னொரு முக்கியமான காரணம் - ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ்.,—க்கென்று பாட திட்டங்கள் இருக்கின்றன. அந்த பாட திட்டங்களின் அளவுக்கு படித்தவர்கள் அந்த பரிட்சை எழுதி தேறிவிடுகிறார்கள். ஆனால் நம்முடைய பல்கலைக் கழகங்களில் சொல்லித்தரப்படுகின்ற பாடதிட்டங்கள் அதைவிட தரம் குறைந்ததாக இருக்கின்றன. கடந்த 10 ஆண்டுகளாக இந்தக் கருத்தை நாம் சொல்லி வருகிறோம். ஆகவே, பாடத் திட்டத்தினுடைய தரத்தை உயர்த்த வேண்டும். அப்படி உயர்த்தினாலொழிய நம்முடைய மாணவர்கள்,ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பரிட்சைகளில் அவர்களுக்கு ஈடாக ஜவஹர்லால் நேரு யுனிவர்சிடியானாலும், பம்பாய் யுனிவர்சிடியானாலும், டெல்லி யுனிவர்சிடியானாலும், அங்கே படிக்கின்ற அந்த மாணவர்களுக்குச் சமமாக, நம்முடைய மாணவர்கள் வருவது என்பது முடியாத காரியம் புத்தகத்திலே பாதி படித்தவன் முழுவதையும் படித்தவனோடு போட்டி போடுவதைப்போல ஆகிவிடும். ஆகவே, பல்கலைக் கழகங்கள் தங்களுடைய பாடத்திட்டங்களை உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சார்பில் நான் இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1—50

அதற்கு அடுத்து முக்கியமான ஒன்று நாம் குழந்தைகளுக்கு கத்தியை கையிலே தீட்டிக் கொடுப்பதை போல தந்து விடுகிறோமே தவிர அதைஎப்படி பயன்படுத்துவது எதற்கு பயன்படுத்துவது என்று சொல்லாததைப் போல அறிவை வளர்த்து விடுகிறோம், ஆனால், அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு சிறந்த பண்பைச் சொல்லித்தர விட்டுவிடுகிறோம் இங்கே மதிப்பிற்குரிய பழனிசாமி அவர்கள் கூட பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். நாட்டுப்பற்று தேச பக்தியைச் சொல்லித் தர வேண்டும். தேச பக்திக்கு என்று வாரத்திற்கு ஒரு பீரியடாவது இருக்க வேண்டும். தனக்கு வேலை தேசத்தை பற்றிச் சிந்திக்கவேண்டும். வெள்ளைக்காரன் இருந்தபோதுதான், தேசபக்தி இருந்தது என்பதும் வெள்ளைக்காரனை எதிர்த்து போராடியவர்கள்தான் தேச பக்தர்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பதும் சரியல்ல சுதந்திரம் பெற்ற இந்தியாவில் இன்றைக்கும் தேசபக்திஉணர்வு தேவை. நமக்கும் தேச பக்தி வேண்டும். நாம் எந்த பிரச்சினையாக இருந்தாலும் தேசத்தை முக்சியமாக கருதுகின்ற தன்மை வேண்டும் இன்றைக்கு தேச பக்தி உணர்வு மங்கி மறைந்திருக்கிற காரணத்தாலே காஷ்மீரையும் பஞ்சாபையும் மதக் கலவரங்களையும் ஜாதிக் கலவரங்களையும் வேறு தேவையில்லாத தீவிரவாதங்களையும் பயங்கர வாதத்தையும் இந்த நாடு சந்தித்து, கொண்டிருரிக்கிறது ஆகவே தேசபக்திஉணர்வு நம்முடைய குழந்தைகளுக்கு ஊட்டப்படவேண்டும் அது தான் இந்த நாட்டை பேரழிவிருந்து காப்பாற முடியும் என்கிற காணத்தாலே வாரத்திறகு ஒரு பீரியடாவது அதைப்பற்றி சிந்திக்கிற பயிற்சி பெறுகிற வாய்பினை நம்முடைய குழந்தைகளுக்கு தர வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விருய்புகிறார்கள். (மேசை தட்டும் ஒலி) அது இந்த ஆண்டிலிருந்து நம்முடைய பாடத்திட்டத்திலே சேர்க்கப்படும் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

சொன்னைப் பல்கலைக் கழகத்தைப் பற்றி எல்லாம் விசாரிக் வேண்டும் என்று சொன்னார்கள். (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அமைச்சர் அவர்கள் முடிப்பதற்குப் பிறகு கேட்கலாம். (குறுக்கீடு) : திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

<u>திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்</u> : பேரவைத் தலைவர் அவர்களே தேச பக்திக்காக ஒரு தனிப்பாடம் 1 மணி நேரம் ஒதுக்க வேண்டும் என்கிற முடிவை உண்மையிலே, தேசியக் கட்சியாக இருக்கிற காங்கிரஸ் கட்சி நன்றியோடு, நினைத்து அதைப் பாராட்டி, அதை நெஞ்சார வரவேற்கிறது என்று சொல்வதற்காகத்தான் நான் எழுந்தேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்; இதைக் கடைசியில் சால்லிவிருக்கலாமே.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்; மிக்க மகிழ்ச்சி. சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய நடவடிக்கைகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள்' இந்த நேரத்திலே பல்கலை கழகத்தைப்பற்றி ஒன்றைச்சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்' பல்கலைக் கழகங்கள் அதனுடைய சட்டத்தின்படி நடைப்பெற்றுக் கொண்டு இருக்கின்றன. அதிலே மாநில அரசுக்கு அதிக அதிகாரம் இல்லை, தன்னாட்சி பெற்ற ஸ்தாபனங்களாக இருந்து கொண்டு இருக்கின்றன. அவர்கள் எதேனும் தவறு செய்தால் அதற்கு பதில் அளிக்க வேண்டிய கடமைதான் மாநில அரசுக்கு இருந்து கொண்டு இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே நடைபெறுகிற தவறுகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க தேவையான நடவடிக்கைகளை புரட்சி தலைவி அவர்கள் எடுப்பார்கள் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதோடு பல்கலைக்கழகத்திலே மாநில அரசுக்கு என்ன பொறுப்பு என்பதையும் என்ன அதிகாரம் என்பதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சிந்தித்து கொண்டிருக்கிறார்கள். அதற்கேற்ப தக்க மாற்றங்களை கல்வித் துறை கொண்டு வரும் என்பதையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதற்கு அடுத்து இடைநிலை ஆகிரியர்களைப் பற்றி நான் முன்பே குறிப்பிட்டுச் சொன்னேன். பயிற்சி பெற்றும் வருகிறார்கள், பயிற்சி பெறாமலேயும் வந்துவிடுகிறார்கள். கன்னியாகுமரியிலே இருப்பான் அவன் பணத்தைக் கட்டி கர்நாடகத்திலே பதிவு செய்து கொள்வான். பரிட்சை வருகிறபோது, கோர்ட்டிலே அனுமதி வாங்கி, அவன் பரிட்சை எழுதுவான். ரிசல்டை நிறுத்தி விடுவார்கள். மறுபடியும் ஒரு பெட்டிசனைப் போட்டு, ரிசல்டைப் போடச் சொல்வார்கள். பிறகு அந்தச் சான்றிதழைக் கொண்டு வந்து, நம்மிடத்திலே காட்டி, இங்கே வேலை வேண்டும் என்று சொல்வார்கள். ஆகவே. கர்நாடகத்திலே பயிற்சி பெற்ற அந்தச் சான்றிதழை வைத்துக் கெள்பவர்களுக்கு இங்கே வேலை இல்லை என்று நாம் சொல்லியிருந்தோம். கடைசியில் இப்போது என்ன ஆயிற்று என்றால், இங்கேயே அப்படிப்பட்ட பயிற்சிப் பள்ளிகள் வர அரம்பித்த காரணத்தால், அதைவிட இது ஒன்றும் சளைத்தது இல்லை என்கிற நிலைமையிலே இங்கே நிலைமை மோசமாகிக் கொண்டு இருக்கிறது, ஆகவே இடைநிலை ஆகிரியர்களை வேலைக்கு அமர்த்துகின்ற போது அவர்கலுடைய சான்றிதழை மட்டும் வைத்து வேலைக்கு எடுக்கின்ற தற்போதைய நிலையை நாம் மாற்றி, அவர்களுடைய தகுதி ஏன்ன, அவர்கள் பெற்ற பயிற்சியினுடைய தன்மை என்ன என்பதைத் தெரிந்து கொள்கிற வகையிலே ஒரு சோதனையை நடத்தி, ஆல்லது ஒரு தேர்வை

நடத்தி அதன் மூலமாக அவர்களைத் தேர்ந்தெடுக்கிற ஒரு முறையை இந்த ஆண்டு முதல் கொண்டுவர இருக்கிறோம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1—55

இப்போது சில அறிவிப்புகளைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பள்ளிக் கல்வித் துறையில் ' ஏ ' பிரிவு ஆசிரியர்களுக்கும் மற்றும் முன்னாள் மாவட்டக் கழகப் பள்ளிகளைச் சார்ந்த ' பி ' பிரிவு ஆசிரியர்களுக்கும் இடையில் சில பிரச்சினைகள் 1978 ஆம் ஆண்டு முதற்கொண்டு தீர்க்கப்படாமல் நிலுவையாக உள்ளது. அதன் விளைவாக பள்ளிக் கல்வித் துறையில் 712 மேற்பார்வையாளர்கள் போன்ற பதவிகள் நிரப்பப்படாமல் இருந்தன.

மேற்கண்ட 712 பதவிகளை நிரப்புவதற்கு ஏதுவாக உச்ச நீதிமன்றத்தில் அரசு இடைக்கால உத்தரவு பெற்று முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் தலைமை ஆசிரியர் முதலான பதவிகளை நிரப்பியிருக்கின்றனர்.

பெண்களுக்கான அரசுத் தொழில் நுட்ப பயிலகங்களுக்கு முதல்வராகப் பெண்கள் தொழில்நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் பெண் ஆசிரியர்களைக் கொண்ட தனி பணிமூட்டு பட்டியலிருந்து நியமனம் செய்யப்படுவார்கள் என கொள்கை முடிவை நாம் எடுத்திருக்கிறோம்.

பள்ளிகளில் அறிவியல் கல்வியை வளர்ப்பதற்காக மைய அரசிடமிருந்து ரு. 5.00 கோடி மானியமாகப் பெற்றுள்ளோம் இந்தத் திட்டத்தினால் பயன்பெற உள்ள பள்ளிக்கூடங்களுடைய எண்ணிக்கை 1306 ஆகும்.

புதிய நாகப்பட்டினம்— காயிதே மில்லத் மாவட்டத்திற்கு தனியாக முதன்மைக் கல்வி அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் ரு. 1200 கோடி உலக வங்கியின் உதவியினைக் கீழ்க்கண்டவற்றுக்காக பெறத் திட்டம் அனுப்பியிருக்கிறோம்;

கிராமப்புறத்தில் உள்ள பள்ளிக்கூடக் கட்டிட வசதிகளை மேம்பாடு செய்ய.

பள்ளிக்கூடங்களில் ஆய்வகங்களை மேம்படுத்தி அறிவியல் கல்வியை வளர்க்க.

கணிப்பொறி கல்வியைப் பள்ளிக்கூடங்களில் போதிக்க.



குறிப்பாக கணிதம் மற்றும் அறிவியல் கல்வியின் தரத்தை உயர்த்த.

ஆசிரியர்களுக்கும் கல்வித்துறை நிர்வாகத்தினருக்கும் பயிற்சி அளிக்க.

பாடத் திட்டங்களை அவ்வப்போது மறு ஆய்வு செய்வதற்காக கல்வி வளர்ச்சிக் குழு ஒன்றினை நிறுவ மற்றும் முறையான நிர்வாகத் தகவல் மையம் ஏற்படுத்த.

இத்திட்டம் ரூபாய் 50.00 கோடி செலவில் சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தை விரிவுபடுத்துதல் மற்றும் வட்டார அறிவியல் தொழில்நுட்ப மையங்களை ஏற்படுத்துதல் ஆகியவைகளை உள்ளடக்கியதாகும்.

தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்காக, எதிர்வரும் ஆண்டுகளில் மாநிலத்தில் தொழில்நுட்பத்திறன் உடையவர்கள் தேவையைச் சமாளிக்க, இன்னொன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இப்போது புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் இருக்கின்ற கட்டுப்பாடுகளை எடுக்கின்றோம், தடைகளை எடுக்கின்றோம், பல உரிமைகளை இன்றைக்கு தொழில் நடத்துவதற்குத் தருகிறோம். பல்வேறு துறைகளிலே நாம் இந்த உரிமைகளை வழங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தால், குறிப்பாக இன்னும் ஓரிரு ஆண்டுகளிலே தொழில்நுட்ப அறிவு படைத்தவர்கள், தொழில் அறிவு பெற்றவர்களுடைய தேவை அதிகமாகும். இதற்கு முன்னாலே இருந்ததைவிட தேவை அதிகமாகும் என்பதை இந்த இடத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே நாம் தொழில் கல்விக்கு தகுந்த ஊக்கம் தர வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

உலக வங்கிக்கடன் பெற்று தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சி மேம்பாட்டிற்கு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் விவரம் பின்வருமாறு :

பி. எஸ். ஸி. மாணவர்களுக்கான பொறியியல் கல்லூரிகளில் மூன்றாண்டு பி. டெக். வகுப்பினைத் துவக்குதல்.

மாநிலத்திலுள்ள நெசவுத் தொழில்நுட்ப நிறுவனம், தோல் தொழில்நுட்ப நிறுவனம், அச்சுத் தொழில்நுட்ப நிறுவனம், வேதியியல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய நான்கு பட்டயப் படிப்பு நிறுவனங்கள், பட்டப் படிப்புக் கல்வி அளவிற்கு உயர்த்தப் பெறும். இது ஒரு முக்கியமான முடிவாகும்.

உயர் தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை உயர்த்துதல்—எம்.ஈ., எம். எஸ்., மற்றும் பி. எச்டி. போன்ற தொழில்நுட்ப பட்டமேற்படிப்பு கல்விக்கான நமது மாணவர்கள் வெளிநாடுகளுக்குக் குடிபெயர்வதைத் தவிர்க்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விரும்புகிறார்கள். ஆகவே அத்தகைய வசதிகளை இங்கேயே நாம் ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி).

இதற்கடுத்து நர்சரி பள்ளிகள். நர்சரி பள்ளிகள் வேண்டுமா. வேண்டாமா என்ற கேள்விக்கு இறுதியான, உறுதியான முடிவு வேண்டும். உலகம் முழுவதும் இருக்கிறது. இரண்டரை வயதிலிருந்து 8வயதிற்குள்ளேதான் குழந்தையினுடைய அறிவு 50சதவீதம் வளர்ந்து விடுகிறது என்பது அந்தத் துறையிலே உள்ள வல்லுநர்களுடைய கருத்தாகும். இரண்டரை வயதிலிருந்து 6 வயது வரை ஊர் சுற்றிவிட்டு, 6-ஆம் வயதிலே 1-ஆம் வகுப்பிலே போய்ச் சேர்கிறபோது இரண்டரை வயதிலேயிருந்து 6 வயது வரைக்கும் நர்சரிப் பள்ளியில் படிக்கின்ற குழந்தைகள் வந்து அதனோடு சேர்ந்து படிக்கின்றபோது, அந்தக் குழந்தைகளோடு கடைசி வரைக்கும் போட்டி போடமுடியாத நிலைமை தான் நம்முடைய சாதாரணக் குழந்தைகளுக்கு ஏற்படுகின்றது. ஆக நர்சரிப் பள்ளிகள் தேவை என்பது மட்டுமல்ல. அது எல்லாப் பகுதியிலும் இருக்கவேண்டும், வரவேண்டுமென்ற கருத்தை நாம் வரவேற்கின்றோம். அந்த முறையிலே நர்சரிப் பள்ளிகள் இதுவரையிலும் அங்கீகாரம் பெறாமல் நடைபெற்று வந்தன. அந்தக் குழந்தைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள்கூட இல்லாமல், சில வீடுகளில், சில. இடங்களில் நடத்திக் கொண்டு வருகிறார்கள். இவைகளை எல்லாம் முறைப்படுத்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

இதற்காக நியமிக்கப்பட்ட சிட்டிபாப குழு கொடுத்துள்ள அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. இக்கமிட்டியின் பரிந்துரைகளில் நர்சரி பள்ளிகளில் தமிழ்மொழி போதனா மொழியாகவோ, அல்லது கட்டாயப் பாடமாகவோ வைக்கப்பட வேண்டும் என்பதும் ஒன்றாகும்.

அதிலே இருக்கின்ற முக்கியமான தவறு அல்லது குறைபாடு இதுதான். அதைத் தீர்க்கின்ற விதத்தில் தமிழ் மொழி போதனா மொழியாகவோ, அல்லது கட்டாயப் பாடமாகவோ இருக்கும் என்கின்ற முடிவை புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பரிந்துரையை அரசு ஏற்றுள்ளது. நர்சரி பள்ளிகளுக்கு அனுமதி வழங்கும் போது இது முன் நிபந்தனையாக இருக்கும். இது வரும் கல்வி யாண்டு முதல் அமலாக்கப்படும். இக்குழுவின் மற்ற பரிந்துரைகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன.



பிற்பகல் 2-00.

அதற்கு அடுத்து 11-ஆம் வகுப்பு. 11-ஆம் வகுப்பிலே என்ன செய்கிறார்கள் என்றால் சில முக்கியமான பள்ளிக் கூடங்களிலே பெரிய பள்ளிக்கூடங்களிலே என்ன செய்கிறார்கள் என்றால் 12-ஆம் வகுப்பிலே என்ன சொல்லித் தர வேண்டுமோ அதையே 11-ஆம் வகுப்பிலே சொல்லித்தந்து மறுபடியும் 12-வது வகுப்பிலேயும் சொல்லித் தந்து—அந்தப் பையனுக்கு கோச்சிங் மாதிரி செய்கிறார்கள். அந்த 12வது பரிட்சையான மிக முக்கியமான பரிட்சையான ஹையர் செகன்டரி எஜுகேஷனுக்குத்தயார் செய் கின்ற முயற்சியில் ஒரு தவறைச் செய்து வருகிறார்கள். அவர் களுக்கு என்ஜினீயரிங் கல்லூரிகளிலேயும் இடம் கிடைத்து விடு கிறது. ஏனென்றால் அவர்கள் ஒரு வருடப் பாடத்தை இரண்டு வருடம் படிக்கிறார்கள். ஆனால் பி. இ. யிலே போய்ச்சேர்ந்த தற்குப் பின்னாலே பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, கணிதம் போன்ற பாடங்களில் பார்க்கின்றபோது அதிலே சில குறைபாடுகள் இருக் கின்றன. அதிலே சில பாடங்களை படிக்காமலேயே வந்தது தெரிகிறது. ஆகவே அந்தக் குறைபாட்டை போக்குவதற்காக 11-வதிலேயும் மாவட்ட அளவிலாவது ஒரு பொதுத் தேர்வு நடத்துவது என்ற ஒரு முடிவை மாண்புமிகு புரட்சித் தலைவியி னுடைய அரசு எடுத்திருக்கிறது என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

உயர் கல்விக்கென ஒரு மாநிலக் குழுவினை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான மசோதா தற்போதைய சட்ட மன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட உள்ளது. பல்கலைக் கழகத்தில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு ஏதுவாக திருத்தங்களைச் செய்யவும் அரசு பரிசீலனை செய்து வருகிறது. இது குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் முன்பு சில கருத்துக்களைத்தெரிவித்துள்ளார். அரசு இந்தக் கருத்துக்களைத் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. சட்டமன்றத்திற்கும் பொது மக்களுக்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களின் நிர்வாகத்தின் கீழ் பல்கலைக் கழகத்தின் அன்றாட நிர்வாக அலுவல்கள் திறம்படச்செயல்பட முடியும். இந்த உயர்ந்த நெறிமுறையான அதிகாரம் பதில் சொல்லக் கடமைப்பட்ட நபர்கள் இடத்தில் தான் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று அரசு கருதுகிறது. இப்போது இருக்கிற "மெட்ராஸ் யுனிவர்சிட்டி ஆக்ட்" என்பது கவர்னரே எக்சிகியூட்டிவ் அத்தாரிட்டியாக நிர்வாகத்தலைவராக இருக்கும்போது கொண்டுவரப்பட்ட சட்டம். அந்த நிர்வாகத் தலைவராக முதலமைச்சர் வந்ததற்குப் பிறகு கவர்னருக்கு இருக்கிற அதிகாரம் இயல்பாக முதலமைச்சருக்குத்தான் வர வேண்டும். ஆக முதலமைச்சருடைய கையிலே தான் அந்த அதிகாரம் இருக்க வேண்டும். அவர்கள் வேண்டுமானால் என்னாலே இவையெல்லாம் பார்க்க முடியாது இன்னார் வைத்துக் கொள்ளலாம் என்று ஒருவரை குறிப்பிடலாமே தவிர மற்றபடி அந்தப் பழைய சட்டத்தின் அடிப்படையிலே பார்க்கின்றபோது கவர்னர் இடத்திலே தரப்பட்ட அதிகாரம் இப்போது எக்சிகியூட்டிவ் அத்தாரிட்டியாக இருக்கிற முதலமைச்சரிடத்திலே வரவேண்டும் என்பதுதான் முறை.

[டாக்டர் செ, அரங்கநாயகம்] [1992 ஏப்ரல் 2

பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் தங்கள் பணிநிலையில் உள்ள சில குறைபாடுகள் குறித்து அவ்வப்போது அரசிற்கு விண்ணப்பித்துள்ளனர். ஆசிரியர்களின் கோரிக்கைகள் நியாயமானதாக இருந்ததால் அரசு அந்தக் கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து அதை ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி உண்ணாவிரதம் இருந்தார்கள். பிறகு நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க நிறுத்திக் கொண்டார்கள். தனியார் பள்ளி ஆசிரியர்கள் ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். கல்லூரி ஆசிரியர்கள், அரசுக் கல்லூரி ஆசிரியர்கள், தனியார் கல்லூரி ஆசிரியர்கள் எல்லாம் என்னிடத்திலே வந்து பல்வேறு மனுக்களை தந்துள்ளார்கள். வேறு பல சங்கங்களைச் சேர்ந்தவர்களும் வந்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் ஆராய்ந்து இப்போதிருக்கிற நிலைமையில் நிதி சம்பந்தமாக எந்தவித கோரிக்கையையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்ற அடிப்படையில் மற்ற கோரிக்கைகள் ஏதேனும் நியாயமாக இருந்தால் ஏற்றுக் கொள்ளப்படும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். தனிப்பட்ட நடவடிக்கைகள் சில எடுக்கப்பட்டிருக்கின்றன. மறுபடியும் தொடர்ந்து எடுப்போம் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களும் மேல்நிலைப் பள்ளித்தலைமை ஆசிரியர்கள் பதவி உயர்வுக்கு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுடன் 2:5:2 விகிதத்தில் கருதப்படுவர் என்ற முடிவை நாம் எடுத்திருக்கிறோம். குறைந்தபட்ச கல்வித்தகுதிக்கு மேல் உயர் கல்வித் தகுதியுடைய பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்படும்.

ஈரோட்டில் சேரன் போக்குவரத்துக்கழகம் நடத்திவரும் சொந்த நிதி பொறியியற் கல்லூரியைப் போன்று ஆசிரியர் நலநிதியிலிருந்து சொந்தநிதி பொறியியற் கல்லூரி ஒன்று துவங்கப் பெறும். இதில் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு 50 சதவீத இடம் தரப்படும்.

கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் அதன் தொடர்பான கொள்கைப் பணிகளை ஆய்வு செய்து அரசுக்கு தக்க ஆலோசனைகளை வழங்குவதற்காக விரைவில் மாநில கல்வி அறிவுவுரைக்குழு ஒன்றினை நிறுவவுள்ளது. எல்லோருக்கும் கல்வி என்ற நடைமுறை திட்டத்தை மும்முரமாக தமிழ் நாட்டில் செயல்படுத்துவதற்கு மாநில அளவிலான எழுத்தறிவு ஆணையகம் ஒன்று அமைக்கப்படும். இது அறிவொளி இயக்கத்தை எல்லாம் கட்டுப்படுத்த நெறிப்படுத்த முறைப் படுத்த.



1992 ஏப்ரல் 2] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

ஜவஹர் நவோதயாப் பள்ளிகளைப் பற்றி நான் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேன். மைய அரசு நிறுவியுள்ள நவோதயாப் பள்ளிகளில் நம் தாய் மொழியில் எட்டாம் வகுப்பு வரையிலும் ஆங்கில மொழியில் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலும் பயில்வதற்கு கிராமப்புறங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ மாணவியர் தங்கிப் பயிலவும் அவர்களுக்குத் தேவையான புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் தேவையான உதவிகளைச் செய்யவும் எண்ணியுள்ளது. இந்த திட்டத்தை இங்கே செயல்படுத்த நினைத்து இருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ரூ. 2.4 கோடி தொடராச் செலவினத்தில் ஜவஹர் நவோதயாப் பள்ளிகள் துவக்கப்படும்.

ஆந்திர மாவட்டத்தில் உள்ளது போன்றும் ஒவ்வொரு மாவட்ட அளவிலும் தங்கிப் பயிலக்கூடிய புரட்சித் தலைவி உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைப் படிப்படியாக நிறுவ இவ்வரசு உத்தேசித்துள்ளது. இதைத்தான் ஸ்கூல்ஸ் ஆப் எக்ஸ்ஸெலன்ஸ் என்று சொன்னேன்.

பிற்பகல் 2-05

அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில வழி போதனா மொழி முறைக்கு தொடர்ந்து கோரிக்கை இருந்து வருகிறது. இதனை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. இவ்வகுப்புகளில் சேரும் மாணவர் குறிப்பிட்ட அளவு கட்டணம் செலுத்த வேண்டும். அரசு மானியம் பெறும் பள்ளிகளிலும் ஆங்கில வழிமுறை வகுப்புகளை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. மேலும் அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட வகுப்புகளில் சேரும் மாணவரிடமிருந்து வசூலிக்கப்படும் அதிகப்படியான கட்டணத்தைக் கொண்டு அப் பள்ளிகளில் கூடுதலாக நியமிக்கப்படும் ஆசிரியர் ஊதியம் சரி செய்ய வேண்டும். பேச்சு வழக்கு ஆங்கிலம் உட்பட அம் மொழியில் மாணவர்களின் திறனை மேம்படுத்த தற்போது கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி ஆகிய ஐந்து இடங்களில் உள்ள மண்டல ஆங்கில மொழி பயிற்சி மையங்களை வலுப்படுத்தி மேலும் ஆங்கில ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்படும். அதாவது இதிலே ஆங்கில மொழி போதனா மொழி இருக்கின்ற வகுப்பிலே படிக்கின்ற மாணவர்களுக்கு இணையாக தாய்மொழி போதனா மொழியாக இருக்கின்ற வகுப்பிலே படிக்கின்ற மாணவர்கள் இல்லை என்கிற குறைபாட்டையும் அதனாலே இந்த மாணவர்கள் வாழ்க்கையிலே படுகின்ற பாதிப்பையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உணர்ந்து இதற்கு என்ன செய்வது என்ற முறையில் அதைப் பரிசீலித்து அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். சொல்லித் தருகின்ற

ஆங்கிலத்தை ஒழுங்காகச் சொல்லித்தர வேண்டும். தாய் மொழி பயிற்சி மொழியாக இருக்கலாமே தவிர ஆங்கிலம் ஒரு பீரியட் சொல்லித்தருகிற நேரத்தில் அந்த ஆங்கிலத்தைப் பேசவும், அதிலே சிந்திக்கவும், அதிலே எழுதவும் ஆங்கில போதனா மொழி வகுப்பிலே எந்த அளவிற்கு ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் தரப்படுகிறதோ அதைப் போல அந்த வகுப்பில் முறையாகச் சொல்லித்தந்து அந்தக் குழந்தைகளுக்கு ஆங்கில ஆற்றலை வளர்ப்பதற்கு சிறப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் கட்டளை இட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி அதற்குத் தேவையான முயற்சிகளை கல்வித்துறை எடுக்கும்.

இன்னொன்று, வேலூரிலே இருக்கின்ற என்ஜினியரிங் கல்லூரி, தந்தை பெரியார் என்ஜினியரிங் கல்லூரி, அது எப்படி வந்தது என்பது பலருக்குத் தெரியும். சிலபேர் மறந்திருக்கக் கூடும். அங்கே, உணவு அமைச்சராக இருக்கின்ற விசுவநாதன் அவர்கள் ஒரு சுயநிதிக் கல்லூரி நடத்தி வருகிறார். அதை எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்று மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த நேரத்தில் நினைத்தார்கள். ஆனால் அதை ஒழிக்கின்ற அதிகாரம் நம்மிடத்திலே இல்லை என்பது அவருக்கு ஆரம்பத்திலே தெரியாது. நான் சில கட்டுரைகளை அறிக்கையில் எழுதியதற்குப் பிறகு தான், அதையும் அந்த நீதிமன்றத்திலே சொன்னதற்குப் பிறகுதான் அவருக்குத் தெரியும். அந்த அதிகாரம் முன்பு நம் கையிலே இருந்தது. இப்போது பொறியியற் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமானால், பாலிடெக்னிக்கை ஆரம்பிக்க வேண்டுமானால் டெல்லியிலே தான் அந்த அதிகாரம் இருக்கிறது. நாம் எதிர்த்தோம் என்றாலும் அந்த அதிகாரத்தை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். ஆகவே இப்போது இருக்கின்ற நிலைமையில் ஒரு பாலிடெக்னிக்கையோ அல்லது என்ஜினியரிங் கல்லூரியையோ ஆரம்பிக்க வேண்டுமானாலும் அல்லது மூடச் செய்ய வேண்டும் என்றாலும் அந்த அதிகாரம் அங்கேதான் இருக்கிறது. அது தெரியாமல் அவர் அதிலே காலை வைத்து விட்டார். ஆக எப்படி இருந்தாலும் அதை மூடிவிட வேண்டும். அதற்கு என்ன செய்தார்? சில பேர் கையிலே அடித்தால் கையிலே அடிப்பார்கள். எட்டி உதைத்தாலும் உதைப்பார்கள். சண்டை போடுகின்ற போது அதைப் பார்க்கிறோம். ஆனால் சிலபேர் சண்டை போடுகின்ற போது நாம் அடித்தால் வேட்டியை பிடித்து இழுப்பார்கள். அந்த வகையைச் சேர்ந்தவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



ஆக நேரடியாக அந்தக் கல்லூரியை மூடுகின்ற அதிகாரம் இல்லை என்று தெரிந்ததற்குப் பிறகு வேட்டியைப் பிடித்து இழுப்பதைப் போல சர்க்கார் தந்த நிலத்தை பிடுங்கிக் கொண்டார். சர்க்கார் கொடுத்திருந்த 100 ஏக்கர் எதுவோ அதை எடுத்துக் கொண்டார். எடுத்துக் கொண்டு, அந்தக் கல்லூரியை நடத்துவதற்கு எவ்வளவு இடைஞ்சல் தர முடியுமோ—காவல் துறை, வருவாய்த்துறை எல்லாம் வைத்து—எல்லாம் தந்து, அங்கே மாணவர்கள் கஷ்டப்படுகின்ற நிலையில், சரி இதற்கு மேல் போனால் அங்கிருக்கின்ற பொதுமக்களை எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்று கருதி, அங்கே நடைபெற்று வந்த ஒரு பாலிடெக்னிக்கை உடனடியாக என்ஜினியரிங் கல்லூரியாக மாற்றி அதற்கு வேறு பெயர் வைத்தால் தகராறு பெரிசாகிவிடும் என்று தந்தை பெரியார் பெயரை வைத்து இப்படி வந்ததுதான் வேலூர் தந்தை பெரியார் பொறியியற் கல்லூரி. ஆகவே ஒரு நல்ல எண்ணத்தோடு ஆரம்பிக்கப்பட்டது அல்ல என்பதை மாண்பு மிகு உறுப்பினர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆகவே அது அப்படி இருப்பது நல்லது அல்ல. ஆகவே அதை மாற்றுவது என்கிற ஒரு முடிவை இந்த அரசு எடுத்திருக்கிறது. இட மாற்றம் செய்வது என்ற ஒரு முடிவை அரசு எடுத்திருக்கிறது. ஆனால் எந்த இடத்திற்கு மாற்றுவது என்றால், எந்த இடத்திற்கு மாற்றினால் அவர்கள் பிறகு அதைப் பற்றி நினைக்க மாட்டார்களோ அந்த இடத்திற்கு மாற்றுவது என்கிற முடிவை நாம் எடுத்திருக்கிறோம். வேலூரிலே நடைபெறுகின்ற தந்தை பெரியார் பொறியியற் கல்லூரி பர்கூர் தொகுதிக்கு மாற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பர்கூருக்கும், கிருஷ்ணகிரிக்கும் இடையே தேசிய நெடுஞ்சாலையில் தேவையான இடத்தை எடுத்து அந்த இடத்திலே அது அமைக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித்துறையானது அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தும். எனவே கல்வித் துறையினுடைய பெயர் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை என்று மாற்றம் செய்யப்படும். அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் பொருட்டு—அதாவது தேர்தல் காலத்திலேயும் அதற்கு முன்னும் பின்னும் நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள்—சூரிய வெப்பத்தை நாம் பயன்படுத்தாமல் இருப்பது ஒரு மிகப் பெரிய தவறு. வருடா வருடம் இந்தக் கோடைக் காலம் வந்து விட்டது என்றால் போன வருடத்தை விட இப்போது கொஞ்சம் வெப்பம் அதிகமாக இருக்கிறது, இதைத்தான் சொல்லிக்கொண்டு இருக்கிறோமே தவிர இந்த வெப்பத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது. இது ஒரு சக்தி, சூரிய சக்தி, இதை எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் பற்றி யாருமே கவலைப்படுவது

இல்லை. கவலைப்படவேண்டிய பல்கலைக் கழகங்களும் கவலைப்படுவது இல்லை. அவர்களுடைய வேலை பரிட்சை நடத்துவது என்று நினைத்துக்கொண்டு இருக்கிறார்களே தவிர சமுதாயத்திற்குத் தேவையான ஆராய்ச்சி செய்வதுதான் பல்கலைக்கழகங்களுடைய பிரதான பணி என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். இருந்தாலும் தேர்தல் நேரத்தில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள்; தேர்தல் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். வீணாகப் போய்க் கொண்டிருக்கிற சூரிய சக்தியை சமுதாயத்திற்கு நாங்கள் பயன்படுத்துவோம் என்று அந்த வாக்குறுதியைத் தந்துதான் இப்போது ஆட்சிக்கு வந்து இருக்கிறோம். ஆகவே, எந்த முயற்சியாவது எடுத்து உலகம் முழுவதும் பல்வேறு இடங்களில் முயற்சிகள் நடைபெறுகின்றன. அதற்காக ஆண்டுதோறும் மாநாடு நடத்துகிறார்கள். போன ஆண்டு இருந்ததை விட இந்த ஆண்டு நாம் கணிசமான ஒரு முன்னேற்றத்தை இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் காட்டியிருக்கிறார்கள்.

பிற்பகல் 2-10

போட்டோ வால்டேக் செல் பயன்படுத்தக்கூடிய முக்கியமான பொருட்களில் கொஞ்சம் விலை குறைந்த பொருட்களை உபயோகப்படுத்த முடியும் என்கிற ஒரு முக்கிய கண்டுபிடிப்பை இந்த ஆண்டு கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகவே ஆராய்ச்சி தொடர்ந்து நடக்குமானால் ஒரு கட்டத்தில் சூரிய சக்தியை மிக மலிவான முறையிலே நாம் சமுதாயத்திற்கு பயன்படுத்தச் செய்ய முடியும் என்ற நிலைமை வந்து விட்டால் தமிழ்நாட்டைப் போல செல்வ வளம் மிக்க நாடு உலகத்திலேயே வேறு எதுவுமே இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, சூரிய வெப்பத்தைப் பயன்படுத்துவது என்பது தமிழ்நாட்டில் வாழ்கிற அறிஞர்கள், விஞ்ஞானிகள், அவர்களுடைய ஒரு முக்கியமான நோக்கமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இல்லை என்கிற ஒரு நிலைமையை பார்க்கும்போது நமக்குக் கவலையாக இருக்கிறது. என்றாலும் அண்ணா பல்கலைக்கழகம் இந்த முயற்சியிலே ஈடுபட விருப்பத்தைத் தெரிவித்தது. ஆகவே, அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் பொருட்டு சூரிய சக்தியை பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கான சிறப்பு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த உத் தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் அண்ணா பல்கலைக்கழ கத்தின்கீழ் இயங்கும். இந்நிலையத்தை அமைக்க அரசு தொடக்க மானியமாக ரூ. 10.00 லட்சம் வழங்கும் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முடிவு எடுத்து இருக்கி றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).



அதேபோல் கிராமப்புற மக்களுக்கு சுகாதாரமான முறையில் குடிநீர் வழங்குவதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. எனவே, கடல்நீரை சூரிய சக்தி மூலம் குடிநீராக்குவது ஒன்றுதான் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்று அரசு கருதுகிறது.

அன்றைக்கு கோயம்புத்தூரிலிருந்த விஞ்ஞான மேதை ஜி.டி. நாயுடு அவர்கள் நம்முடைய தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் அரபுக் கடலிலிருந்து குழாய் மூலமாக தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்று அன்றைக்கே அவர் ஒரு கருத்தைத் தெரிவித்தார். ஆனால் அவர் எந்த அடிப்படையில் சொன்னார் என்று தெரியாது. ஆனால் அவர் அன்றைக்கு சொன்னது எல்லாம் இன்றைக்கு உண்மையாகிக் கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு உயர்ந்த ஒரு விஞ்ஞான மேதையாக படிப்பு இல்லை என்றாலும் ஒரு உயர்ந்த மேதையாக அன்றைக்குத் திகழ்ந்தார்கள். ஆக ஏறக்குறைய இந்த சூரிய வெப்பத்தை பயன்படுத்தக்கூடிய ஒரு யுக்தியை கண்டுபிடித்து விடுவார்களானால் கடல் நீரிலிருந்து குடிநீரை நாம் பெற்று விடமுடியும். இன்றைக்கு எவ்வளவு செலவு மிச்சம் ஆகும் என்பதை நீங்களே கணக்குப் போட்டுக்கொள்ளலாம்.

தற்போதுள்ள தொழில் நுட்ப வசதிகளுக்கு இடையில் கடல் நீரை குடிநீராக்குவதால் அரசுக்கு மிகுந்த செலவு ஏற்படும். எனவே, சூரிய சக்தி மூலம் கடல்நீரை குடிநீராக்க குறைந்த செலவில் திட்டமிட்டு திட்டம் நிர்மானம் செய்யும் அறிவியல் வல்லுநர்களுக்கு ரூ. 10.00 லட்சம் சன்மானம் அளிக்க அரசு மகிழ்ச்சியுடன் முன் வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

பள்ளிக்கல்வியின் தரத்தை உயர்த்தி அதன் இலக்கினை அடைய வேண்டுமாயின் தேர்வு செய்யப்படும் ஆசிரியர்களின் தரத்தை மற்றும் திறத்தை உயர்த்தவேண்டும் என்பதை அரசு அறிந்தே உள்ளது. நான் ஏற்கனவே சொன்னது. எனவே இடைநிலை ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதில் பின்பற்றப்படும் முறைகளுக்கு திருத்தங்கள் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. எனவே, இனிமேல் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ள அனைத்து நபர்களுக்கும் மாவட்ட அளவில் வடிகட்டும் முறை (ஸ்கிரீனிங் டெஸ்டு) நடத்தப்படும். அதில் எவர் குறைந்த பட்சம் 50 விழுக்காடு மதிப்பெண் பெறுகிறார்களோ அவர்கள் ஒரு குழுவால் நேர்முகத் தேர்வு செய்யப்பட்டு இடைநிலை ஆசிரியர் பதவிக்கு பொருத்தமானவர்களை அக்குழு தேர்வு செய்யும்.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மற்றும் இதர உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை எழுப்பியுள்ளார்கள்.

அரசு அவர்களின் கோரிக்கைகளை ஆய்வு செய்து தற்போது உள்ள, பணிமூப்புடைய பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் தமிழாசிரியர்கள் பணித் தொகுப்பிலிருந்து நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் நியமிக்கப்படும் முறையை மாற்றியமைக்க அரசு கருதி இருக்கிறது.

நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு அனுமதிப்பதிலும், ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வுகால சலுகைகளை அனுமதிப்பதிலும் ஏற்படும் காலத் தாமதத்தை தவிர்க்குமாறு கல்வித்துறை ஆய்வு அலுவலர்களுக்கு அரசு அறிவுரைகள் அளிக்கும். இது அவர்கடைய கோரிக்கைகளிலே ஒன்று.

புதிய பாடத் திட்டத்தில் தங்கள் திறமையை மேம்படுத்திக் கொள்வதற்காக ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு புதிய பாடத் திட்டத்தில் போதிய பயிற்சி அளிக்கப்படும்.

நான்கூட உயர்நிலைப் பள்ளியிலே கணித ஆசிரியராக இருந்தேன். இப்போது இருக்கிற உயர் நிலைப்பள்ளி கணிதத்தை என்னிடம் போய் இப்பொழுதே சொல்லித்தா என்றால் என்னாலே சொல்லித் தர முடியாது. நான் படித்து விட்டுத்தான் சொல்லித் தர முடியும். அந்த அளவிற்கு மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன,

தற்போது தொகுப்பு ஊதியம் பெற்றுவரும் ஒரு நேரம் மற்றும் இரு நேர தொழிற் பயிற்சி ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கையான. முறையான ஊதிய விகிதத்தில் ஊதியம் அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசால் ஆய்வு செய்யப்பட்டு பின்வருமாறு முடிவு செய்யப்பட்டு உள்ளது:

பிற்பகல் 2-15

முழுத் தகுதி வாய்ந்த 587 இரு நேர பகுதி தொழிற்பயிற்சி ஆசிரியர்கள் பள்ளி உதவியாளர்கள் பணியிடத்திற்குரிய முறையான ஊதிய விகிதத்திற்கு கொண்டுவரப்படுவார்கள். மீதமுள்ள 450 முழுத் தகுதி பெறாத இரு பகுதி நேரதொழிற் பயிற்சி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் பணியிலே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். முழுத்தகுதிவாய்ந்த



ஒரு பகுதி நேர தொழிற் பயிற்சி ஆசிரியர்கள் தற்போதுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்குக் கொண்டு வரப்படுவார்கள். மீதமுள்ள முழு தகுதி பெறாத, ஒரு பகுதி நேர தொழிற் பயிற்சி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் இனிமேல் ஏற்படும் காலி பணி இடங்களில் ஈர்த்துக்கொள்ளப்படுவார்கள். கல்லூரி ஆசிரியர்களுடைய கூட்டு நடவடிக்கைக் குழு சில முறையீடுகளைக் கொடுத்து உள்ளது. இதனை அரசு கருணையுடன் பரிசீலித்து கீழ்க்கண்டவாறு முடிவுகளை எடுத்துள்ளது. தற்போது ஒப்பந்த அடிப்படையில் 324 விரிவுரையாளர்கள் அரசுக் கல்லூரிகளிலேபணிபுரிகிறார்கள். இவர்களில் 242 பேர் எம். பில்.. மற்றும் பி.எச்.டி., கல்வித் தகுதிகளைக் கொண்டு இருப்பதால் இவர்கள் பல்கலைக் கழக மானியக் குழு விதிகளின்படி எழுத்துத் தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றனர், எனினும் இவர்கள் ஆசிரியர் தேர்வாணைக் குழு மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு காலியாகவுள்ள இடங்களில் பணியிலே அமர்த்தப்படுவார்கள். மற்ற ஆசிரியர்கள் எழுத்துத் தேர்வு எழுதி ஆசிரியர் தேர்வு ஆணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர். உதவிப் பேராசிரியர்கள் பணி விதியைத் தளர்த்தி முன் தேதியிட்டு வரன்முறைப்படுத்துகின்ற கோரிக்கையை அரசு கருணையுடன் பரிசீலிக்கும். கல்லூரிகளில் குறியீட்டாளர்களுக்கு முறைப்படுத்தப்பட்ட பணி கொண்டு வருதல் என்கிற பிரச்சனை இந்த அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது.

தொடக்கப் பள்ளிகளில் 1-லிருந்து 3ஆம் வகுப்பு வரைக்கும் கட்டாயமாக பாஸ் போடும் திட்டத்தை மாற்றி அவர்களுக்கும் தேர்வு இருக்கிறது என்கிற முடிவை அரசு எடுத்து இருக்கிறது. அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் பகுதிநேர கைத்தொழில் ஆசிரியர்களில் தகுதி வாய்ந்தவர்கள் பணி விதிகளின்படி படிப்படியாக காலியிடங்கள் ஏற்படும்போது அவற்றில் முழு நேர ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர். நடப்பு ஆண்டில் உருவாக்கப்படும் புதிய ஆசிரியப் பணி இடங்கள் பல்வேறு தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு கீழ்க்கண்டவாறு பகிர்ந்து அளிக்கப்படும்.

ஆசிரியப் பணி இடம் தோற்றுவிக்கப்படாத, புதியதாக திறக்கப்பட்ட பள்ளிகளுக்கு மேலும் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். இது சிறுபான்மை பிரிவைச் சார்ந்தவர்கள் கோரிக்கையின் அடிப்படையிலே வந்ததாகும். ஓராசிரியர் பள்ளிகளுக்கு மேலும் ஒரு ஆசிரியர் பணியிடம் தோற்றுவிக்கப்படும். அரசுப் பள்ளிகள். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள். மாநகராட்சி. நகராட்சி, நகரியம் மற்றும் பயிற்சி நிறுவனப் பள்ளிகள் என்ற வரிசைக் கிரமத்தில் பணி இடங்கள் பகிர்ந்து அளிக்கப்படும்,

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகளைப் பொறுத்தவரை மேற்குறிப்பிட்ட விதி முறைகள் தளர்த்தப் படும். 8-ஆம் வகுப்பை படிப்படியாக உயர் நிலைப்பள்ளியோடு இணைத்து. 8ஆம் வகுப்புக்கு கல்வியியல் பட்டம் படித்த ஆசிரியாகளைப் படிப்படியாக நியமித்தல், இதனாலே கல்வியின் தரம் உயர வாய்ப்பு உள்ளது. இப்போது 8 ஆவது வரைக்கும் உயர் தொடக்கப் பள்ளி என்கிற முறையிலே எலிமெண்டரி எஜுகேஷனாக கருதப்பட்டு வருகிறது. ஆனால் 8ஆம் வகுப்பிலே இன்றைக்குச் சொல்லித் தரப்படுகிற பாடத் திட்டத்தைப் பார்த்தால் நாம் எல்லாம் படிக்கிறபோது உயர் நிலைப் பள்ளியிலே இருந்த அளவிற்கு அது இருக்கிறது. ஒரு பி.டி. அந்தஸ்து உள்ள ஆசிரியர் தான் அதைச் சொல்லித் தரவேண்டுமென்ற காரணத்தால்வேறு பல மாநிலங்களில் இருப்பதைப்போல 7 ஆம் வகுப்பு வரை தொடக்கப் பள்ளி என்றும் 8 ஆம் வகுப்பிலேயிருந்து உயர்நிலைப்பள்ளி என்றும். முறையை மாற்ற அரசு முடிவு செய்திருக்கிறது. தமிழகத்திலே 1987–88 ஆம் ஆண்டு வரை தொடங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட 332 தனியார் பள்ளிகளுக்கு தற்போதுள்ள விதி முறைகளின்படி 1—6—1991 முதல் மானியம் வழங்கப்பட உள்ளது. இதுவும் அந்த சிறுபான்மை இனத்தவருடைய கோரிக்கை சம்பந்தப்பட்டதாகும், கிராமப்புறங்களில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு புதிதாகக் கட்டிடம் கட்டப்படுவதோ அல்லது ஏற்கனவே உள்ள கட்டிடங்களைப் பராமரிப்பதோ. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும். கீழ்த் திசை நாடுகளில் உள்ளதைப்போல மாணவர்களிடையே நாட்டுப்பற்றை வளர்ப்பதற்கு. தேச பக்தி உணர்வை வளர்ப்பதற்கு பாடங்களை அறிமுகப்படுத்த இருக்கின்றோம், அஞ்சல் வழித் திட்டத்தின் கீழ் பயிலும் பி.எட்., பாடத் திட்டத்தை நடத்தக் கூடாது என்று பல்கலைக் கழகங்களிலே. ஓப்பன் யுனிவர்சிட்டியிலே அல்லது கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ் முறையில் இந்த பி.எட்,. கோர்ஸை நடத்தக் கூடாது என்று பல்கலைக் கழக மானியக் குழு சொல்லியிருக்கிறது. அந்தக் கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸிலே யார் படிக்கலாம் என்றால், யார் யார் ஆசிரியர்களாக பணி புரிந்து கொண்டு இருக்கிறார்களோ. இப்போது செகண்ட் கிரேடு படித்திருப்பவர்கள் பி.டி.யாக தகுதி உயர்த்திக்கொள்ள விரும்பினால் அவர்கள் மட்டும் சேர்ந்து படிக்கலாம் அல்லது பி.ஏ., படித்துவிட்டு மெட்ரிக்குலேசன் பள்ளியிலே ஆசிரியராகப் பணியாற்றினால் அவர்கள் வேண்டுமானாலும் படிக்கலாம். யார் யார் ஆசிரியர்களாக டணிபுரிந்துகொண்டு இருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டும்தான் அந்த வாய்ப்பு தரப்பட வேண்டுமென்று இப்போது அரசு முடிவு எடுத்து இருக்கிறது.



''ஹட்கோ'' நிறுவனத்திடமிருந்து சென்ற நிதி ஆண்டில் 1991–92-இல் 64 பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூபாய் 225 இலட்சம் கடன் பெற்று அரசு பங்குத் தொகையாக 75½ இலட்சம் செலவழிக்கப்பட்டது. அதேபோன்று நடப்பு ஆண்டிலும், 64 பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 459 ஓராசிரியர் பள்ளிகளை ஈராசிரியர் பள்ளிகளாகவும், 655 ஈராசிரியர் பள்ளிகளை மூன்று ஆசிரியர் பள்ளிகளாகவும் மாற்ற கரும்பலகைத் திட்டத்தின்கீழ், மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்த திட்டம் இடப்பட்டுள்ளது. இதிலே ஒருஆசிரியர் முதல் வகுப்பைப் பார்க்க வேண்டுமென்ற யோசனையை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அப்படி ஒவ்வொரு ஆசிரியராக ஒவ்வொரு வகுப்பைத் தந்து கொண்டு போகலாம் என்று நினைக்கிறோம்.

பிற்பகல் 2–20

முதல் வகுப்பிலேயே என்ன சொல்லித் தர வேண்டுமோ அதைச் சரியாகச் சொல்லித் தரவில்லை என்றால் பிறகு எந்த வகுப்பிலே என்ன சொல்லித் தந்தாலும் அந்தக் குறையை நாம் நிறைவு ஆக்க முடியாது என்ற காரணத்தால் முதல் வகுப்பில் ஒரு ஆசிரியர் தனியாக இருந்து அந்தக் குழந்தைகளுக்குச் சொல்லித் தர வேண்டும் என்கிற அந்த முறையைக் கொண்டு வரலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் அதுவும் பெண்கள் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பை இழந்த நிலையில், 15 வயதிற்கு மேற்பட்டோர் பள்ளி இறுதித் தேர்வு சான்றுக்குச் சமமான ஓர் படிப்பைத் தொடர வாய்ப்பளிக்கும் வகையில், பள்ளி சாராக் கல்வி முறையை அடிப்படையாகக் கொண்ட பள்ளி ஒன்று மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் நடத்தி சான்றுகள் வழங்கப்பட்டு வந்தது. இது 1989–90 முதல் நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் மேற் கொண்டு பலர் பயன் பெற்று தகுதியை உயர்த்திக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆகவே அத்தகையோர் வசதிக்காக இப்பள்ளி மறுபடியும் வரும் கல்வியாண்டு 1992–93-லிருந்து துவக்கப்படும். இது அந்த ஓப்பன் ஸ்கூல் என்று நான் முன்பே விளக்கிச் சொன்னது.

தனியார் துறையில் புதிதாகத் துவங்கும் கல்வி நிறுவனங்கட்கு பள்ளிகள், கல்லூரிகட்கு இனிமேல் நிதி உதவி கிடையாது.

அங்கீகாரம் மட்டும் அரசு நிபந்தனைகளுக்கு உட்பட்டு துவக்கப்படும் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் தேவையான இடங்களில், தேவைகளைப் பொறுத்து வழங்கப்படும்.

இந்த நிலை, சிறுபான்மை, பெரும்பான்மை ஆகிய இரு பாலாருக்கும் பொருந்தும்.

இவ்வளவு அறிவிப்புகளோடும், இந்த அளவு விளக்கத்தோடும் மணி 2–21 ஆகிறது. இந்த அளவிற்கு உங்களையெல்லாம் உட்கார வைத்து நான் விளக்கங்களைத் தந்திருக்கிறேன். இதற்கு மேலும் வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டு, இந்த மானியத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தரும்படி கேட்டு என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. சி. ஞானசேகரன்.

<u>திரு. சி. ஞானசேகரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அறிவொளி இயக்கத்திலே பல ஆசிரியர்கள் இன்று இடதுசாரிக் கொள்கைகளை ஆங்காங்கே பரப்பிக்கொண்டு, விஷ வித்துக்களைத் தமிழகம் எங்கும் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தயவு செய்து நீங்கள் சி.ஐ.டி. போலீசை வைத்து, யார் யார் அப்படி அந்த இடதுசாரிக் கட்சிக் கொள்கைகளையும், தீவிரவாதக் கொள்கைகளையும், விஷ வித்துக்களையும், பரப்பிக்கொண்டிருக்கிறார்களோ அவர்கள் மீது அரசு உடனடியாக நடவடிக்கையெடுத்து அதைத் தவிர்க்குமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இடதுசாரிகளைப் பற்றி அச்சப்பட வேண்டியதில்லை. அவர்களுடைய கொள்கைகளிலே உலகம் பூராவும் மாற்றங்கள் ஏற்பட்டு அவர்கள் நம்முடைய வழிநோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். தீவிரமாக இருக்கலாமே தவிர வேறு விதமாக இருக்க முடியாது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

<u>திரு. ஆர். சிங்காரம் :</u> இல்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.



<u>திரு. ஜி. பழனிசாமி :</u> இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

<u>டாக்டர் தே. குமாரதாஸ்</u> தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன். டாக்டர் தே. குமாரதாஸ் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

''கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 15,17,77,87,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3—4—1992) காலை 9-30 மணிக்குக்கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–23 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

50. எம். டி. எஸ். 7315 பதிவு எண் கொண்ட மோட்டார் வண்டிக்காக 1—4—1984 முதல் 31—5—1984 வரை செலுத்தப்பட வேண்டிய நிலுவை வரி மற்றும் தண்டத் தொகையை தள்ளுபடி செய்வது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 6—1—1992 ஆம் நாளிட்ட 18 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

51. தமிழ்நாடு மின்னனு நிறுவனத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

52. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை. [1956) ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்ட 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

74. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை, 1991–92.

75. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை, 1991-92,

163178

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sithuraman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
Kumaran Book Depot, Booksellers, Erode-1
Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1
Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.